# திருமகள் தேடி வந்தாள்



## லட்சுமி பிரபா

# முன்னுரை

**வா**சக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

'திருமகள் நிலையத்தின்' வாயிலாக மீண்டும் உங்களை சந்திக்க வந்திருப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்நூலில் 'திருமகள் தேடி வந்தாள்', ''மாயக் கண்கள்'' என்று இரண்டு நாவல்கள் இடம்பெற்றுள்ளன. இரண்டுமே பிரபல மாத நாவல்களில் வெளிவந்து அமோக வரவேற்பைப் பெற்றவை. இவை உங்களது இதயத்தைக் கொள்ளை கொள்ளும் என்று நம்புகிறேன்.

பதிப்பாசிரியர் திரு.ம.திருப்பதி ஐயாவுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக்க நன்றி!

அன்புடன்
உங்கள்
லட்சுமி பிரபா

## பொருளடக்கம்

1. 'திருமகள் தேடி வந்தாள்...' 5
2. ''மாயக் கண்கள்'' 149

# 'திருமகள் தேடி வந்தாள்...'

## 1

**வா**னம் மேகமெனும் தூரிகை கொண்டு மழையெனும் ஓவியத்தை பூமியின் மீது அழகாக வரைய ஆரம்பித்தது. மரம் செடி கொடிகளும் மலர்களும்... அந்த ஓவியத்திற்கு வித விதமாய் வண்ணம் சேர்த்து பொலிவூட்டின.

பிரபலமான என்ஜினியரிங் கல்லூரி வாசலருகே... தடதடத்து வந்த அந்த ஸ்கூட்டர் ஒரு கணம் தயங்கி மூச்சை நிறுத்தியது.

அப்பா நடேசனின் பின்னால் அமர்ந்திருந்த யமுனா... பதினெட்டு வயது பருவச்சிட்டு... மெல்ல இறங்கியபடி தனது பார்வையால் கல்லூரி வளாகத்தை வருடிக் கொடுத்தாள்.

மழையின் வேகம் குறைந்து வானம் இலேசாய் பூத் தூவிக் கொண்டிருந்தது. நீல வண்ணச் சுடிதாரை முழுவதுமாக மறைத்திருந்த ரெயின் கோட்டை கழட்ட யத்தனித்த யமுனாவை... அப்பாவின் குரல் பதற்றமாய் தடை செய்தது.

''யமுனா! கோட்டை கழட்டாதே... இன்னும் மழை நிக்கலை பாரு... உள்ளுக்குள்ளே போயி கழட்டிக்கோ...

பத்து நாளா டைபாயிட் காய்ச்சல்லே படுத்துட்டு இன்னிக்குத்தான் முதமுதல்லா காலேஜுக்கே வர்றே... பார்த்து... பத்திரமா இரும்மா.''

''சரிப்பா... சாயந்தரம் நான் பஸ் புடிச்சு வீட்டுக்கு வந்துடறேன். இங்கிருந்து மூணே ஸ்டாப் தானப்பா? நீங்க எனக்காக வந்து சிரமப் படாதீங்கப்பா... ப்ளீஸ்.''

''சரி... சரி யமுனா... செலவுக்கு காசு வச்சிருக்கே இல்லா? பஸ் வர லேட்டாச்சுன்னா... ஆட்டோ புடிச்சு வந்திடு என்ன? பாத்து... ஜாக்கிரதை வரட்டா?''

யமுனாவின் அழகிய இதழ்களில் ஒரு குட்டி முறுவல் பூத்தது.

''வெற்றிகரமா அரை சதம் அடிச்சுட்டீங்கப்பா'' புன்னகைத்த மகளை நெற்றி சுருங்க ஏறிட்டார் நடேசன்.

''என்னப்பா புரியலையா? கார்த்தால எழுந்ததிலேர்ந்து... 'பாத்து பத்திரம்... ஜாக்கிரதை... பஸ்சுக்காக வெயிட் பண்ணாம ஆட்டோவுல நேரத்தோட வந்திடு'ன்னு... அம்பது தடவை சொல்லிட்டீங்களே?''

''நான் என்ன சின்னக் குழந்தையா? பதட்டப் படாம போயிட்டு வாங்கப்பா... வர வர வீட்டுல இருக்கற தாத்தா மாதிரியே புலம்ப ஆரம்பிச்சுட்டீங்க... தங்கச்சியும் தம்பியும் வர்றதுக்குள்ளே... நான் வீட்டுலே இருப்பேன். போதுமாப்பா?''

''சரிமா... வயசுக்கு மீறின பொறுப்புணர்ச்சியோட நீ இருக்கிறதைப் பார்த்துட்டு எத்தனையோ வாட்டி நா பெருமிதப் பட்டிருக்கேன் யமுனா... ஆனாலும் பெத்த மனசு பரிதவிச்சுப் போகுது. அதான்...''

உணர்ச்சி வசத்தில் நடேசனின் குரலுடைந்து பிசிறு தட்ட... இலேசாய் தலையாட்டி ஸ்கூட்டரை உயிர்ப்பித்து, அரை மனதாய் விருட்டென்று கிளம்பினார்.



குடும்பத்திற்காக தன்னை மெழுகாய் உருக்கிக் கொண்ட உத்தமர் அவர். தன்னலமற்ற தந்தைக்கு மகளாய் பிறக்க தான் மிகவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம்... வழக்கம் போல் யமுனாவுக்குள் இன்றும் தலை தூக்கியது.

தூரத்தில் அவரது உருவம் ஒரு புள்ளியாய் மறையும் வரை... அவர் சென்ற திக்கையே வெறித்துக் கொண்டு நின்றாள். கண்களில் கண்ணீர் ஊற்றெடுத்து இமைக்கரைகளைத் தாண்டி வழிந்து செல்லட்டுமா? என்று வினவியது.

''ஹாய் யமுனா! என்னடி இங்கேயே நின்னுட்டே?'' தோழி சஹானாவின் இனிய குரல் அவளது சிந்தனையைக் கலைத்தது.

சட்டென்று திரும்பிப் பார்த்தாள் யமுனா. நாலைந்து மாணவிகள் புடை சூழ, வாத நாராயண மரத்தடியில் புன்னகைத்தபடி நின்றிருந்தாள் சஹானா. நாலைந்து கார்களில் மாறி மாறி வலம் வரும் பணக்கார யுவதி.

கலகலப்பிற்கும், பரபரப்பிற்கும் மறு பெயர் உண்டென்றால்... அது சஹானாவாகத் தான் இருக்கும். இருவரும் ஆறாம் வகுப்பிலிருந்து ஒன்றாய் சேர்ந்து படித்து வந்த இணை பிரியாத் தோழிகள்.

குணாதிசயத்தைப் பொறுத்தவரையில் இருவரும் வெவ்வேறு துருவங்கள் தான் என்றாலும்... நட்பு என்ற நேச வலைக்குள் சிக்கி இருவருமே கட்டுண்டு கிடந்தனர் என்பது நிஜம்.

சஹானா அசரவைக்கும் அழகுக்கு சொந்தக்காரி. கவர்ச்சி ததும்பும் கட்டுடலுடன் காண்போரை மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார்க்க வைப்பாள்.

சஹானாவைப் போன்று யமுனாவிடம் கவர்ச்சி இல்லை... கண்ணியம் இருந்தது. அசர வைக்கும் அழகுக்கு பதிலாக... அமைதியான மனதிற்கு இதம் தரும் அழகு இருந்தது.

அவள் சலசலத்து ஓடும் காட்டருவி என்றால்... இவள் தெளிந்த சலனமற்ற ஜீவ நதியாக இருந்தாள்.

தோழியைக் கண்டதும் யமுனாவின் முகத்தில் முன்பிருந்த இறுக்கம் தளர்ந்து முறுவல் முளைத்தது. மரத்தடியை நோக்கி நடந்தாள்.

''ஃபிரண்ட்ஸ்! இவ யமுனா... நாங்க ரெண்டு பேரும் நகமும் சதையுமா இருப்போம். படிப்புல இவளை யாரும் அடிச்சுக்கவே முடியாது. ஸ்கூல்ல மட்டுமில்ல... மாவட்ட அளவில் முதலாவதா வந்தவ... இனி நம்ம கல்லூரி பேராசிரியர்கள் எல்லாருக்கும் இவ 'பெட்' ஆயிடுவா.''

''சஹி... சும்மா இரேன்'' என்ற யமுனா மற்ற மாணவிகளைப்பார்த்து ''ஹாய்'' என்று சினேகமாய் சிரித்தாள்.

''சஹி... பத்து நாள்லே தியரி நிறைய நடத்திப் போட்டுட்டாங்களா? நீ நோட்ஸ் எடுத்து வச்சிரக்கேல்ல?'' அவளது குரலில் ஆர்வமும் அக்கறையும் ததும்பி வழிந்தன.

''காலேஜ் ரீ ஓபன் ஆகி பத்து நாள் தானே ஆகுது. இன்னும் இவ கிளாசுக்கே அடியெடுத்து வைக்கலை. பாத்தீங்களா ஃபிரண்ட்ஸ்? சரியான புத்தகப் புழு இவ... கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுக்கம், அமைதி, நேர்மை இதையெல்லாம் மொத்தமா கலந்து பிசைஞ்சு... பிரம்மன்இவளை உருவாக்கி இருப்பார்னு நா நினைக்கிறேன்.



காதல்ங்கிற வார்த்தையை மட்டும் இவகிட்ட தப்பித்தவறி உளறிடாதீங்க. ஏதோ கெட்ட வார்த்தையைக் கேட்டுட்ட மாதிரி... காத தூரம் ஓடிப் போயிடுவா.''

மற்ற மாணவிகள் 'கொல்' என்று சிரித்ததும்... புன்னகை மாறாமல் ரெயின் கோட்டை மெதுவாகக் கழற்றியபடி சஹானாவை ஏறிட்டாள் யமுனா.

''கலாய்ச்சு முடிச்சுட்டியா? வா... கிளாசுக்குப் போகலாம்.''

''அதுக்கு முன்னாடி ஒரு அதிசயத்தைக் காட்டறேன். பாத்துட்டு அப்புறமா கிளாசுக்குப் போகலாம். வாங்க ஃபிரண்ட்ஸ்'' என்று யமுனாவின் கையைப் பிடித்துக் கொண்டு விடுவிடுவென்று நடந்தாள் சஹானா.

கல்லூரி வளாகத்தைச் சுற்றிலும் ஏராளமான மரங்கள்... சோலை போல் நிழல் பரப்பி 'பசேல்' என்று குளிர்ச்சியாய் கண்களைக் கட்டிப் போட்டன.

முப்பது அடி தூரத்தில்... புன்னை மரத்தடியிலிருந்த நீளமான சிமெண்ட் பெஞ்சில் கிட்டத்தட்ட பத்து மாணவர்கள் அமர்ந்து பேசிக் கலகலத்துக் கொண்டிருந்தனர்.

சஹானா அவர்களது கண்களில் பட்டதுதான் தாமதம்...

''சஹா...னா... சாரல் தூவுதோ... சஹா...னா பூக்கள் பூத்ததோ?'' என்று ராகத்தோடு ஒருவன் பாடினான்.

யமுனாவிற்கு திக்கென்றிருந்தது. ''ஏய் சஹி! கிளாசுக்குப் போகாம இதென்ன வெட்டி வேலை? வம்பை வீணா விலை கொடுத்து வாங்கற மாதிரி இருக்கு?'' அடிக் குரலில் அதட்டினாள். சஹானா எதையும் காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை.

''குட்மார்னிங் சீனியர்ஸ்! இவ என்னோட ஃபிரண்ட் யமுனா. படிப்புலே சுட்டி... எங்க ஸ்கூலுக்கே பெருமை தேடித்தந்தவ... ஆங்... யமுனா! இவங்க எம்.ஈ. ஃபைனல் இயர் பண்றாங்க... நம்ம சீனியர்ஸ் எல்லாருமே ரொம்ப டீசண்ட்... ராகிங் நம்ம காலேஜுலே கிடையாது. இன்டர் காலேஜ் காம்படிசன்லே... பேச்சுப்போட்டி கட்டுரைப் போட்டி பாட்டு, டான்ஸ் எல்லாத்துலேயும் நம்ம காலேஜ் தான் வின் பண்ணிருக்கு... இதுக்கு யார் காரணம் தெரியுமா? நம்ம காலேஜ் ஸ்டூடண்ட் மிஸ்டர் முரளி... இதோ இவர் தான்'' சுட்டு விரலை நீட்டினாள்.

சரேலென்று நிமிர்ந்து பார்த்தான் முரளி. ''கிளாட் டு மீட் யூ'' மரியாதை நிமித்தமாக வார்த்தைகளை உதிர்த்த யமுனாவின் இதயக் கூட்டிற்குள் புறா சிறகடித்தது.

## 2

யமுனாவுக்கு உள்ளூர எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது.

'வந்ததும் வராததுமாக இவள் எதற்கு இந்த வாலிபர்களிடம் நம்மை வம்பில் மாட்டி விடுகின்றாள்?' என்ற கேள்வி கொக்கியாய் முளைத்து மனதைப் பிறாண்டியது.

சஹானா முகம் கொள்ளாப் பூரிப்புடன் முரளியை அறிமுகப் படுத்தியது வேறு வழியின்றி வணக்கம் தெரிவித்து 'கிளாட் டு மீட் யூ' என்று முணுமுணுத்தாள்.

யமுனாவை ஏறிட்டுப் பார்த்து 'ஹேப்பி டு மீட் யூ' என்ற முரளி, மறுகணமே கையிலிருந்த ரெக்கார்ட் நோட்டை மும்முரமாகப் புரட்டத் தொடங்கினான்.



யமுனாவிற்கு இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. தணல் மேல் நின்று கொண்டிருப்பதைப் போன்று தர்மசங்கடமாக இருந்தது.

''வாவ்! இந்த வானவில்லோட மறுபெயர் யமுனாவா? சூப்பர்டா'' அந்த கும்பலில் ஒல்லியாய் ஒடிசலாய் இருந்த மாணவன் வயிற்றை எக்கி கமெண்ட் அடித்தான்.

''மழையே... மழையே.. இளமை முழுதும் நனையும் வரையில் வா...'' ரோடு ரோலர் சைஸில் குண்டாய் இருந்தவன் கர்ண கடூரமாய் பாடத் தொடங்கினான்.

''டேய்... சும்மாயிரு... நேரம் காலம் தெரியாம பாடிக்கிட்டு? புதுசா காலேஜுக்கு வந்திருக்கிறவங்க நம்மளைப் பத்தி என்ன நினைப்பாங்க சாரிங்க... மிஸ். சஹானா! எங்க மேல இவ்ளோ நல்ல அபிப்பிராயம் வச்சிருக்கீங்க. மிக்க நன்றி.'' முரளியின் குரலில் 'இடத்தை காலி பண்ணு' என்றான்.

''சகல கலா வல்லவர், மாணவர்களின் தலைவர், இந்த கல்லூரியின் நாயகன், கட்டழகன், எல்லோருக்கும் ஓடி உதவுற பரோபகாரி... இப்படி உங்களுக்குப் பல பட்டங்கள் இருக்கறதா கேள்விப்பட்டேன்.

ஐ அப்ரிஷியேட் யூ மிஸ்டர் முரளி! நான் உங்களுக்குப் புதுசா ஒரு பட்டம் தரலாம்னு இருக்கேன்... ஜுனியர் ஸ்டூடண்ட்ஸ் சார்பா... ஒரு வாரத்திற்கும் மேலாக உங்களை நோட் பண்ணிக்கிட்டிருந்தேன். கடைசியா இந்த முடிவுக்கு வந்திருக்கேன்.''

''ச... சஹி! நான் கிளாசுக்குப் போறேன். நிதானமா நீ பேசிட்டு வா'' என்று மெல்ல கழண்டு கொள்ள முற்பட்ட யமுனாவை இழுத்துப் பிடித்தாள் சஹானா.

''ஒரு நிமிஷம் நில்லேன் யமுனா'' அதட்டிவிட்டு மீண்டும் திரும்பினாள்.

''சீக்கிரமா சொல்லேன் சஹானா'' முரளியின் அருகில் அமர்ந்திருந்தவன் ஆலாய்ப் பறந்தான்.

''உங்க ஃப்ரெண்டுக்கு 'முரளி'ங்கிற பேரைவிட... நரசிம்மராவ்னு பேர் வச்சிருந்தா ரொம்ப பொருத்தமா இருக்கும்னு நினைக்கிறேன். ஏன்னா... அவர் முகத்துல மருந்துக்குக்கூட சிரிப்பை நான் பார்த்ததே இல்லை... அதான்.''

முகத்தைப் பரிதாபமாய் வைத்துக் கொண்டு அவள் பேசிய விதத்தைக் கண்டு 'பக்'கென்று சிரித்து விட்டான் முரளி. அவனைத் தொடர்ந்து குபீர் என்று வெடிச் சிரிப்பு கிளம்பியது.

''பாத்தியா யமுனா? உம்மணாம் மூஞ்சிசிங்கத்தை சிரிக்க வைச்சப் பெருமை என்னைத்தான் சேருமாக்கும்'' காலரை உயர்த்திக் கொள்ளாத குறையாகப் பெருமைப் பட்டவளைக் கண்டு... யமுனாவிற்குள் கோபம் தலைக் கேறியது.

பொங்கி வந்த ஆத்திரத்தை சிரமப்பட்டு அடக்கியபடி விடுவிடென்று நடந்தாள்.

★ ★ ★

''ஏன்னம்மா நீ... அதுக்குப் போயி சஹியை கோவிச்சுக்கிட்டியா? கல்மிஷம் இல்லாம ஏதோ விளை யாட்டுத்தனமா பண்ணிட்டா... ஜாலி டைப்... இதெல்லாம் பெரிசு படுத்தக் கூடாது யமுனா.''



சப்பாத்தியைப் பிய்த்து குருமாவில் அதை தோய்த்தபடியே பேசினார் நடேசன்.

கூடத்தில் தங்கை உமா, தம்பி கிரி, யமுனா ஆகியோர் அரை வட்டமாக அமர்ந்து இரவு உணவுடன் அன்றாட சம்பவங்களை அப்பாவுடனும் தாத்தா சண்முகத்துடன் பகிர்ந்து கொள்வது வழக்கம்.

''என்ன இப்படி சொல்லிட்டே? பொண்ணா பொறந்தவளுக்கு அடக்கம் வேணாம்? காலம் கெட்டுப் போச்சு நடேசா... அதான்... பசங்களை வலியத் தேடிப் போயி... பொண்ணுங்க வம்பு பண்ணுதுங்க... இது மாதிரி விஷயமெல்லாம் யமுனாவுக்கு கட்டோட பிடிக்காதுன்னு தெரிஞ்சும்... இப்படி அவளைக் கூட்டிட்டுப் போகலாமா?''

தாத்தா சண்முகத்திற்கு வயது என்பதுக்கு மேலிருக்கும். ஒரு வாழைப் பழம், ஒரு டம்ளர் பால் என்று இரவு உணவை எளிமையாக முடித்துக் கொண்டு... சாய்வு நாற்காலியில் சாய்ந்து விட்டிருந்தார்.

எப்போதாவது யமுனாவைப் பார்க்க சஹானா வீட்டிற்கு வந்து விட்டால் போதும். கிழவருக்கு பற்றிக் கொண்டு வந்துவிடும். சஹானாவின் நவநாகரிக உடையும், பந்தயக் குதிரை போன்ற நடையும் பாவனையும்... முதியவரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கச் செய்யும்.

''அந்த முரளி ஒரு புத்தகப் புழு... சின்சியரான ஸ்டுடண்ட்... உன்னை மாதிரியே இலட்சிய வெறியோட படிக்கிறவர்னு அதான் அறிமுகப் படுத்தினேன். இதுல என்ன தப்பு. அப்படின்னு சஹி ரொம்ப கேஷுவலா கேட்கிறாப்பா... அதுக்கு மேல நான் பேசாம மௌனமா இருந்துட்டேன்.''

''அவ சகவாசமே வேணாம்னு ஒதுங்கிடு யமுனா. மனசுங்கிறது சண்டிக் குதிரை மாதிரி. தறி கெட்டுத் தாவப் பார்க்கும். கடிவாளம்போட்டு அதை இழுத்துக் கட்டுக்குள்ளே வச்சுக்கனும். அப்படித்தான் நாம்ப வாழ்க்கையில ஜெயிக்க முடியும். பொண்ணுங்க மனசை இரும்பு மாதிரி வச்சுக்கணும். சரியாடா?''

''சரிங்க தாத்தா.''

''என்னப்பா இது? குற்றம் பார்த்தால் சுற்றம் இல்லை'ன்னு சொல்வாங்க. இத்தனை வருஷமா சேர்ந்து படிச்சிட்டு ஒதுங்கினா... சஹி சங்கடப் படுவா... யமுனா புத்திசாலி... நல்லது கெட்டது என்னன்னு இனம் பிரிச்சுப் பார்க்கத் தெரிஞ்சவ... சூழ் நிலைக்குத் தகுந்தபடி இணக்கமா நடந்துக்கட்டும். யாரையும் பகைச்சுக்க வேணாம்.''

நிதானமாகப் பேசிய அப்பா நடேசனை கண் கொட்டாமல் பார்த்தாள் யமுனா. அப்பாவுக்கு தங்கமான மனசு. யாரையும் பகைத்துக் கொள்ளவே மாட்டார்.

இதுவரை யார் மனதையும் நோகடித்ததே இல்லை. கஷ்டப்படும் உறவுத் தலைகளுக்கு வலிய ஓடிச் சென்று உதவும் பரோபகாரி அவர். அவருடைய தயாள குணத்திற்கு அத்தாட்சிகளாய் அமர்ந்திருந்த தங்கை உமாவின் மீதும் தம்பி கிரியின் மீதும்... யமுனாவின் பார்வை படிந்தது.

யமுனாவிற்கு அப்போது ஐந்து வயதிருக்கும். அவளது ஒவ்வொரு வருட பிறந்த நாளின் போதும் நடேசன் தனது உறவுத் தலைகளைத் திரட்டி வேன் பிடித்து குல தெய்வம் கோவிலுக்குச் சென்று படையல் இடுவது வழக்கம்.

அவளது ஐந்தாவது பிறந்த நாள் வந்தபோதுதான் அந்தக் கோர சம்பவம் நடந்தது. கோவிலில் படையல் வைத்துவிட்டு



கலகலப்பாக சிரித்தபடி வேனில் திரும்பியபோது எதிரே வந்த லாரி மோதி... யமுனாவின் தாய் கற்பகமும், அவளது தங்கை செண்பகமும் அவளது கணவரும் கண நேரத்தில் துடிதுடித்து மாண்டனர். மற்றவர்கள் ஏராளமான காயங்களோடு அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

தமது வீட்டு விசேஷத்தில் கலந்து கொள்ள வந்திருந்த மைத்துனி செண்பகமும் அவளது கணவரும் அகாலமாய் மாண்டு போனதை எண்ணி... குற்றவுணர்வில் பரிதவித்தார் நடேசன். மைத்துனியின் செல்வங்களான உமாவையும், கிரியையும் வாரியணைத்துக் கொண்டு கதறினார் நடேசன்.

மனைவியை இழந்த துக்கம் ஒரு புறம். மைத்துனியின் குழந்தைகளையும் தான் பெற்ற மக்களாகவே வளர்த்து விட்டிருந்தார். குழந்தைகளின் நன்மையைக் கருதி மறு கல்யாணம் செய்து கொள்ளாமல் 'தாயுமானவராக'வே வாழ்ந்துவரும் உத்தமர் அவர்.

அவரது ஆசைப்படி நன்றாகப் படித்து பெரிய வேலையில் அமர வேண்டும். உமாவையும் கிரியையும் பெரிய படிப்பு படிக்க வைத்து உயர்த்த வேண்டும். அப்பாவின் மனதைக் குளிர வைக்க வேண்டும். அது வரை... இலட்சியத்தை எட்டும் வரை கவனம் சிதறாமல்... மனதை இரும்பு போல் வைத்துக் கொள்ள வேண்டும் என்று யமுனா சங்கல்பம் செய்து கொண்டாள்.

அன்றிரவு படுக்கையில் சாய்ந்தபோது... முரளியின் களை சொட்டும் முகம் அவளது மனக் கண்ணில் தோன்றி மறைந்தபோது அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. இரும்பு இதயத்திற்குள் ஓசையின்றி நுழைந்த காதல்... புல்லாங்குழல் இசைக்க ஆரம்பித்தது.

## 3

இரவு முழுவதும் மேகங்கள் குமுறி ஆக்ரோஷமாய் மழையைக் கொட்டித் தீர்த்திருந்தது. குளித்து முடித்துவிட்டு பரபரப்பாய் கொல்லைப்புறக் கதவைத் திறந்தாள் யமுனா.

பின்புறத் தோட்டத்திலிருந்து நித்ய மல்லிப் பூக்களின் மணத்தை சுமந்து கொண்டு வந்த காற்று சில்லென்று அவளது முகத்தை ஸ்பரிசித்தது.

அம்மா அந்தப் பக்கம் போயிருக்கையில் மீண்டும் மீண்டும் பைப்பில் குளித்து லூட்டி அடிக்கும் விஷமக் காரக் குழந்தையைப் போல செடிகளும், கொடிகளும் உச்சியிலிருந்து அடி வரை நீர் சொட்ட நின்றன.

யாரோ வேலை மெனக்கெட்டு அருகில் உட்கார்ந்து பச்சை பெயிண்ட்டை அடித்த மாதிரி இலையும் காயும் பளபளத்தன.

வெண்டைக்காய்களைப் பறித்த கையோடு மண்ணுக்கு மேல் பருமனாய் தெரிந்த முள்ளங்கிகளைப் பிடுங்கினாள். நான்கு தக்காளி கொத்தமல்லித் தழையைப் பறித்துக் கொண்டு அடுப்பங்கரைக்கு விரைந்தாள் யமுனா.

குக்கரில் பருப்பு வெந்து கொண்டிருந்தது. ''நான் காய் நறுக்கித் தரட்டுமா யமுனா?'' ஒத்தாசை செய்ய வந்த நடேசனை ஏறிட்டாள் மகள்.

''வேணாம் அப்பா... நேத்தைக்கே கேட்கணும்னு நினைச்சேன். உங்க முகம் வாட்டமாக இருக்கே? என்னப்பா பிரச்சினை?'' தணிந்த குரலில் கேட்டாள்.

''வியாபாரமே வர வர சரியல்லடா... ரெண்டு மாசமா படுத்துக்கிச்சு'' கவலையில் அவரது முகம் ஏகத்திற்கும் இருண்டிருந்தது.



மளிகை சாமான்கள் அடங்கிய காய்கறிக் கடையை நடத்தி வருபவர். 'தன் கஷ்டம் தன்னோடு போகட்டும். வீட்டில் உள்ளவர்களாவது நிம்மதியாக இருக்கட்டும் என்று கவலையை மென்று விழுங்கிவிடும் மனிதர்... இன்று வெளிப்படையாகப் பேசியதைக் கேட்டு புருவத்தை உயர்த்தினாள் யமுனா.

''திடீர்னு வியாபாரம் சரிஞ்சிடுச்சா? அதுக்கு என்னப்பா காரணம்?''

''ஜனங்க டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸைத் தேடிப் போக ஆரம்பிச்சுட்டாங்கம்மா... காய்கறிகளும் ஃப்ரெஷ்ஷா அங்கேயே கிடைக்கறதால... மொத்த ஜனமும் மொய்க்க ஆரம்பிச்சுட்டாங்க. எங்கள மாதிரி கடை நடத்தறவங்க ஈயோட்டி திண்டாடுறோம்.''

''வர வர நீங்க ரொம்ப இளைச்சு துரும்பாயிட்டே இருக்கீங்களேன்னு பாத்தேன்... இந்தக் கவலைதான் உங்க மனசை அரிக்குது போல...

அப்பா! நான் இனிமே சாயந்தரம் கம்ப்யூட்டர் சென்டருக்குப் போறதை நிறுத்திடறேன். தம்பி தங்கச்சிங்க வேறே கான்வென்ட்லே படிக்கிறாங்க... ஃபீஸ் கட்டணும். குடும்ப பாரத்தை ஒண்டியா சுமக்கிறீங்களேப்பா?

பாசத்தில் யமுனாவின் மனம் பாகாய் கரைந்தது.

''மரத்தை வைச்சவன் தண்ணி ஊத்துவான் யமுனா. முட்டி மோதி முயற்சி பண்ணிக்கிட்டே இருக்கணும். எது வந்தாலும் போராடி சமாளிக்கணும். எதிர் நீச்சல் போடணும். கம்ப்யூட்டர் சென்டருக்குப் போறதை நிறுத்தாதே...

உலகமே கம்ப்யூட்டர் மயமாயிடுச்சு. கூடுதல் தகுதியா கம்ப்யூட்டர் கோர்ஸ்களை முடிச்சுக்கிட்டா... உன் எதிர்காலத்துக்கு அது ரொம்பவே கை கொடுக்கும். சரியா?''

''நானும் ரெண்டு வருஷமா கம்ப்யூட்டர் சென்டருக்குப் போனேனே அப்பா... படிச்சவரை போதும் அப்பா. இருக்கிற கஷ்டத்துல...'' அவள் பேசி முடிக்கும் முன் இடைமறித்தார் நடேசன்.

''நீ இப்படி பேசறது தான் ரொம்பக்கஷ்டமா இருக்குடா. இதுக்குத்தான் நான் எதையும் சொல்றதே இல்ல... படிக்கிற பொண்ணு விசனப்பட்டா... கவனம் குறைஞ்சிடும். சாயந்தரம் வழக்கம் போல சென்டருக்கு போகணும். சரியா?''

''சரிப்பா'' என்ற யமுனாவின் விழிகளில் கண்ணீர்க் குளம் கட்டியது. தலைகுனிந்தபடி காய்களை நறுக்க ஆரம்பித்தாள்.

''அக்கா! தலை சீவி விடறியா?'' சீப்பும் கையுமாய் வந்து நின்றாள் தங்கை உமா.

''அஞ்சு நிமிஷம் பொறு உமா. சாம்பார் வச்சுட்டு வந்துடறேன்.'' அதற்குப் பிறகு அவளுக்கு நிற்க நேரமில்லை. பம்பரமாய் சுழன்றாள். சமைத்துப் பரிமாறி சாப்பாடு கட்டிக் கொடுத்து தானும் எடுத்துக் கொண்டு வேறு சுடிதாருக்கு மாறினாள்.

தலையை வாரிப் பின்னலிட்டு முடித்து சுவரிலிருந்த கண்ணாடியில் தன்னை ஒரு முறை பார்த்துக் கொண்டாள். சற்றே நீள் வட்ட முகம். மானின் மருண்ட விழிகள். ரோஜா இதழ்களைப் பிய்த்து ஒட்ட வைத்தது போன்ற உதடுகள். தந்தத்தைக் கடைந்தாற் போன்ற நிறம்.

''முரளிக்கு என்னைப் பிடிக்குமா?'' யமுனாவின் அடி மனதிலிருந்து இந்த எண்ணம் திடீரென்று எழும்பியது. முந்திரிக் கொட்டையாய் எழுந்த கேள்வி முற்றுப் பெறும் முன்னரே தலையில் தட்டி அடக்கினாள்.



மெல்லிய குற்றவுணர்வு மனசுக்குள் கோடு இழுத்தது.

'என்னது இது? என் கட்டுப்பாட்டையும் மீறி இப்படியொரு எண்ணம் தலைகாட்டத் தொடங்கி விட்டதே? இது எதில் போய் முடியும்?' பயம் உள்ளூர நடுக்கமாய் உடலெங்கும் ஓடியது.

சிறு பிள்ளையின் கையில் அகப்பட்ட தும்பியாய் மனம் சடசடத்தது.

அப்பா நடேசன் அவளுக்கு முன்னரே கடை திறக்கக் கிளம்பி விட்டிருந்தார். கூடத்திலிருந்த தாத்தாவை எறிட்டுப் பார்க்கத் தெம்பின்றி மெல்ல நடந்த யமுனா... நடையிலிருந்த செருப்புகளை கால்களில் திணித்துக் கொண்டாள். அங்கிருந்தபடியே... ''நான் கிளம்பறேன் தாத்தா'' என்று குரல் கொடுத்துவிட்டு தெருவில் இறங்கி நடந்தாள்.

★ ★ ★

''என்னப்பா முரளி? எதையோ சொல்ல வர்றே... ஆனா சொல்லத் தயங்கிட்டு மென்று முழுங்கற மாதிரி தெரியுது. அம்மாகிட்ட என்ன தயக்கம்?'' மகனது முன் தட்டை வைத்து வெங்காய சாம்பாரால் இட்லிகளைக் குளிப்பாட்டியபடியே பேசினார் ரங்கநாயகி.

''ஒரு முக்கியமான புக்கை வாங்கறதுக்காக நேத்து நான் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்"க்கு போனேன் இல்லையா? அங்க... அவங்க ரெண்டு பேத்தையும் பாத்தேன்மா.''

''யாரை?... ஓ... உங்க அப்பாவையும் அண்ணாவையும் பார்த்தியா? அதான்... திரும்பி வர்றப்போ உன் முகம் பேயறைஞ்சாப்பல இருந்ததா? கேட்டதுக்கு தலை

வலிக்குதுன்னு சொல்லிட்டு... இழுத்துப் போர்த்திக்கிட்டு படுத்துக்கிட்டியே?''

ரங்கநாயகியின் குரலில் சுருதி இறங்கியிருந்தது. ரங்கநாயகி பாட்டு டீச்சராக ஒரு பள்ளியில் இன்றளவும் வேலை பார்த்து வந்தார். மாலையில் அக்கம் பக்கத்து குழந்தைகளுக்கு பாட்டு கிளாஸ் எடுத்தும் வந்தார்.

கௌரவத்துடன் சுயமரியாதையை விட்டுத் தராமல் வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் ரங்கநாயகி. பணத் திமிரால் ஆணவங்கொண்டு அடாத செயல் புரிந்த கணவர் விஸ்வநாதனை, அவரால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

மலருக்கு மலர் தாவி தேனைப் பருகும் வண்டாகத் திரிந்த விஸ்வநாதனை திருத்தி விடப் போராடிப் பார்த்தும் அலுத்து விட்டார் ரங்கநாயகி. இரு மகன்களைப் பெற்ற ரங்க நாயகியால்... தொடர்ந்து நரக வேதனை அனுபவிக்கப் பொறுமை இருக்கவில்லை.

மூத்த மகன் முகேஷுக்கு அப்பாவின் மேல் ஒட்டுதல் அதிகம். கணவர் விஸ்வநாதனையும், முகேஷையும் உதறி விட்டு இளைய மகன் முரளியுடன் வெளி நடப்பு செய்து விட்டார் ரங்கநாயகி.

சொந்தக் காலில் நின்று சம்பாதித்து கண்ணும் கருத்துமாய் முரளியை வளர்த்து ஆளாக்கினார். ஊரார் மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சரியப்படும் வகையில் முரளியை உருவாக்கி விட்டிருந்தார்.

ஆனால் மூத்த மகன் முகேஷின் நிலைமை தலை கிழாகத்தான் மாறி இருந்தது. பணத்திலேயே புரண்டு வளர்ந்த



விதம், அதித செல்லம், கண்டிப்பு இல்லாத வளர்ப்பு... எல்லாமாகச் சேர்ந்து அவனைத் தடம் புரள வைத்தது நிஜம்!

''நல்ல வேளையாக அந்தக் கன்றாவி உங்க கண்ணுலே படலை அம்மா. அப்பாவும் அண்ணாவும் ரொம்பக் கேஷுவலா பேசிக்கிட்டே சிகரெட் புடிச்சு புகை விட்டுட்டு இருந்தாங்க... அண்ணனுக்கு எல்லாக் கெட்டப் பழக்கமும் இருக்காமே... கேள்விப்பட்டேன். அப்பாதான் கெட்டழிஞ்சு போனார்னா... அண்ணனையும் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி இருக்காரேம்மா'' ஆதங்கப் பட்டான் முரளி.

''இதுக்கெல்லாம் பகவான் தான் கண்ணைத் திறந்து பார்க்கணும். நம்ம கையில எதுவுமே இல்லப்பா'' மூத்த மகன் முகேஷின் நிலைமையை என்னும் போதே... அவரது பெற்ற வயிற்றில் அமிலம் சுரந்தது.

''சரிப்பா... சாப்பிட்டுட்டு காலேஜுக்குப் புறப்படு... மனசைப் போட்டு குழப்பிக்காதே... மூணு நாள் முன்னாடி ஒரு கவிதை எழுதி வச்சிருந்தியே? அது ரொம்ப அருமையா இருக்குப்பா... சாயந்தரம் நீ வந்ததும் அதை நான் 'சஹானா' ராகத்தோட பாடிக் காட்டறேன்.'' பேச்சை திசை திருப்பினார் ரங்கநாயகி. மவுனமாக தலைகுனிந்து சாப்பிடத் தொடங்கி னான் முரளி.

'சஹானா... அருமையான ராகத்தோட பெயர். சஹானா...! வேடிக்கையும் விளையாட்டும், குறும்பும், குதூகலமும், துணிவும் துடுக்கும் உருக்கொண்ட பெண்ணை... இதுநாள் வரை அவன் சந்தித்ததே இல்லை. 'சஹானா...' முணுமுணுத்த முரளியின் நாடி நரம்புகளில் சில்லிப்பு பரவி... அவனை சிலிர்க்க வைத்தது.

# 4

தனக்கு தேவைப்பட்ட இரண்டு புத்தகங்களை வாங்கிக் கொண்டு பேருந்து நிறுத்தம் நோக்கி நடந்தான் முரளி. பேருந்து நிறுத்தத்தில் கூட்டம் அதிகமிருந்தது.

சூரியன் வேறு தன் பங்குக்கு அனலைக் கக்கிக் கொண்டிருந்தது. முகத்தில் கொப்பளித்த வியர்வைத் துளிகளை கைக்குட்டையால் ஒற்றியபடி எதிர்திசையில் பார்வையை ஓட்டியபோது... பளிச்சென்று விழிகளுக்குள் சிக்கினாள் யமுனா.

இடைவிடாது வாகனங்கள் எதிரும் புதிருமாய் பறந்து கொண்டிருக்க... எதிர்ப்புற சாலையிலிருந்து எழுபது வயது மதிக்கத்தக்க ஒரு பெரியவரை கைப்பற்றி, இரு பக்கமும் பார்த்து கவனமாய் அழைத்து வந்தாள்.

பெரியவரை பேருந்து நிறுத்தத்தில் பத்திரமாய்ச் சேர்த்தாள்.

''ஒரு நிமிடம் இருங்க ஐயா'' என்றவள் அருகே இருந்த கடைக்குச் சென்று தண்ணீர் பாட்டில் வாங்கி வந்து அவரிடம் தந்தாள்.

''இந்தாங்க ஐயா குடிங்க... ரொம்ப வெயிலா இருக்கு. இனி எப்ப வெளியே வந்தாலும் தண்ணீர் பாட்டிலோடு வாங்க. நீங்க எங்கே போகணும்?''

'என்னது? முன்பின் தெரியாத ஒரு முதியவரையா இவ்வளவு சிரத்தையுடன் அழைத்து வந்தாள்? இரக்க சுபாவமும் உதவும் மனப்பான்மையும் கொண்டவள் போலிருக்கிறதே...'



அவனது மனதிற்குள் மின்னல் கீற்றாய் இந்த எண்ணம் தோன்றி மறைந்தது. புருவங்கள் ஆச்சரியத்தில் மேலேற... அவளையே நோட்டமிட்டான்.

இளம் சிவப்பு வண்ணத்தில் சுடிதார்... அடர்ந்த நீண்ட கூந்தலைத் தளரப் பின்னி காதோரத்தில் பன்னீர் ரோஜாவை செருகியிருந்தாள். அகன்ற விழிகளில் அன்பும் கனிவும் ஏகத்திற்கும் ததும்பின.

''ஐயா... இதோ பஸ் வந்தாச்சு... பத்திரமா போயிடுவீங்களா? இல்லே... நானும் துணைக்கு வரட்டுமா?''

''இல்லம்மா... நானே போயிடுவேன். யார் பெத்த பெண்ணோ? இவ்ளோ உதவி செஞ்சிருக்கே. நீ நல்லா இருக்கணும். நன்றிம்மா.''

''நன்றியெல்லாம் எதுக்கு ஐயா? மனுசருக்கு மனுசர் இந்த உதவிகூட செய்யலைன்னா... இந்த பூமியில நாம பிறந்ததுக்கே அர்த்தமில்லாம போயிடுமே... ஐயா சீக்கிரம் ஏறுங்க.. நல்லகாலம் நிறைய சீட் காலியா இருக்கு... பாத்து... பத்திரம்.''

பெரியவரை பேருந்தில் ஏற்றிவிட்டு தற்செயலாய் திரும்பினாள். முரளியை ஏறிட்டதும் குப்பென்று அவளது முகம் குங்குமமாய் சிவந்து போனது. சட்டென்று பார்வையைத் தழைத்துக் கொண்டபோது... பெருங் குலுக்கலுடன் அந்த பேருந்து பெருமூச்சு விட்டபடி வந்து நின்றது.

முண்டியடித்த கூட்டத்தில் பெரும் பிரயத்தனம் செய்து தன்னைப் பேருந்துக்குள் திணித்துக் கொண்டாள்.

''வாவ்! டேய் மச்சி... சூப்பர் ஃபிகருடா'' சட்டென்று பின்னால் திரும்பிப் பார்த்தாள் யமுனா.

ரோட் சைடு ரோமியோக்கள்... நாலைந்து நிவட்டி தடியன்கள் கூட்டத்தை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு நெருங்கியடித்துக் கொண்டிருந்தார்கள்.

குப்பென்ற சிகரெட் நாற்றம் அவளது அடிவயிற்றைக் குமட்டியது.

''டேய்! அசப்புல அசின் மாதிரியே இருக்காள்லே?''

''ஆமாண்டா மாமு... 'உன் விழியில் விழுந்தேன்... விண்வெளியில் பறந்தேன்... கண் விழித்து சொப்பனம் கண்டேன்...''

கர்ண கடூரமாய் ஒருவன் பாடியபோது... அவளது செவிகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போலிருந்தது. உள்ளூர பொங்கி வந்த ஆத்திரத்தை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

உடல் அருவருப்பில் கூசிப் போக... நெருப்புத் தணலில் நின்று கொண்டிருப்பதைப் போன்று தவிப்புடன் நிமிர்ந்தபோது... மூன்றடி தூரத்தில் கம்பியைப் பிடித்தபடி முரளி நின்றிருப்பதைப் பார்த்து விட்டாள்.

இவள் படும் அவஸ்தையைப் புரிந்து கொண்ட நொடியில்... கனல் கக்கும் விழிகளால் அந்த தடியர்களை முறைத்த முரளி, ''இப்படி... எனக்கு முன்னால வந்துடுங்க... கமான்'' என்று உரிமையாய் குரல் கொடுத்ததுதான் தாமதம்...

கூட்டத்தைக் கிழித்து நீந்தியபடி சென்று அவனுக்கு முன்னால் வந்து நின்று கொண்டாள் யமுனா.

''கூட்டம் இன்னிக்கு திமுலோகப் படுது இல்ல?''

''ஆ... ஆமா'' இலேசாய் தலையசைத்தாள். முரளியைப் பார்த்த மாத்திரத்திலேயே அவளுடைய அனுமதியின்றி



அவளது இதயக் கதவுகள் அவனை சிறைப்படுத்தி விட்டன. அதை நன்கு புரிந்து கொண்டதாலோ என்னவோ... கல்லூரி வளாகத்திற்குள் அவனது தலையைக் கண்டாலே... வெகுதூரம் விலகிச் சென்று விடுவாள்.

மூன்று மாதங்களாக இதே கூத்துதான்! வெகு நாட்கள் கழித்து இவ்வளவு கிட்டத்தில் அவனை சந்தித்ததும் யமுனாவின் இதயத்திற்குள் ஆயிரம் பட்டாம்பூச்சிகள் ஓசையின்றி சிறகடித்தன.

நெஞ்சுக்குள் ஐஸ் க்ரீம் மழை ஜிலுஜிலுவென்று வழிந்தோடியது.

'அந்த தடியர்கள், கூட்டத்தில் என்னை இடித்தால் இவருக்கேன் இப்படி கோபம் வரவேண்டும்? இவரும் என்னை நேசிக்கிறாரோ?'

கேள்விகளைச் சுமந்த வண்ணம் எண்ண அலைகள் எழும்பி இதயத்தில் மோதின.

''தேங்க் யூ மிஸ்டர் முரளி.''

''இதுல என்ன இருக்கு? ஆங்... இன்னிக்கு சன்டே அதுவுமா வெயில்லே வெளியில தனியா எங்கே கிளம்பிட்டீங்க?''

''அடையாறுல... வீ.ஆர். ஹாஸ்பிடலுக்கு.''

''மைகாட்! நானும் அங்கதான் போறேன். ஆமா... ஹாஸ்பிடல்லே யாரைப் பார்க்கப் போறீங்க? உறவுக்காரங்க யாருக்காவது உடம்பு சரியில்லையா?''

''நோ... நோ! ஒரு பேஷண்ட்டுக்கு உடனடியா ரேர் குரூப் இரத்தம் தேவைப்படுதாம். பிளட் டோனர்ஸ் அஸோசியேஷனிலிருந்து... எனக்கு ஃபோன் வந்தது. இரத்த

தானம் பண்ணினா புண்ணியம் கிடைக்கும்னு நம்பறவ நான் அதான்...''

''அட... என்ன ஆச்சரியம் யமுனா! எனக்கும் ரேர் குரூப் இரத்தம்தான்! கார்த்தால தொலைக்காட்சியில் அரிய வகை இரத்தம் உடனடியா தேவைன்னு அறிவிப்பு வந்ததைப் பார்த்துட்டு தான் நான் கிளம்பினேன். ஆமா... அஸோசியேஷ னிலிருந்து உங்களுக்கு ஃபோன் வந்திருக்கே... அங்கே நீங்க ரெகுலர் பிளட் டோனரா?

''ஆமாம்.''

''கங்கிராட்ஸ் மிஸ்.யமுனா'' சங்கோஜத்தில் மௌனித்தபடி முன்னால் திரும்பிக் கொண்டாள்.

'இவரும் இரத்த தானம் அளிக்கத்தான் கிளம்பியிருக் கிறார். என்னைப் போல் இவருக்கும் உதவும் மனப்பான்மை இருக்கிறதே... இருவரது எண்ணங்களும் ஒரே அலை வரிசையில் இருப்பது ஆச்சரியம் தான்.''

இதை எண்ணும்போதே அவளுக்கு சிலிர்ப்பாக இருந்தது. மயிலிறகால் சாமரம் வீசியதைப் போன்று சுகானுபவமாக இருந்தது.

இதுநாள் வரை மனதிற்கு கடிவாளம் போட்டு கட்டுக்குள் தான் அவள் வைத்திருந்தாள். என்ன பிரயோஜனம்?

முரளியை இவ்வளவு அருகாமையில் கண்டதுமே... அவளது மனம் தறிகெட்டுப் பாய்ந்ததுமில்லாமல்... சந்தோஷம் தாளாமல் குரங்காட்டம் போட்டது நிஜம்!

'ஐயோ... என்னது இது? மனம் மகிழ்ச்சி தாளாமல் இவ்வளவு ஆர்ப்பரிக்கிறதே? இது எதில் போய் முடியும்?



எனது காதல் தோல்வியடைந்து விட்டால்... என்ற பயம் உள்ளூர நடுக்கமாய் உடலெங்கும் ஓடியது.

சிறு பிள்ளையின் கையில் அகப்பட்ட தும்பியாய் மனம் சடசடத்தது.

சட்டென்று டிரைவர் 'சடன் பிரேக்' போட்டதும்... முரளிக்கு பேலன்ஸ் தவறியது. படாரென்று யமுனாவின் முதுகில் போய் மோதிக் கொண்டதுமில்லாமல்... கண் இமைக்கும் நேரத்தில் அவளது தோள் பட்டையில் அவனது முகவாய் அழுத்தமாய் பதிந்தது. மறுகணமே பதறி விலகினாள். அவனது குரலில் நிஜமான வருத்தம் தொனித்தது. ''மைகாட்! சாரி... சாரி... யமுனா'' மறுகணமே பதறி விலகினாள். அவளது குரலில் நிஜமான வருத்தம் தொனித்தது. அத்தனை கூட்டத்தில் நெருக்கமாய் நின்று கொண்டிருந்தாலும்... சுண்டு விரல்கூட அவள் மீது படாமல் சர்வ ஜாக்கிரதையாய் கண்ணியமாய் அவன் பேசிய விதம்... அவளது உள்ளத்தைக் கொள்ளை அடித்தது.

'இவருடன் காலமெல்லாம் வாழும் பாக்கியம் எனக்கு கிட்டுமா?' உள் மனம் ஏங்கியது. கூடிய விரைவில் அவளது உள்ளத்தைக் கவர்ந்த முரளி... எத்தகைய ஆபத்தை சந்திக்கப் போகிறான் என்பது அப்போது அவளுக்கு எப்படித் தெரியும்.

## 5

வெயில் உக்கிரமாக நெருப்பைக் கக்கியது. கூட்டத்தைப் பிளந்து முண்டியடித்து அந்த பஸ்ஸிலிருந்து உதிர்ந்தார்கள் யமுனாவும், முரளியும்.

''மிஸ். யமுனா! ஒரு உன்னதமான காரியத்துக்காக... ஒரே எடத்துக்கு நாம்ப போறோம். ஆட்டோவில சேர்ந்தே

போலாமா? இஃப் யூ டோண்ட்' மைண்ட்?'' தயக்கமாய் அவளது விழிகளை ஊடுருவினான்.

''உம்! போகலாமே'' பதிலைக் கேட்டதும் அவனது முகத்திலிருந்த இறுக்கம் விலகி சட்டென்று ஆயிரம் வாட்ஸ் வெளிச்சம் பரவியது.

இருவரும் ஒரே ஆட்டோவில் பயணித்த போது... யமுனாவுக்குள் மகிழ்ச்சி நீரூற்று பொங்கி உயர்ந்தது.

எதிர்க்காற்று அவளது முகத்தை வருடி... காதோரத்து முடிக் கற்றைகளுடன் செல்லமாய் கிச்சுகிச்சு மூட்டியது.

'நடப்பதெல்லாம் கனவா? அல்லது நிஜம் தானா?' உள்ளூர சந்தேகம் முளைவிட... முரளி அறியாமல் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்.

'நிஜம்தான்' உள்ளுக்குள் சிலுசிலுவென்று குற்றாலச் சாரல் அடித்தது.

'வாழ்க்கைப் பாதையிலும் இவருடன் சேர்ந்து பயணிக்கும் பாக்கியம் எனக்கு கிடைக்க வேண்டும்' இஷ்ட தெய்வத்தை மனமுருகப் பிரார்த்தித்தாள்.

'என்னது இது? மனம் வரம்பு மீறி ஆசைப்படுவது தகுமா? நன்றாகப் படித்து டிஸ்டிங்ஷனில் தேறி பெரிய பதவியில் அமர்ந்து... அப்பாவின் பாரத்தை இறக்கி தம்பி தங்கையைக் கரையேற்ற வேண்டாமா...?' என்ற எச்சரிக்கை மணி பலமாய் ஒலித்தது.

மனசாட்சி மணலாய் உறுத்தியது. ஆசையைத் தட்டி அடக்கினாள்.

''மிஸ், யமுனா! உ... உங்க க்ளோஸ் ஃபிரண்ட் சஹானாவும்... உங்க மாதிரியே... ரெகுலரா பிளட் டோனேட் பண்ணுவாங்களா?''



''நோ... நோ! அவளுக்கு இதிலெல்லாம் இன்ட்ரஸ்ட் கிடையாது'' முறுவலித்தாள்.

''ஓஹோ'' என்ற முரளியின் குரலில் ஏமாற்றம் எட்டிப் பார்த்தது.

''உங்களைப் பார்த்தா... ரிசர்வ்ட் டைப்பா தெரியுது. ஆனா... உங்க ஃபிரண்ட் அப்படியில்லை போலிருக்கே?''

''அவ ஜாலி டைப்... அவ இருக்கிற இடமே கலகலப்பாத்தான் இருக்கும்.''

''ஆச்சரியம் தான்... ரெண்டு பேத்துக்கும் எதிரும் புதிருமான குணங்கள்... எப்படி ஃபிரண்ட் ஆனீங்க?''

''மனசுல எதையும் வச்சுக்க மாட்டா... வெளிப்படையா அதைக் கொட்டிடுவா... அந்த குணம் என்னை காந்தமாக ஈர்த்துடுச்சு... அதான்!''

''ஓ...'' அதன் பிறகு மவுனம் அவர்களிடையே கெட்டிச் சுவராய் எழும்பி நின்றது. வீ.ஆர். ஹாஸ்பிடலுக்குச் சென்று இரத்த தானம் அளித்துவிட்டு சிறிது நேரம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு கிளம்பினர்.

''ஹாய் முரளி... எப்படிப்பா இருக்கே?'' நடுத்தர வயது மனிதர் சிநேக பாவனையில் அவனது கரத்தைப் பிடித்துக் கொண்டார்.

''மிஸ் யமுனா! ஒரு ஃபைவ் மினிட்ஸ் வெயிட் பண்ணுங்க. நான் பேசிட்டு வந்துடறேன்.'' நாசூக்காக அந்த நபருடன் நகர்ந்து விட்டான் முரளி.

புற நோயாளிகள் அமரும் நீளமான பெஞ்சில் சோர்வாய் அமர்ந்தாள்.

''ஏய் தேவி! அதோ... வெளிர் நீலக் கலர் சர்ட்டும், கறுப்பு பேண்ட்டும் போட்டிருக்காரே? அது யாருனு

தெரியுமா?'' வளைவு மேஜையின் பின்னால் அமர்ந்திருந்த ரிசப்ஷனிஸ்ட்டிடம்... அந்த குண்டு நர்ஸ் கேள்விக் கணையைத் தொடுத்தாள்.

எதேச்சையாக யமுனாவின் செவிகளில் விழுந்த சம்பாஷணை... அவளைத் திடுக்கிட வைத்தது. அந்த நர்ஸ் யாரைக் குறிப்பிடுகிறாள்? முரளியையா?

''ஓ... அவரா? அவருக்கு ரேர் குரூப்... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிகூட பிளட் டோனேட் பண்ணி யிருக்காரே... அவர் பேரு கூட... முரளி... பெயரை நான்தானே பதிவு செஞ்சிருக்கேன். இதுக்கா இவ்ளோ பீடிகை போட்டீங்க சிஸ்டர்?''

''அட... அவசரப்படாதே தேவி! அவரு சாதாரண ஆள் கிடையாது. பெரிய பணக்காரர்... குபேர குடும்பத்தைச் சேர்ந்தவருன்னு சொல்லலாம்.''

''என்ன சிஸ்டர்... பார்த்தா ரொம்ப சிம்ப்பிளா இருக்காரு... என்னால நம்பவே முடியலையே?''

''இவரோட அம்மா ரங்கநாயகி... எங்க அக்காகூட தான் ஸ்கூல்லே வேலை பார்க்கிறாங்க... மானஸ்தி... பணத் திமிருல அவங்க புருஷன் ''மன்மத ராசா' ஆட்டம் போட்டதைத் தாங்க முடியாம... இந்தப் பிள்ளையைக் கூட்டிட்டு தனியா வந்துட்டாங்க. வேலைக்குப் போய் சம்பாதிச்சு இவரையும் என்ஜினீயராக்கிட்டாங்க.

''இவருக்கு ஒரு அண்ணன் வேற இருக்காரு. அப்பனுக்குத் தப்பாம தலையெடுத்துருக்காராம். பிரபல தொழிலதிபருக்கு புள்ளையா பொறந்துட்டு... கவுரத்தைப் பெரிசா மதிச்சு நடக்கிறவரு... அப்பாவையும், அண்ணனை யும் கால் தூசுக்கு சமமா நெனச்சு உதறிட்டு... அம்மாவை தெய்வமா வணங்கிட்டு வர்றாராம்.''



''என்ன சிஸ்டர் இது? இந்தக் காலத்துல இப்படி ஒருத்தர் இருக்காரே? காசு பணத்துக்காக பெத்தவங்களைக் கூட தூக்கி எறிஞ்சுட்டுப் போறவங்குக்கு மத்தியில... தன் மானத்தையும் சுய கவுரவத்தையும் பெரிசா நெனச்சு வாழ்ற இவரை இவருக்கு... எந்தக் குறையும் வராது. அமோகமா வரப்போறார் பாருங்க.''

''நல்ல வாக்குதான்! அஷ்ட திக்குல இருக்கிற அஸ்வினி தேவதைகள்... உன் வாய் முகூர்த்தத்தைக் கேட்டுட்டு 'ததாஸ்து' அப்படின்னு கையை உசத்தி ஆசிர்வதிக்கட்டும்'' 'க்ளுக்' என்று சிரித்துவிட்டு வம்பு மூட்டையை அவிழ்த்து விட்ட திருப்தியில்... அந்த குண்டு நர்ஸ் திருவாரூர் தேர் போல அசைந்து அசைந்து சென்றதையே இமைகொட்டாமல் பார்த்தாள் யமுனா.

மீண்டும் பார்வையை முரளியின் மீது பதித்தாள். ஆச்சரியம் அவரது முகத்தில் தாண்டவமாடியது. 'இந்தக் காலத்தில் இப்படியொரு இளைஞரா?'' அவன் மீது இருந்த மதிப்பும் மரியாதையும்... குபுகுபுவென்று காட்டாறு போல நிமிடத்திற்கு நிமிடம் கூடிக் கொண்டே போனது.

''மிஸ்... யமுனா! கிளம்பலாமா...? என்னது... உங்க முகமே சரியில்லையே? டயர்டா இருக்கா? கிறக்கமா இருக்கா?''

''இல்ல... அப்படியெல்லாம் இல்ல... கிளம்பலாம்.''

ஆஸ்பத்திரி வளாகத்தின் படிக்கட்டுகளில் இறக்கும் போது... யோசனையில் மூழ்கிப் போய் கவனக் குறைவால் ஒரு படிவிட்டு ஒரு படியில் கால் வைத்துவிட்டு தடுமாறி விழப் போனாள். சட்டென்று அவளது தோள்களைத் தாங்கிப் பிடித்தான் முரளி. சுதாரித்து சாங்கோஜமாய் விலகிக் கொண்டாள்.

''பீ கேர் ஃபுல் யமுனா! பிளட் டோனேட் பண்ணினதுலே உங்களுக்கு இலேசா கிட்டினஸ் வருதுன்னு நெனக்கிறேன். நாம்ப பேசாம இங்கிருந்தே ஆட்டோ புடிச்சுப் போயிடலாம்'' அவனது குரலில் பதற்றம் தொனித்தது.

''இல்ல... இது எனக்கு அடிக்கடி பழகிப் போன விஷயம் தானே? கவனக் குறைவா கால் வச்சுட்டேன். அதான் ஸ்லிப் ஆயிடுச்சு, தவிர... இங்கிருந்து ஆட்டோவிலேயே போனா... இருநூறு கேட்பாங்களே? வீண் செலவு வேணாம்.''

''ஆத்திர அவசரத்துக்கு கணக்குப் பார்க்கப் படாது. வரும்போது பஸ்ஸிலே எவ்ளோ அவஸ்தைப் பட்டோம்? இன்னிக்கு என்னமோ... எங்க பார்த்தாலும் கூட்டமா இருக்கு... பேரண்ட்ஸ் குடுத்த பணத்தை தாம் தூம்னு செலவு பண்ற ஆசாமி நான் இல்ல... இது என்னோட சம்பாத்தியத்துல வந்த பணம்...'' பெருமிதமாய் அவளை ஏறிட்டான்.

''என்ன சொல்றீங்க?''

''எங்கம்மாவுக்கு என் மேல அளவு கடந்த பாசம். பாட்டு டீச்சர். பாடுபட்டு வளர்த்து என்னை ஆளாக்கினாங்க... கடந்த மூணு வருஷமா நான் கார்த்தால ஏழு மணியிலேர்ந்து எட்டரை வரைக்கும் ட்யூஷன் எடுக்கறேன். பள்ளிக்கூடத்துப் பசங்கள்... நம்ம காலேஜுல ஃபர்ஸ்ட் இயர் ஸ்டூடண்ட்ஸ்னு நிறைய பேர் வர்றாங்க... சாயந்தரத்துலே கம்ப்யூட்டர் கிளாசுக்குப் போவேன். அதை முடிச்சா... நேரா வீட்டுக்குப் போயிடு வேன். காபி, டிபன் சாப்பிட்டுட்டு ஆறு மணியிலேர்ந்து எட்டு மணி வரைக்கும் ட்யூஷன் எடுப்பேன். என்னோட செலவை எல்லாம் நானே பாத்துப்பேன். வெளியில போக வர ஒரு பைக் ஒண்ணும் வாங்கிட்டேன்.''



ஸ்தம்பித்துப் போய் விட்டாள் யமுனா.

அதற்குமேல் அவள் மறுப்பேதும் சொல்லவில்லை.

அடையாறில் பிரபலமான ஷாப்பிங் காம்ப்ளக்ஸில்... ஏராளமான அழகு சாதனப் பொருட்களை வாங்கிக் குவித்துக் கொண்டு ஹை ஹீல்ஸ் ஒலியெழுப்ப ஒயிலாய் நடந்து வந்தாள் சஹானா. தனது ஸ்கூட்டியை பார்க்கிங் செய்த இடத்தை நோக்கி நடை போட்டவள்... தற்செயலாய் திரும்பினாள். சாலையில் சிக்னலுக்காக ஏராளமான வாகனங்கள் கர்புர்ரென்று உறுமியபடி தவம் கிடந்தன. அந்த ஆட்டோவில்... யமுனாவும் முரளியும் ஜோடியாய் அமர்ந்திருந்ததைப் பார்த்ததுமே... தளபுளவென்று இரத்தம் கொதித்தது. முரளியின் உயிருக்கே இவள் உலை வைக்கத் துணிவாள் என்பதை யமுனா எவ்விதம் அறிவாள்.

## 6

பருத்தி வெடித்தாற் போல், நீல வானத்தில் ஆங்காங்கே பஞ்சு பஞ்சாய் மேகங்கள் மெதுவாகத் தவழ்ந்து கொண்டிருந்தன. குறை நிலாவாயினும் பிரகாசத்திற்கு குறைவின்றி மேகங்களுக்கிடையில் அவ்வப்போது நாணத்துடன் எட்டிப் பார்த்தது.

பால்கனியில் நின்றிருந்த சஹானாவின் அழகு முகம் ஏகத்திற்கும் டென்ஷனாகி இருந்தது. நெற்றியை விரல்களால் அழுத்திவிட்டுக் கொண்டாள்.

மண்டையை இலேசாகப் பிளந்து பாறாங்கல்லை வைத்துத் தைத்து விட்டது போன்று தலைபாரமாக இருந்தது.

யமுனாவும் முரளியும் ஜோடியாக அமர்ந்து ஆட்டோவில் பயணித்தனத பார்த்ததிலிருந்தே... அவளுக்கு அடிவயிற்றில் திகுதிகுவென்று பற்றிக் கொண்டது. அன்று நடந்த சம்பவத்தை மனம் அசை போட்டதில்... அவளது விழிகள் தூக்கத்தைத் தொலைத்தன.

பள்ளி நாட்களிலிருந்தே யமுனாவுடன் நெருங்கிப் பழகினாலும்... உள்ளூர சஹானாவுக்கு எரிச்சலும் பொறாமை உணர்வும் மண்டிக் கொண்டுதான் இருந்தன.

சஹானா... பிரபல தொழிலதிபர் குருமூர்த்தியின் ஏக போக வாரிசு. ஒரு காலத்தில் நடுத்தர வர்க்கத்தில் பட்ஜெட் போட்டு வாழ்க்கை நடத்தியவர்தான் குருமூர்த்தி. மனைவி குமுதா சஹானாவை ஈன்றெடுத்த நேரம்... அதிர்ஷ்ட தேவதை கண் திறந்து குருமூர்த்தியைப் பார்க்க ஆரம்பித்தாள்.

அவர் மண்ணைத் தொட்டாலும் அது பொன்னாகியது. குருமூர்ததி குறுகிய காலத்திற்குள் மளமளவென்று உச்சிக்கு வந்து விட்டார். அதனால் தானோ என்னவோ... சஹானாவைப் பெற்றவர்கள், அவளைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினார்கள்.

வீட்டில் அவள் வைத்ததுதான் சட்டம்... அதீத செல்வமும் பணத்திலேயே புரண்டு வளர்ந்த விதமும் அவளை சர்வாதிகாரியாக, சண்டி ராணியாக வலம் வர வைத்தன.

'வயதிற்கு வந்த பெண் அடக்க ஒடுக்கமாக இருக்க வேண்டும். வரம்புக்கு உட்பட்டு கட்டுக்கோப்பாக நடந்து கொள்ள வேண்டும்' என்று யாராவது அவளிடம் கூறினால் அவ்வளவுதான்!



''என்ன இது! கட்டுப் பெட்டித்தனமா இருக்கே... சுத்த கர்நாடகமான பேச்சா இருக்கே? பெண்கள் தான் அடங்கி ஒடுங்கி நடக்கணுமா? ஆண்களுக்கு எந்தவிதமான சட்ட திட்டமும் கிடையாதா? நல்லா இருக்கே? ஆணுக்கொரு நியாயம்? பெண்ணுக்கொரு நியாயமா?'' என்று பிலுபிலு வென்று சண்டை பிடித்து விடுவாள்.

பெற்றவர்கள் மருந்துக்குக்கூட அவளைக் கண்டித்ததே இல்லை. மாறாக... மகளை படு நாகரீகமாக நவீனமாக வளர்த்து விட்டிருந்தனர். ராயல் சொஸைட்டியில் பிறந்த பெண் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று அவர் களுக்குள் ஒரு வரைமுறை வைத்துக் கொண்டனர் போலும்.

சினிமா நடிகை போன்று கண்ணைக் கட்டிப் போடும் அழகுடன் விரித்த கூந்தல் காற்றில் பறக்க பவனி வரும் பெண்ணைக் கண்டு... அவர்களுக்கு உள்ளூர பெருமை பொங்கி வழிந்தது.

அவளது கடைக்கண் பார்வை தன் மேல் படாதா என்ற ஏக்கத்தில் வாலிப வட்டங்கள் கல்லூரி வாசலில் பழியாய் காத்துக் கிடந்தனர். 'தான் ஒரு தன்னிகரற்ற அழகி' என்ற கர்வம் அவளது இரத்தத்தில் ஊறிப் போயிருந்தது. எத்தனையோ இளைஞர்கள் அவளது தரிசனம் காண... மணிக்கணக்கில் தவமிருந்து தவிப்பதை அவள் அறிவாள்.

படிப்பிலும் அவள் கெட்டிக்காரிதான். கொள்ளையழகு கொட்டிக்கிடக்கும் பணக்காரியாக இருந்தாலும்... தன்னிடம் இல்லாத ஏதோ ஒரு பிளஸ் பாயிண்ட் யமுனாவிடம் இருப்பதை அவள் அறிவாள்.

படிப்பில் யமுனா 'நம்பர் ஒன்'னாகவே திகழ்ந்தாள். பள்ளி ஆசிரியர்களாகட்டும்... கல்லூரி விரிவுரையாளர்களா

கட்டும் அவளைத் தாங்கு தாங்கு என்று பாராட்டித் தட்டிக் கொடுப்பதை... சஹானாவால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

வார்த்தைக்கு வார்த்தை 'யமுனா... யமுனா' என்று நாக்கில் தேனைத் தடவிக் கொள்ளாத குறையாக இனிக்கப் பழகினாலும்... நெஞ்சம் முழுக்க வஞ்சம் கொண்டிருந்தாள் சஹானா.

சமீபகாலமாய்... இண்டர்நெட்டில் இளைஞர்களுடன் 'சாட்டிங்' செய்வதில் அவளுக்கு ஆர்வம் மங்கி மறைந்து கொண்டே வந்தது. காலேஜுக்கு காலடி எடுத்து வைத்ததிலிருந்து... அவள் மனதை முழுவதுமாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்தான் முரளி.

சகலகலா வல்லவனாய்... அந்தக் கல்லூரியின் முடிசூடாத மன்னனாய் விளங்கிய முரளியின் கவனத்தை ஈர்ப்பதிலேயே குறியாக இருந்தாள். 'ஒட்டு மொத்தக் கல்லூரியும் தலை மீது தூக்கி வைத்துக் கொண்டாடும் அளவுக்கு திறமைசாலியாக இருக்கிறானே? இவன் என் அழகைப் புகழ வேண்டும். என்னை உருக உருக காதலிக்க வேண்டும். அவனது அன்பில் நான் நனைவதை அனைவரும் பார்த்துப் பொறாமைப் பட வேண்டும்' என்று ஏங்கிக் கொண்டிருந்தாள்.

இதற்காக வலிய பல சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொண்டு... அடிக்கடி முரளியைச் சந்தித்து பேச்சுக் கொடுத்துத் தான் பார்த்தாள். அவனது திறமையை மனதார ரசித்துப் பாராட்டுப் பத்திரமும் வாசித்தாள்.

ஆனால் அவனோ ரிஷ்ய சிருங்கனாய் இருந்தான். இவளது அசரடிக்கும் அழகும், இளமையும்... அவளை



இம்மியளவுகூட அசைத்துப் பார்க்கவில்லை. எத்தனையோ இளைஞர்கள் இவளதுகடைக்கண் பார்வைக்காக ஏங்கித் தவிக்கும்போது... முரளி முற்றிலும் மாறுபட்டவனாய் பாராமுகமாய் இருந்தது... அவளுக்கு மிக்க ஏமாற்றமாய் இருந்தது.

இந்த சூழ்நிலையில் யமுனாவும் முரளியும் ஜோடியாய் ஆட்டோவில் பயணித்த காட்சி... அவளது கோபக் கனலைக் கிளறி விசிறியும் விட்டது.

கோபமும் ஆங்காரமும் போட்டா போட்டி போட்டுக் கொண்டு அவளது தலைக்கேற... ஸ்கூட்டியில் விரைந்து வீட்டிற்குச் சென்று... ஷாப்பிங் காம்ப்ளக்ஸில் வாங்கிக் குவித்த அழகு சாதனப் பொருட்களை... தனது அறையில் கடாசிவிட்டு... விருட்டென்று வெளியேறி ஸ்கூட்டியில் அமர்ந்து யமுனாவின் வீட்டிற்குப் பறந்தாள். உள்ளே பதற்றம் பந்தாய் மோதியலைந்தது.

கூடத்தில் சாய்வு நாற்காலியில் சாய்ந்தமர்ந்து குட்டித் தூக்கம் போட்ட தாத்தா சண்முகம்... சஹானாவின் ஹை ஹீல்ஸ் நடைச்சத்தம்கேட்டு வாரிச் சுருட்டிக் கொண்டு நிமிர்ந்தார்.

உடலை இறுக்கிப் பிடித்த க்ரே கலர் டீ சர்ட், கறுப்பு கலர் டைட்ஸ் சாம்ப்பூவின் உபயத்தில் பளபளத்த விரித்த கூந்தல், ஹை ஹீல்ஸ், பந்தயக் குதிரை போன்று மதர்த்த உடம்பு...

'குட்டித்தூக்கத்தைக் கலைத்த கிராதகி... யார் குடியைக் கெடுக்கப் போகுதோ? செருப்பைக் கூடக் கழட்டாம நடுவீட்டிலே வந்து நிக்கிறாளே? மட்டு மரியாதை தெரியாத ஜென்மம்.'

கிழவருக்கு அவளது மென்னியைத் திருகிப் போட வேண்டும் போலிருந்தது. சிரமப்பட்டு ஆத்திரப்பட்டு அடக்கிக் கொண்டார்.

''தாத்தா! யமுனா இருக்காளா?''

''உம்! கொல்லைப் புறத்துல போய் பாரு'' அவரது விழிகள் வெறுப்பை உமிழ்ந்தன.

'டக்டக்'வென்று ஜகடை உருள... கிணற்றிலிருந்து தண்ணீரை இறைத்து பித்தளை அண்டாவில் ஊற்றினாள் யமுனா. புதினா, முளைக்கீரை, பொன்னாங்கண்ணி, அரைக்கீரை என கீரைப் பாத்திகளும்... தக்காளி, வெண்டை, கத்தரி, மிளகாய் செடிகளும்... அவளது அக்கறையான கவனிப்பில் 'தளதள'வென்று விதவிதமான பச்சை வண்ணங்களில் கண்களைக் கட்டிப் போட்டன.

''யமுனா'' கொல்லைப் புறக் கதவருகே நின்றபடியே குரல் கொடுத்தாள் சஹானா.

''அட... என்ன சஹி திடீர்னு...? இரு... இதோ வந்துட்டேன்'' என்றபடியே முகத்தை அலம்பிவிட்டு பூவாளியை கிணற்று மேடை மீது வைத்துவிட்டு வந்தாள்.

''சும்மாதான், டைம் பாஸாகலை... அதான்! நீயும் முரளியும் ஆட்டோவில ஜோடியாக உட்கார்ந்து போனீங்களே? எங்க போயிட்டு வர்றீங்க? என்ன விஷயம்? நீ சாதாரணமா வீட்டை விட்டு எங்கேயும் வெளியிலே கிளம்ப மாட்டியே?''

''பிளட் டோனர்ஸ் அஸோசியேஷனிலிருந்து எனக்கு அவசரமா ஃபோன் வந்தது. வீ.ஆர். ஹாஸ்பிடலுக்குப் போனேன். அங்க... தற்செயலா மிஸ்டர் முரளியும் பிளட் டோனேட் பண்ண வந்தாரு... இன்னிக்கு என்னமோ தெரியல



பஸ்ஸுல ஒரே ரஷ்... ஆட்டோவிலேயே நம்ம ஏரியாவுக்குப் போயிடலாம்னு அவர் கேட்டாரு... என்னால மறுக்க முடியலை... நம்ம காலேஜ்மேட் கூட்டத்துல கஷ்டப் படக்கூடாதுன்னு அக்கறை... ரியல் ஹி இஸ் எ ஜெம்.''

பேருந்து நிலையத்தில் முரளியைப் பார்த்ததையும் கூட்ட நெரிசலில் இருவரும் சேர்ந்து பயணித்ததையும்... சஹானாவிடம் சொல்ல மனம் வரவில்லை. சமீப காலமாய் அவளது நடவடிக்கைகள் யாவும் நல்ல விதமாகப் படவில்லை.

ஆனால் சஹானாவின் மனம் சமாதானம் அடைந்துவிட வில்லை. 'ஊகூம்! இவள் ஏதோ மறைக்கிறாள்... இதையும் தாண்டி வேறு ஏதோ இருக்கிறது.' யமுனாவின் செம்மை படர்ந்த கன்னங்களும்... முரளியைப் பற்றிப் பேசுகையில் நாணத்தில் பளபளத்த அழகிய விழிகளும்... அவளுக்கு வேறுவிதமான கதையைச் சொல்லின.

'இவள் முரளியை நேசிக்கிறாள். என்னை நிராகரித்துவிட்டு இவளைக் காதலிக்கிறானா முரளி? நான் சும்மாவிட மாட்டேன்' உள்ளூர வெறி வெகுண்டு எழுந்தது. அவமானம் தாளாமல் காது நுனி ஜிவு ஜிவு என்று எரிந்தது.

## 7

அந்த ஆடிட்டோரியத்தில் ஏராளமான மாணவர்கள் குழுமியிருந்தனர். நடு நாயகமாக இருந்த சேரில் டான்ஸ் மாஸ்டர் அமர்ந்திருக்க... அவருக்கு அருகிலிருந்த சேரில் உட்கார்ந்திருந்த முரளி... சீரியஸான முகபாவனையுடன் யோசனையில் மூழ்கியிருந்தான்.

கூட்டத்திலிருந்து எழுந்த சலசலவென்ற பேச்சு சப்தம்... அந்த பிரமாண்ட கட்டிடத்தையே அதிர வைப்பதாக இருந்தது. முன் வரிசையில் அமர்ந்திருந்த சஹானா வைத்த கண் வாங்காமல்... முரளியையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

டான்ஸ் மாஸ்டர் ''டியர் ஸ்டுடண்ட்ஸ்'' என்றபடி கைகளை உயர்த்தினார். மந்திரத்திற்குக் கட்டுப்பட்டது போன்று சலசலப்பு சப்தம் சட்டென்று அடங்கியது.

''இந்த வாட்டி நடக்கப்போற இன்டர் காலேஜ் காம்ப்டிஷன்லே... முரளி கலந்துக்கப் போறதில்லைன்னு முடிவு பண்ணிருக்காரு'' என்று அவர் கூறியதுதான் தாமதம்...

''ஏன்?''... ''எதுக்கு?''... ''என்ன காரணம்?''... ''ஐயோ'' என்று விதவிதமான குரல்கள் கூட்டத்திலிருந்து எழும்பி... மாணவர்களின் அதிருப்தியை வெளிப்படுத்தின.

''ஒவ்வொரு வருஷமும் நம்ம காலேஜ் 'வின்' பண்ணியிருக்கு. அதுக்கு மிஸ்டர் முரளிதான் காரணம்னு எல்லோரும் பேசிக்கிறாங்க... இந்த வாட்டி அவர் கலந்துக்கப் போறதில்லைன்னா... நம்ம காலேஜ் எப்படி சார் 'வின்' பண்ண முடியும்? யு.ஜி. ஸ்டூடன்ட்ஸ் அத்தன பேரும் இதுக்கு ஆட்சேபம் தெரிவிக்கிறோம். சார்'' சஹானா எழுந்து நின்று படபடத்தாள்.

''அப்படிப் போடு... போடு... போடு...'' கூட்டத்திலிருந்த மாணவன் ஒருவன் சஹானாவை 'சப்போர்ட்' செய்யும் விதத்தில் உச்சஸ்தாயியில் உற்சாகமாக பாடினான்.

முதலாம் வருட மாணவியான சஹானாவின் துணிச்சலை வெகுவாய் ரசித்த டான்ஸ் மாஸ்டர் அவளைக் கையமர்த்தினார்.

''இதுக்கான பதிலை உங்க முரளியே சொல்லட்டும்.''



''மை டியர் ஃபிரண்ட்ஸ்! நீங்க என் மேல வச்சிருக்கிற நம்பிக்கைக்கும் அன்புக்கும் என்னிக்கும் நா கடமைப் பட்டிருக்கேன். போட்டியில நாம்ம ஜெயிக்கணும்கிற வெறியும் உத்வேகமும் உங்க ஒவ்வொருத்தர் கிட்டேயும் இருக்கு. இந்த வருஷத்தோட என் படிப்பு முடியுது. நா வெளியில போயிடுவேன். நா போயிட்டாலும்... நம்ம காலேஜ் 'வின்' பண்ணனும். அதான் என் ஆசை! உங்களால கண்டிப்பா முடியும்.''

''அது எப்படி...?'', ''ஊகூம்...'', ''ரொம்ப கஷ்டம்...'', ''எங்களுக்கு நம்பிக்கை இல்ல'' என்று மீண்டும் விதவிதமான குரல்கள் எழுப்பின. அதில் ஏகத்திற்கும் நம்பிக்கையின்மை தொனித்தது.

''டியர் ஸ்டுடன்ட்ஸ்! அவசரப்படாதீங்க. போட்டியில முரளி கலந்துக்கலையே தவிர... நம்ம காலேஜ் 'வின்' பண்றதுக்குரிய அத்தனை முயற்சிகளையும் அவர் செய்து கிட்டுதான் இருக்காரு... அவர் ஒரு ஐடியா குடுத்திருக்காரு... சால்சா நடனம்னு... லத்தீன் நாட்டுப் பாரம்பரியம் நடனம் இப்போ அறிமுகம் படுத்தி இருக்காங்களாம். சென்னையில இதற்கான நடன வகுப்புகள்... பல இடங்கள்லே தொடங்கப் பட்டிருக்காம்... முரளி! நீங்களே! விரிவாக சொல்லிடுங்க'' டான்ஸ் மாஸ்டர் உத்தவிட்டார்.

''சால்சா நடனம்... ஆணும் பெண்ணுமா ஜோடியா ஆடப் படற நடனம். உற்சாகமான நடன அசைவுகளும் துள்ளல் இசையும்... இதோட பிளஸ் பாயிண்ட்! டிஸ்கோதே, வார இறுதிப் பார்ட்டிகள்லே... இந்த மேற்கத்திய நடனத்தை ஆடறது இப்போ ஃபேஷன்! கடந்த ரெண்டு வாரமா மதியம் நடன வகுப்புக்குப் போய்... இந்த டான்ஸை நா கத்துக்கிட்டேன். நம்ம காலேஜ் பிரன்சிபால் தான் மதியம் லீவு

கொடுத்து என்னை அனுப்பி வச்சார்... இந்த டான்ஸை வச்சா... இந்த வருஷமும் நாம ஜெயிச்சிடலாம்.

இந்த டான்சுக்கு பத்து ஜோடியை நாம்ம தேர்வு செய்யப் போறோம். போட்டிக்கு இன்னமும் ஒரு மாசம்தான் இருக்கு... கஷ்டமான நடன அசைவுகளை டான்ஸ் மாஸ்டர் கூட சேர்ந்து நானும் கத்துத் தருவேன். டான்சுக்கு இடை யிடையே 'ஸ்வஸ்திக்...', 'ஸ்டார்' போன்ற வடிவ அமைப்பை என்றபடி முரளி கட்டை விரலை உயர்த்திக் காட்டினான்.

''வா...ஹ'', ''ஹுர்ரே'' சில மாணவிகளும், மாணவர்களும் உற்சாக மிகுதியில் எழுந்து நின்று ஆட்டம் போட்டனர். சிலர் ''விஷ்'' என்று விசிலடித்தனர்.

''வாரே வா'' முழங்கையை உயர்த்தி இழுத்தாள் சஹானா.

''தேங்க் யூ மிஸ்டர் முரளி! நம்ம காலேஜ் 'வின்' பண்ணணும்கிறதுக்காக இங்கே இவ்ளோ மெனக்கெட றீங்க... உங்க கடமை உணர்ச்சியை நான் பாராட்டறேன். ஐ அப்ரிஷியேட் யுவர் சின்ஸியாரிட்டி'' என்று கூறியவாறு சந்தடிவாக்கில் அவனது கையைப் பற்றிக் குலுக்கினாள்.

''இது என்னோட கடமை'' முணுமுணுத்தபடி மெல்லக் கையை உருவிக் கொண்டான் முரளி.

அந்தக் கூட்டத்தில் யமுனா கலந்து கொள்ளவில்லை. ஆட்டம் பாட்டம் போன்ற கேளிக்கைகளில் ஈடுபட என்றுமே அவள் விரும்பியதில்லை. படிப்பு கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி... போன்றவற்றில் மட்டுமே அவள் கவனம் செலுத்துவாள்.

டான்ஸ் மாஸ்டரும், முரளியும் சேர்ந்து... நடனத்தில் கை தேர்ந்த மாணவ மாணவிகளைத் தேர்ந்தெடுத்து



வடிகட்டினார்கள். அந்த ஆர்ப்பாட்டத்தில் மூன்று மணி நேரங்கள் நகர்ந்ததே தெரியவில்லை.

முரளியின் கவனத்தைக் கவருவதிலேயே சஹானா குறியாக இருந்தாள். அவருடன் ஜோடியாக ஆடுவதற்கு பாலாஜி... மூன்றாம் வருட மாணவன் தேர்வு செய்யப் பட்டான்.

அவன் தனது கையைக் கோர்த்து அணைத்து ஆடியபோது... சஹானாவுக்கு எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது.

அரை மணி நேரம் டான்ஸ் ரிகர்சல் நடந்தது. சால்சா நடனத்தை முரளி லாவகமாகக் கற்றுக் கொடுத்த விதமும், கடினமான நடன அசைவுகளை நளினமாக ஆடிய விதமும்... அவளை ஆச்சரியத்தில் மூழ்கடித்தன.

''பாலாஜி! நீங்க நல்லா ஆடறீங்க... ஆனா நடன அசைவில நளினமே இல்ல... ஸ்பீடா ஆடினாலும் நளினமா இருக்கணும். அதான் முக்கியம்... நகருங்க... நா ஆடிக் காட்டறதை கவனமா பாருங்க. புரியும். கமான்... மிஸ். சஹானா.''

அவளது கையைக் கோர்த்து அணைத்து முரளி ஆடிய போது... அவளுக்கு சந்தோஷத்தில் அப்படியே அந்தரத்தில் பறப்பது போலிருந்தது. அவனது வேகத்திற்கு ஈடுகொடுத்து சுற்றிச் சுழன்று ஆடியபோது... மகிழ்ச்சியில் திக்கு முக்காடித்தான் போனாள்.

ஆனால்... இவளது காதல் ததும்பும் விழிகளை நேருக்கு நேராக சந்திப்பதைத் தவிர்த்தான் முரளி. அதனால் அவளது அடி மனதில் ஏமாற்றம் முற்றுகையிட்டது.

★ ★ ★

''யமுனா... யமுனா'' என்றழைத்தபடி அடுப்பங் கரைக்குள் நுழைந்தார் நடேசன். கிரைண்டரிலிருந்து மாவை வழித்துக் கொண்டிருந்தவளின் முகத்தில் ஆச்சரிய ரேகை படர்ந்தது.

''என்னப்பா? மணி எட்டரைதான் ஆகுது... சீக்கிரமா கடையை மூடிட்டு வந்துட்டீங்க? உடம்பு சரியில்லையா?''

''வியாபாரம் சரியில்லைம்மா... சரி அதைவிடு! இந்தாம்மா பணம்... கம்ப்யூட்டர் சென்டருக்கு கட்டிடு.''

''கம்ப்யூட்டர் சென்டருக்கு அடுத்த மாசத்துலே இருந்து நீங்க பணம் தர வேண்டாம் அப்பா... நான்தான் ட்யூஷன் எடுக்க ஆரம்பிச்சுட்டேனே? ஒன்பது பத்தாம் கிளாஸ் படிக்கிற பசங்க... எட்டுப் பேர் சேர்ந்திருக்காங்க இல்ல? அஞ்சு அஞ்சரை மணியிலேர்ந்து ஏழு மணி வரை ட்யூஷன்... பக்கத்துத் தெருவில் இருக்கற அப்பார்ட்மெண்ட்டுலே இருந்து இன்னமும் சில பசங்க... ட்யூஷனுக்கு வந்து கேட்டாங்க... அடுத்த மாசத்துல இருந்து செகண்ட் ஷிஃப்ட் ஏழு மணியிலிருந்து எட்டரை வரைக்கும் எடுக்கலாம்னு இருக்கேன்.''

''என்னம்மா நீ... உன்னோட குடும்பப் பொறுப்பைப் பாக்கும்போது மனசுல பெருமிதம் பொங்கத்தான் செய்யுது... ஆனால் தாயில்லாக் குழந்தை... நான் ஒருத்தன் உயிரோட இருக்கும்போது... கஷ்டப் படறதைத்தான்... என்னால தாங்க முடியலை'' தழுதழுத்தார் நடேசன்.

''இதுல என்னப்பா கஷ்டம் இருக்கு? இதுல ரெண்டு நல்ல விஷயம் இருக்குப்பா... வீக் ஸ்டூடண்ட்ஸை நல்ல மார்க் எடுக்க வைச்சு தரத்தை உயர்த்தறோம்... அதுல பெரிய ஆத்ம திருப்தி கிடைக்கும். இரண்டாவது... எங்க செலவை



நாங்களே பாத்துக்கலாம். உங்களுக்கு அதிக சிரமம் கொடுக்காம இருக்கலாம்கிற நிம்மதி'' புன்முறுவல் பூத்த மகளின் உச்சந்தலையை இலேசாக வருடி விட்டு நகர்ந்தார் நடேசன். அவள் இந்த முடிவை எடுப்பதற்குக் காரணமா யிருந்த முரளியின் ஞாபகம் மெல்ல எழுந்தது. நெஞ்சுக்குள் ஒரு சிலிர்ப்பு பொங்கியது.

## 8

பவுர்ணமி முடிந்து இரண்டு நாட்களான நிலையில்... தாமதமாய் கிளம்பியிருந்த நிலவொளியில்... வெள்ளியில் ஓரங் கட்டின தினுசில் அலைகள் மின்னின. கொடுக்குகளைத் தூக்கிக் கொண்டு யாரோ உடன் இருந்து விரட்டுகிற மாதிரி பரபரத்து ஓடிய நண்டுகளும்... இதமாய் உடம்பை வருடிக் கொடுத்த உப்புக் காற்றும்... முரளியின் மனதைத் தங்கள்பால் ஈர்க்க முடியாமல் தோற்றுத்தான் போயின.

அவனது மனக் கண்ணில் சஹானா வந்து வந்து போனாள். அவ்வப்போது அவள் நெஞ்சுக்குள்ளே வந்து அழகாய்க் கோலமிட்டாள். விடாதபடி அவனும் நீர் ஊற்றிக் கலைத்தபடி இருந்தான்.

'நான் சஹியை காதலிக்கிறேனா? சதா... அவளது நினைப்பாகவே இருக்கிறதே; காதல் என்பது என்ன?'

அவனைப் பொறுத்த வரையில்... 'காதல் தானாக வரவேண்டும். பார்த்ததுமே மனதினுள் வண்ணத்துப்பூச்சி ஒசைப்படாமல் பறக்க வேண்டும். இதயத்திற்குள் நூறு மின்னல்கள் மின்ன வேண்டும். நரம்புகளில் பூப்பூக்க வேண்டும். உள்ளுக்குள் மகிழ்ச்சிக் கொப்பளங்கள் வெடிக்க வேண்டும். கண்களில் கவிதை பொங்கி வழிய வேண்டும்.

சட்டென்று அரும்பி கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்து... அடக்க முடியாத அளவுக்கு விஸ்வரூபமெடுத்து வெடித்து வெளியே கிளம்புவது தான் காதல்!'

சமீப காலமாக... இத்தனையையும் அவன் உணர்வுப் பூர்வமாக அனுபவித்து வருகின்றானே?

அந்த அசரடிக்கும் அழகு அவனை அடிமைப் படுத்திவிட்டது. அது மட்டுமா? அவளது வெளிப்படையான பேச்சும், துணிச்சலும், குறும்புத்தனமும்... முரளியின் மனதைக் கொக்கி போட்டு ஈர்த்து விட்டனவே...!

கரைகாணாக் காதல் அவளது விழிகளில் ததும்புவதை... அவனும் அறிந்திருந்தான். ஆனால்... 'அவனால் தனது காதலை அவளிடம் வெளியிட முடியுமா? ஊமை கண்ட கனவைப் போல்... உள்ளுக்குள்ளேயே காதலைப் புதைத்து உருகி மருகிக் கொண்டிருக்க வேண்டியது தானா?'

அவனுக்குள் கேள்விகள் முளை விட்டன.

'ட்ரிங்... ட்ரிங்...' திரையில் நண்பன் பாஸ்கரின் பெயர் மின்னி மின்னிச் சிரித்தது.

''ஹலோ... சொல்லு பாஸ்கி.''

''எங்கடா இருக்கே? உங்க வீட்டுக்குப் போனேன். உங்கம்மா நீ வெளியில போயிருக்கிறதா சொன்னாங்க... இன்னிக்கு சன்டே... ட்யூஷனுக்கு லீவுன்னதும்... தனியா எங்கடா கிளம்பிட்டே? என்னைக் கூட ''கூப்பிடாம?''

''மனசு சரியில்லடா... பைக்கை எடுத்துட்டு அப்படியே பீச்சு பக்கமா வந்துட்டேன் பாஸ்கி.''

''அதுக்கு என்ன காரணம் தெரியுமா? யூ ஆர் இன் லவ்... எஸ்... நீ'' சஹானாவை காதலிக்கத் தொடங்கிட்டே முரளி.''



''இல்ல... இது சரியா வராது. விட்டுருடா.''

''மண்ணாங்கட்டி! ஏண்டா தயங்கறே? நம்ம காலேஜ்லே அழகிப் போட்டி வச்சா... இவதான் மிஸ்.காலேஜா வருவா... அவ அழகைப் பார்த்து அவனவன் கிறுக்குப் புடிச்சு அலையறான்... நேத்து டான்ஸ் ரிகர்சல் நடக்கும்போது நா தூரத்துலே இருந்து கவனிச்சேன். அவ உன்னை ரொம்ப நேசிக்கிறாடா... பெரிய ஜீனியஸா இருந்துகிட்டு... ஒரு பொண்ணோட மனசைப் புரிஞ்சுக்க தெரியலையே? மடையா! உனக்கு நீயே ஏதோ முகமூடி மாட்டிக் கிட்டிருக்கியே ப்ளீஸ்... கம் அவுட்.''

''பாஸ்கி! என் குடும்பத்தைப் பத்தி உனக்கே நல்லாத் தெரியும். லேடீஸ் விஷயத்துல அப்பா ரொம்ப வீக்... அதனால்தான் அம்மா அவரைப் பிரிஞ்சு தனியா வந்து எதிர்நீச்சல் போட்டு போராடி என்னை ஆளாக்கினாங்க... எங்க அண்ணனையும் எங்கப்பா கெடுத்து குட்டிச் சுவராக் கிட்டாரு...

வாழ்நாள் முழுக்க எந்த சந்தோஷத்தையும் அனுபவிக்காம ரணப்பட்டுக் கிடக்கற... எங்கம்மாவோட மனசுக்கு நாந்தான் மருந்தா இருக்கேன். எஸ்... நேத்து எங்கம்மாவைத் தேடி அவங்க சிநேகிதி வந்தாங்க... அப்போ எங்கம்மா என்ன பேசினாங்க தெரியுமா? 'முரளியைப் பெத்ததுக்கு நா ரொம்ப குடுத்து வச்சிருக்கணும். இந்தக் காலத்துல இப்படியொரு பிள்ளையானு அப்படின்னு எல்லாரும் ஆச்சரியப்படறாங்க.

எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டான். அவ்ளோ கண்ணியமான பையன். எந்தப் பொண்ணை நான் கை காட்டுறேனோ... அவ கழுத்துலதான் தாலி கட்டுவான்.

கணவரால நொந்து வெந்த மனசுக்கு... என் சின்னப் பையன் பாலை வார்க்கிறான். உத்தமமான பிள்ளையைக் கட்டறதுக்கு... எந்தப் பொண்ணுக்கு குடுத்து வச்சிருக்கோ தெரியலை...' அப்படின்னு அம்மா பெருமையா சொன்னப்போ... எனக்கு கண்ணுல ஜலம் வந்திருச்சு பாஸ்கி'

''டேய் முரளி! அம்மா உன் மேல ரொம்ப பாசம் வச்சிருக்காங்க... உன் மனசுல இருக்கற ஆசையைக் கோடி காட்டு... அவங்களே உங்க ரெண்டு பேத்தையும் சேத்து வச்சிருவாங்கடா.''

''உள்ளுக்குள்ளேயே காதலைப் புதைச்சுக் கிட்டிருந்தா... நீ நடைப் பொணமா ஆயிடுவேடா.''

''பரவாயில்லை பாஸ்கி! என் விதி எதுவோ... அதுப்படி நடக்கட்டும்.''

''உண்மையான காதல்... ஒருநாள் வெடிச்சுக்கிட்டு வெளியில வந்துடும்'' அதற்கு மேல் பேச விரும்பாதவனாய் 'செல்'லை அணைத்தான் முரளி.

சஹானாவின் பூப் போன்ற மிருதுவான கையைக் கோர்த்து அவளை மெல்ல அணைத்தபடி தான் நடனமாடியது... மீண்டும் மனக்கண் முன் வந்தது.

இள வட்டங்களுக்கு உரிய ஆசாபாசங்களுக்கு இடம் கொடுக்காமல்... அவன் மனம் பாறையாய்... இதுவரை இறுகிக் கிடந்தது. இறுகிக் கிடந்த மனதை இளக வைத்து காதலை மலரச் செய்து விட்டாளே சஹானா?

காதல் செய்த இரசவாத வித்தையை எண்ணி அதிசயித்த முரளியின் முகத்தில் புன்னகை அரும்பியது.

விரைவில்... நண்பன் பாஸ்கர் கூறியது போல்...



அவனுக்குள் இருந்த காதல் வெடித்துக் கொண்டு வெளிப் படும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. காதலெனும் ரூபத்தில் மிகப் பெரிய ஆபத்து... அவனுக்காக ஆவலாய்க் காத்திருந்தது.

★ ★ ★

மொட்டை மாடி! காற்று சிலுசிலுவென்று உடம்பைத் தொட்டு விளையாடியது. தூரத்தில் பச்சையும் சிவப்புமாய் விளக்கை மினுக் மினுக்கென எரிய விட்டுக் கொண்டு ஒரு விமானம் பறந்து கொண்டிருந்தது. மாடியின் கைப்பிடிச் சுவர் மீது சோகமே உருவாய் அமர்ந்திருந்தாள் தங்கை உமா.

''உமா... தோசை சூடா வார்த்திருக்கேன். தொட்டுக்க... வெங்காய சாம்பாரும் உனக்குப் பிடிச்ச கொத்தமல்லி சட்னியும் வச்சிருக்கேன். என்ன... இங்க வந்து உட்கார்ந்திருக்கே?'' படியேறி வந்த யமுனா, உமாவின் மோவாயைத் தொட்டு நிமிர்த்தினாள்.

நிலா வெளிச்சத்திலும்... அவளது விழிகள் கண்ணீரில் பளபளத்தன.

''எ... என்னாச்சு உமா?''

''நானும் என் ஃபிரண்டும் அசெம்பிளியில பாடுவோம்னு சொன்னேன் இல்ல? மிஸ் கூட எங்களைப் பாத்துட்டு... 'உங்களுக்கு வாய்ஸ் பிரமாதமா இருக்கு... முறைப்படி பாட்டு கத்துக்கிட்டா... அமோகமா வருவீங்க' அப்படின்னு பாராட்டினாங்களே?''

''ஆமா... பாராட்டினாங்க... போன வாரமே சொன்னியே?''

''என் ஃபிரண்ட் இப்போ பாட்டு கிளாஸ்லே சேர்ந்துட்டாக்கா... எ... எனக்கும் சேரணும்னு ஆசையா இருக்கு... அப்பாவுக்கு இப்போ பணமுடையா இருக்கற தால... அவர்கிட்டே இதுபத்தி கேட்கவே தயக்கமா இருக்கு அக்கா... அதான் தாத்தாவுக்குத் தெரிஞ்சா திட்டுவாருன்னு பயம்... அதான்.''

''உன்னோட ஆசை நியாயமானதுதான்... நல்லா படிக்கிற பொண்ணு... உனக்கு குரல் வளமும் ஆர்வமும் இருக்கு... பாட்டு கத்துக்கணும்னு ஆசைப்படறே... இது தப்பா? தாத்தா உன்னைத் திட்டவே மாட்டாரு... நான்தான் ட்யூஷன் எடுத்துட்டு இருக்கேனே? ஃபீஸைப் பத்தி கவலைப்படாம... நாளைக்கே பாட்டு கிளாஸ்லே சேர்ந்துடு சரியா? நானே வந்து உன்னைச் சேர்த்து விடறேன். பக்கத்துல யாராவது பாட்டு கிளாஸ் எடுக்கிறாங்களான்னு விசாரிக்கணும். வா வந்து முதல்லே சாப்பிடு.''

''அ... அக்கா! என் ஃபிரண்ட் சேர்ந்த இடத்துலேயே நானும் சேர்ந்துக்கிறேன் அக்கா. அவங்க வீடு ராம் நகர்லே இருக்கு... ப்ளீஸ் அக்கா.''

''கொஞ்சம் தூரமாச்சே! சரி... உன் ஆசையை கெடுப்பானேன்? அங்கேயே சேர்ந்துக்கோ'' புன்னகைத்தாள். சந்தோஷம் தாளாமல் தமக்கையைக் கட்டிக் கொண்டாள் உமா. இருவரையும் பார்த்து விதி சிரித்தது... அவர்களை பெரும் சோகக் கடலில் தள்ளிவிட சமயம் பார்த்துக் கொண்டிருந்தது.



## 9

''**நா**ங்க உள்ளே வரலாமா?'' தங்கை உமாவுடன் வந்த யமுனா... அந்த வீட்டின் வாசலருகே நின்றபடி தயக்கமாய் குரல் கொடுத்தாள்.

அடுப்பங்கரை ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தார் ரங்கநாயகி. அவரது பார்வை இருவரின் மீதும் படிந்தது. ''உள்ளே வாங்கம்மா.''

காவி பட்டையடிக்கப்பட்ட உயரமான திண்ணைகளைக் கடந்தால் ரேழி... அதையும் தாண்டினால் பெரிய கம்பி முற்றம்... முற்றத்திலிருந்த அழகான துளசி மேடையில் செழிப்பாக வளர்ந்திருந்தது. துளசிச் செடி... துளசி மேடையில் சிறிய அகல் விளக்கு ஏற்றப்பட்டிருந்தது. கூடத்தில்... சாமி சிலைகளும் படங்களும் வைக்கப்பட்டிருந்த அலமாரிக்குக் கீழே குத்து விளக்கு சுடர்விட்டுப் பிரகாசித்தது.

கூடத்துச் சுவரருகே... வீணையும், தம்புராவும், ஆர்மோனியப் பெட்டியும் வைக்கப்பட்டிருப்பதை பிரமிப்புடன் பார்த்தாள் உமா.

''உமா! அந்தம்மா வர்றாங்க பாரு'' கிசுகிசுத்தாள்.

''வணக்கம் அம்மா'' பதிலுக்கு கை கூப்பியவரை எங்கேயோ பார்த்த மாதிரி இருந்தது.

''நான் யமுனா... இவ என்னோட தங்கை உமா. இவளுக்கு நல்ல குரல் வளம் இருக்கு. பாட்டு கத்துக்கணும்னு ரொம்பவே பிரியப் படறா... எட்டாம் கிளாஸ் படிக்கிறா.''

''சங்கீதம்கிறது உன்னதமான கலை... சிரத்தையும் அக்கறையும் இருக்கற குழந்தைகளுக்குத்தான் நான் தொடர்ந்து கத்துக் கொடுப்பேன். சிரத்தை இல்லைன்னு

மனசுக்குப் பட்டா... உடனே அவங்களை நிறுத்திடுவேன் அப்புறமாசங்கடப்படக்கூடாது. இப்பவே சொல்லிட்டேன் கறாராகப் பேசியவரின் முகத்தில் சரஸ்வதி கடாட்சம் தாண்டவமாடியது.

''இவளோட சிரத்தையைப் பாத்துட்டு... ரொம்ப நல்ல சிஷ்யைன்னு நீங்களே பாராட்டப் போறீங்கம்மா.''

சமர்த்தாக யமுனா பதிலளித்த விதத்தைப் பார்த்ததும் ரங்கநாயகியின் முகத்தில் முறுவல் அரும்பியது.

''உமா! அந்தப் பையைக் கொண்டா'' என்றவள் பையிலிருந்து ஒரு தட்டை எடுத்து வைத்தாள். தட்டில் பழங்களும் வெற்றிலைப் பாக்கும், நூற்றியொரு ரூபாய் தட்சிணைப் பணமும் வைத்து... ரங்கநாயகியை பவ்யமாய் ஏறிட்டாள்.

''அம்மா! உன்னதமான கலையை அவளுக்குள் கத்துக் கொடுக்கப் போற குரு நீங்க... பெரிய மனசு பண்ணி இந்த சின்ன தட்சணையை நீங்க ஏத்துக்கணும். எங்களுக்கு அம்மா இல்ல... உங்களைப் பார்த்தா... பெத்த தாயைப் பார்க்கிற மாதிரி நெஞ்சுக்குள்ளே நிறைவா இருக்கும்மா... உமா! அவங்க கால்லே விழுந்து ஆசிர்வாதம் வாங்கிக்கோ... உனக்கு குருவாச்சே.''

நெகிழ்ந்து போய் கை நீட்டித் தட்டை வாங்கிக் கொண்டார் ரங்கநாயகி.

''நல்ல நாளும் அதுவுமா உங்க ஆசிர்வாதம் கிடைக்க... குடுத்து வச்சிருக்கணும். நானும் நமஸ்காரம் பண்ணிக் கிறேன்'' கால்களைத் தொட்டு... பணிந்தவளின் தோளைத் தடவினார்.



''ந... நல்லாயிரும்மா'', 'இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு பெண்ணா?' அவரது மனதில் நல்லவிதமான அபிப்பிராயம் வந்து அமர்ந்தது.

''உமா! பாட்டு கிளாஸ் முடிஞ்சதும் தனியா கிளம்பிடாதே... இங்கேயே இரு... கிரியை அனுப்பி வைக்கிறேன். சரியா?''

மீண்டும் கைகூப்பி வணங்கிவிட்டு விடை பெற்றாள் யமுனா.

★ ★ ★

நேர்த்தியாய் அளவு வைத்து கோடு போட்டதுபோல் மழை, நேர்கோடாய் பூமியைத் துளைத்துக் கொண் டிருந்தது. சுழன்றடித்த காற்றில் மரங்கள் பேயாட்டம் போட்டன. தோட்டத்துச் செடிகள் குளிருக்கு நடுங்கி ஒன்றுடன் ஒன்று சாய்ந்து ஒட்டிக் கொணடிருந்தன.

ட்யூஷன் முடிந்துவிட்டிருந்தது. அத்தனை பிள்ளை களையும் அவரவர் வீட்டிலிருந்து குடையுடன் வந்து அழைத்துச் சென்று விட்டனர்.

வீட்டு வாசலில் வந்து கவலையுடன் எட்டிப் பார்த்தாள் யமுனா. அதி பயங்கர வெளிச்சத்தோடு மின்னலொன்று வானில் முகம் காட்டிவிட்டுப் போனது. அடுத்த சில கணங்களில் டமடமவென்று இடிச்சத்தம்.

கவலை தோய்ந்த முகத்துடன் கூடத்திற்குள் நுழைந்த வளை ஏறிட்டார் தாத்தா சண்முகம். ''தாத்தா! கிரி தலைவலின்னு சொல்லிட்டு... அரைமணி நேரத்துக்கு முன்ன சுருண்டு படுத்தான். இப்போது காய்ச்சல் அனலாக்

கொதிக்குது... உமாவை வேற கூட்டிட்டு வரணுமே? நானே போய் கூட்டிட்டு வந்துடறேன்.''

குடைமையத் தேடி எடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக விரைந்தாள்.

''பாத்தும்மா! வயசுப் பொண்ணுங்க ஜாக்கிரதையா வாங்க. காலம் கெட்டுக் கிடக்கே... ரொம்ப தூரமா யமுனா?''

''பதினைந்து நிமிட நடைதான் தாத்தா... நீங்க விசனப் படாம இருங்க... நாங்க ஜாக்கிரதையா வந்துடறோம்'' நடையிலிருந்த செருப்புகளைக் கால்களில் திணித்துக் கொண்டே பதிலளித்தாள்.

அவள் அந்த வீட்டை அடையும்போது மழையின் தீவிரம் குறைந்து வானம் பன்னீர் தெளித்துக் கொண்டிருந்தது.

''அட... யமுனாவா? வாம்மா... என்ன இந்த நேரத்துல?''

உமாவை பாட்டு கிளாஸில் சேர்த்துவிடும்போது ரங்கநாயகியைச் சந்தித்ததுதான். மூன்று வாரங்கள் உருண்டோடியும் அவளது பெயரை ஞாபகத்தில் வைத்திருக்கிறாரே?

யமுனாவுக்குள் ஆச்சரியம் எட்டிப் பார்த்தது.

''உமாவைக் கூட்டிட்டுப் போகலாம்னு வந்தேன்.''

''கொஞ்ச நேரத்துக்கு முன்ன உங்கப்பா வந்து கூட்டிட்டுப் போயிட்டாரே...''

''கடையை சீக்கிரமா மூடிட்டாரு போலிருக்கு... எதிர்த்தாப்பல நான் அவங்களைப் பாக்கலையே? ஸ்கூட்டரை வேற ரூட்லே விட்டுட்டாரு போல...'' மெல்லிய குரலில்



பதிலளித்தவளின் விழிகள்... ரங்கநாயகியின் முதுகுக்குப் பின்னால் வந்து நின்ற முரளியைக் கண்டு விிர்த்தன.

''அட... மிஸ்... யமுனா!'' அவனது குரலில் வழிந்த ஆச்சரியத்தைக் கண்டு விருட்டென்று திரும்பினார் ரங்கநாயகி.

''இவளை உனக்குத் தெரியுமாப்பா?''

''அம்மா... இவங்க என்னோட காலேஜ் மேட். ஃபர்ஸ்ட் இயர் ஸ்டுடண்ட். ரொம்ப நல்லா படிக்கக் கூடியவங்க... ஆனா... இவங்க இருக்கற இடமே தெரியாது. பரந்த மனப்பான்மையோட அடிக்கடி இரத்த தானம் பண்ணக் கூடியவங்க... ஆங்... மிஸ்... யமுனா! உள்ளே வாங்களேன்.''

''இ... இல்ல இருக்கட்டும். நா கிளம்பறேன்.''

''அப்போ கடந்த சில வாரமா பாட்டு கிளாசுக்கு வருதே ஒரு சின்னப் பொண்ணு? அவ உங்க தங்கையா? உங்க ரெண்டு பேத்துக்கும் கொஞ்சம் கூட ஜாடை ஒத்துப் போகலையே?''

''அவ... அவ... என் கூடப் பிறந்த தங்கை இல்ல.'' சற்றுத் தயங்கின யமுனா... உமாவைப் பற்றிய விவரங்களை எடுத்துக் கூறினாள்.

பிரமிப்பின் உச்சக் கட்டத்திற்கே சென்று விட்டார் ரங்கநாயகி. 'உடன் பிறந்த தங்கையைப் போல் உமாவின் மேல் என்ன ஒரு கரிசனம் காட்டுகிறாள்? அவள் மீது எவ்வளவு பாசம்... அக்கறை... இரக்கம் காட்டுகிறாளே?'

அவளது மனிதாபிமானமும், பாசமும், பண்பும், மரியாதையும், அடக்கமும்... ரங்கநாயகியின் மனதைக் கட்டிப் போட்டு விட்டன.

''அப்போ நான் வரேன் அம்மா.''

''கொஞ்சம் நில்லுங்க யமுனா... மெயின்ரோ வரைக்கும் துணையா வரேன்... கதவைச் சாத்திக்கோ அம்மா... இதோ வந்துடறேன்'' என்று வார்த்தைக உதிர்த்து விட்டு விரைந்த மகனை வியப்புடன் ஏறிட்ட ரங்கநாயகி.

''இல்ல பரவாயில்லை... நா போயிடுவேன். நீங் சிரமப்பட வேண்டாம்'' தர்ம சங்கடமாய் முரளியையு ரங்கநாயகியையும் மாறி மாறி ஏறிட்டாள் யமுனா.

''ஒரு சிரமும் இல்ல... மெயின்ரோடு வரைக்கு அவன் வரட்டும்'' அன்புடன் கடிந்து கொண்டதும், மௌனமாய் குடையை விரித்தபடி நடந்தாள். ஒரே குடையி அவர்கள் ஜோடியாகச் செல்வதை... விழிகள் விரிய பார்த்தார் ரங்கநாயகி.

சற்று தூரம் நடந்ததும் மழை மீண்டும் வலுத்தது கண்ணைக் குருடாக்கும் வெளிச்சத்தோடு பெரி மின்னலொன்று தோன்றி நடுங்க வைத்தது. அதன் கூடவே காதுகளைப் பிளக்கும் படியான இடிச் சத்தம்... வானமே இடிந்து தலையில் வீழ்ந்து விட்டதைப் போன்ற பயங்க சத்தத்தைக் கேட்டதும்... 'ஐயோ அம்மா நடுங்கிப் போ கண்களை இறுக மூடியபடி முரளியின் தோளோ ஒண்டினாள் யமுனா. ''பயப்படாதே யமுனா... நானிரு கேன்'' புறாக் குஞ்சாய் நடுநடுங்கியவளை ஆபத்பாந்தவனா அணைத்துக் கொண்டான் முரளி.



# 10

கல்லூரி வளாகத்தில் பரந்த மைதானத்திற்கு அருகே... வலது பக்கமாய் ஏழெட்டு படிக்கட்டுகள் இறங்கினால்... புல்வெளிகளும் செடி, கொடிகளுமாய் ஒரு சிறிய நந்தவனம் இருந்தது. மீன்கள் துள்ளி குதிக்கும் அல்லிக்குளம்... அதைச் சுற்றி சருகுகளுடன் உதிர்ந்த மகிழம் பூக்கள்.

அல்லிக் குளத்தின் சுற்றுச் சுவற்றைச் சுற்றி... பதினெட்டு வயது பருவ•சிட்டுக்கள் அமர்ந்து... மதிய உணவைக் கொறித்தபடி கலாய்த்துக் கொண்டிருந்தனர்.

''ஏண்டி சஹி! நேத்து உங்க டான்ஸ் ரிகர்சலை வேடிக்கை பாத்தோம்... உனக்கும் அந்த தேர்ட் இயர் பாலாஜிக்கும்... ஜோடிப் பொருத்தம் சூப்பர்டி'' கிளாஸ் மேட் மேரி வேண்டுமென்றே சஹானாவை வம்புக்கு இழுத்தாள்.

''என்ன மேரி நக்கலா? நானே ஏகப்பட்ட கடுப்புல இருக்கேன். நீ வேறே வெறுப்பேத்தறே?'' எரிந்து விழுந்தாள்.

''உன்கூட சேர்ந்து ஆடறப்போ... சந்தோஷத்துல அவன் கண்ணுல பல்பு எரியுதே... பாத்தியா?''

''அந்த மாங்கொட்டை மூஞ்சியைப் பாக்கவே எனக்கு சகிக்கலை... மூஞ்சியைப் பாரு... இஞ்சி தின்ன குரங்கு மாதிரி... அவனோட மூஞ்சியைப் பாத்தாலே... எனக்கு நசுங்கிப் போன அலுமினியச் சொம்புதான் ஞாபகத்துக்கு வருது.''

''பாத்தீங்களாடி? சஹிக்கு சகிக்கலையாம். நாளைக்கு இன்டர் காலேஜ் காம்படிஷன்லே அவன் கூட ஆடித் தானே ஆகணும்? மேலும் மேலும் இவ முகத்தைப் பாருங்கடி...

எப்படி அஷ்ட கோணலாகுதுன்னு...'' என்று மேரி கூறியது தான் தாமதம்... வெள்ளிக் காசுகளை இரைத்துவிட்டாற் போல்... இளம் பெண்கள் கலகலவென்று சிரித்து விட்டனர்.

''போதும் நிறுத்து மேரி... அன்னிக்கு ரிகர்சல்லே... முரளி என்கூட ஆடினதையும் பார்த்தே இல்ல? அந்த ஜோடிப் பொருத்தம் எப்படி இருந்துச்சுன்னு சொல்லேன்... நல்ல விஷயங்கள் உன் கண்ணுல படாதே?''

''இந்த காலேஜுக்கு... முடி சூடாத மன்னன் முரளி... அவருக்கு யார் பொருத்தம் தெரியுமா? அதுக்கு முன்னாடி ஒரு ஸீன் சொல்லி முடிச்சுடறேன். எங்க அக்கா ராம் நகர்லே தான் குடியிருக்கா... ரெண்டு நாள் முன்னாடி அவளைப் பாத்துட்டு சாப்பிட்டுட்டு வீட்டை விட்டுக் கிளம்பறப்போ... நைட் மணி எட்டாயிடுச்சு. மழை வேற பிடிச்சுக்கிச்சு... பஸ் ஸ்டாப்புல அரைமணி நேரம் நின்னதுதான் மிச்சம்... பஸ் வரலை... சரி திரும்பவும் அக்கா வீட்டுக்கே போயி தங்கிடலாம்னு முடிவு பண்ணி 'ஷார்ட் கட்'லே நுழைஞ்சேன்.

கொட்டற மழையில... முரளிகூட ஒரு பொண்ணு குடையைப் பிடிச்சுக்கிட்டு வந்துகிட்டிருந்தா... இடி மின்னல் சத்தத்துல அவ வெடவெடன்னு நடுங்க... முரளி அவ தோள்லே கை போட்டு அரவணைச்சு நடந்தாரு... முரளிக் கேத்த உயரம் அழகு, அவரை மாதிரியே படிப்புல நம்பர் ஒன்... அவரு மாதிரி அடக்கம் நிதானம்... அந்தப் பொண்ணு யாரு தெரியுமா?'' மேலும் மேலும் வெறுப்பேற்றினாள் மேரி.

யமுனாவுக்கு சுரீரென்றது. எலுமிச்சை சாதத்தை வாய்க்குள் திணித்தவள் திகிலுடன் ஏறிட்டாள். அவளுக்கு எப்போதும் அரட்டைக் கச்சேரியில் ஈடுபடுவதோ... வம்பு



பேசுவதோ பிடிக்காது. தான் உண்டு தன் வேலை உண்டு என்று கடமையே கண்ணாக இருப்பவள்.

தொண்டைக்குள் இறங்க மறுத்த சாதத்தை சிரமப்பட்டு விழுங்கிவிட்டு... டிபன் பாக்ஸை ஹேண்ட் பேக்கில் திணித்துக் கொண்டு அவசரமாய் எழுந்தாள்.

''ஏய்... ஏய் மேரி அந்தப் பொண்ணு யாருடி?'' ஏக காலத்தில் கேட்டபடி மேரியை ரவுண்ட் கட்டி நின்றனர். வம்புக்கு ஆலாய் பறந்த இளம் பெண்களைப் பார்த்த யமுனாவுக்கு... தொண்டைக்குள் ஏதோ கசப்பாய் ஊர்வதைப் போன்றிருந்தது. மூக்கும், காது மடல்களும் ஜிவ்வென்று சூடேறி சிவந்து போயின.

''சாட்சாத் நம்ம யமுனாதான்'' விஷயத்தைப் போட்டு உடைத்தாள்.

''என்னது?'' விருட்டென்று திரும்பினாள் சஹானா.

''யமுனா! மேரி சொல்றது நிஜமா?'' அவளது தோளைத் தொட்டு அசைத்தாள்.

''சஹி... மேரியைப் பத்தி உனக்கே தெரியுமே? ஒண்ணைப் பத்தாக்கி பேசக் கூடியவளாச்சே? அவ ஜோடி கீடின்னு பேசறது எனக்கு சுத்தமா பிடிக்கலை... மிஸ்டர் முரளியோட அம்மாதான்... எங்க உமாவுக்குப் பாட்டு கத்துக் கொடுக்கிறாங்க... கிரிக்கு உடம்பு முடியலை... அதனால அவளை நானே கூட்டிட்டு வரப் போனப்போதான்... எனக்கு இந்த விஷயமே தெரியும்.

நான் அங்க போறதுக்கு முன்னாடியே எங்கப்பா உமாவைக் கூட்டிட்டுப் போயிட்டாரு... முரளியை மெயின்ரோடு வரைக்கும் எனக்குத் துணையா... அவங்கம்மாதான் அனுப்பி வச்சாங்க... தட்ஸ் ஆல்! அதுக்கு

மேல ஒண்ணுமே இல்ல?'' படபடவென்று பொரிந்து தள்ளிவிட்டு அந்த இடத்தைவிட்டு அகன்றாள் யமுனா.

''ஒண்ணுமே இல்லைன்னு அழுத்தம் திருத்தமா சொல்லிட்டுப் போறாளே? ஏதோ ஒண்ணு கண்டிப்பா இருக்கும்னு தோணுதடி... அந்த சகல கலா வல்லவனை வளைச்சுப் போடலாம்னு... சஹி சகல விதமான முயற்சி களும் செய்யறா... ஆனா யமுனா ஊமையா இருந்துகிட்டே காரியத்தை சாதிச்சுடுவா பாருங்கடி'' என்று மேரி கூறியதும்... சுற்றியிருந்த மாடர்ன் யுவதிகள் 'களுக்' என்று சிரித்து... சஹானாவின் வயிற்றெரிச்சலைக் கிளறி விட்டனர்.

''ஷட் அப்'' அவளது அழகிய விழிகள் அனலைக் கக்கின.

★ ★ ★

இன்டர் காலேஜ் காம்பட்டிஷனுக்காக... அந்தக் கல்லூரி விழாக் கோலம் பூண்டிருந்தது. வண்ண வண்ண விளக்குகளும், தோரணங்களும் கட்டப்பட்டு தேவலோக மாய் ஜொலித்தது.

மேக்கப் ரூமில்... டான்ஸ் மாஸ்டரும், முரளியும் நிலை கொள்ளாமல் தவித்தனர். போட்டியில் கலந்து கொள்ளப் போகும் மாணவர்கள் பீதியுடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''இப்போ என்ன சார் பண்றது?'' கவலையுடன் கேட்டாள் சஹானா.

''இந்த பாலாஜிக்கு இப்படியாகும்னு யார் கண்டா? காம்பட்டிஷன் நடக்கப் போகுதுன்னு தெரியும்ல? ஜாக்கிரதையா பைக்கை ஓட்ட வேண்டாமா? பைக் ஸ்கிட்டாகி விழுந்து கால்லே பலத்த அடியோடு படுத்துக் கிட்டானே? போச்சு... எல்லாம் போச்சு... இந்தப் போட்டியில நமக்கு படு தோல்விதான்'' முரளியின் நண்பன் கார்த்திக் வாய்விட்டுப் புலம்பினான்.



''நம்பிக்கையைத் தளர விடக்கூடாதுடா! டேய் முரளி... இன்னும் பத்து நிமிஷம் தான் பாக்கி இருக்கு. சீக்கிரமா மேக்கப் போடு... சஹானா கூட நீதான் ஆடணும். ஏன்னா சஹானா... பாலாஜி ஜோடிதான் குரூப்புல பிரதானமா முன்னாடி நின்னு ஆடணும். பாலாஜிக்கு பதிலா வேற யார் ஆடினாலும் தப்பு பளிச்சுன்னு தெரிஞ்சுடும். நீதான் ஆடணும். வேற வழியே இல்ல... க்விக்'' சமயோசிதமாகப் பேசிய நண்பன் பாஸ்கரை... கண்கள் மின்னப் பார்த்தான் முரளி.

''ஆமாப்பா! நீதான் ஆடணும். தேர் இஸ் நோ அதர் வே'' டான்ஸ் மாஸ்டரும் குரலில் உறுதி தொனிக்கப் பேசினார்.

போட்டியில் கலந்து கொள்ள சஹானாவுடன் ஜோடியாக முரளி மேடையேறிய போது... அந்தக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களுக்கு குஷி பிடித்துக் கொண்டு போனது.

சில குறும்புக்கார மாணவர்கள்... 'அலைபாயுதே' பட நாயகன் மாதவன் ஸ்டைலில்... சஹானாவைப் பார்த்து... ''சகியே... சகியே...'' என்று உச்சஸ்தாயியில் பாடினார்கள்.

''முரளி முன்னாடி வந்து நின்னாலே... சக்ஸஸ் பின்னாடி வரப் போகுதுன்னு அர்த்தம் டோய்...'' என்று கத்தி விட்டு 'விஷ்' என்று விசிலடித்தார்க்ள.

அவர்கள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. முரளி - சஹானா ஜோடி பிரதானமாக நின்று பிரமாதமாய் ஆடியது.

சால்சா நடனத்திற்கே ஹைலைட்டாக அமைந்த அவனுடன் ஆடும் சந்தோஷத்தில்... தனது ஒட்டு மொத்த திறமையையும் வெளிப்படுத்தினாள் சஹானா.

தனது காதலை உள்ளுக்குள் புதைத்து மறைத்து வைப்பதில்... இதுவரை வெகு உறுதியாய் இருந்தவன் தான் முரளி.

ஆனால் அவளை இவ்வளவு கிட்டத்தில் அணைத்து ஆடியபோது... அவனுக்குள் இருந்த உறுதி உடைந்து தூள் தூளாகிக் கொண்டிருந்தது.

"அந்த முகம், அந்த பாவங்கள், அந்த அழகு, அந்த நளினம், அந்த லாவகம், அந்தக் கவர்ச்சி, அந்த இடை... எல்லாமாகச் சேர்ந்து பனிப்பாறையாய் இறுகிக் கிடந்த அவன் மனதை உருக்கி இளகச் செய்தன.

ஆட்டத்தின் முதலில் அவனுக்கு மட்டும் கேட்கும்படி "ஐ லவ் யூ ஸோ மச் முரளி" என்று அவள் கூறிய போது... மேகமாக மிதந்தான்... பறவையாகப் பறந்தான்... உருகினான்... சிலிர்த்தான்... ஒன்றுமே இல்லாமல் கரைந்து போனான். விதி வெற்றிக் களிப்புடன் சிரித்தது.

## 11

ரம்மியமான அதிகாலைப் பொழுது.

குருவியின் 'கீச் கீச்' கோரஸ்ஸால் கீழ்வானம் மகிழ்ந்து சிவக்கிறதா அல்லது வானத்தின் வர்ண ஜாலத்தைக் கண்டு பரவசத்தில் பறவைகள் இசைக்கின்றனவா என்பது புரியாது மயங்கி மகிழக்கூடிய அதிகாலை.

பதினைந்து புள்ளிகளை வைத்து நேர்புள்ளியாய் மூன்று புள்ளிவரையிலாய் குறுக்கி அத்தனை புள்ளிகளையும்



வளைவு சுழிவுகளுக்குள் அடக்கிவிட்ட திருப்தியில் நிமிர்ந்தாள் யமுனா.

"ஒரு மணி நேரமா கோலம் போட்டுட்டு இப்ப அதை வேற அழகு பாத்துட்டு நிக்கறே" வாசலில் வந்து நின்ற நடேசன் புன்னகைத்தார்.

"இதுக்கே இப்படி சொல்றீங்களே அப்பா? அக்காவோட ரசனையே தனி... அவளால தினமும் இழுத்துப் போர்த்திக்கிட்டு நான் தூங்கறேன் தெரியுமாப்பா? ஸ்வெட்டர் ஸ்கார்ஃப் அணிந்திருந்த உமா... குளிரில் இலேசாய் வெடவெடத்தபடி பேசினாள்.

"அப்படி என்னதான் பண்றா உங்க அக்கா?" உமாவின் தலையில் ஆதுரமாய் கை வைத்தபடி கேட்டார்.

"ஜன்னலைத் திறந்து வச்சிக்கிட்டுத்தான் எப்பவும் தூங்கறா.. எனக்கு ஜன்னல் வழியா இருட்டு தெரிஞ்சா பயமாயிருக்கு... ஆனா அக்காவுக்கு ஜன்னலைச் சாத்தினா மூச்சடைக்கிற மாதிரி இருக்காம்."

"உமாவுக்கு ரசனையே இல்லை அப்பா" கோல மாவு கிண்ணத்தை நிலைப்படி அருகே வைத்த யமுனா... கிச்சனுக்குச் சென்று மாவு படிந்த கைகளைக் கழுவினாள்.

யமுனாவின் முகத்தில் இளநகை அரும்பியது. உமா கூறுவது உண்மைதான்! ஜன்னல் வழியாக ராத்திரி வானத்தை ரசிப்பாள் யமுனா. வைரக் கம்மல் போல் மின்னும் நட்சத்திரங்கள்... இரவில் பூக்கும் நைட் க்வீன் மற்றும் பன்னீர்ப்பூக்கள் வாசத்தை சுமந்து வரும் இளந்தென்றல் காற்று... நிலா, வானத்து சின்னச் சின்ன மின்னல்கள் எல்லாம் வேண்டும் அவளுக்கு.

ஆனால் சமீப காலமாய் நிலா நட்சத்திரங்கள், வான
என்று எதைப் பார்த்தாலும் முரளியின் களையா
முகம்தான்... அவளுக்குத் தெரிந்தது.

வேப்பம் பூ வாசனையை உள்ளிழுத்து ராத்திரி பூக்கு
பன்னீர்ப்பூவின் மணத்தில் கிறங்கும் போதெல்லாம்
முரளியின் ஞாபகம்தான் அவளை ஆட்டிப் படைத்தது.

கொல்லைப் புற வாசலைத் திறந்தாள் யமுனா. மஞ்ச
சிவப்பு, ரோஸ், வெள்ளை, வயலட் என்று கதம்ப நிறத்தி
தோட்டத்துப் பூக்கள் சிரித்தன. ஒவ்வொரு பூக்களிலு
முரளியின் முகம்தான் தோன்றி மறைந்தது.

காதல் கொண்ட மனம் அவளைப் பாடாய் படுத்திய
ஒவ்வொரு நாளும் புதிதாய் விடிந்ததைப் போல்... புதிதா
பிறந்ததைப் போல்... புத்துணர்ச்சியோடு வலம் வந்தாள்.

தோட்டத்து மலர்களைப் பார்வையால் ஆசையுட
வருடிக் கொடுத்துவிட்டு கிச்சனுக்குள் அடைக்கலமா
போது... இரு கைகளையும் பரபரவென்று தேய்த்
கன்னங்களில் ஒத்தடம் கொடுத்தபடியே உமா வந்தாள்.

''அக்கா! வர்ற பொங்கல் அன்னிக்கு ரங்கநாயகி மேட
உன்னைக் கையோட கூட்டிட்டு வரச் சொன்னாங்க... பாட்
கத்துக்கற எல்லா ஸ்டூடண்ட்ஸையும் வரச் சொல்
இருக்காங்க... அவங்க வீட்டுல ஏதோ விசேஷமாம்.''

''பொங்கல் அன்னிக்கு எல்லோர் வீட்டுலேயு
விசேஷம்தான்! என்னை எதுக்கு வரச் சொன்னாங்கன்
தெரியலையே?'' இலேசாக முணுமுணுத்தாள் யமுனா.

அன்று மழை கொட்டியபோது... மனசு கேட்காம
முரளி இவளுக்குத் துணையாக இவளது வீடு இருக்கு
தெருமுனை வரை வந்து விட்டு விட்டுச் சென்றது.



ஞாபகத்திற்கு வந்தது. அதன் பின்பு யமுனா அவனது வீட்டிற்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படவே இல்லை.

''அன்னிக்கு மேடத்தோட சன் முரளியோட பிறந்த நாளாம்... உன்னை கண்டிப்பா அழைச்சுட்டு வரச் சொன்னாங்க.''

குபீரென்று யமுனாவின் முகத்தில் விளக்கு போட்டாற்போல் வெளிச்சம் பரவியது.

''என்ன... என்னத்துக்கு வரச் சொல்றாங்க?''

''பெரியவங்க ஆசையா கூப்பிடறாங்க... போயிட்டு வாயேன் யமுனா... முத நாள் ஞாபகப் படுத்தும்மா... நான் கொஞ்சம் பழங்கள் கடையில இருந்து எடுத்துட்டு வரேன். குடுத்துட்டு அவங்களை நமஸ்காரம் பண்ணிட்டு வாங்க... நல்ல நாளும் அதுவுமா பெரியவங்ககிட்ட ஆசீர்வாதம் வாங்கிக்கறது நல்லதும்மா.''

அழுத்தம் திருத்தமாகச் சொன்னார் நடேசன்.

''சரிப்பா! இந்தாங்க காபி...''

''என்னம்மா இது... காபியில இவ்ளோ சர்க்கரை போட்டிருக்கே?''

''சாரிப்பா... பேச்சு வாக்குல கவனக்குறைவா இருந்துட்டேன்.''

முரளியின் பிறந்த நாளைப் பற்றி அறிந்து கொண்ட சந்தோஷத்தில் மனம் ஆர்ப்பரித்தது. அவளும் பிரமப் பிரயத்தனம் செய்து மனதைக் கட்டுக்குள் வைக்க முயற்சித்தாள்... தண்ணீருக்குள் அமுக்கப்படும் பந்தாய்... அவனது ஞாபகம் எகிறி எழும்பத்தான் செய்தது என்பது நிஜம்!

★ ★ ★

''அடடே வாங்க யமுனா! விஷ் யூ ஹேப்பி பொங்கல்'' சிரித்தான் முரளி.

வெளிர் நீலக் காட்டன் புடவையில் தேவதையாய் மிளிர்ந்தாள் யமுனா.

''தேங்க்யூ மெனி மெனி ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் தி டே'' பொக்கே நீட்டினாள். கண்ணாடித்தாள் சலசலவென்று சப்திக்க முழுதும் செக்கச் செவேலென்ற சிவந்த ரோஜாக்கள் கொத்து கீழே சின்னதாய் பிரம்புக்கூடை.... அதன் மீது பளபளவென்று மின்னியது வாழ்த்து அட்டை.

''இது எங்க தோட்டத்து ரோஜாக்களைப் பறிச்சு அக்காவே தயார் பண்ணின பொக்கேயாக்கும்'' உமா பெருமிதமாய்க் கூறினாள்.

''வாவ்!'' ஃபென்டாஸ்டிக் யமுனா... தேங்க் யூ வெரி மச்! அம்மா, உமா மூலமா இந்த விஷயத்தை சொல்லி அனுப்பினாங்களாக்கும்?'' கண்கள் மின்ன சிரித்தான் முரளி.

''வாம்மா யமுனா... அட.... பொக்கே உனது கை வண்ணமா? அருமை இருக்கும்மா'' என்ற ரங்கநாயகி உரிமையாய் யமுனாவின் தோளில் கை வைத்தார்.

பழங்கள் அடங்கிய பையை மோடாவில் வைத்து விட்டு கையிலிருந்த சிறு காகிதப் பொட்டலத்தைப் பிரித்தாள் யமுனா.

''ஆஞ்சநேயர் கோவிலுக்குப் போயிட்டு வரோம். குங்குமப் பிரசாதத்தை எடுத்துக்கோங்க'' என்றாள். ரங்கநாயகி குங்குமத்தை எடுத்து முரளியின் நெற்றியில் தீற்றலாய் இட்டு விட்டார்.

''தீர்க்காயுசா அமோகமா இருக்கணும்பா'' என்றார். உள்ளம் கவர் முரளிக்கு எந்தக் குறையும் வரக்கூடாது என்று யமுனா மனதார வேண்டிக் கொண்டுதான் வந்திருந்தாள்.



''வாம்மா... வெத்தலை பாக்கு வாங்கிக்கோ! இருந்து சாப்பிட்டுட்டுப் போகலாம்'' பூஜையறைக்குள் அழைத்துச் சென்றார் ரங்கநாயகி.

''நல்ல குணவதியாய் இருக்கும் யமுனாவே மருமகளாக வரவேண்டும் என்று உள்ளூர வேண்டிக் கொண்டார் ரங்கநாயகி.

''இதே வீட்டிற்கு மருமகளாகும் பாக்கியத்தைத் தரவேண்டும்'' என்ற கோரிக்கையை கடவுளிடம் வைத்தாள் யமுனா. ரவிக்கைத் துண்டு, பழங்கள், தாம்பூலம் வைத்துக் கொடுத்தவரின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தாள்.

அனைவரையும் வரிசையாய் அமர வைத்துப் பரிமாறினார் ரங்கநாயகி.

''பொங்கல் ரொம்ப நல்லாயிருக்கும்மா'' முறுவலித்தாள் யமுனா.

''பழப் பாயசம் எப்படியிருக்குன்னு சொல்லுங்க யமுனா... அம்மாவுக்கு நல்ல கை மணம்'' எதிர் வரிசையில் அமர்ந்து சாப்பிட்ட முரளி முறுவலித்தான்.

சிவந்த நெற்றியில் குங்குமத் தீற்றலிடப்பட்டதும் முரளியின் முகம் முன்ன விடப் பொலிவுடன் மிளிர்ந்தது... யமுனாவின் மருண்ட விழிகள் அவ்வப்போது கரை காணாக் காதலுடன் முரளியின் மீது படிந்து மீண்டன.

''அம்மா! டைமாச்சு கிளம்பறேம்மா... திருப்தியா சாப்பிட்டுட்டேன்... இனி நான் கிளம்பலாம் இல்லியா?''

''பாத்தியா யமுனா... இவனும் இவனோட ஃபிரண்ட்ஸூம் மகாபலிபுரம் முட்டுக்காடு போட்டிங் பண்ண கிளம்பிட்டாங்க... கால்லே வெந்நீர் ஊத்திக்காத குறையா அவசரமா ஓடறான் பாரு'' ரங்கநாயகி அங்கலாய்த்தார்.

''இன்னிக்கு பொங்கல் திருவிழா, என்னோட பிறந்தநாள், இன்டர் காலேஜ் காம்பட்டிசன்லே வே ஜெயிச்சிருக்கோம். சந்தோஷத்தைக் கொண்டாடலாம்னு கிளம்பறேன். ப்ளீஸ் மா வரேன்... மிஸ். யமுனா! நா வரட்டுமா? ஸீ யூ... பை!'' தலையாட்டி விட்டு பைக்கிலே விருட்டென்று பறந்தான் முரளி.

மகாபலிபுரத்தில்... முரளியும், ஏழெட்டு நண்பர்களும் ஜாலியாய் கடற்கரையில் குளித்துக் கும்மாளமிட்டனர். அதன்பின்... காலத்தால் அழியாத பல்லவர் கால சிற்பங்களைச் சுற்றிச் சுற்றி வந்து, அணுஅணுவாய் ரசித்து தொட்டுப் பார்த்து மகிழ்ந்தான் முரளி.

நண்பர்கள் புடைசூழ உல்லாசமாக சுற்றி வந்தாலும் அவனது மனம்... சஹானாவையே சுற்றி வந்தது.

அன்று மேடையில் சேர்ந்து ஆடியபோது... 'ஐ லவ் யூ ஸோ மச்... முரளி' என்று தேன் போன்ற இனிய குரலில் அவள் கூறியபோது... அவனது செவிகளில் பாகுக் கரைசலாய் வழிந்தது.

மீண்டும் மீண்டும் செவிகளில் அவளது குரல் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்து.

பைக்குகள் முட்டுக்காடு போட்டிங் ஏரியாவுக்கு விரைந்தன.

சஹானாவின் ஞாபகத்தில் மூழ்கிப்போன முரளி... சிறு மரப் பாலத்தைக் கடந்து அந்தப் படகில் ஏறி அமர்ந்தான்.

''டேய்... வாங்க சீக்கிரம்... நேரமாயிட்டே இருக்குல்ல'' என்றபடி அண்ணாந்து பார்த்தவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.



சிக்கென்ற உடையில்... கார்ச் சாவியின் வளையத்தை ஆள்காட்டி விரலில் மாட்டி சுழற்றியபடி... அழகு முகத்தில் காதல் ததும்பி வழிய புன்னகைத்தபடி நின்று கொண்டிருந்தாள் சஹானா.

'மைகாட்! இவள் எப்படி இங்கு வந்தாள்? நான் நண்பர்களுடன் உல்லாசமாக இங்கே வந்த விஷயம்... இவளுக்கு எப்படித் தெரியும்?''

முகத்தில் ஒரு கேள்விக்குறியுடன் புருவங்கள் முடிச்சுப்போட அப்பால் ஏறிட்டான்.

சஹானாவுக்கு சற்றுத் தள்ளி திருதிருத்தபடி நின்றிருந்த நண்பன் கார்த்தி தர்ம சங்கடமாய்ப் புன்னகைத்தான்.

''உன்கிட்ட தனியாப் பேசணும்னு சிஸ்டர் ரொம்ப பிரியப்பட்டாங்க... அதான் சொன்னேன்'' கூறிவிட்டு நாசூக்காக அகன்று சென்று விட்டான். சஹானா உரிமையால் படகில் அவனருகில் அமர்ந்தாள். படகு நகர்ந்து செல்லத் தொடங்கியது.

''இன்னிக்கு எனக்குத் தெரிஞ்சாகணும் முரளி. நான் உங்களை உயிருக்கு உயிரா நேசிக்கிறேன். நீங்க...?'' கேட்டுக் கொண்டே அவனது கரத்தைப் பற்றி தனது கன்னத்தில் பொருத்திக் கொண்டாள்.

நடப்பதெல்லாம் கனவா அல்லது நனவா என்று புரியாத குழப்பத்தில் கல்லாய் சமைந்திருந்தான் முரளி. அவனது உறுதியும் வைராக்கியமும் கொஞ்சம் கொஞ்சமாய் காற்றில் பறக்க ஆரம்பித்தன.

## 12

முட்டுக்காடு! கடல் போன்ற பரந்த நீர்ப்பரப்பை காற்று காதலுடன் ஸ்பரிசித்ததும்... நீரின் மேற்பரப்பி மேடும் பள்ளமுமாய் அலைகள் ஜனித்தன.

சஹானாவின் பட்டு கன்னத்தில் பொருந்தியிருந்த தன கரத்தை மெல்ல உருவிக் கொண்டான் முரளி. இலக்கின் தூரத்தில் எங்கோ வெறித்தன அவனது விழிகள்.

''ப்ளீஸ்... என் கேள்விக்கு பதில் சொல்லுங்க முரளி. உங்களையே சதா நினைச்சு உருகி பைத்தியமாகிட்டு வரேன். நீங்க இல்லாம என்னால வாழவே முடியாது முரளி தழுதழுத்தாள்.

ஒரு கணம் அவளது அகன்ற விழிகளை ஊடுருவி பார்த்துவிட்டு மீண்டும் எங்கோ வெறித்தான்.

''நான் ஒரு பெண்ணாயிருந்தும் வெட்கத்தை விட்டு இவ்ளோ தூரம் இறங்கி வந்து கெஞ்சறேனே... இப்பக்கூ என் மனசு உங்களுக்குப் புரியலையா முரளி?'' அவனு தோளைத் தொட்டு அசைத்தாள்.

அழகிய விழிகளில் ஊற்றெடுத்த கண்ணீர் உடை பெடுத்துக் கொண்டு... கன்னங்களில் வாய்க்கால் போட்டு கொண்டு இறங்கியது.

''எனக்கு அழகில்லையா? அறிவில்லையா? எதுக்கா என்னை ஏத்துக்கத் தயங்கிறீங்க? எனக்கு ரீஸன் தெரிஞ்சாகணு சொல்லுங்க.''

''அந்தஸ்து பேதம் நிறைய இருக்கு சஹி!... ப்ச்! இ சரிப்பட்டு வராது. விட்ரு.''



''ஓ... அந்தஸ்துதான் என்னை உங்களோடு இணைய விடாமத் தடுக்குதா? உங்களுக்காக... உங்க அன்புக்காக... இந்த உலகத்துல எதையும் இழக்கத் தயாரா இருக்கேன் முரளி... என்னை நம்புங்க.''

மார்பின் குறுக்கே கைகளைக் கட்டியபடி... சங்கிலித் தொடர் போல் ஒன்றாகத் தலைக்கு மேல் பறந்து சென்ற பறவைகளை அண்ணாந்து பார்த்தான் முரளி.

''எல்லாத்தையும் உதறிவிட்டு உங்க பின்னாடி வரத் தயாரா இருக்கேன் முரளி... இன்னமும் என் மேல உங்களுக்கு நம்பிக்கை வரலையா? நீங்க என்னை ஏத்துக்கலைன்னா... நான் இங்கிருந்து உயிரோடு திரும்ப மாட்டேன். இது சத்தியம்! எனக்கு நீச்சல் தெரியாது. இதோ இந்த ஏரியில் குதிச்சு என் உயிரை மாய்ச்சுக்கிறேன்... அதுக்கு அப்புறமாவது இந்த சஹியோட தூய்மையான அன்பைப் புரிஞ்சு... ஒரு சொட்டு கண்ணீர் வடிச்சிங்கன்னா... என்னோட ஆத்மா சாந்தி அடையும்... அடுத்த ஜென்மத்திலாவது உங்களோட இதயத்துல ஒரு இடம் பிடிக்கணும்னு... கடவுள்கிட்ட நான் வேண்டிக்கிறேன் முரளி.''

சொன்னதோடு நிற்காமல் படகிலிருந்து குதிக்க எத்தனித்தவளை, சஹானாவைக் கண்டு அவனுக்கு சர்வமும் பதறியது. சட்டென்று அவளது இடையில் கையை வளைத்து இந்தப் பக்கமாக இழுத்தான்.

''இல்ல... நான் சாகணும். என்னை விடுங்க... நீங்க இல்லாம என்னால வாழ முடியாது. சாகவும் விடாம ஏன் தடுக்கிறீங்க?'' திமிறினாள்.

முரட்டுத்தனமாக முரண்டியவளை முழு பலத்தைப் பிரயோகித்து இழுத்து நிற்க வைத்து கன்னத்தில் 'பளார்' என்று அறைந்தான்.

''என்ன காரியம் செய்யப் பார்த்தே சஹி? தீராத பழி பாவத்துக்கு என்னை ஆளாக்கிடலாம்னு நினைச்சியா? பெண் என்பவள் பூ மாதிரி... அவளை உள்ளங்கையில வச்சுத் தாங்கணும்னு நெனக்கிறவன் நான்... என்னைப் போய் மூர்க்கத் தனமா உன்னை அறையும்படி வச்சுட்டியே?''

''இன்னமும் நீங்க என்னைப் புரிஞ்சுக்கலை. இன்னிக்கு நீங்க இருக்கீங்க. என்னைத் தடுத்திட்டீங்க... என்னிக்கும் நீங்க கிட்டயே இருக்க மாட்டீங்க இல்ல? என் முடிவில எந்த மாற்றமும் இல்ல முரளி... அயாம் அன்லக்கி கேர்ஸ்'' என்று தேம்பிக் கொண்டே கூறிவிட்டு முகத்திலறைந்து கொண்டு கதறினாள்.

அதுவரை லகான் போட்டு இழுத்துக் கட்டுக்குள் வைத்திருந்த மனக்குதிரை ஆர்ப்பரித்து எம்பிக் குதித்து தாவிப் பாய்ந்தது.

''மிஸ். காலேஜ்', 'காலேஜ் ப்யூட்டி', 'கல்லூரியின் கட்டழகி', 'காலேஜ் கிளியோபாட்ரா' என்று எண்ணற்ற மாணவர்களால் போற்றிப் புகழப்படும் பேரழகி சஹானா... எனது அன்புக்காக ஏங்குகிறாளே?''

இவளது கடைக்கண் பார்வைக்காக தவமிருக்கும் இளைஞர்கள் தான் எத்தனை பேர்?

எனக்காக சகலத்தையும் உதறத் தயாராக இருக்கிறாளே? உயிரைக் கூட துறக்கத் துணிந்து விட்டாளே?

நான் இதற்கு கொடுத்தல்லவா வைத்திருக்க வேண்டும்?

இந்தப் பேரழகியின் அன்பு கிட்டுவதற்கு... முன் ஜென்மத்தில் ஏதோ புண்ணியம் செய்திருக்க வேண்டும்.



அதுவரை பாறையாய் இறுகிக் கிடந்த முரளி மெழுகாய் இளகினான். பாகாய் கரைந்தான். பனிக்கட்டியாய் உருகினான். ஒரு கணம் தன்னையே மறந்து நெகிழ்ந்தான்.

முகத்தை மூடிக் கதறிக் கொண்டிருந்த சஹானாவின் கையைப் பற்றி மெல்ல விலக்கினான். அவளது இடது கன்னத்தில் முரளியின் நான்கு விரல்களும் அழுத்தமாய் பதிந்து கன்றி சிவந்திருந்தன.

சிவந்த கன்னத்தில் இதமாய் வருடினான். சட்டென்று அழுவதை நிறுத்திவிட்டு விழிகள் விரிய... திகைப்புடன் ஏறிட்டாள்.

''சா... சாரி சஹி!... ஐ டு லவ் யூ... ஐ லவ் யூ ஸோ மச்... ரொம்பவும் வலிக்குதாடா? சாரி'' என்றதும் தான் தாமதம்... சந்தோஷம் தாளாமல் கண் கலங்கியவளை இதமாய் தனது தோளில் சாய்த்துக் கொண்டான் முரளி.

ஆசை தீர படகு சவாரி செய்துவிட்ட இருவரும் கைகோர்த்தபடி ஜோடியாய்க் கரையேறினார்கள்.

''வாரே வா...'', ''ஹீர்ரே'', ''யாஹூ'' என்று விதவிதமாய் குரல் எழுப்பி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய நண்பர்களைப் பார்த்து சங்கோஜமாய் முறுவலித்தான் முரளி.

''டேய் முரளி! கங்கிராஜுலேஷன்ஸ்டா.''

''ஏய் முரளி! விவேகானந்தர் சொன்ன மாதிரி இலட்சிய இளைஞனா இது வரைக்கும் இருந்தே... நம்ம காலேஜ் ப்யூட்டி சஹி உன்னை விரட்டி விரட்டி லவ் பண்ண வச்சுட்டாளேடா.''

''எப்பவும் வண்டுதான் பூவைச் சுத்தி சுத்தி வரும்... ஆனா இங்க ஒரு பூ வண்டைச் சுத்தி சுத்தி வந்து காதலிக்க வச்சிருக்குடா.''

''கரையில இருந்து பார்த்தா... ஒண்ணும் சரியா தெரிய மச்சி! சிஸ்டர் கடைசியா என்ன அஸ்திரத்தைப் பிரயோகிச் உன்னைக் கவுத்தாங்கன்னு... விலாவாரியா சொல்லே முரளி.''

''முரளி முகத்தைப் பாருங்கடா... ஆயிரம் வாட் பல்ப் எரியுது.''

''சஹியும் நீயும் ஜோடி சேர்ந்துட்டீங்க... அந் சந்தோஷத்துல எங்களை ஓரங்கட்டிடாதே முரளி... எங்களையும் ஞாபகம் வச்சுக்கோடா.''

அவனது நண்பர்கள் ரவுண்ட் கட்டி நின்று கிண்டலடித்தனர்.

வெற்றிக் களிப்பு கனி இதழ்களில் நெளிந்தோட... ஹை ஹீல்ஸ் சப்திக்க ஒயிலாக தனது காரை நோக்கி நடந்தாள் சஹானா.

மேரி உள்பட ஐந்தாறு தோழிகள் அவளது கா பானெட்டில் ஏறி அமர்ந்து கலகலத்துக் கொண்டிருந்தனர்.

சஹானாவைக் கண்டதும் ''ஹேய்'' என்று உற்சாகமாகக் கூவி வாய்விட்டுச் சிரித்தனர்.

அவர்களை நெருங்கியதும் சஹானா தனது கட்டை விரலை உயர்த்திக் காண்பித்தாள். 'யா... ஹூ' என்று முழங்கையை உற்சாகமாய் உயர்த்தி இழுத்தாள்.

''அடியே சஹி! உண்மையிலேயே நீ கில்லாடி தாண்டி... அந்த முரளிக்கு கர்வம் ஜாஸ்திடி... நாம்ப வலிய எதுக்காச்சும் பாராட்டப்போனா... ஏறெடுத்தும் பார்க்காம அலட்சியமா நடந்துக்குவார்டி... ஆனா நீ விடாம முயற்சி பண்ணி உன்னோட அழகுக்கு அடிமை ஆக்கிட்டியே... சாதிச்சுட்டே சஹி'' மேரி அவளது கையைப் பற்றிக் குலுக்கினாள்.



''சகல கலா வல்லவன்... காலேஜின் கட்டழகன்... மாணவர்களின் தலைவன்... அப்படி இப்படியின்னு எல்லோராலும் பாராட்டப்படற முரளியை... இளஞ்சிங்கமா கம்பீரமா வலம் வந்தவனை... பூனைக்குட்டி மாதிரி என் பின்னாடியே சுத்த வைக்கிறேன் பாருங்கடி'' கண் சிமிட்டி சிரித்தாள் சஹானா.

காதல் மிகவும் புனிதமானது. உண்மையான இரு அன்பு உள்ளங்கள் மனத்தளவில் சங்கமிக்கும்போது ஜனிப்பதுதான் உன்னதமான காதல்!

முரளி... நேர்மையான கண்ணியமான இளைஞன்... காதல் வயப்பட்டு விட்டான். அவனது காதல் ஆத்மார்த்த மானதுதான், உண்மையானதுதான், மானசீகமானதுதான்... ஆனால் சஹானா, அவனது அன்புக்கும், காதலுக்கும் பாத்திரமானவளா? அருகதையானவளா?

அவளது உண்மையான சொரூபம் தெரிந்தால்... மென்மையான இதயம் கொண்ட முரளி தாங்குவானா?

விதி சிரித்தது. அவனைத் தவிடு பொடியாக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்தது.

★ ★ ★

''அப்பா! இன்னிக்கு என் கேர்ஸ் ஃபிரண்ட் கூட மகாபலிபுரம் வரைக்கும் போயிட்டு திரும்பி வர்றப்போ... சாலையோரமா காரை நிறுத்தி இறங்கி இளநீர் வாங்கி குடிச்சுட்டிருந்தோம்... தம்பி முரளி தனது நண்பர்களோட மகாபலிபுரம் நோக்கிப் போயிட்டிருந்தான்...'' பேச்சை நிறுத்திய முகேஷ் சிகரெட்டை வாயில் வைத்து புகையை

ஆழமாக இழுக்க... அது அடிவரை இறங்கி நுரையீரலைப் பதம் பார்த்துவிட்டு மூக்குத் துவாரங்கள் வழியாக வெளி நடப்பு செய்தது.

''உன்னைப் பார்த்து ஏதாவது பேசினானா?'' அப்பா விஸ்வநாதன் விஸ்கியை கோப்பையில் சரித்தபடி கேட்டார்.

''எங்க? பார்த்துட்டு பார்க்காத மாதிரி விருட்டென்று போயிட்டான். அவனுக்கு அம்மாவோட பிடிவாதமும், வறட்டு கௌரவமும் அப்படியே வந்திருக்கே?''

''விட்டுத்தள்ளு... லைஃப்லே எந்த சந்தோஷத்தையும் அனுபவிக்கத் தெரியாத முட்டாளுங்க... சரி... தரகர் கிட்ட சொல்லி உனக்கு பொண்ணு பார்க்க சொல்லியிருக்கேன். எல்லாம் அமைஞ்சு வந்துட்டா உடனடியா கல்யாணத்தைப் பண்ணிடலாம்னு இருக்கேன் முகேஷ்.''

''வேணாம் டாடி! அம்மா மாதிரி எனக்கும் பத்தாம்பசலி வாய்ச்சுட்டாள்னா... ரொம்பக் கஷ்டமாப் போயிடும். கல்யாணம்கிற பந்தத்துல சிக்கிக்காம நான் இப்படியே ஃப்ரீ பேர்டா இருந்துட்டுப் போயிடறேனே?''

''உன் குணத்துக்கு ஏத்தவளா... உன்னை நல்லாப் புரிஞ்சக்கிட்டு அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போறவளா... நாசூக்கா நாகரீகமா நடந்துக்கிற பொண்ணாப் பார்த்து உனக்கு முடிச்சு வைக்கிறேன். அப்படியொரு பொண்ணு அமைஞ்சா... கல்யாணத்துக்கு ஒத்துக்குவியா முகேஷ்?''

''அப்படிப்பட்ட பொண்ணு அமைஞ்சா எனக்கு எந்த அப்ஜெக்‌ஷனும் இல்ல டாடி'' என்று சிரித்த முகேஷ் கண்ணாடிக் கோப்பை எடுத்து 'சியர்ஸ்' என்று சொல்லிவிட்டு தொண்டைக்குள் விஸ்கியை சரித்துக் கொண்டான்.



## 13

நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோவில்! அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வெளியூர் பக்தர்களின் கூட்டம் ஏகத்திற்கும் திமுதிமுத்தது.

முப்பத்திரண்டு அடி உயரத்தில் திவ்ய சொரூபத்தில் அருள் பாலித்த ஆஞ்சநேயரை கண்குளிரப் பார்த்து மனமுருக சேவித்துவிட்டு... தொன்னைப் பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு வெளிப்பட்டாள் யமுனா.

''அக்கா! புளியோதரை ரொம்பவே டேஸ்டா இருக்குல்ல'' பிரசாதத்தை சாப்பிட்டபடியே பேசினாள் தங்கை உமா.

''உம்! உனக்கு புளியோதரைன்னா... உசிராச்சே? இந்தா... இதையும் நீயே சாப்பிடு'' தன் பங்கு பிரசாதத்தையும் அவளிடமே தந்தாள் யமுனா.

''ஊகூம்! இது பிரசாதமாச்சே? நீயும் சாப்பிடு... வீட்டுக்குப்போனதும் இன்னிக்கு இதே டேஸ்ட்டுல புளியோதரை பண்ணித் தர்றியா அக்கா?''

''காரசாரமா சுவையும் மணமுமா இதே டேஸ்ட்டுல பண்ணித் தந்துடறேன் போதுமா?'' செருப்புகளைக் கால்களில் திணித்துக் கொண்டு நடந்தாள் யமுனா.

பத்தடி தூரம் நடந்திருப்பார்கள். சரக்கென்று அவர்களை உரசி வரும் நெருக்கத்தில் ஒரு கார் வந்து நின்றதும்... திடுக்கிட்டுப் போய் ஏறிட்டாள் யமுனா.

''ஹாய்... யமுனா! வழக்கமா இந்நேரத்துக்கு நீ இந்தக் கோவிலுக்குத் தவறாம வருவேன்னு எனக்குத் தெரியும்... அதான் அவரையும் வரச் சொல்லியிருக்கேன். ரெண்டு பேரும்

ஆஞ்சநேயரை தரிசனம் பண்ணிட்டு... கார்லே நேரா கிஷ்கிந்தாவுக்குப் போறோம். நான் யாரை லவ் பண்றேன்னு தெரியுமா?'' என்று கேட்ட சஹானா... அதிசயத்திலும் அதிசயமாய் அன்று புடவை கட்டியிருந்தாள். க்ரே கலரில் குழைவாய் இருந்த அந்த வெளிநாட்டுப் புடவை அவளுக்கு அம்சமாய் இருந்தது.

யமுனாவுக்கு திக்கென்றிருந்தது. அருகில் தங்கை வேறு இருக்கிறாளே? என்ற சங்கோஜத்துடன் தயக்கமாய் திரும்பினாள். ஆனால் உமாவோ... அருகிலிருந்த கடை வாசலில் குவிந்திருந்த சாமி படங்களையும் குட்டி வெண்கல, மரச்சிலைகளையும் ஆர்வமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

டிரைவிங் சீட்டில் அமர்ந்தபடி எட்டிப் பார்த்து பேசிய சஹானா, காரை ஓரங்கட்டி நிறுத்திவிட்டு இறங்கி வந்தாள்.

ஆர்கண்டி காட்டன் புடவையில் மிக எளிய தோற்றத்திலிருந்த யமுனா... தெய்வீகக் களையுடன் மிளிர்ந்ததைப் பார்க்கும் போதே... சஹானாவின் மனம் பொறாமையில் பொசுங்கியது.

''என்ன... கெஸ் பண்ண முடியலையா யமுனா? நீ என்னோ ஃபிரண்ட் இல்லியா...? அதான் கோவில் கிட்ட வச்சு ஸ்பெஷலா அவரை அறிமுகப் படுத்த ஆசைப்படறேன்'' ஸ்டைலாக சிரித்தாள்.

யமுனாவின் பார்வை மீண்டும் உமாவின் மீது படிந்து மீண்டது.

''சஹி! உமாவும் கூட வந்திருக்கா... வீட்ல நிறைய வேலை இருக்கு. தாத்தாவுக்கு வேற காய்ச்சல்... அவருக்கு துளசி கஷாயம் வச்சுத் தரணும். சமையல் செய்யணும்.



அதனால...'' யமுனா பேசி முடிக்கும் முன் அவசரமாய் இடைமறித்தாள் சஹானா.

''ஒரு அஞ்சு நிமிஷம் எனக்காக பொறு யமுனா... இ... இதோ அவர் வந்துட்டார்... நீ பார்த்து ரெண்டு வார்த்தை பேசிட்டே போயிடலாம்'' உற்சாகமாய் குரலுயர்த்திப் பேசினாள்.

பைக் தடதடத்து வந்த திசையை நோக்கிப் பின்னால் திரும்பினாள் யமுனா.

'முரளி...? இவரையா சஹி விரும்புகிறாள்? அடக்கடவுளே.

அவளது மனம் சுக்கு நூறாக உடைந்தது. இதயத்தைச் சுத்தியால் கிழித்துக் கூறு போட்டது போலிருந்தது.

உலகமே தட்டாமாலையாகச் சுழன்றது. காலடியில் தரை நகர்ந்து செல்வதைப் போன்றிருந்தது.

முரளியும் இவளை விரும்புகிறாரா? சந்திக்கும் தருணங்களில் எல்லாம் என்னிடம் கனிவுடன் பேசி கண்ணியமாக நடந்து கொண்டாரே? அன்று அவரது வீட்டில்... தனது அம்மாவிடம் 'பரந்த மனப்பான்மையுடன் அடிக்கடி இரத்த தானம் செய்யக்கூடிய பெண்' என்று கூறினாரே?

ஒரே கல்லூரியில் படிக்கும் பெண் என்ற ரீதியில் சகஜமாகப் பழகி இருக்கிறார். அவ்வளவுதான் போலும்! எனது இதயத்தில் குடி கொண்ட முரளியின் மனம்... சஹியை நேசித்திருக்கிறது...

இதை நான் எப்படி... இது நாள்வரை அறிந்து கொள்ளாமல் இருந்தேன்? சற்று முன்பு கூட... ஆஞ்சநேயரிடம் எனது காதல் நிறைவேற வேண்டும் என்று மனமுருக வேண்டிக் கொண்டு வந்தேனே?

எனது காதல் அல்பாயுசில் முடிந்து விட்டதே?'

கணநேரத்தில் ஆயிரம் கேள்விகள் முளைவிட்ட… அழுகை முட்டிக் கொண்டு வந்தது. ஓராயிரம் தேள்கள் ஒ… சேரக் கொட்டியது போன்று உள் மனம் வேதனையி… துடிதுடித்தது.

கீழுதட்டை அழுந்தக் கடித்து துக்கத்தை விழுங்… முயற்சித்தாள். அவளையும் மீறி கண்களில் வெப்ப நீரூற்… 'குபுக்' என்று பொங்கியது.

அனலில் இடப்பட்ட புழுவாய்... இவள் உள்ளுக்கு… துடித்ததை வெகுவாய் ரசித்தாள் சஹானா.

'பாம்பின் கால் பாம்பறியும்' என்பார்கள். முரளியி… பேச்சை எடுத்தாலே... யமுனாவின் முகத்தில் விளக்… போட்டாற் போல் வெளிச்சம் பரவியதை... சஹான… கண்களில் விளக்கெண்ணெயை விட்டுக் கொள்ளா… குறையாக உன்னிப்பாக கவனித்து கணித்திருந்தாள்.

''ஹாய் யமுனா! உங்க தங்கைகூட கோவிலுக்… வந்தீங்களா?'' மலர்ந்த முகத்துடன் பேசிய முரளியை… ஏறிட்டுப் பார்த்த யமுனாவின் இதயம்... இரும்பு குண்டா… கனத்தது.

வார்த்தைகள் தொண்டையை விட்டு வெளிவர மறுத்… புரட்சி செய்தன.

கால்கள் துணியாய்த் துவண்டன. கண்களை சிமிட்… பொங்கிய கண்ணீரை உள்ளிழுக்க முயன்று தோற்றாள்.

''ஆ... ஆமா...! சஹியும் நீ... நீங்களும் ஒரு குறையு… இல்லாம அமோகமா வாழணும்னு... நா... நான் பகவானை… வேண்டிக்கிறேன்'' சிரமப்பட்டு வார்த்தைகளை உதிர்த்தா…



வேதனை முகபாவனையில் இம்மியளவும் வெளிப்பட்டு விடாமலிருக்க மிகவும் பிரயத்தனம் செய்தாள் யமுனா.

தூசி விழுந்து உறுத்துவதைப் போல ஆள்காட்டி கட்டை விரல்களால் கண்களைக் கசக்க... இவளது வேதனையைப் புரிந்த சஹானாவுக்கு சந்தோஷம் பீறிட்டுக் கொண்டு வந்தது. கரும்புச் சாற்றைப் பருகியதுபோல் உள்ளுக்குள் இனித்தது.

''தேங்க்யூ யமுனா! உங்க மாதிரி நல்ல மனசு படைச்சவங்களோட வேண்டுதலும் வாழ்த்தும்... எங்களை வாழ வைக்கும்'' புன்னகை பூத்தான்.

''வாங்க முரளி... இங்க தரிசனம் முடிச்சுட்டு கிஷ்கிந்தாவுக்கு வேற நாம்ப போகணும்மே?'' அவனது கரத்தை உரிமையாய் பற்றி இழுத்தாள் சஹானா.

''அப்போ நான் கிளம்பறேன். வரேன் சஹி'' தலையாட்டிவிட்டு விடை பெற்றாள்.

பூமி இரண்டாகப் பிளந்து தன்னை விழுங்கிவிடக் கூடாதா? சுனாமி திடீரென்று தோன்றி தன்னை வாரிச்சுருட்டி கடலுக்குள் இழுத்துக் கொள்ளக் கூடாதா? என்று ஏங்கினாள்.

உடம்பு உதறிப் போட்டது. கை, கால் விரல்கள் தந்தியடித்தன. விழிகளிலிருந்து கண்ணீர் அருவியாகக் கொட்டியது. 'முந்தானையால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டாள்.

''என்னக்கா? ஏன் அழறே? பதறினாள் உமா.

''கண்ணுல தூசு பட்டிருச்சு உமா'' என்றபடி அவளது கையை இறுகப் பற்றிக் கொண்டாள் யமுனா.

'இது ஒருதலைக் காதல்தான்! ஊமை கண்ட கனவு தான்! என் காதல் நிறைவேறாம போயிருக்கலாம்... ஆனா என்

காதல் ஆத்மார்த்தமானது. மானசீகமானது. அதில் எந்த சந்தேகமும் இல்லை.

முரளி! நீங்க என்ன நேசிக்காட்டியும்... நான் உங்களை என் உயிருள்ளவரை காதலிச்சுட்டேன் இருப்பேன். உங்க நினைவு தரும் சுகத்துலேயே காலம் முழுதும் வாழப் போறேன்.

உங்க மனசுக்குப் பிடிச்சவளோட எந்தக் குறையும் இல்லாம சந்தோஷமா நீங்க வாழணும். அதை தூரத்துல இருந்து பார்த்து ரசிச்சு திருப்திப் பட்டுக்கிறேன். அடுத்த ஜென்மத்திலாவது உங்களுக்கு மனைவியாகும் பாக்கியத்தை... பகவான் எனக்குத் தரணும்னு... இன்னிக்கு இருந்தே வேண்டிக்கப் போறேன்!''

தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டாலும்... பொங்கிப் பொங்கி கண்ணீர் வழிந்தது. இதயத்தில் இரகசியமாய் குருதி வடிந்து கொண்டிருந்தது.

★ ★ ★

முரளியும் சஹானாவும் 'கிஷ்கிந்தா'வுக்குச் சென்றனர். இருவரும் கையைக் கோர்த்துக் கொண்டு காதல் கிளிகளாக வலம் வந்தனர்.

விதவிதமான ராட்டினங்கள், வகை வகையான [illegible] விளையாட்டுக்கள் எதையும் விட்டு வைக்க வில்லை.

''முரளி! அதோ 'ஸ்பேஸ் ஷட்டில்' வித்தியாசமா இருக்குல்ல? வாங்க அதுலேயும் ஏறி என்ஜாய் பண்ணிடலாம்.''

சஹி! அது 'அசுரத் தாலாட்டு...' அந்தரத்துல ரொம்ப உயரத்துக்குப் போய் அப்படியே நம்மைக் கவிழ்க்கிறாப்ல



சர்ருனு இறங்குது பாரு. குடலைப் புரட்டும். ரொம்பப் பயப்படுவே... வேண்டாம்.''

''ப்ளீஸ் முரளி! எனக்கு ஆசையா இருக்கே... அந்தரத்துல பறக்கிற மாதிரி ஒரு த்ரில் கிடைக்குமே? எப்பவுமே இந்த மாதிரி த்ரில்லான விஷயங்கள்லே எனக்கு ஈடுபாடு அதிகம்... ப்ளீஸ்... எனக்காக...''

வேண்டா வெறுப்பாகச் சென்றான் முரளி. ஒவ்வொரு முறையும் 'ஸ்பேஸ் ஷட்டில்' மேலேறும் போதும் கீழிறங்கும் போதும் குடல் புரண்டு தொண்டைக்குள் இறங்கி விட்டது போன்ற உணர்வுதான் ஏற்பட்டது.

ஆனால்... சஹானாவோ... ஆ... ஊஃப்'' என்று உற்சாகமாகக் குரல் எழுப்பி பலரது கவனத்தை கவர்ந்ததோடு... கலகலவென்று சிரித்து கண்களை மூடி இவனது கையை இறுக்கமாகப் பற்றிக் கொண்டிருந்தாள்.

ஆனால் முரளிக்கோ... ஏதோ ஒரு ஏமாற்றம் வந்து நெஞ்சைக் கவ்விக் கொண்டிருந்தது.

''சஹி! சத்தம் போடாம என்ஜாய் பண்ணு. கீழே பாரு... நிறைய பேரு சுத்தி நின்று நம்மளையே வேடிக்கை பாத்துட்டு இருக்காங்க.''

''ஸோ வாட்? நாம நமக்காகத்தான் வாழணும். அடுத்தவங்களைப் பத்தி சட்டையே பண்ணக்கூடாது. இப்படி தயங்கிட்டிருந்தா... வாழ்க்கையில எந்த சந்தோஷத்தையும் நாம்ப அனுபவிக்கவே முடியாது. யாரு பார்த்தா எனக் கென்ன? எனக்கு என்னோட சந்தோஷம் தான் முக்கியம்'' பட்டென்று பதிலளித்தாள்.

ஆஞ்சநேயர் கோவிலுக்குள் சென்றபோதுகூட... கூட்டத்தில் வரிசையாக நகர்ந்து தரிசனம் செய்வதற்குள்

அவளுக்கு இருப்பே கொள்ளவில்லை. தணல் மே... நின்று கொண்டிருப்பவளைப் போன்று தவித்து... கொண்டிருந்தாள்.

முரளியின் விருப்பத்திற்காக ஒப்புக்கு கோவிலுக்கு... வந்தவளைப் போன்ற முக பாவனை!

அந்த 'ஸ்பேஸ் ஷட்டிலை' விட்டு எப்போது இறங்கி... தொலைப்போம் என்றிருந்தது முரளிக்கு. ஒரு வழியா... இறங்கியதும் நேராக மரங்களும் செடிகொடிகளும் நிறைந்... பூங்காவுக்குள் நுழைந்து சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தனர்.

பேசிக் கொண்டு இருந்ததில் நேரம் பறந்தே... தெரியவில்லை.

தனது கணவர், மகன், மருமகள், பேரன் பேத்தி... களுடன் வந்திருந்த சொர்ணத்திற்கு இரட்டை நாடி சரீரம்... அளந்து பார்க்க இன்சு டேப் போதாது. புருவங்கள் முடிச்சுப்... போட உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த சொர்ணத்திற்கு... திடீரென்று பொறி தட்டியது.

''என்னங்க... என்னங்க'' விழுந்தடிக்காத குறையாக... கணவர் அமர்ந்திருந்த மரத்தடி அருகே ஓடி வந்தார்.

''பார்த்து... ஏன் இப்படி பதறிக்கிட்டு வர்றே... சொர்ணம்?''

''அந்தப் பொண்ணு யாரு தெரியுமாங்க? அதான்... ஆ... ஊன்னு ஜாலியா கத்திக்கிட்டு அந்தப் பையன்கூட... நெருக்கமா உட்கார்ந்திருந்தாளே... அவதான்... அவ நம்ம... குருமூர்த்தியோட பொண்ணுங்க... பாத்து இரண்டு மூணு... வருஷத்திற்கு மேல இருக்கும்... அதான் சட்டுனு... அடையாளம் தெரியலை.''



''அட... குருமூர்த்தியோட பொண்ணாஇவ? இவளுக்கு கல்யாணம் ஆயிடுச்சா? கல்யாணத்துக்குகூட அவன் வந்து நம்மளைக் கூப்பிடலையே? தூரத்து உறவை ஒதுக்கி வச்சுட்டான் போல'' கணவர் சதாசிவம் அலுத்துக் கொண்டார்.

''போங்க... நீங்க வேற... குருமூர்த்தி அந்த மாதிரி சொந்த பந்தங்களை விட்டுக் கொடுக்க மாட்டாருங்க... இந்தப் பொண்ணுக்கு இன்னமும் கல்யாணமே ஆகலை... படிச்சுட்டு இருக்கா.''

''அப்போ இவ்ளோ தைரியமா பொது இடத்துல அந்தப் பையனோட... கையை உரிமையா புடிச்சுக்கிட்டு நடக்கிறா... ஓ... கதை வேற மாதிரி போகுதா? உன்னோட தம்பி தன் மகனுக்கு இந்தப் பெண்ணைக் கேட்கலாம்ன்னு... இருந்தானே? நல்லகாலம் தம்பிகிட்ட சொல்லி வை... நாம்ப தப்பிச்சோம். கொஞ்சம்கூட லஜ்ஜை இல்லாம இருக்காளே? சேச்சே.''

சொர்ணத்திற்கு மெல்லுவதற்கு நல்ல அவல் கிடைத்த சந்தோஷம்... உடனடியாக இத்தகவலை குறைந்தது ஐம்பது பேரிடமாவது கூறாவிட்டால்... அவளுக்குத் தலையே வெடித்து விடுமே?

## 14

அன்று சனிக்கிழமை! விடுமுறை நாட்களில் காலை ஒன்பதரை மணிக்கு பாட்டு கிளாசுக்குச் சென்று விடுவாள் உமா.

கிச்சன் ஸிங்கில் ஒழித்துப் போட்டிருந்த பாத்திரங் களைத் தேய்த்துக் கழுவி, வீட்டைப் பெருக்கிவிட்டு...

கூடத்துத் தூணில் சாய்ந்தமர்ந்து படிக்க ஆரம்பித்தாள் யமுனா.

சுகமோ, துக்கமோ... நிதர்சனத்தை ஏற்றுக் கொண்டு அனைத்தையும் ஜீரணித்துக் கொண்டு வாழ்பவர் நடேசன். ஜாடையில் மட்டுமல்ல... குணத்திலும் அப்பாவை உரித்துக் கொண்டு வந்திருந்தாள் யமுனா.

'நன்கு படித்து டிஸ்டிங்ஷனில் தேறி நல்ல பதவியில் அமர்ந்து... தம்பி, தங்கையை நன்றாக படிக்க வைத்து உயர்த்த வேண்டும். அப்பாவின் பாரத்தை இறக்கி குடும்பத்தை முன்னுக்கு கொண்டு வரவேண்டும்... இதுதான் என் லட்சியம்.'

தனது துக்கத்தை மென்று விழுங்கி விட்டு மனதைக் கஷ்டப்பட்டு திசை திருப்பி விட்டிருந்தாள் யமுனா.

கல்லூரிக்குச் சென்றால். வேண்டுமென்றே ஜாடை மாடையாகப் பேசி இவளது ரணத்தைக் கீறிக் கிளறி திருப்தி பட்டுக் கொண்டிருந்தாள் சஹானா.

''நேத்து நானும் முரளியும் பீச்சுக்குப் போனப்போ... அவர் எப்படியெல்லாம் என்னை வர்ணிச்சார் தெரியுமா?'' என்பாள்.

''போன வாரம் வள்ளுவர் கோட்டத்துக்குப் போனோம். அங்க அந்த பிரமாண்டமான தேர்கிட்ட நின்னு ஜோடியா ஃபோட்டோ எடுத்துக்கிட்டோம் பாரேன்'' என்று காட்டுவாள்.

ஆரம்பத்தில் இதையெல்லாம் கேட்கும்போது யமுனாவின் இதயம்... அம்பால் துளைக்கப்பட்ட பறவையாய் துடிக்கத்தான் செய்தது.



ஆனால் நாளடைவில் தியானம் செய்து மனதை ஒருமுகப்படுத்தி எதற்கும் சஞ்சலப் படாமல் பாறையாய் இறுகி விட்டிருந்தாள். இவள்எதையும் கண்டு கொள்ளாமல் 'சித்தன் போக்கு சிவன் போக்கு' என்றிருந்ததைப் பார்த்து விட்டு... இவளைச் சீண்டுவதை விட்டுவிட்டாள் சஹானா.

ஆனால் கல்லூரியில் அனைவரிடமும் தம்பட்டம் அடிக்காத குறையாக சகல கலா வல்லவன்... கல்லூரி நாயகன் முரளி தன்னை உருகி உருகிக் காதலிப்பதை சொல்லிப் பெருமைப்பட்டு கொண்டாள் சஹானா.

தனக்கும் முரளிக்கும் இடையே மலர்ந்த காதலை அவள் அடிக்கடி பறைசாற்றும்போது இதழ்களில் குறுநகை தவழ... நாசூக்காக நகர்ந்து விடுவாள் யமுனா.

'ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்.'

வீட்டு உபயோகத்திற்கு என்று அப்பா வாங்கிக் கொடுத்திருந்த 'செல்'லை எடுத்துப் பேசினாள்.

''ஹலோ!''

''ஹலோ... அக்கா நான் உமா பேசறேன்'' குரலில் ஏகத்திற்கும் பதற்றம் தொனித்தது.

''என்ன உமா? பதட்டமா பேசறே? நீ ட்யூஷனுக்குப் போனியே?''

''அ... அக்கா! ரங்கநாயகி மேடம் கொதிச்சுட்டிருக்கிற குழம்பை இறக்கி வைக்கப் போனாங்க. கை தவறி பாத்திரம் நழுவிடுச்சு போல...''

''ஐயோ... கொதிக்கிற குழம்பு உடம்புலே பட்டுடுச்சா?''

''தரையில குழம்பு பாத்திரம் விழுந்தப்போ... கொஞ்
சிதறி அவங்க வலது பாதத்துலே பட்டுருச்சுக்கா
வேதனையில துடிக்கிறாங்க... எனக்கு கை, கால் நடுங்குது
நீ கொஞ்சம் வர்றியா அக்கா?''

''தோ வந்துடறேன். உடனடியா ஃபர்ஸ்ட் எய்
குடுக்கணுமே? நீயும் பசங்களும் அவங்ககிட்ட தானே
இருக்கீங்க?''

''ஆமா அக்கா! அவங்க கால்லே ஒரு சொம்
தண்ணியை ஊத்தி விட்டேன்.''

''கிட்ட இருந்து பாத்துக்கோ... அஞ்சே நிமிஷத்து
வந்துடறேன்.''

ஈஸி சேரில் அமர்ந்து செய்தித்தாளைப் புரட்டி
கொண்டிருந்த தாத்தா சண்முகம் ஆர்வமாய் அவளை
ஏறிட்டார்.

''உமாவா ஃபோன் பண்ணினா? யாருக்கு... என்ன
ஆச்சாம்?'' துளைத்தெடுத்தார்.

''நான் வந்து சொல்றேன் தாத்தா. வரும்போது
உமாவைக் கூட்டிட்டு வந்துடுவேன். வாசல் கதவை
சாத்திட்டுப் போறேன்'' இரைந்து பதில் சொல்லி கொண்டே
ஹேண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாய்
விரைந்தாள்.

தெருவில் இறங்கி அவசரமாய் நடந்தபோது... எதிரே
வந்த காலி ஆட்டோவை நிறுத்தி ஏறிக் கொண்டாள்.

கூடத்து சோபாவில் காலை நீட்டி அமர்ந்திருந்தா
ரங்கநாயகி. கொதிக்கும் குழம்பு பட்டதால் பாதத்தின் மேல்
தோல் உரிந்து சொதசொதவென்றிருந்தது.



வேதனை தாளாமல் 'உஸ்... அப்பா... உஸ்' என்று அனத்திக் கொண்டிருந்தார். கண்களிலிருந்து கண்ணீர் கரகரவென்று வழிந்தது.

''எ... என்னம்மா இது? ஜாக்கிரதையா இருந்திருக்க வேணாமா? வாங்க... என்னைக் கைத்தாங்கலா புடிச்சிக்கிட்டு எழுந்து நில்லுங்க. ஆட்டோவை புடிச்சுட்டு வந்திருக்கேன். காயத்துக்கு உடனடியா சிகிச்சை பண்ணனுமே?''

பற்களைக் கடித்துக் கொண்டு யமுனாவின் தோளில் கையைப் போட்டுக் கொண்டு இழுத்து இழுத்து நடந்தார் ரங்கநாயகி.

''மு... முரளிக்கு ஃபோன் பண்ணினேன். லைனே கிடைக்கல... இன்னொரு வாட்டி பண்ணி அவனைக் கூப்பிடணுமே?'' அனத்திக் கொண்டே பேசினார் ரங்கநாயகி.

''அவர் வர்றப்போ வரட்டும். முதல்லே நாம்ப ஹாஸ்பிடலுக்குப் போகலாம் வாங்க.'' அவரை ஆட்டோவில் ஜாக்கிரதையாக ஏறி அமர உதவிவிட்டு தானும் அமர்ந்து கொண்டாள்.

சிகிச்சை முடிந்து வீட்டுக்குத் திரும்பும்போது பதினொரு மணி ஆகிவிட்டிருந்தது.

ரங்கநாயகியை கட்டிலில் அமர வைத்த யமுனா... டாக்டர் எழுதிக் கொடுத்த ஆயின்மெண்டை மிருதுவாகப் பாதத்தில் தடவினாள்.

''சாப்பிட்டுட்டு இந்த மாத்திரையெல்லாம் போட்டுக்கணுமே?'' யோசனையுடன் நிமிர்ந்தாள் யமுனா.

''மணத்தக்காளி வத்தல் குழம்பை வச்சுட்டு... சாதம் வடிக்கலாம்னு இருந்தேன்... அதுக்குள்ளே இப்படி ஆயிடுச்சு.''

''நான் சாதம் ரசம் வச்சுடட்டுமா?'' குரலில் தயக்க நெளிந்தோட ரங்கநாயகியை ஏறிட்டாள் யமுனா.

''உனக்கு எதுக்கு வீண் சிரமம்? முரளி வந்தது ஹோட்டல்லே ஏதாச்சும் வாங்கிச் சாப்பிட்டா போச்சு.''

''இதுல எனக்கு ஒரு சிரமமும் இல்ல... உடம்புக்கு முடியாத நேரத்துல... ஹோட்டல் சாப்பாடு சாப்பிட் வயித்துக்கு வேற ஒத்துக்காம போயிட்டா யாருக்கு கஷ்டம்? முந்தானையை வரிந்து இடுப்பில் செருகிக் கொண்டு களத்தி இறங்கி விட்டாள்.

குழம்பு சிந்திக் கிடந்த சமையலறையைக் கழுவி தள்ளிவிட்டு மளிகை சாமான்கள் இருந்த ஷெல்ஃபைத் திறந் ஒவ்வொரு டப்பாவாகத் திறந்து ஆராய்ந்துவிட்டு... நளபாகத்தைத் துவங்கினாள்.

மளமளவென்று சமைத்துவிட்டு ரங்கநாய படுத்திருந்த அறைக்கு அவள் வந்தபோது... முரளி கண் கலங்கியபடி அவரது கால்மட்டில் அமர்ந்திருந்தான்.

''எ... எங்கம்மான்னா எனக்கு உயிர் யமுனா! என்னோட உலகமே அவங்கதான்... நீங்க பண்ணின உதவிக்கு எப்படி...''

''முரளி... என்னப்பா பைத்தியக்காரப் புள்ளையா இருக்கியே? இந்த மாதிரி பேசி யமுனாவை ஏன் அந்நிய படுத்தறே? அவ மனசு சங்கடப்படும் இல்ல? அவ என்னை தன்னோட அம்மா ஸ்தானத்துல வச்சுப் பார்க்கறா இல்லியாம்மா?''

''கரெக்டா சொன்னீங்க அம்மா... சாப்பிட்டுட் மாத்திரை போட்டுக்கிறீங்களாம்மா?''



''உம்! சாப்பிடறேனே.''

''அம்மா சாப்பிடறதுக்கு கடையில ஏதாச்சும் வாங்கிட்டு வரட்டுமா?'' சட்டென்று எழுந்து கொண்டான் முரளி.

''நான் சமைச்சுட்டேன்... பருப்பு மசியல், தக்காளித் தொக்கு, பூண்டு ரசம், காரசாரமா கறிவேப்பிலை துவையல் வச்சுட்டேன்... எல்லாத்தையும் இங்கேயே கொண்டு வந்து பரிமாறிடலாமா?'' என்று கேட்டவளை விழிகள் விரியப் பார்த்தான் முரளி.

மனதில் நன்றியுணர்ச்சி குபுகுபுவென்று ஊற்றெடுத்தது.

சற்றுமுன்பு வரை யமுனாவின் மனம் கல்லாய் இறுகித்தான் கிடந்தது.

முரளியை இவ்வளவு கிட்டத்தில் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டதும்... உள்ளூர ஒரு நெகிழ்வு ஏற்பட்டது நிஜம்!

அவன் விழிகள் அவளுடைய இதயத்தைத் தீண்ட... மனதிற்குள் சுகமான நேச மழைச் சாரல்!

அவனது விழிகளை நேருக்கு நேர் சந்தித்ததும்... அவளுக்குள்ளே மெலிதாய் ஒரு உயிர்ப்பூவின் மலர்வு! அவளுக்குள் இனம் புரியாத ஓர் உணர்வை சிற்றுளியாய் செதுக்கியதும்... அவளது தீர்க்கமான பார்வை!

'என்னது இது? அவன் தனக்கில்லை என்று தெரிந்தும்... அனைத்தும் அறிந்த பின்னும் மனதை இப்படிப் புரள விடுவது ஆபத்தாயிற்றே?' மனசாட்சி அசிரீரியாக மாறி அவளை எச்சரித்ததும்... சூடுபட்ட கன்றாய் துடித்துப் பார்வையைத் தழைத்துக் கொண்டாள் யமுனா.

''இங்கேயே கொண்டு வந்துடு யமுனா... மத்த பசங்க போயிட்டாங்கல்ல? உமாவைக் கூப்பிடு... நாம்ம எல்லாரும்

சேர்ந்து சாப்பிடலாம்'' உரிமையாய் பேசியவரை ஏறிட்டாள்.

''இல்லம்மா... வீட்டுல சமைச்சு வச்சதெல்லாம் வேஸ்ட்டாயிடும். நாங்க இன்னொரு நாள் சாப்பிடறோம். நீங்க ரெண்டு பேரும் சாப்பிடுங்க.''

''வாவ் யமுனா! எல்லாமே ரொம்ப டேஸ்டா இருக்கு? காரசாரமா சுவையும் மணமுமா பிரமாதம் போங்க... எங்கம்மாகூட இப்படித்தான் நாக்கைச் சுழற்றாப்பல டேஸ்டா சமைப்பாங்க... நல்ல கைமணம் உங்களுக்கு.''

''ஆங்... முரளி! உன்கிட்ட ஒண்ணு சொல்ல மறந்துட்டேன். வழக்கமா நான் காட்டற 'ரோஜா நர்ஸிங்ஹோமுக்குத்தான் யமுனா கூட்டிட்டுப் போனா... இவ பதறின பதட்டத்தைப் பாத்துட்டு... புதுசா வந்த நர்ஸ் என்கிட்ட வந்து 'இவங்க உங்க பொண்ணா? உங்க மேல உசுரையே வச்சிருக்காங்களே?ன்னு கேட்டா... 'இவ என் பொண்ணு இல்லை'ன்னு சொன்னேன்.

'அப்போ இவங்க உங்க மருமகளா?ன்னு கேட்டா... நான் மவுனமா சிரிச்சேன்... 'இந்த மாதிரி ஒரு மருமக கிடைக்க... நீங்க கொடுத்து வச்சிருக்கிங்க'' அப்படின்னு சொல்லிட்டு... ஆச்சரியம் தாளாம ரெண்டு பேத்தையும் மாறி மாறிப் பாத்துட்டே போனா...'' பேசிட்டு ரசம் சாதத்தை அள்ளி வாயில் திணித்துக் கொண்டார் ரங்கநாயகி.

ரங்கநாயகி மிகவும் சாமர்த்தியசாலி! தனது ஆசையையும், விருப்பத்தையும் சந்தடி சாக்கில், நாசூக்காக சாதுர்யமாக வெளிப்படுத்தி விட்டிருந்தார்.

முரளிக்கும் யமுனாவுக்கும் பக்கென்றிருந்தது.



நான்கு விழிகளும் தர்மசங்கடமாய் மோதிக் கொண்டன.

சாதத்தை விழுங்க முடியாமல் தவித்தான் முரளி. அர்த்த பாவனையுடன் இருவரையும் பார்வையால் அளவெடுத்துக் கொண்டிருந்தார் ரங்கநாயகி.

''இந்தாங்கம்மா மாத்திரை... மிஸ்டர் முரளி! நைட்டுலே அம்மாவுக்கு சாப்பாடு போட்டு இந்த மாத்திரையைக் குடுங்க... ரசத்தை மட்டும் சூடு பண்ணிப் பரிமாறுங்க... ஜாக்கிரதை... செய்யுங்க... நான் நாளைக்கு காலையில ஏழரை மணிக்கு உமாவை அழைச்சுட்டு வந்து... இங்க சமைச்ச வச்சுட்டு காலேஜுக்கு கிளம்பலாம்னு இருக்கேன்... ஹோட்டல்லே எதுவும் வாங்கிடாதீங்க... வயித்துக்கு ஒத்துக்காது சரியா?'' ஹேண்ட் பேக்கை மாட்டிக் கொண்டு உமாவின் கையைப் பிடித்துக் கொண்டு கிளம்ப எத்தனித்தாள்.

''உங்களுக்கு எதுக்கு சிரமம்?''

''ப்ளீஸ்... அப்படி சொல்லாதீங்க! எங்களுக்கு அம்மா இல்ல... ஒரு அம்மாவுக்கு சேவை செய்யற பாக்கியம் கிடைச்சிருக்கேன்னு ரொம்ப சந்தோஷப்படறேன். அதைக் கெடுத்துடாதீங்க'' அவள் கூறியது போலவே... காலை நான்கு மணிக்கு எழுந்து பரபரவென்று வீட்டு வேலைகள், சமையலை முடித்துவிட்டு ஏழரை மணிக்கெல்லாம் உமாவுடன் ஆஜராகிவிடுவாள். எட்டரை மணிக்கு உமாவுடன் வெளியேறி விடுவாள்.

இரவு ஏழரை மணிக்குள் தனது டியூஷன் மாணவர்களை அனுப்பிவிட்டு கிரியை அழைத்துக் கொண்டு முரளியின் வீட்டுக்கு வந்துவிடுவாள். தோசையை வார்த்து இரவு

சேர்ந்து சாப்பிடலாம்'' உரிமையாய் பேசியவரை எறிட்டாள்.

''இல்லம்மா... வீட்டுல சமைச்சு வச்சதெல்லாம் வேஸ்ட்டாயிடும். நாங்க இன்னொரு நாள் சாப்பிடறோம். நீங்க ரெண்டு பேரும் சாப்பிடுங்க.''

''வாவ் யமுனா! எல்லாமே ரொம்ப டேஸ்டா இருக்கு? காரசாரமா சுவையும் மணமுமா பிரமாதம் போங்க... எங்கம்மாகூட இப்படித்தான் நாக்கைச் சுழற்றாப்பல டேஸ்டா சமைப்பாங்க... நல்ல கைமணம் உங்களுக்கு.''

''ஆங்... முரளி! உன்கிட்ட ஒண்ணு சொல்ல மறந்துட்டேன். வழக்கமா நான் காட்டற 'ரோஜா நர்ஸிங்ஹோமுக்குத்தான் யமுனா கூட்டிட்டுப் போனா... இவ பதறின பதட்டத்தைப் பாத்துட்டு... புதுசா வந்த நர்ஸ் என்கிட்ட வந்து 'இவங்க உங்க பொண்ணா? உங்க மேல உசுரையே வச்சிருக்காங்களே?ன்னு கேட்டா... 'இவ என் பொண்ணு இல்லை'ன்னு சொன்னேன்.

'அப்போ இவங்க உங்க மருமகளா?ன்னு கேட்டா... நான் மவுனமா சிரிச்சேன்... 'இந்த மாதிரி ஒரு மருமக கிடைக்க... நீங்க கொடுத்து வச்சிருக்கிங்க'' அப்படின்னு சொல்லிட்டு... ஆச்சரியம் தாளாம ரெண்டு பேத்தையும் மாறி மாறிப் பாத்துட்டே போனா...'' பேசிட்டு ரசம் சாதத்தை அள்ளி வாயில் திணித்துக் கொண்டார் ரங்கநாயகி.

ரங்கநாயகி மிகவும் சாமர்த்தியசாலி! தனது ஆசையையும், விருப்பத்தையும் சந்தடி சாக்கில், நாசூக்காக சாதுர்யமாக வெளிப்படுத்தி விட்டிருந்தார்.

முரளிக்கும் யமுனாவுக்கும் பக்கென்றிருந்தது.



நான்கு விழிகளும் தர்மசங்கடமாய் மோதிக் கொண்டன.

சாதத்தை விழுங்க முடியாமல் தவித்தான் முரளி. அர்த்த பாவனையுடன் இருவரையும் பார்வையால் அளவெடுத்துக் கொண்டிருந்தார் ரங்கநாயகி.

''இந்தாங்கம்மா மாத்திரை... மிஸ்டர் முரளி! நைட்டுலே அம்மாவுக்கு சாப்பாடு போட்டு இந்த மாத்திரையைக் குடுங்க... ரசத்தை மட்டும் சூடு பண்ணிப் பரிமாறுங்க... ஜாக்கிரதை... செய்யுங்க... நான் நாளைக்கு காலையில ஏழரை மணிக்கு உமாவை அழைச்சுட்டு வந்து... இங்க சமைச்சு வச்சுட்டு காலேஜுக்கு கிளம்பலாம்னு இருக்கேன்... ஹோட்டல்லே எதுவும் வாங்கிடாதீங்க... வயித்துக்கு ஒத்துக்காது சரியா?'' ஹெண்ட் பேக்கை மாட்டிக் கொண்டு உமாவின் கையைப் பிடித்துக் கொண்டு கிளம்ப எத்தனித்தாள்.

''உங்களுக்கு எதுக்கு சிரமம்?''

''ப்ளீஸ்... அப்படி சொல்லாதீங்க! எங்களுக்கு அம்மா இல்ல... ஒரு அம்மாவுக்கு சேவை செய்யற பாக்கியம் கிடைச்சிருக்கேன்னு ரொம்ப சந்தோஷப்படறேன். அதைக் கெடுத்துடாதீங்க'' அவள் கூறியது போலவே... காலை நான்கு மணிக்கு எழுந்து பரபரவென்று வீட்டு வேலைகள், சமையலை முடித்துவிட்டு ஏழரை மணிக்கெல்லாம் உமாவுடன் ஆஜராகிவிடுவாள். எட்டரை மணிக்கு உமாவுடன் வெளியேறி விடுவாள்.

இரவு ஏழரை மணிக்குள் தனது டியூஷன் மாணவர்களை அனுப்பிவிட்டு கிரியை அழைத்துக் கொண்டு முரளியின் வீட்டுக்கு வந்துவிடுவாள். தோசையை வார்த்து இரவு

டிபனை முடித்துவிட்டு தம்பி தங்கையுடன் எட்டரை மணிக்குச் சென்று விடுவாள். அந்த குணவதியை கண் குளிர ஆசையாகப் பார்த்துக் கொண்டிருந்த ரங்கநாயகி விரைவில் தேறிவிட்டார். விதி சிரித்தது. அந்த குணவதியின் தலையில் பெரிய இடியைப் போட்டது. முரளி காதலித்த சஹானாவோ... பெரிய அணுகுண்டைத் தூக்கி அவனது தலையில் போட்டாள்.

## 15

**கா**லத்தின் சக்கரங்கள் வெகுவேகமாய் சத்தமில்லாமல் உருண்டன. செமஸ்டர் தேர்வுகள் நேற்றோடு முடிந்து விட்டிருந்தன. கல்லூரிக்கு அடியெடுத்து வைத்து... கண் மூடி கண் திறப்பதற்குள் ஒரு வருடம் ஓடி விட்டது.

''நேத்தைக்கு தான் காலேஜுக்கு நீ போனாப்பல இருக்கு... மாயமா ஒரு வருஷம் முடிஞ்சிருச்சுல்ல?'' கூடத்தில் அனைவரும் அரைவட்டமாய் அமர்ந்திருந்தனர்.

அப்பா நடேசனின் தட்டில் வெண் பொங்கலையும் சாம்பாரையும் பரிமாறியபடியே முறுவலித்தாள் யமுனா.

''ஆமாப்பா! இன்னமும் மூணு வருஷந்தான். படிப்பு முடிஞ்சதும் நான் வேலைக்குப் போக ஆரம்பிச்சுடுவேன். உங்க பாரத்தை இறக்கி வச்சுட்டு நீங்க கோவில் குளத்தை சுத்திக்கிட்டு ஈஸி சேர்லே நிம்மதியா உட்காரணும் அப்புறம்...'' அவள் பேசி முடிக்கும் முன் மறித்தார் நடேசன்.

''என்னோட கடமையை நான் முடிக்க வேணாமா யமுனா? உனக்கொரு கல்யாணத்தைப் பண்ணிப் பார்க்கணும். உமா, கிரி படிப்பு முடியணும். அவங்களுக்கு



வழி வகை பண்ணியாகணுமே? உனக்கொரு நல்ல வரன் அமைஞ்சுட்டாலே... என்னோட பாதி பாரம் குறைஞ்சிடும். கடமையை முடிக்காம நிம்மதியா நான் உட்கார முடியுமா?''

பேசிக் கொண்டிருக்கும் போதே அவரது முகம் அஷ்ட கோணலானது. அதீத வேதனையுடன் இடது பக்க மார்பில் கை வைத்து அழுத்திக் கொண்டார்.

''அப்பா! என்னப்பா செய்யுது? எ... என்னாச்சப்பா?'' யமுனா விதிர்த்தாள்.

''இலே... இலேசா நெஞ்சடைக்கிறாப்பல இருக்கும்மா... ஒண்ணுமில்லை... கேஸ் பரவினா இ... இருக்கும்'' திணறித் திணறி பதிலளித்தார் நடேசன்.

அதற்குள் குப்பென்று வியர்த்துக் கொட்டியது.

''அம்மா! ஆஸ்பத்திரிக்குப் போயி என்னென்னு 'செக்' பண்ணிட்டு வந்துடலாம் கிளம்புங்கப்பா... கிரி! ஆட்டோ புடிச்சுட்டு வாப்பா'' பதறியவளைக் கையமர்த்தினார்.

''த... தண்ணி கொண்டாம்மா'' வேதனை மேலீட்டால் ஆயாசத்துடன் கண்களை மூடி கூடத்துத் தூணில் அமர்ந்தார்.

''ஐயோ! அப்பா... இ... இந்தாங்க'' அருகிலிருந்த சொம்பை எடுத்து நீட்டினாள். ஏதோ விபரீதம் நடக்கப் போகின்றது என்ற பயம் பிடரியில் ஏறி அமர்ந்தது.

'அ... அப்பா! தண்ணி கேட்டீங்களேப்பா... கொஞ்சம் வாயைத் திறங்கப்பா... அப்பா!'' அவரது மோவாயைத் தொட்டு நிமிர்த்தினாள் யமுனா.

'லொடக்' என்று அவரது தலை பக்கவாட்டில் சரிந்தது. திகிலில் அவளது உடம்பு தந்தியடித்தது. நடுங்கும் விரல்களால் அவரது நாசியைத் தடவினாள்.

சுவாசம் வேலை நிறுத்தம் செய்திருந்தது.

''அப்... பா... ஆ...'' அவள் அலறிய அலறலில் அந்த வீடே கிடுகிடுத்தது.

'சற்று முன் பேசி சிரித்துக் கொண்டிருந்தாரே அப்பா? இந்த பாசமான தந்தையின் மீது பாசக்கயிறு வீச எமனுக்கு எப்படி மனம் வந்தது?

முடிந்து விட்டதே? எல்லாம் முடிந்து விட்டதே? என்ன காரணம்? வியாபாரம் மந்தமாகி விட்டது என்று கவலையில் உருகிக் கொண்டிருந்தாரே? அந்தக் கவலையே அவருக்கு மரணத்தை தருவித்து விட்டதே?

ஐயோ! இது கனவாக இருக்கக் கூடாதா? இதை என்னால் நம்பவே முடியவில்லையே?

யமுனாவுக்குள் கேள்விகள் முளைத்து நெஞ்சைப் பிளந்தன. கிரியும் உமாவும் கதறிக் கொண்டிருந்தார்கள். இருவரையும் இரு கரங்களால் அணைத்துக் கொண்டவளின் விழிகளிலிருந்து மடை திறந்த வெள்ளமாய் கண்ணீர் பெருக்கெடுத்து.

''யப்பா... நடேசா! நீ எனக்கு கொள்ளி போடுவேன்னு காத்துக் கிடக்கிறேனே? எண்பத்திரண்டு வயசுல பூமிக்கு பாரமா நான் இருக்கேனே? இந்த காய்ஞ்ச சருகை விட்டுட்டு... உன் உசுரையா எடுக்கணும். நடேசா...? இந்த கண்றாவியைப் பார்க்கத்தானா என் உசுரு இத்தனை வருமா ஒட்டிக்கிட்டு இருக்குது?'' பிரம்பை ஊன்றியபடி தள்ளாடித் தடுமாறியபடியே மகனை நெருங்கி வந்தார் தாத்தா சண்முகம்

''நானும் வந்துடறேன்... என்னையும் கூடிட்டுப் போயிடு நடேசா...'' முகத்தில் அறைந்து கொண்டு முதுகு



குலுங்கக் கதறிய தாத்தாவை கைத்தாங்கலாகப் பற்றிக் கொண்டாள் யமுனா.

''அம்மா யமுனா! கடமையை முடிக்காம நான் எப்படி நிம்மதியா உட்கார முடியும்னு சித்த நேரத்துக்கு முன்னாடி கேட்டானேம்மா? இப்படி அம்போன்னு விட்டுட்டுப் போயிட்டானேம்மா?''

முதியவரைத் தேற்றும் வழி தெரியாமல் தானும் அவரது மார்பில் தலை சாய்த்துக் கதறினாள் யமுனா... தந்தையின் முகத்தை நீர்த் திரையிட்ட விழிகளால் உற்றுப் பார்த்தாள்.

நிம்மதியாக நிச்சலனமாக சாந்தம் தவழும் முகத்துடன் 'துயில்' கொண்டிருந்தார் நடேசன்.

'வாழ்க்கையில எது நடந்தாலும் அதை ஜீரணிக்கப் பழகிக்கணும். எதிர் நீச்சல் போடணும். அதல பாதாளத்துல விழுந்தாலும் கையை ஊணிக் கரணமடிச்சுப் போராடி மேல வரப் பார்க்கணும். இதயத்தை இடிதாங்கியா வச்சுக்கணும். இதோட எல்லாமே முடிஞ்சு போச்சுன்னு துவண்டு போயிடக் கூடாது. பகவான் மேல பாரத்தை போட்டுட்டு கைசளைக்காம எதிர் நீச்சல் அடிக்கணும். அப்படித்தான் கடவுள் நமக்குத் துணையா இருந்து வழி நடத்துவாரு.'

அப்பா அடிக்கடி சொன்ன வார்த்தைகள்... அவளது செவிகளில் 'அசரீரியாக ஒலித்தது போலிருந்தது.

'நானும் சேர்ந்து கதறிக் கொண்டிருந்தால் என்னாகும்? நான் நடேசனின் மகள். நான் போராடுவேன்' மனதில் சங்கல்பம் செய்து கொண்டாள்.

குடும்பத்தின் ஒட்டு மொத்தப் பொறுப்பும் அவளது தலையில் விழுந்து விட்டதே? மிகப் பெரிய பளு அவளது தோள்களில் ஏறி விட்டதே?

அப்பா மறைந்து விட்டார். அது மிகப் பெரிய இழப்புதான். 'நடேசன் போயிட்டான்பா... அவன் குடும்பமே நட்டாத்துல தவிக்குது' என்று யாரும் ஒரு வார்த்தை சொல்லி விடக்கூடாது.

உமாவையும் கிரியையும் தொடர்ந்து அதே மெட்ரிகுலேஷன் பள்ளியில் படிக்க வைக்க வேண்டும். எந்தக் குறையும் வராமல் அவர்களை நன்கு வளர்த்து ஆளாக்க வேண்டும். குடும்ப பாரத்தை இழுத்தாக வேண்டும்.

என்ன செய்ய போகிறேன் நான்?'

சின்னதாக அரும்பிய கேள்வி கிடுகிடுவென பூதாகாரமாக வளர்ந்து அவளை மிரட்டியது.

சோகத்தையும் துக்கத்தையும் மென்று விழுங்கி விட்டு... அடுத்த ஆக வேண்டிய காரியங்களைச் செய்ய தன்னை ஆயத்தப் படுத்திக் கொண்டாள் யமுனா.

விஷயத்தைக் கேள்விப்பட்டதும் பதறியடித்துக் கொண்டு வந்து விட்டார் ரங்கநாயகி. சோக முலாம் பூசிய முகத்தோடு முரளியும் வந்துவிட்டான்.

கண்ணீர் மல்க ''யமுனா'' என்றழைத்து அவளது தோளில் ரங்கநாயகி கை வைத்ததுதான் தாமதம்... ''அ... அம்மா...'' என்று கதறியவாறு அவரது தோளில் முகம் புதைத்துக் கொண்டாள்.

''எனக்கே ஆறலையே யமுனா... பாட்டு கிளாஸ் முடிஞ்சதும் உமாவைக் கூட்டிட்டு போக தினமும் வருவாரே உங்கப்பா...? அதிர்ந்துகூட பேச மாட்டாரு, அவ்ளோ நல்ல மனுஷன்... இவ்ளோ சீக்கிரம் போயிருக்க வேணாம்... பெரிய இழப்புதான்! ஆனா... ரொம்ப நல்ல சாவு யமுனா... நீ தைரியமா இருக்கணும்மா... தம்பியும் உமாவும் உன் முகத்தையே பரிதாபமா பாத்து அழுதிட்டிருக்காங்க பாரு...



மனசை திடப்படுத்திக்கோம்மா... நீ புத்திசாலிப் பொண்ணு! நா எதுவும் சொல்ல வேண்டியதில்லை...'' அவளது முதுகில் இதமாகத் தட்டி ஆறுதல் கூறினார்.

''யமுனா! இப்பேர்ப்பட்ட கண்ணியமான மனிதருக்கு மகளா பிறக்கறதுக்கு நீங்க குடுத்து வச்சிருக்கணும். நல்லவங்களைத்தான் கடவுள் ரொம்ப சீக்கிரமா தன் கிட்ட அழைச்சுக்கிறாருன்னு சொல்வாங்க... கண்ட்ரோல் யுவர் செல்ஃப் யமுனா! நீங்கதான் மத்தவங்களுக்கு இனிமே ஆறுதல் சொல்லணும்'' அவளைத் தேற்றும் விதமாக மெல்லிய குரலில் முரளி பேசியதும்... கீழுதட்டை அழுந்தக் கடித்து பீறிட்டுக் கொண்டு வந்த துக்கத்திற்கு அணை போட முயன்றாள்.

'என்ன பாவம் செய்தேன் நான்? சிறுவயதிலேயே தாயை இழந்தேன். தந்தைக்கு தந்தையாய் தாயுமானவராய் உற்ற நண்பராய் இருந்த அப்பாவையும் இழந்து விட்டேன். மனதில் அரும்பிய காதல்... ஒரு தலையாய் கருகி விட்டது. பெரிய பெரிய துக்கங்களைக் கொடுத்து... என்னை ஏன் இப்படி பந்தாடுகின்றார் பகவான்?

கனவில்கூட அடுத்தவர்களுக்கு தீங்கு நினைத்ததில்லை... யாரைப் பார்த்தும் எதற்கும் பொறாமைப் பட்டதில்லை. முடிந்தவரை மற்றவர்களுக்கு உதவி செய்து நல்லதையே நினைத்து நல்லவிதமாகத் தானே நடந்து வருகின்றேன். ஒருவேளை போன ஜென்மத்தில் ஏதாவது பாவம் செய்திருப்பேனோ?'

சுய பச்சாதாபத்தில் மீண்டும் அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

'ஊகூம்! சுய பச்சாதாபப் படக்கூடாது. அது என்னை முடக்கிப் போட்டு மூலையில் தள்ளி விடும். தன்னம்பிக்கை

யுடன் வைராக்கியத்துடன் நான் பிரச்சினைகளை சமாளித்தாக வேண்டும்.' பற்களைக் கடித்துக் கொண்டு கண்ணீரை உள்ளிழுத்துக் கொண்டாள்.

பெற்ற தாயைப் போல் ஆறுதலாக கூடவே இருந்தார் ரங்கநாயகி. குடும்பத்தில் ஒருத்தனாக நின்று சகல காரியங்களையும் கவனித்துக் கொண்டான் முரளி. அவனது நண்பர்கள் கார்த்தியும் பாஸ்கரும் ஒத்தாசையாக நின்றதைப் பார்க்கும் போது... யமுனாவின் புண்பட்ட இதயத்திற்கு மயிலிறகால் மருந்து தடவியது போலிருந்தது.

★ ★ ★

காலண்டரில் கிட்டத்தட்ட நாற்பது நாட்கள் விரயமாயின.

அடிக்கடி ஆறுதலாக வந்து போய்கொண்டிருந்தார் ரங்கநாயகி. அன்று மாலை மலர்ந்த முகத்துடன் வந்த ரங்கநாயகி, ''யமுனா! முரளிக்கு ஒரு நல்ல கம்பெனியில வேலை கிடைச்சிருக்கும்மா! எம்.ஈ. எக்ஸாமோட ரிசல்ட் இன்னமும் வரலை... ஆனா பி.ஈ. எக்ஸாம்லே டிஸ்டிங்ஷன்லே தேறியிருந்தான் இல்லையா? அத்தோட எக்ஸ்ட்ரா கர்ரிகுலர் ஆக்டிவிடிஸ்லே நிறைய சர்டிபிகேட்ஸ் வச்சிருக்கான் இல்லையா? அதான்... நல்ல சம்பளத்தோட வேலை கிடைச்சிடுச்சு'' என்றார்.

''ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா'' யமுனாவின் முகத்தில் சந்தோஷ ரேகை படர்ந்தது.

''யமுனா! வித்தியாசமா நினைக்காதேம்மா... நீயும் எனக்கொரு மகள் மாதிரிதான். ஒட்டுமொத்தப் பொறுப்பும் உன் தலையில விழுந்திருக்கு. உனக்கு பண உதவி செய்ய



நாங்க தயாரா இருக்கோம். மறுக்காம அதை நீ ஏத்துக்கணும். நீ டிகிரி முடிச்சு...'' அவர் பேசி முடிக்கும்முன் சட்டென்று இடை புகுந்தாள் யமுனா.

''ப்ளீஸ் அம்மா! இந்த விஷயத்துல என்னை வற்புறுத்தாதீங்க. உங்க வார்த்தையை மீறும்படியான இக்கட்டான சூழ்நிலைக்கு என்னைத் தள்ள வேண்டாம். நான் மேற்கொண்டு படிக்கப் போறதில்லை. வேலைக்குப் போகப் போறேன்.''

''யமுனா! நீ என்ன சொல்றே? படிப்பை பாதியில நிறுத்திட்டு வேலைக்குப் போகணும்கிறியே? டிகிரி கூட முடிக்காத நிலைமையில... உனக்கு எப்படி வேலை கிடைக்கும்?'' படபடத்தார் ரங்கநாயகி.

''எங்கப்பா ஒரு தீர்க்கதரிசி அம்மா... கம்ப்யூட்டர் கத்து வச்சுக்கிட்டா பிற்காலத்துல அது கை கொடுக்கும்னு சொல்லி... கம்ப்யூட்டர் சென்டர்லே சேத்துவிட்டாரு... நானும் நாலு வருமா கம்ப்யூட்டர் சென்டருக்குப் போயி... சில கம்ப்யூட்டர் கோர்ஸ்களை முடிச்சிருக்கேன். ரெண்டு நாளைக்கு முன்னாடி கம்ப்யூட்டர் சென்டர் மாஸ்டரைப் போய் பாத்தேன்.

விஷயத்தைக் கேள்விப்பட்டதும் ரொம்ப வருத்தப்பட்டாரு. அவரோட நண்பர் புதுசா சாஃப்ட்வேர் கம்பெனி' ஒண்ணை இந்த ஏரியாவுல தொடங்கியிருக்காராம். இன்னமும் டிகிரி முடிக்கலையேன்னு தயங்கி சொன்னேன். 'டிகிரியில என்னமா இருக்கு? திறமையின் அடிப்படையில இந்த வேலையை என் நண்பர் போட்டுக்குடுத்துட்டாரு... ஃபர்ஸ்ட் கிளாஸ்லே கம்ப்யூட்டர் கோர்ஸ்கள்லே தேறியிருக்கே... அதை என் நண்பன்கிட்ட சொன்னேன்.

இறமையும் சீனியாரிட்டியும் இருந்தால் போதும்'னு சொல்லிட்டான்...' அப்படின்னு சொன்னாரு அம்மா!

நான் நாளைக்கு வேலையில சேரப் போறேன் அம்மா. நாளைக்கு அமாவாசை நாள் நல்லா இருக்கு அதான்... நானே உங்க வீட்டுக்கு வந்து விஷயத்தைச் சொல்லலாம்னு இருந்தேன். நீங்களே வந்துட்டீங்க... என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க'' சட்டென்று கால்களில் பணிந்தாள் யமுனா.

''நீ அமோகமா வரணும் யமுனா'' கண்கள் பனிக்க ஆசிர்வதித்தார் ரங்கநாயகி. ''முரளிக்கும் உனக்கும் ஒரே சமயத்துல வேலை கிடைச்சிருக்கே... நல்ல விஷயம் தான்'' புன்முறுவல் பூத்தார்.

இருவரும் அவரவர் பணிகளில் வெகு காலம் நீடிக்க விடாமல்... விதி சதி செய்தது.

## 16

உயர உயரமாய் வீசியடித்தன அலைகள். வானத்தில் குளிர்ச்சியாய் நிலவு. ஜில்லென்று பாதங்களை முத்தமிட்டு விட்டுச் சென்ற அலைகள்... யாருமே இல்லாத அமைதி... குறுகுறுக்க வைத்த மணல். அலைகளை வெறித்தபடி அமர்ந்திருந்தான் முரளி.

கை நிறைய மணலெடுத்து சிறிய ஓட்டை வழியாக கீழே வழிய விட்டான் முரளி. கல்லெறி பட்ட குளமாய் அவனது மனம் குழம்பித் தவித்தது.

அவனது படிப்பு முடிந்து காலேஜை விட்டு வெளியில் வந்ததும்... சஹானாவை சந்திக்கும் வாய்ப்புகள் வெகுவாய் குறைந்து விட்டிருந்தன.



சதா அவளது நினைவிலேயே உருகி மருகிக் கொண்டிருந்தான். இரு தினங்கள் சேர்ந்தாற்போல் அவளைப் பார்க்க முடியாவிட்டால்... அவனுக்குப் பைத்தியமே பிடித்து விடும் போலிருந்தது.

இந்தத் துடிப்பும் பரிதவிப்பும் சஹிக்கும் இருக்கிறதா? நான் 'முரளியோட லவ்வராக்கும்' என்று தம்பட்டம் அடிக்காத குறையாக... காலேஜில் படிக்கும் அனைவரிடமும் பெருமையாய் சொல்லிக் கொண்டு திரிந்தவள் அவள்.

''உங்களைப் பிரிஞ்சு ஒரு நாள்கூட என்னால இருக்க முடியாது முரளி! இருபத்து நாலு மணி நேரமும் உங்க கூடவே இருக்கணும்னு மனசு ஏங்குது முரளி'' கண்களில் காதல் ததும்ப அவனது கையை எடுத்து தனது கன்னத்தில் பொருத்திக் கொண்டு குழைவாய் சஹானா.

ஆனால்... சமீப காலமாக அடியோடு மாறிப் போய் விட்டாளே? என்னை நிராகரிக்கத் தொடங்கி விட்டாளோ?'

குட்டியாய் ஒரு சந்தேகம் ஜனித்தது.

''சேச்சே! சஹானா என் மேல உயிரையே வச்சிருக்கா... எனக்காக... என் காதலுக்காக உயிரை துச்சமாக நினைச்சு தற்கொலை முயற்சியில இறங்கினாளே? 'இந்த வாட்டி செமஸ்டருக்கு சரியா படிக்காம கோட்டை விட்டுட்டேன் முரளி! ரிசல்ட் வந்ததும் வீட்டுல மண்டகப்படி வாங்கிக் கட்டினேன் ன்றாளே?

ஒருவேளை... அந்தக் கவலையில் மூழ்கிப் போய்த்தான் என்னை சந்திப்பதை தவிர்க்கிறாளோ?

அவள் எதற்கும் கவலைப்படும் ரகத்தைச் சேர்ந்தவள் இல்லையே?

குழப்பமும் சந்தேகமும் அவனைப் பாடாய்ப் படுத்தி வதைத்தன.

'ட்ரிங்... ட்ரிங்' அவனது செல்ஃபோன் செல்லமாய் சிணுங்கியது.

''ஹலோ...''

''ஹாய் முரளி! எங்க இருக்கீங்க? நான் உங்களை உடனடியா பார்க்கணுமே?' சஹானாவின் குரல் தேனாய் வழிந்தது.

''ஏன் கேட்க மாட்டே? உன் செல்லுக்கு நூறு வாட்டி ட்ரை பண்ணிட்டு ஓய்ஞ்சு போய் பிச்சுல உட்கார்ந்திருக்கேன். நிம்மதியா ஸ்விட்ச் ஆஃப் பண்ணி வச்சிட்டு... இப்போ ஞானோதயம் வந்து பேசறியாக்கும்?''

''சாரி சாரி முரளி! வீட்டுலே கெஸ்ட் வந்திருக்காங்க... அதான்! அப்புறம் எங்க வீட்டுலே நாளைக்கு ஒரு விசேஷம் இருக்கு. நீங்க கண்டிப்பா ஃபங்ஷனுக்கு வரணும்.''

''என்ன ஃபங்கஷன் சஹி? உன்னோட பெர்த்டேயா?'' முரளியை ஆர்வம் ஆக்கிரமித்துக் கொண்டது.

''அது சஸ்பென்ஸ்! நாளைக்கு காலையில பத்து மணிக்கு எங்க வீட்டுக்கு நீங்க வந்துடணும். கண்டிப்பா வரணும். நான் காத்துட்டிருப்பேன் முரளி! மிஸ் பண்ணிடாதீங்க'' மறுமுனையில் 'செல்'லை அணைத்து விட்டாள் சஹானா.

மறுநாள் காலையில்... சஹானாவுக்குப் பிடித்தமான கலரில் உடை அணிந்து கொண்டு மலர் பொக்கே'யை வாங்கிக் கொண்டு... தயங்கியபடி ஸ்கூட்டரில் ஏறி அவனது பங்களாவுக்குச் சென்றான். அந்த பங்களா இருந்த தெருவை



அடைத்துக் கொண்டு வரிசையாக கார்கள் அணிவகுத்து நின்றன.

'என்ன விசேஷம்னு கூட சொல்லலை... குறும்புக்காரி' என்று நினைத்துக் கொண்டே பைக்கை நிறுத்திவிட்டு 'பொக்கே'யுடன் பங்களாவுக்குள் நுழைந்தான்.

போர்டிகோவைத் தாண்டி அந்த பிரமாண்டமான ஹாலில் பூரித்த முகங்களோடு நிறைய பேர் தெரிந்தனர். சோபாவில் நடுநாயகமாக சஃபாரி சூட் அணிந்து அமர்க்கள மாக அமர்ந்திருந்தவர்களைப் பார்த்ததும் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'அப்பா விஸ்வநாதனும் அண்ணன் முகேஷ்-ும் இங்கு எதற்கு வந்தார்கள்?' கேள்வி கொக்கியாக வளைந்து அவனது மென்மையான இதயத்தைக் கிழித்தது.

அவர்கள் தன்னைப் பார்த்துவிடும் முன் அந்த இடத்தை விட்டு நகர்ந்துவிட வேண்டும் என்று விருட்டென்று நடந்தான்.

''மிஸ்டர் முரளி!'' போர்டிகோவின் இடது புறத்திலிருந்து குரல் வந்த திசையில்... சஹானாவின் தோழி மேரி நின்று கொண்டிருந்தாள்.

''உங்களை சஹி வரச் சொன்னா... இப்படி வாங்களேன் ப்ளீஸ்'' மறுக்க முடியாமல் அவளைப் பின் தொடர்ந்தான்.

பங்களாவின் பின்புறத் தோட்டத்திலிருந்த அலங்கார ஊஞ்சலில்... தலை நிறைய பூவும் பட்டுப்புடவை சகிதமாக அலங்கார தேவதையாக கால்மேல் கால் போட்டபடி அமர்ந்திருந்தாள் சஹானா. விழிகளில் ஆணவமும் அகங்காரமும், அலட்சியமும் மிதந்தன.

அவளை அந்தக் கோலத்தில் பார்த்த முரளியின் அடிவயிறு சுருண்டது ஏதோ பொறி தட்டியது.

''ஹாய் முரளி! என் பேச்சைத் தட்டாம ஃபங்ஷனுக்கு வந்துட்டியே? குட்! என்ன விசேஷம்னு கேள்விப் பட்டிருப்பே... அவரைப் பத்தி தெரியாதவங்க யாரும் இருக்க முடியாதே? அவரோட மகன் மிஸ்டர். முகேஷுக்கும் எனக்கும் நிச்சயதார்த்தம்! ஜஸ்ட்... ஃபைவ் மினிட்ஸுக்கு முன்னாடி தான் தாம்பூலத் தட்டை மாத்திகிட்டாங்க...

''ச... சஹி! அப்போ நீ என்னைக் காதலிச்சது...?'' அவன் திணறிப் பேசுவதற்குள் குறுக்கிட்டாள்.

''ஸ்டாப் இட்! இந்தக் காதல் கத்தரிக்காயில எனக்கு என்னிக்கும் நம்பிக்கை இல்ல... ஒட்டு மொத்த காலேஜும் உன்னை ஆஹா ஓஹோன்னு தூக்கி வச்சுக் கொண்டாடுச்சா? உன்னை வலிய வந்து பாராட்டினேன். ஆனா பெரிய விஸ்வாமித்திரர் மாதிரி என்னை ஏறிட்டுக்கூட பார்க்காம அலட்சியம் பண்ணினே? எந்த இளைஞனும் என்னை ஒரு வாட்டி பாத்துட்டா போதும்! என் கடைக்கண் பார்வைக்காக ஏங்கித் தவிப்பான்... ஆனா நீ அவ்ளோ அசால்டா இருந்தே!

காலேஜுக்கே முடிசூடா மன்னனா இருந்த உன்னை.. என் அழகுக்கு அடிமையாக்கணும்னு நெனச்சேன். சாதிச்சுட்டேன். ஃபிரண்ட்ஸ் கிட்ட பெட் கட்டி இருந்தேன். அதுல ஜெயிச்சுட்டேன். உன்னை என் பின்னாடி அலைய வச்சேன். ஒவ்வொரு நிமிஷமும் என்னையே நினைச்சு ஏங்கி உருக வச்சேன்.

மிடில் கிளாஸ் ஃபேமிலியில பிறந்தவன் நீ! உனக்கு உன்னோட தகுதியைப் பத்தின நெனப்பே இல்லையா? நீ ஜீனியஸ்தான்... ஆனா பணத்துலேயே புரண்டு வளர்ந்த ஒரு அழகியை காதலிக்கிறியே? உனக்கும் எனக்கும் ஏணி வச்சாலும் எட்டுமா?



யமுனா கிட்ட நான் நெருங்கிப் பழகினாலும்... உள்ளூர அவள் மீது எனக்கு பயங்கர கோபம்தான்! டீச்சர்ஸ் கிட்டேயும் லெக்சரர்ஸ் கிட்டேயும் என்னைவிட அவ நல்ல பேரெடுத்துடுவா... படிப்புலேயும் நம்பர் ஒன்! அவளுக்கும் ஒரு சரியான மரண அடி இருக்கணும்னு நெனச்சேன். குடுத்துட்டேன். என்ன முழிக்கிறே?

அவ உன்னை விரும்பினா... பாம்பின் கால் பாம்பறியும்னு சொல்வாங்க! அதை நான் ஆரம்பத்துலேயே புரிஞ்சுக்கிட்டுதான்... உங்க ரெண்டு பேத்துக்கு இடையில புகுந்து குட்டையைக் குழப்பினேன். உன்னை என் வலையில விழ வைச்சேன். அவளை அழ வைச்சேன். உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு அந்தப் பழசான வீட்டுல அடியெடுத்து வச்சு குடும்பம் நடத்துவேன்னு எதிர்பார்த்தியா முரளி? நீ ஒரு என்ஜீனியர்தான்.

நல்ல கம்பெனியில கை நிறைய சம்பளம் வாங்கிட்டிருக்கியே? மாசா மாசம் நான் வாங்கற காஸ்ட்யூம், காஸ்மெடிக்ஸுக்கான செலவு இருக்கே...? அது உன் சம்பளத்தைவிட ரொம்ப ஜாஸ்தி முரளி.'' ஊசிக் கணைகளை புன்சிரிப்போடு சேர்த்து வீசினாள்.

முரளியின் கையிலிருந்த மலர் பொக்கே நழுவிக் கீழே விழுந்தது. தனது காலடியில் விழுந்த பொக்கே'யின் மீது அலட்சியமாகப் பார்வையைப் பதித்த சஹானா... ஹை ஹீல்ஸ் போட்ட பாதத்தால் அதை மிதித்து நசுக்கினாள்.

குருதி வடிந்து ரணப்பட்டுக் கொண்டிருந்த முரளியின் இதயமும் நசுங்கியது.

''ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் ரேஞ்சுக்கு விருந்து தயாராகியிருக்கு. பஃபே சிஸ்டம்தான்... வந்தது

வந்துட்டே... கொஞ்ச நேரம் இருந்து சாப்பிட்டுப் போயேன்... இந்த மாதிரி அயிட்டம்ஸை இதுக்கு முன்னாடி நீ கண்ணால கூடப் பாத்திருக்க மாட்டேயில்ல...? ஓகே! ஸீ யூ முரளி'' முகத்தில் சிரிப்பைத் தொலைக்காமல் வார்த்தை களில் விஷத்தை ஏற்றினாள்.

நாற்சந்தியில் நிற்க வைத்து துகிலுரிந்தது போன்ற அவமானத்தில் துடித்துப் போனான் முரளி.

உடம்பெல்லாம் திகுதிகுவென்று தீப்பற்றி எரிந்தது போலிருந்தது. விருட்டென்று வெளியேறி பைக்கில் அமர்ந்து அதை சீற்றத்துடன் கிளப்பினான்.

'சஹி! இவ்வளவு மோசமானவளா நீ? கள்ளம் கடபமில்லாத வெள்ளை மனசுக்காரின்னு நெனச்சுட் டிருந்தேனே? சூது, வாது, பொய், வஞ்சம், பொறாமை, நயவஞ்சகம்... இவற்றின் மொத்த உருவமா நீ? உன்னைப் போய் உருகி உருகிக் காதலித்தேனே?

என்னை ஜெயிக்கணும்னு பெட் கட்டியிருந்தியா? என்னை வீழ்த்துவதற்கு உனக்கு வேறு ஆயுதமே கிடைக்க வில்லையா? காதல் புனிதமானது. மலரினும் மென்மை யானது. அதையா ஆயுதமா எடுத்துக்கிட்டே?

நான் உண்டு என் வேலை உண்டுன்னு ரிஷ்ய சிருங்கனா படிச்சுட்டிருந்தேன். இது தப்பா? என்னை மயக்கி அடியோடு வீழ்த்தி உன் பின்னால பூனைக்குட்டி மாதிரி அலைய வச்சியா? என்னை ஒரு பஃபூன் மாதிரி ஆக்கி இத்தன நாளா சிரிச்சு ரசிச்சுட்டிருந்தியா?

அடப்பாவி! பிரபல தொழிலதிபர் விஸ்வநாதனைப் பத்தி கேள்விப்பட்டிருக்கியா? அப்படின்னு என்கிட்டேயே கேட்டியே? நானும் அவரோட பிள்ளைதான்!



கோடிக்கணக்கான சொத்துக்களை துச்சமா நெனச்சு உதறிட்டு நானும் எங்கம்மாவும் நிம்மதியா வைராக்கியத் தோட வாழறோம். என்னைப் பார்த்தா... விருந்து சாப்பிட்டுட்டுப் போன்னு சொன்னே? ச்சீ! பணப் பிசாசே... ஒரு பொண்ணுக்கு எதெல்லாம் இருக்கக் கூடாதோ... அத்தனை கெட்ட குணங்களும் உன்கிட்ட இருக்கு.

உனக்குப் போய் என் இதயத்துல இடம் குடுத்தேனே? எவ்வளவு பெரிய முட்டாள் நான்! ஒரு விஷப் பாம்பை விரும்பி விட்டேனே?

அவனது உள் மனம் அழுது புலம்பியது.

சவுக்கடி பட்ட மாதிரி உடம்பு உதறி உதறிப் போட்டது. என்ன வலி? என்ன அவஸ்தை? அம்மம்மா... வெறும் வார்த்தைகளால் மனிதனை இப்படி எல்லாம் சித்ரவதை செய்ய முடியுமா?

உடைத்து, நசுக்கி, நொறுக்கி, குத்தி, கிழித்து, வாட்டி, வதைத்து, அறுத்து, அணு அணுவாய் சிதைத்து, பொசுக்கி... அப்பப்பா... என்ன வேதனை?''

தீ, அனல் கங்குகள், திராவகம், கொதிக்கும் எண்ணெய் பட்டாற்போல் மனசும் உடம்பும் எரிந்தன. கருகின. வலி தாளாமல் ஊளையிட்டு அலறின.

'சஹி ஏதோ சொன்னாளே? யமுனா உன்னை விரும்பினாள் என்று? அது உண்மையாக இருக்குமா? ''உன்னை என் வலையில விழ வைச்சேன்... அவளை அழ வைச்சேன்' என்றாளே?'

யமுனாவை முதன் முறையாக சந்தித்ததிலிருந்து... சாவு வீட்டில் அவளுக்கு ஆறுதல் சொன்னது வரை... அவள் சம்பந்தப்பட்ட காட்சிகளை அனைத்தும் அவனது மனக் கண் முன் படமாய் விரிந்தன.

'சதிகாரி சஹானா கூறியது உண்மைதான் போலும்! அன்று நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோவில் வாசலில் வைத்து 'சஹியும் நீங்களும் ஒரு குறையுமில்லாம அமோகமா வாழணும்னு பகவானை நான் வேண்டிக்கிறேன்' என்று யமுனா கூறிவிட்டு கலங்கிய விழிகளைத் தழைத்துக் கொண்டாளே?

கண்களில் ஏதோ தூசு விழுந்து விட்டது என்றல்லவா நினைத்தேன்?'

வேதனையும் அவமானமும் சேர்ந்து அவனது மென்மையான இதயத்தைக் கூறு போட்டன.

ஆத்திரமும் ஆவேசமும் அவனை உலுக்க... பைக்கை படு வேகத்தில் ஓட்டிக் கொண்டு சென்றான்.

'இந்த மாதிரி அபிட்டங்களை இதுக்கு முன்னாடி நீ கண்ணால கூட பாத்திருக்க மாட்டேயில்ல...? சாப்பிட்டுட்டுப் போ முரளி' சஹானா ஏக வசனத்தில் பேசியது மீண்டும் மீண்டும் செவிகளில் நாராசமாய் எதிரொலித்தது.

பைக் புயல் வேகத்தில் குறுக்கு வழியில் புகுந்தது. அந்த திருப்பத்தில் பாதாள சாக்கடைக்காக மிகப் பெரிய பள்ளம் தோண்டப்பட்டிருந்தது. எச்சரிக்கை பலகை மீது அவனது பார்வை படிந்து சுதாரித்தது... திடீரென்று பிரேக் போட்டான்.

படு வேகத்தில் கண் மண் தெரியாமல் சீறிக் கொண்டிருந்த பைக்கில் திடுதிப்பென்று முன் பக்க பிரேக்கைப் போட்டதும் பைக் தடுமாறி ஸ்கிட் ஆகி சிறிது தூரம் சரிந்துக் கொண்டே போய் அந்த விளக்கு கம்பத்தில் அசுரத்தனமாய் மோதியது. பலத்த அடிபட்டு குபுகுபுவென்று குருதி வழிய மயக்கத்தில் மூழ்கினாள் முரளி.



# 17

யமுனாவின் செல்ஃபோன் அவசரக் குரலில் அழைப்பு விடுத்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை! அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்த யமுனா எழுந்து போய் 'செல்'லை எடுத்தாள். திரையில் ரங்கநாயகியின் வீட்டு நம்பர் மின்னிக் கொண்டிருந்தது.

''சொல்லுங்கம்மா.''

''யமுனா! சித்த வீட்டுக்கு வந்துட்டுப் போறியாம்மா? என்னவோ தெரியலை... கார்த்தால எழுந்ததிலிருந்து மனசே சரியில்லை. நேத்து ஒரே கெட்ட கனவா வந்தது... மனசு பாரமா இருக்கு... உன்கிட்ட பேசிட்டிருந்தா கொஞ்சம் இதமா இருக்கும்னு தோணுது. வர்றியா யமுனா?'' தயங்கினார் ரங்கநாயகி.

''இதோ... இதோ வந்துட்டேன்மா'' என்றவள் செல்லை அணைத்துவிட்டு தாத்தாவின் அருகில் வந்தாள். ''தாத்தா! ரங்கநாயகி அம்மா வீட்டுக்கு கூப்பிட்டாங்க. நான் போயிட்டு அப்படியே வரும்போது உமாவை அழைச்கட்டு வந்துடறேன்.''

''மகராசி ரொம்ப நல்ல குணம்! அம்மாவும் பிள்ளையும் நடேசன் சாவுலே இழுத்துப் போட்டுக் காரியங்களை கவனிச்சாங்க... போயிட்டு வாம்மா.''

தெருவில் இறங்கிநடந்த யமுனா... காலியாக வந்த ஆட்டோவை நிறுத்தி சட்டென்று ஏறிக் கொண்டாள். அவள் ஆட்டோவில் ரங்கநாயகியின் வீட்டை அடைவதற்கும், முரளியின் நண்பன் கார்த்திக் பைக்கில் தடதடத்து வந்து இறங்குவதற்கும் சரியாக இருந்தது.

''யமுனா! மு... முரளிக்கு ஆக்ஸிடெண்ட்! பயங்கரமா இரத்த இழப்பு ஏற்பட்டிருக்கு... ஹாஸ்பிடல்லே சேத்திருக் கோம்.''

''ஐயோ... அ... அவரோட உயிருக்கு ஒண்ணும் ஆபத்தில்லையே?'' பகீர் என்ற உணர்வில் ஆடிப் போனாள்.

''எ... எதுவும் இப்போ சொல்ல முடியாதுங்கிறாங்க... முரளியோட அம்மாகிட்ட பக்குவமா விஷயத்தைச் சொல்லி... இதே ஆட்டாவுல கூட்டிட்டு வர்றீங்களா?''

அதற்குள் வாசலில் நின்ற ரங்கநாயகி இவர்களது சம்பாஷணையைக் கேட்டு விட்டு கதற ஆரம்பிததார்.

''ஐயோ! என் பிள்ளைக்கு என்னாச்சு? நான் உயிரோட இருக்கறதே அவனுக்காகத்தானே? எப்பேர்ப்பட்ட உத்தம மான பிள்ளை அவன்...'' புலம்பியவரைக் கைத்தாங்கலாக அணைத்து நடத்திக் கொண்டே வந்து ஆட்டோவில ஏற்றினாள் யமுனா.

''ந... நம்பிக்கையைத் தளர விடாதீங்கம்மா! நீங்க கும்பிடற கடவுள் கைவிடவே மாட்டாரும்மா... அட... அவரோட நல்ல குணத்துக்கு ஒரு குறையும் வராது. தைரியமா இருங்க'' ரங்கநாயகியைத் தேற்றுவதற்காக ஒப்புக்கு வார்த்தைகளை உதிர்த்தாளே தவிர... உள்ளுக்குள் புழுவாய் துடிதுடித்தாள் யமுனா.

ஐ.ஸி.யு... வெளியே பேயறைந்தாற் போல் நின்று கொண்டிருந்த பாஸ்கரிடம், ''டாக்டர் என்ன சொன்னாரு? ப... பயப்படும்படியா ஒண்ணுமில்லையே?'' கேள்விக் கணையைத் தொடுத்துவிட்டு... கண்ணாடி வழியாகப் பார்வையை பாய்ச்சினாள் யமுனா.



தலை, கை கால்களில் போடப்பட்ட கட்டுக்களுடன்... நோயின் தீவிரம் உணராத 'கோமா' நிலையில் இவன் உறங்க... அவனின் வருத்தமும், வேதனையும், வலியும் வெளியே இருந்தவர்களின் மனசுக்குக் கடத்தப்பட்டிருந்தன.

உயிரின் ஓட்டத்தையும் தப்பித்தலையும் தடுத்து நிறுத்தக்கூடிய கருவிகள் பலவற்றின் காட்சிச் சாலையாக இருந்தது அந்த அறை!

''முரளிக்கு நிறைய இரத்த இழப்பு ஏற்பட்டிருக் கிறதால... உடனடியா இரத்தம் செலுத்தியாகணும். அவனுக்கு ரேர் குருப்பாம்... பிளட் பேங்க்லே கூட ஸ்டாக் இல்லையாம்... பிளட் டோனர்ஸ் அசோஸியேஷனுக்கு ஃபோன் பண்ணிருக்காங்க. கடவுள் புண்ணியத்துல ரேர் குரூப்பைச் சேர்ந்தவங்க யாராச்சும் வந்து பிளட் கொடுத்தாங்கன்னா... முரளியைக் காப்பாத்திடலாமாம்.''

படாரென்று திரும்பி பாஸ்கரை ஏறிட்டாள் யமுனா. ''மைகாட்! எ... எனக்கும் ரேர் குரூப்தான்... என் உடம்பி லிருந்து எவ்ளோ பிளட் வேணுமோ எடுத்துக்கச் சொல்லுங்க'' தழுதழுத்தாள்.

''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?'' எவ்வளவு கட்டுப்படுத்தியும் கேளாமல் கண்ணீர் சுரப்பிகள் தங்கள் அடக்கத்தைக் கை விட்டிருந்தன. வெகு வேகமாக உருண்டு வந்த உப்பு நீர் நேரடியாகக் கன்னங்களின் வழியே வெளியேறாமல்... உதடுகளின் மீது அடிக்கடி பயணம் செய்தது.

உடம்பிலிருந்த சக்தி எல்லாம் முழுசாய் வடிந்து ஆவியாகிப் போன மாதிரியான உணர்வில் தவித்துப் போனாள்.

நரம்பில் ஊசி இறக்கி இரத்தம் சேகரித்தபோது தலையோடு காலாய் நெகிழ்வு!

''ஆஞ்சநேயா! பகவானே... என் முரளி முழுசா குணமாகிடணும். என் ஆயுட் காலத்தை எடுத்துக்கிட்டு... அவரை நீடுழி வாழ வைக்கணும். உனக்கு துளசி மாலையும் வடைமாலையும் சாத்தறேன்...'' நங்கநல்லூர் ஆஞ்சநேயரை மனதாரப் பிரார்த்தனை செய்தாள்.

இரத்தக் கொதிப்பையும் சர்க்கரை வியாதியையும் ஏற்கனவே குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருந்தார் ரங்கநாயகி. மிகப் பெரிய அதிர்ச்சி தாக்கியதால்... அவருக்கு பி.பி. எகிறி அடிக்கடி தலைசுற்றல் ஏற்பட்டது. அவருக்கும் சிகிச்சை அளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

எம்.டி.யிடம் விஷயத்தைத் தெரிவித்து விடுமுறை பெற்றுக் கொண்டு பகல் முழுவதும் ஹாஸ்பிடலில் தங்கி இருவரையும் கவனித்துக் கொண்டாள் யமுனா.

மூன்றாம் நாள் முரளி கண் விழித்துப் பார்த்தபோது... ரங்கநாயகி கண்கலங்க அவனது கால்மாட்டில் அமர்ந்து கொண்டார். யமுனா பிரிஸ்கிரிப்ஷனை எடுத்துக் கொண்டு ஏதோ மாத்திரை வாங்க டிஸ்பென்சரிக்குச் சென்றிருந்தாள்.

''அன்னிக்கு நீ கிடந்த கோலத்தைப் பாத்துட்டு நிலைகுலைஞ்சு போயிட்டேன்... பகவான் அனுக்கிரகத்துல பிழைச்சு வந்து என் வயித்துல பாலை வார்த்தியே... ஜாக்கிரதையா வண்டியோட்டி இருக்கக்கூடாதா? எவ்ளோ பெரிய விபத்துல மாட்டிக்கிட்டே ராஜா?'' விசும்பினார்.

''எ... எல்லாம் விதிம்மா! அ... அதான் நான் பிழைச்சுட்டேன்ல?'' மெல்லிய குரலில் திணறித் திணறி பேசினான்.



''யமுனா மட்டும் இல்லேன்னா... நீ பிழைக்கிறதே பெரிய கஷ்டமா போயிருக்கும் முரளி! என்னப்பா அப்படி பார்க்கிறே? நிஜத்தைத் தான் சொல்றேன். தக்க தருணத்துல அவதான் ரத்தம் குடுத்து உன்னைக் காப்பாத்தினா... தெய்வமா பாத்துதான் இந்த அன்பு தேவதையை நமக்காக அனுப்பி யிருக்காருன்னு... என் உள் மனசு சொல்லுதுப்பா... திருமகள் நம்மைத் தேடி வந்திருக்கா...

நான் உனக்கு தாயாக மட்டும் இருந்ததில்லை... நல்ல ஃப்ரெண்டாவும் இருந்திருக்கிறதால... ஒரு விஷயத்தை வெளிப்படையா சொல்றேன். யமுனா உன்னை உயிருக்கு உயிரா நேசிக்கிறா... உனக்கு இப்படி ஆச்சுன்னு தெரிஞ்ச உடனே அவ துடிச்ச துடிப்பு இருக்கே? அதிர்ச்சியில் எனக்கு பி.பி. ஜாஸ்தி ஆகி கிட்டினஸ் வந்துடுச்சு. ஊசி மாத்திரை குடுத்து எப்படியோ தூங்கப் பண்ணிட்டாங்க...

ஆனா யமுனா தணல் மேல நின்னுக்கிட்டிருந் தாப்பல... தவிச்சுப் போயிட்டா... அவளோட பதை பதைப்பும் பரிதவிப்பும்... அவளையும் மீறி தாரை தாரையா வடிஞ்ச கண்ணீரும் என்னைத் திகைக்க வச்சிடுச்சு... அவ எந்த அளவுக்கு உன்னை நேசிக்கிறாள்னு புரிய வச்சிடுச்சு.

ஊசி மயக்கத்துல நானாவது கண் அசந்துட்டேன். ஆனா யமுனா உனக்கு ஏதாவது ஆயிடுமோங்கிற பயத்துல ஒரு நிமிஷம் கூட கண் அசந்திருக்க மாட்டா... ஆபீசுக்கு லீவு போட்டுட்டு இங்கேயே இருந்து கவனிச்சுக்கிட்டா... நைட் வீட்டுக்குப் போயிட்டு விடிஞ்சும் விடியாததுமா பதட்டத்தோட இங்க ஓடி வந்துடுவா...

முரளி! இப்பேர்ப்பட்ட பொண்ணு உனக்கு மனைவியானா... உன்னோட வாழ்க்கை ரொம்ப அமோகமா

:

இருக்கும்னு நம்பறேன். கார்த்தியும் பாஸ்கரும் ஒத்தாசையா இருந்தாங்க... யமுனாவோட நல்ல குணத்தையும் பரந்த மனப்பான்மையையும் நேர்ல பார்த்துட்டு... உன் நண்பர்கள் பிரமித்துப் போயிட்டாங்கப்பா...'' அவர் மேற்கொண்டு பேசியது எதுவும் முரளியின் செவிகளை சென்றடைய வில்லை.

அவனது மனசாட்சி ரம்பமாய் அறுக்கத் தொடங்கியது.

யமுனா ஒரு 'ரோஜா வைரம்...' அருகிலிருந்த வைரத்தின் அருமை தெரியாமல் கிறிஸ்டல் கல்லின் அழகில் மயங்கிப் போய் விட்டேனே?

யமுனா ஒரு பத்தரை மாற்றுத் தங்கம்... ஆனால் நான் 'காக்கா பொன்'னின் பளபளப்பில் மதி மயங்கினேனே? யமுனாவும் அழகி தானே? மனதிற்கு இதம் தரும் அழகு!

அதெப்படி சஹானாவை என் மனம் நாடியது? யமுனா தாமதமாகத்தானே கல்லூரிக்கு அடியெடுத்து வைத்தாள்? அவள் வருவதற்கு முன்பே... சஹானா என்னைச் சுற்றி சுற்றி வந்து வசியம் செய்து விட்டாள் போலும்.

'காதலுக்கு கண்ணில்லை' என்று சொல்வார்களே? அதைப் போல் கண்ணிருந்தும் குருடனாய் ஆகிவிட்டேன். அந்த அசரடிக்கும் அழகு என் புத்தியை மழுங்க வைத்து விட்டதா? இல்லை... குறும்புத்தனம் நிறைந்த வெகுளிப் பெண்ணாக நடித்து என்னை ஏமாற்றிவிட்டாள்.

என்றைக்கு சஹானா ஒரு சதிகாரி, விஷக்கிருமி என்று தெரிந்ததோ... அன்றே அவள் மீது வைத்திருந்த காதலும் மரணித்துவிட்டது. அவளைக் காதலித்த நானும் மரண மடைந்துவிட்டேன்.



ஒரு அப்பழுக்கில்லாத அன்பு தேவதை எனக்கு உதிரம் அளித்து உயிர்கொடுத்து விட்டாள். அந்தப் புண்ணியவதியால் நான் புனர்ஜென்மம் எடுத்திருக்கிறேன்.

கருணையின் மொத்தம் உருவம் யமுனா. நான் அவளுக்கு கிடைக்கப் போவதில்லை என்று தெரிந்திருந்தும், என் மனதில் சஹி குடியிருந்தாள் என்று தெரிந்திருந்தும்... எனக்கு நேர்ந்த விபத்தைக் கண்டு துடித்திருக்கிறாள். தவித்திருக்கிறாள். உள்ளூர ஓலமிட்டுக் கதறியிருக்கிறாள் என்றால்... அவள் எந்த அளவுக்கு என்னை நேசித்திருக்க வேண்டும்?

சஹி என்னை அவமானப்படுத்தி மரணவாசலுக்குத் தள்ளி விட்டாள். ஆனால் யமுனா எமனிடம் போராடி உதிரம் கொடுத்து உயிரை மீட்டுக் கொடுத்து நடமாட வைத்திருக்கிறாளே? அவளுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?

எந்தப் பிரதி உபகாரமும் எதிர்பார்க்காமல் என் அம்மாவுக்கு காலில் காயம் ஏற்பட்டபோது சிரத்தையுடன் கவனித்துக் கொண்டாளே? காலை, மாலை இரு வேளைகளிலும் நடையாய் நடந்து வீட்டிற்கு வந்து சமைத்து அத்தனை வேலைகளையும் இழுத்துப் போட்டு செய்தாளே?

கருணை உள்ளம், அன்பு, மனித நேயம், மனிதாபிமானம், பண்பு, அடக்கம், பவ்யம், பாசம் போன்ற நற்குணங்களை மொத்தமாகச் சேர்த்துப் பிசைந்து இவளை பிரம்மன் படைத்திருக்க வேண்டும்.

இந்தக் காலத்திலும் இப்படியொரு பெண்ணா? அவளது இதயத்தில் நான் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கிறேனா? அதற்குத் தகுதி உடையவனா நான்?'

''அம்மா! பி.பி. மாத்திரை போட்டுக்கிறீங்களா?'' கேட்டபடி உள்ளே வந்தாள் யமுனா. முரளி கண் விழித்திருந்ததைப் பார்த்ததும்... அதுவரை பாறாங்கல்லாய் கனத்த இயத்தில் சட்டென்று பாரம் விலகி இறகு போல் இலேசானது.

இரு தினங்களுக்கு முன் சஹானா யமுனாவின் 'செல்'லில் பேசினாள். காதல் என்ற துரும்புச் சீட்டை பயன்படுத்தி வீழ்த்தியதையும் விரைவில் கோடீஸ்வர மாப்பிள்ளைக்கு மாலையிடப் போவதையும் தெரிவித்தாள். வேதனையில் வெகுண்டு போனாள் யமுனா.

இந்த அதிர்ச்சியும் அவமானமும் சேர்ந்துதான் முரளியை விபத்துக்குள்ளாக்கி இருக்கின்றன என்பதை யமுனா புரிந்து கொண்டாள். முரளியின் மீது பரிதாபமும் பரிவும் கூடுதலாக ஏற்பட்டிருந்தன.

''மிஸ்டர் முரளி! பெயின் ரொம்ப இருக்கா?'' மறுப்பாய் தலையசைத்தான். ரங்கநாயகி மெல்ல அறையை விட்டு வெளியேறினாள்.

அவளது விழிகளை ஊடுருவினான். அந்த நேசம் கோர்த்த பார்வை... குற்றாலச்சாரல் மாதிரி பன்னீர் தெளித்தது. பொதிகைத் தென்றலாய் அவ்வாறு வீசியது. சரம் சரமாய் பிச்சிப்பூ வாசம் பூசியது.

'இந்த உடம்புல உன்னோட ரத்தம்தான் ஓடிட்டிருக்கு. உயிரோட மீட்டு வந்திருக்கே... ஏழேழு ஜென்மத்துக்கும் உனக்கு நன்றிக்கடன் பட்டிருக்கேன். யமுனா' என்று சொல்லத் துடித்தான் முரளி. குரல்வளையில் கட்டையை வைத்து தடுத்து விட்டது போல் பேச முடியாமல் திணறினான். அவளது கண்கள் பொங்கின.



சட்டென்று அவளது கையைப் பிடித்தான். அந்தக் கையின் அழுத்தம்... ஆயிரம் ஆயிரமாயிரம் வார்த்தைகள் பேசின. வார்த்தை நாக்கில் ஜனித்து ஒலி வடிவமாய் வாயிலிருந்து தான் வரவேண்டும் என்பது நிம்மதியா என்ன? அவனது கை சில்லென்றிருந்தது. அவனது பார்வை அவளது விழிகளைத் துளைத்து இதயத்தை ஸ்பரிசித்தது.

நம்மை ஊடுருவும் சில்லிப்பு அவளுக்குள் இடமாற்றம் ஆனது. மனதுக்குள் ஒராயிரம் தாமரைகள் நெருக்கி அலை யடித்தன.

''கடவுள் புண்ணியத்துல உயிரோட மீண்டு வந்திருக் கீங்க... நடந்து போனதை நினைச்சு விசனப் படாதீங்க... ட்ரிப்ஸ் பாட்டில் முடிஞ்சு போச்சு. உடனே வேறே மாத்தியாகணும். நர்ஸை கூட்டிட்டு வரேன்'' நாசூக்காக கையை மெல்ல உருவிக் கொண்டாள்.

கிட்டத்தட்ட பதினான்கு தினங்களுக்கு பின்பே முரளி டிஸ்சார்ஜ் செய்யப்பட்டான். அவன் முழுதாய் தேறி நன்கு நடமாடுவதற்கு இரு மாதங்கள் பிடித்தன. ரங்கநாயகியின் விருப்பத்திற்காக... முடிந்தபோதெல்லாம் யமுனா அவர்களது வீட்டிற்குச் சென்று இதமாய் பேசிவிட்டு வந்தாள்.

அன்றும் அப்படித்தான்! ஆபீஸ் வேலை முடிந்ததும் நேராக ரங்கநாயகியின் வீட்டிற்குச் சென்றிருந்தாள். பத்து நிமிடங்கள் அவருடன் கரிசனமாய் பேசிக்கொண்டிருந்தவள் கிளம்ப யத்தனித்தபோது... அந்த டாக்ஸி வீட்டு வாசலில் வந்து நின்றது.

டாக்ஸியை விட்டு உதிர்ந்த மனிதரைப் பார்த்ததும் ரங்கநாயகியின் முகம் சட்டென்று வாடியது. ''யமுனா! இவரு... எங்க நிறுவனத்துல வேலை பார்க்கிற மூத்த அதிகாரி

ஆச்சே? அவருக்கு வலது கை மாதிரி? இங்க ஏன் வர்றாரு?'' சத்தம் கேட்டு முரளியும் எட்டிப் பார்த்தான்.

''வணக்கம் அம்மா! ஒரு துக்கமான செய்தி சொல்ல வந்திருக்கிறேன். முகேஷ் ஓட்டிட்டு வந்த கார் ஆக்ஸிடென்ட் ஆயிடுச்சு. விஸ்வநாதன் சாருக்கு இடுப்புக்கு கீழே பலத்த காயம்... ஹாஸ்பிடல்லே சேர்த்திருக்கோம். முகேஷ்... ஸ்பாட்டிலேயே இறந்துட்டாரும்மா... பாஸ் உங்களைப் பார்க்கப் பிரியப்படறாரு... சீக்கிரமா வர்றீங்களாம்மா?'' என்றார்.

## 18

முகேஷ் ஓர் உல்லாசமான இளைஞன். அப்பா விஸ்வநாதனுக்கு தப்பாமல் தலையெடுத்தவன். இரவெல்லாம் விழித்திருந்து விட்டு பகலில் உறங்கி விடும் நட்சத்திரத்தைப் போன்றவன் அவன்.

சூரியோதயத்தை அவன் பார்த்ததில்லை. எப்போதாவது விழிக்கும் போது அவன் விஸ்கியில் முகம் கழுவிக் கொள்வான். இரவு விடுதிகளும் சூதாட்ட களங்களுமே - அவனுடைய ராத்திரி உலகங்கள். பாசம், அன்பு, நேசம், நட்பு, பண்பு இவைகளெல்லாம் வார்த்தை களாகக் கூட அவனுக்கு அறிமுகமில்லை.

அவனுக்கும் சஹானாவுக்கும் நிச்சயதார்த்தம் நடந்து முடிந்ததும்... முகேஷுக்கு மகிழ்ச்சியில் தலை கால் புரியவில்லை. அப்பா விஸ்வநாதன் வலைவீசித் தேடி அவனது ரசனைக்கு ஒத்துப் போகின்ற பெண்ணைப் பிடித்துவிட்டாரே? என்ற சந்தோஷம்... அவனைத் திக்கு முக்காட வைத்தது.



ஒரு பார்ட்டியில் கலந்து கொண்டு மூக்கு முட்டக் குடித்துவிட்டு அப்பனும் மகனுமாய் காரிலேறினார்கள். போதையில் கண்கள் சொருக காரை ஓட்டியதால் பெரிய விபத்து ஏற்பட்டு விட்டது. சம்பவ இடத்திலேயே முகேஷை மரணம் தழுவிக் கொண்டது.

படுகாயத்துடன் துடித்த விஸ்வநாதன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு... சிகிச்சை அளிக்கப்பட்டார். நினைவு திரும்பியதும் மிகப் பெரிய அதிர்ச்சி தாக்குண்டு சர்வமும் ஆடிப் போனார்.

''என் மனைவி ரங்கநாயகியைப் பார்க்கணும். என் பிள்ளை முரளியையும் அவளையும் கூட்டிட்டு வாங்க'' கதற ஆரம்பித்தார் விஸ்வநாதன்.

''தானாடா விட்டாலும் தன் தசை ஆடும்'' என்று சொல்வார்கள். விஷயத்தைக் கேள்விப்பட்டதும் துயரக் கடலில் மூழ்கிப் போனார் ரங்கநாயகி. ''பட்ட காலிலேயே படும் கெட்ட குடியே கெடும்'னு சொல்வாங்களே... கடவுள் புண்ணியத்துல நீ பிழைச்சு வந்துட்டே... முகேஷ்... போயிட்டானே முரளி!

மனம் போன போக்குல... ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி அழிவைத் தேடிக்கிட்டானே! வாடா... சீக்கிரமா போகலாம்.''

சட்டென்று காரிலேறினர். கண்ணீர்மல்க காருக் குள்ளிருந்து எட்டிப் பார்த்த முரளி ''யமுனா! நீங்களும் வாங்க... உங்க வீட்டுக்கு தகவல் சொல்லி அனுப்பிச்சுட லாம்... ப்ளீஸ்'' என்றதும் மறுக்க முடியாமல் ஏறிக் கொண்டாள்.

துக்கம் பந்தாய் எழும்பி தொண்டையை அடைக்க ரங்கநாயகியை தனது தோளில் சாய்த்துக் கொண்டாள் யமுனா.

★ ★ ★

"கிளம்புங்க அம்மா போகலாம். அதான் எல்லாக் காரியங்களும் முடிஞ்சு போச்சே? இன்னும் எத்தனை நாளைக்கு இந்த பங்களாவிலேயே இருக்கிறதாம்?" முரளி உரிமையாய் ரங்கநாயகியை அதட்டினான்.

ரங்கநாயகி மௌனமாக யமுனாவை ஏறிட்டார். அன்று ஞாயிற்றுக்கிழமை ரங்கநாயகி அவளுக்கு ஃபோன் செய்து வரவழைத்திருந்தார்.

"மிஸ்டர் முரளி! எவ்வளோ பெரிய ஜீனியஸ் நீங்க! உங்களுக்கு நானெதுவும் சொல்ல வேண்டியதில்லை... நடந்து போன தவறுக்கு வருந்தி உங்கப்பா பகிரங்கமா மன்னிப்பு கேட்டாரு... வயோதிக காலத்துல மூத்த மகனை இழந்துட்டு... இடுப்புக்கு கீழே செயலிழந்து சக்கர நாற்காலியில் உட்கார்ந்துட்டாரு.

அம்மாவுக்கு உங்க அப்பாமேல கோபமும் வருத்தமும் நிறைய இருந்தது. இப்பவும் இருக்கலாம்... ஆனா அடிப்படையில அவங்க ஒரு நல்ல மனைவிங்கிறதை ஏன் மறந்துட்டீங்க? இந்த நிலைமையில அப்பாவை விட்டுட்டு வரதுக்கு அவங்களுக்கு எப்படி மனசு வரும்?" பரிந்து கொண்டு பேசினாள்.

"புரிஞ்சுதான் பேசறீங்களா, யமுனா? அவரு கெட்டழிஞ்சு போனதுமில்லாம அண்ணனைக் கெடுத்து கடைசியில அவனைக் குழி தோண்டி புதைச்சுட்டாரு... இதை நினைச்சா எனக்கு பத்திக்கிட்டு வருது... கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் பண்றாரு... 'எல்லாத்தையும் நீதான் பார்த்துக்கணும்பா... இல்லேன்னா மனசுடைஞ்சு இப்பவே செத்துப் போயிடுவேன்'னு புலம்பறாரே? அள்ளக் குறையாத சமுத்திரம் மாதிரி சொத்து இருக்கே?

அவரை கவனிச்சுக்க ஆயிரம் பேர் வருவாங்க. அவங்களை வச்சே... எல்லா நிறுவனங்களையும் கட்டி மேய்க்க வேண்டியதுதானே? யாருக்கு வேணும் இவரோட சொத்து?" கோபத்தில் கொந்தளித்தான்.

"அம்மாவோட மனசறிஞ்சு நடக்கிற தங்கமான பிள்ளை நீங்க! இப்ப ஏன் அவங்களோட மனசைப் புரிஞ்சுக்க மாட்டேங்கிறீங்க? இது... உங்கப்பாவோட சுய சம்பாத்தியமா? இல்லையா? பரம்பரை பரம்பரையா வந்த சொத்து தானே? அத்தனையையும் நீங்கதானே நிர்வாகம் பண்ணணும். இந்த வம்சத்தோட வாரிசு நீங்க... எங்கேயோ யாருக்கோ நீங்க சேவகம் செய்யறதிலே... அம்மாவுக்கு உடன்பாடு இல்ல...

சொத்து சுகத்துக்கு ஆசையே படாத இளைஞர் நீங்க! பாராட்டப்பட வேண்டிய விஷயம்தான். ஆனா... இது மூலமா எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்யலாமே? நிறைய பேருக்கு வேலை வாய்ப்பு தரலாம். நிறைய குடும்பங்களுக்குப் படியளக்கலாம். அறக்கட்டளை ஒண்ணு தொடங்கி அது மூலமா எவ்வளவோ சேவை செய்யலாமே?

அதுக்காகவாவது நீங்க ஒத்துக்கணும். உங்களுக்கு திறமை இருக்கு. அக்கறையும் உத்வேகமும், உழைப்பும் சேர்த்துக் காட்டி களத்துல இறங்கினா... நீங்க சொத்தைத் தொடலாமே? அம்மாவோட அபிப்பிராயத்தை வெளிப்

படையா நான் சொல்லிட்டேன்... எ... என்னோட ஆசையும் அதுதான். ப்ளீஸ் மறுக்காதீங்க!''

சரக்கென்று திரும்பி அவளது முகத்தை உற்றுப்பார்த்தான் முரளி.

''நான் இப்போ மறுத்தா... அது உங்க ரெண்டு பேத்தோடு மனசையும் காயப்படுத்தற மாதிரி இருக்கும். வேண்டாவெறுப்பாகத்தான் நான் இதுக்கு உடன்படறேன். யமுனா! நான் இதுக்கு சம்மதிக்கணும்னா... நீங்க உங்க வேலையை ரிஸைன் பண்ணிடனும். என்ன... திகைச்சுப் போய் பார்க்கறீங்க? அந்த வேலையை ரிஸைன் பண்ணிட்டு... எனக்கு உதவியா என்னோட பெர்ஸனல் செகரட்டரியா ஜாயின் பண்ணி... என்னோட முன்னேற்றத்துல பங்கெடுத்துக்கணும். அதுக்கு நீங்க சம்மதிப்பீங்களா?''

சிவந்த முகத்தில் திகைப்பு பரவ தயக்கத்துடன் ரங்கநாயகியை ஏறிட்டாள் யமுனா.

''சின்சியாரிட்டியும் நேர்மையும், திறமையும் நிறைஞ்ச பி.ஏ. அவனுக்கு கண்டிப்பா தேவை. அவனுக்கு பக்கபலமா நீ கூடவே இருக்கணும் யமுனா. அதான் என்னோட ஆசை கண்டிப்பா நீ இதுக்கு ஒத்துக்கணும்மா'' குரலில் பரிதாபம் வழிந்தோட பேசிய ரங்கநாயகியைக் கண்டதும் அவளது மனம் பாகாய்க் கரைந்தது.

''சரிங்கம்மா... உங்க இஷ்டப்படியே செய்றேன்'' என்று அவள் கூறியதும் முரளிக்கு பெருத்த நிம்மதி பரவியது.

சஹானாவால் அவமானத்தையும் ஏமாற்றத்தையும் சந்தித்த முரளிக்கு... உள்ளுக்குள் ஒரு புது உத்வேகம் பிறந்ததது...

ரங்கநாயகியிடம் ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டு தனது அலுவலகத்தில் அடியெடுத்து வைத்தான். மூத்த அதிகாரியின் உதவியுடன் புயல்வேகத்தில் விவரங்களை சேகரித்தான்.

அனைத்து ஃபைல்களை தலைகீழாகப் புரட்டி கம்ப்யூட்டரைக் குடைந்து விவரங்களை விரல் நுனிக்குள் அடக்கியதும்... வெற்றிப் பாதை 'பளிச்' சென்று கண்ணுக்கு புலனாகியது.

யமுனா கற்பூர புத்தியுடன் அதி திறமைசாலியான 'பி.ஏ.'வாக செயல்பட்டு ஆலோசனைகளை அள்ளி வழங்கிய விதம்... அவனை ஆச்சரியத்தில் மூழ்கடித்தது. அவர்கள் இருவரும் இணைந்து உருவாக்கிய பிராஜெக்ட் 'கிளிக்' ஆனது. வர்த்தக ரீதியாக வெற்றி பெற்று லாபத்தை அள்ளிக் குவித்தது.

மளமளவென்று வெற்றிப் படிகளில் வேகமாக ஏற ஆரம்பித்தான் முரளி.

மாதங்கள் ஜெட் வேகத்தில் பறந்தன.

★ ★ ★

இரவும் பகலும் உரசிக் கொள்ளும் அந்திப் பொழுது! ஆபீஸ் காரில் வந்திறங்கிய யமுனா கிணற்றடியில் முகம் கழுவிக் கொண்டு பூத்துவாலையால் ஒற்றியபடியே அடுக்களைக்குள் புகுந்தாள்.

சிறிது நேரத்தில் நுரை பொங்க காபியை ஆற்றியபடி வெளிப்பட்டாள். டிகாக்ஷன் மணம், தாத்தா சண்முகத்தின் நாசியைத் துளைத்தது. வைத்த கண் வாங்காமல் பேத்தியையே அவர் பார்த்துக் கொண்டிருந்தார்.

''இந்தாங்க தாத்தா... காபி சாப்பிடுங்க!' காபியை ஒரே மூச்சில் குடித்து முடித்து மோடாவில் டம்ளரை வைத்தார் சண்முகம்.

''என்ன தாத்தா? ஒரு மாதிரியா இருக்கிங்க... உடம்புக்கு முடியலையா தாத்தா?'' பரிவுடன் அவரது நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.

''உடம்புக்கு ஒண்ணுமில்லைம்மா... உன்கிட்ட கொஞ்சம் மனசு விட்டுப் பேசணும்...'' சீரியஸான முகபாவனையுடன் ஏறிட்டார்.

''என்ன தாத்தா இது? பீடிகை பலமா இருக்கே... சொல்லுங்க தாத்தா'' புன்முறுவல் பூத்தபடி ஆர்வமாய் பார்த்தாள்.

''எனக்கு பொழுதே போகலைம்மா... வீட்டல எந்தப் பக்கம் பார்த்தாலும் நடேசன் நிக்கிற மாதிரியே இருக்கு... சரி... 'ஸ்ரீராமஜெயம்' எழுதினா... கொஞ்சம் நிம்மதி கிடைக்குமேன்னு நெச்சேன். ஏதாவது பழைய நோட்டு இருந்தா எடுத்துட்டு வாப்பான்னு... கிரிகிட்டே சொன்னேன்.

அவன் உன்னோட பழைய டைரியை கொண்டாந்து குடுத்துட்டான். ஸ்ரீராமஜெயம்' எழுதிட்டு தற்செயலா பக்கங்களைப் புரட்டினேன். அடுத்தவங்களோட டைரியைப் படிக்கிறது தப்புதான்.

ஆனா நீ என் செல்லப் பேத்தியாச்சே? ஏதோ ஒரு ஆர்வத்துல உரிமையா வாசிச்சுட்டேன். நீ... நீ... முரளியை ஆத்மார்த்தமா விரும்பின விஷயத்தைத் தெரிஞ்சுகிட்டேன்.''

''தாத்தா...'' அவளது விழிகளில் 'மளுக்' என்று கண்ணீர் குளம் கட்டியது. இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.



''ரங்கநாயகி அம்மா ரொம்ப நல்லவங்க... முரளியும் கண்ணியமான யோக்கியமான பையன்... நாளைக்கு நல்ல நாளா இருக்கு. ரங்கநாயகி அம்மாளைப் பார்த்துப் பேசி முடிவு பண்ணிடலாம்னு இருக்கேன். எனக்கு ரொம்ப வயசாயிடுச்சே! இத்தன வருஷத்துக்கு நான் உயிரோட இருக்கிறதே பெரிய விஷயம்...

நான் கண்ணை மூடும் முன்னே உன்னைக் கரையேத்திடணும். என்னடா கண் கலங்கறே? உன்னைப் பெத்த அம்மாவோ, இல்ல... நடேசனோ இருந்திருந்தா... உன் மனசுல என்ன இருக்குன்னு நாசூக்கா கேட்டுத் தெரிஞ்சிருப்பாங்கல்ல?

நீ விரும்பினதை நான் குற்றமே சொல்லலை கண்ணா... மனசுக்கு கடிவாளம் போட்டு குடும்பப் பொறுப்போட கண்ணும் கருத்துமா இதுவரை நடந்துட்டு வர்றியே? உன்னைப் பேத்தியா அடைஞ்சதுக்கு நான் ரொம்பவே குடுத்து வச்சிருக்கணும் யமுனா!

யமுனாவின் உதடுகள் காற்றில் சிக்கிய மலரிதழ்களாய் துடித்தன. நெஞ்சுக்குள் கல்லை ஏற்றி வைத்தாற் போலிருந்தது. தணலில் வாட்டிய கீரையாய் மனம் துவண்டது.

சட்டென்று மடங்கி அமர்ந்து தாத்தாவின் மடி மீது தலை சாய்த்துக் கொண்டாள். கரிசனத்துடன் அவளது உச்சந்தலையை இதமாக வருடினார் சண்முகம்.

தாத்தாவின் அனுசரணையில் பொல பொலவென்று நொறுங்கிப் போனாள். ''உன்னோட செல்ஃபோனைக் குடும்மா... முன் கூட்டியே ரங்கநாயகி அம்மாளுக்கு நான் வரப்போற விஷயத்தைத் தெரிவிச்சுடறேன்.''

''வே... வேணாம் தாத்தா! இப்போ... முரளி பெரிய பணக்காரர். ரொம்ப உயரத்துல உச்சாணிக் கொம்புலே உட்கார்ந்திருக்காரு... அது மட்டுமல்ல... பிஸினஸ்லே பல சாதனைகள் புரிஞ்சு சிகரத்தைத் தொட ஆரம்பிச்சுட்டாரு...

நமக்கும் அவருக்கும் ஏணி வச்சாலும் எட்டாது தாத்தா! இந்த விஷயத்தை நீங்க மறந்துடுங்க தாத்தா'' தழுதழுத்தாள் யமுனா.

''என்னம்மா நீ பைத்தியக்காரத்தனமா பேசறே? ரங்கநாயகியும் சரி முரளியும் சரி... உன்னை அவங்களோட குடும்பத்துல ஒருத்தியாத் தானே பார்க்கிறாங்க? உன்னை அவங்களுக்கு ரொம்பவே பிடிச்சிருக்கே? அப்புறம் என்ன?''

''தாத்தா! உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? முரளி சஹானாவை நேசிச்சாரு... ஆனா சஹி என்ன பண்ணினா தெரியுமா?'' என்று தொடங்கி முழு விவரத்தையும் அவரிடம் தெரியப்படுத்தினாள் யமுனா.

''அடப்பாவி... சண்டாளி! பெண் இனத்துக்கே பெரிய கேவலமாச்சே? சேச்சே... தம்பியை சுத்தி வந்து காதலிச்சுட்டு... சே! நடிச்சுட்டு அவனை அவமானப்படுத்தி உதறிட்டு... அவளோட அண்ணன்காரனையே கட்டிக்கப் பார்த்தாளாமா? இராதகி! சதிகாரி... அவளைக் கண்டாலே ஆரம்பத்துல இருந்தே எனக்கு கட்டோட பிடிக்காது.

சினிமா நடிகை மாதிரி அவ போட்டுகிற டிரஸ்ஸூம் அந்த தளுக்கும் மினுக்கும்... சேச்சே! இந்த மாதிரி பொண்ணை நிச்சயம் பண்ணின பாவத்துக்குத்தான்... அந்தப் புள்ளை அல்பாயுசுல பொட்டுன்னு போயிட்டான்... போ!...



சரி யமுனா! நம்ம விஷயத்துக்கு வருவோம்... இப்பேர்ப்பட்ட பொண்ணை... முரளி இன்னும் மனசுல நெனச்சுட்டு இருப்பாருன்னு... நெனக்கிறியாம்மா?

அவளைப் பத்தின நெனப்பை என்னிக்கோ அடி மனசுலேர்ந்து ஆணி வேரோட புடுங்கி எறிஞ்சிருக்க மாட்டாராம்மா?''

''இல்ல தாத்தா! சஹி தான் நடிச்சாளே தவிர... முரளி ரொம்ப உண்மையாதான் நேசிச்சாரு... அவ அவமானப் படுத்தினாலும் துடிச்சுப் போனது நிஜம்தான்! நான் மறுக்கவே இல்ல... ஆனா... நீறு பூத்த நெருப்பா அவரோட மனசுக்குள்ளே இன்னமும் அந்த நேச உணர்வு இருந்தா?

அத்தோட இன்னொரு முக்கியமான காரணமும் இருக்கு. நீங்க சொன்னபடியே சஹியை அவர் அடியோட மறந்திருக்கலாம். 'சஹி' ஒரு பணத்தாசை பிடிச்ச பொண்ணுன்னு இரண்டொரு வாட்டி முரளி சொல்ல... நான் கேட்டிருக்கேன். அந்தக் குடும்பத்துக்கு ஒரு நல்ல 'வெல் விஷரா' நான் இருந்துட்டு வர்றேன்.

இந்த சமயத்துல நீங்க கல்யாணப் பேச்சை எடுத்தா... என்ன நினைப்பாங்க? ஒரு நல்ல நிலைமைக்கு வந்தப்புறம்... சொத்து சுகத்தோட அமோகமா வாழணும்னு பேராசைப்பட்டு... முரளியை கல்யாணம் செய்துக்க விரும்பறதா நினைக்க மாட்டாங்களா?

அந்த மாதிரியான எண்ணம்... முரளியோட மனசுல கடுகளவு முளைச்சாக்கூட நான் தாங்க மாட்டேன் தாத்தா! அந்த டைரியைப் பத்தின விஷயத்தை தயவு செய்து மறந்துடுங்க தாத்தா... நான் என்னிக்கோ 'அதை' என் மனசுக்குள்ளேயே புதைச்சுட்டேன். நான் இப்படியே

''வே... வேணாம் தாத்தா! இப்போ... முரளி பெரிய பணக்காரர். ரொம்ப உயரத்துல உச்சாணிக் கொம்புலே உட்கார்ந்திருக்காரு... அது மட்டுமல்ல... பிஸினஸ்லே பல சாதனைகள் புரிஞ்சு சிகரத்தைத் தொட ஆரம்பிச்சுட்டாரு...

நமக்கும் அவருக்கும் ஏணி வச்சாலும் எட்டாது தாத்தா! இந்த விஷயத்தை நீங்க மறந்துடுங்க தாத்தா'' தழுதழுத்தாள் யமுனா.

''என்னம்மா நீ பைத்தியக்காரத்தனமா பேசறே? ரங்கநாயகியும் சரி முரளியும் சரி... உன்னை அவங்களோட குடும்பத்துல ஒருத்தியாத் தானே பார்க்கிறாங்க? உன்னை அவங்களுக்கு ரொம்பவே பிடிச்சிருக்கே? அப்புறம் என்ன?''

''தாத்தா! உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? முரளி சஹானாவை நேசிச்சாரு... ஆனா சஹி என்ன பண்ணினா தெரியுமா?'' என்று தொடங்கி முழு விவரத்தையும் அவரிடம் தெரியப்படுத்தினாள் யமுனா.

''அடப்பாவி... சண்டாளி! பெண் இனத்துக்கே பெரிய கேவலமாச்சே? சேச்சே... தம்பியை சுத்தி வந்து காதலிச்சுட்டு... சே! நடிச்சுட்டு அவனை அவமானப்படுத்தி உதறிட்டு... அவளோட அண்ணன்காரனையே கட்டிக்கப் பார்த்தாளாமா? கிராதகி! சதிகாரி... அவளைக் கண்டாலே ஆரம்பத்துல இருந்தே எனக்கு கட்டோட பிடிக்காது.

சினிமா நடிகை மாதிரி அவ போட்டுகிற டிரஸ்ஸும் அந்த தளுக்கும் மினுக்கும்... சேச்சே! இந்த மாதிரி பொண்ணை நிச்சயம் பண்ணின பாவத்துக்குத்தான்... அந்தப் புள்ளை அல்பாயுசுல பொட்டுன்னு போயிட்டான்... போ!...



சரி யமுனா! நம்ம விஷயத்துக்கு வருவோம்... இப்பேர்ப்பட்ட பொண்ணை... முரளி இன்னும் மனசுல நெனச்சுட்டு இருப்பாருன்னு... நெனக்கிறியாம்மா?

அவளைப் பத்தின நெனப்பை என்னிக்கோ அடி மனசுலேர்ந்து ஆணி வேரோட புடுங்கி எறிஞ்சிருக்க மாட்டாராம்மா?''

''இல்ல தாத்தா! சஹி தான் நடிச்சாளே தவிர... முரளி ரொம்ப உண்மையாதான் நேசிச்சாரு... அவ அவமானப் படுத்தினாலும் துடிச்சுப் போனது நிஜம்தான்! நான் மறுக்கவே இல்ல... ஆனா... நீறு பூத்த நெருப்பா அவரோட மனசுக்குள்ளே இன்னமும் அந்த நேச உணர்வு இருந்தா?

அத்தோட இன்னொரு முக்கியமான காரணமும் இருக்கு. நீங்க சொன்னபடியே சஹியை அவர் அடியோட மறந்திருக்கலாம். 'சஹி' ஒரு பணத்தாசை பிடிச்ச பொண்ணுன்னு இரண்டொரு வாட்டி முரளி சொல்ல... நான் கேட்டிருக்கேன். அந்தக் குடும்பத்துக்கு ஒரு நல்ல 'வெல் விஷரா' நான் இருந்துட்டு வர்றேன்.

இந்த சமயத்துல நீங்க கல்யாணப் பேச்சை எடுத்தா... என்ன நினைப்பாங்க? ஒரு நல்ல நிலைமைக்கு வந்தப்புறம்... சொத்து சுகத்தோட அமோகமா வாழணும்னு பேராசைப்பட்டு... முரளியை கல்யாணம் செய்துக்க விரும்பறதா நினைக்க மாட்டாங்களா?

அந்த மாதிரியான எண்ணம்... முரளியோட மனசுல கடுகளவு முளைச்சாக்கூட நான் தாங்க மாட்டேன் தாத்தா! அந்த டைரியைப் பத்தின விஷயத்தை தயவு செய்து மறந்துடுங்க தாத்தா... நான் என்னிக்கோ 'அதை' என் மனசுக்குள்ளேயே புதைச்சுட்டேன். நான் இப்படியே

இருந்துட்டுப் போறேன் தாத்தா... வற்புறுத்தாதீங்க... நா... நான் உடைஞ்சு போயிடுவேன் தாத்தா...''

''உனக்கு இஷ்டமில்லேன்னா விட்ரு யமுனா... அழாதே ராஜாத்தி'' என்ற முதியவரின் முகத்தில் அதீத சோகம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

## 19

சஹானாவுக்கு சர்வமும் பதறியது. மனதை சூனியம் கவ்விக் கொண்டிருந்தது. எதிர்காலமே இருண்டு விட்டாற் போன்று... இதயத்தில் பீதி படர்ந்தது. ஒரு வழியும் புலப்படாமல் கண்ணைக் கட்டி அவளைக் காட்டில் விட்டாற் போலிருந்தது.

'கோடீஸ்வரன் முகேஷை கை பிடிக்கப் போகிறோம்' என்று அவளது மனம் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தது. உற்சாக மிகுதியில் சந்தோஷத்தின் விளிம்பிற்கே சென்று விட்டாள்.

அவளது மமதையும் திமிரும் இரு மடங்காகப் பெருகியிருந்தன. முகேஷ் விபத்தில் மரணமடைந்து விட்டான் என்ற செய்தி... அவளது இதயத்தில் இடியை இறக்கிவிட்டது.

மட்டற்ற மகிழ்ச்சியில் மண் விழுந்து விட்டது. தன் முன் பரப்பப்பட்டிருந்த விதவிதமான விளையாட்டு பொருட்கள் அனைத்தும் ஒருங்கே பிடுங்கப்பட்ட குழந்தையானாள். எதிர்பாராத ஏமாற்றத்தில் உள் மனம் ஓலமிட்டுக் கதறியது.

கல்யாணப் பத்திரிகை அச்சடித்து அதை ஊருக்கெல்லாம் விநியோகித்துக் கொண்டிருந்த நேரத்தில் விதி விளையாடி விட்டதே? அவளது தந்தை குருமூர்த்தி அடியோடு நிலை குலைந்து போய் விட்டார்.



விஷயத்தை அறிந்தவர்கள் வதந்திக்குத் 'தந்தி' அடித்தார்கள். கிசு கிசு என்னும் நெருப்புக்கு நெய் வார்த்தார்கள்.

''சஹானா துரதிர்ஷ்டம் பிடிச்ச பொண்ணு! அவ ஜாதகத்துல பெரிய தோஷம் இருக்காம் அதான்... தாலி கட்டறதுக்கு முன்னே மாப்பிள்ளை மாண்டு போயிட்டான்.''

''குருமூர்த்தியோட பொண்ணு இருக்காளே? ஒரு மாதிரியான டைப்பாம்... காலேஜுல ஒரு பையன் கூடவே சுத்தியிருக்கா... பைக்குல அவன்கூட சுத்தாத இடமே இல்லையாம்... அவன்கூட மட்டுமல்ல... ஆம்பிளைப் பசங்க கூட கொஞ்சமும் லஜ்ஜை இல்லாம பழகுற பொண்ணாம்... நிச்சயம் பண்ணினதுக்கு அப்புறம் அந்த முகேஷ் கூடவும் நல்லா சுத்தியிருக்கா.''

''துரதிர்ஷ்டம் பிடிச்ச பொண்ணு! பெரியவங்களை எடுத்தெறிஞ்சு பேசுவாளாம்... மட்டு மரியாதை தெரியாதவ... பசங்ககூட ஜாலியா சோஷியலா மூவ் பண்ற டைப்பாம்... வீட்டிலேயே தங்காதாம்... சதா ஸ்கூட்டியில ஊர் சுத்திக்கிட்டுத் திரியுமாம்... இந்த மாதிரி பொண்ணு குடும்பத்துக்கு லாயக்குபட மாட்டா.''

வதந்தி தீயை விட வேகமாகப் பரவும் என்று சொல்வார்கள். மகளைப் பற்றிய வதந்திகள் காற்று வாக்கில் குரு மூர்த்தியின் செவிகளைப் பதம் பார்க்கத்தான் செய்தன.

அவசர அவசரமாக வேறு வரன்களைப் பார்க்க ஏற்பாடு செய்தார். ஒவ்வொரு வரனாக தட்டிக் கழித்து போய்க் கொண்டிருந்தது. ஊரார் தங்களது அருமை மகளின் தலையை உருட்டத் தொடங்கியதும்... ஆரம்பத்தில் வருத்தப்பட்ட அம்மா குமுதா... நாளாக ஆக ஆவேசத்துடன் குமுறத் தொடங்கிவிட்டாள்.

''ஒரே பொண்ணுன்னு செல்லம் குடுத்து தலையில தூக்கி வச்சு ஆடினது தப்பாய் போச்சே...? வயசுக்கு வந்த பொண்ணு அடக்கம் ஒடுக்கமா இருக்கிற இடம் தெரியாம இருந்திருந்தா... இந்தப் பிரச்சினை வந்திருக்குமா?

'கண்டதே காட்சி கொண்டதே கோலம்'னு அதி நாகரீகமா ஜாலியா திரிஞ்சா... இந்த கதி வரும். சோஷியலா பேச வேண்டியதுதான்... அதுலேயும் ஒரு லிமிட் இருக்க வேணாமா? அந்த லிமிட்டைத் தாண்டினா... சொஸைட்டியே காறித் துப்பிடும்கிறதை நல்லா ஞாபகத்துல வச்சுக்கிட்டு... கத்தி மேல நடக்கிற மாதிரி சர்வ ஜாக்கிரதையா இருந்திருந்தா... கண்டவங்களும் இப்படி கண்டபடி பேசியிருப்பாங்களா?

எல்லாம் என்னைக் சொல்லணும். நினைச்ச மாத்திரத்துல நீ ஸ்கூட்டி எடுத்துக்கிட்டு ஊர் சுத்தறப்ப எல்லாம்... அசால்டா இருந்தது என் தப்பு! ஊர் சுத்தத் துடிச்ச காலை ஒடிச்சு அடுப்புல வச்சிருந்தா... நானொரு நல்ல தாய்! நான் நல்ல தாயா இருக்கத் தவறிட்டேனே?''

'என் அம்மாவா இப்படி பேசுகிறாள்? என்னைப் பார்த்தாலே அம்மாவின் கண்ணெல்லாம் நேசம் வழியும். குரலெல்லாம் பாசம் வழியும். மனசெல்லாம் அன்பு வழியுமே? என் எதிர்காலம் என்னவாகும்?''

பயம் மனசுக்குள்ளே குதியாட்டம் போட்டது. வருத்தம் பிடுங்கித் தின்றது. வேதனை நெஞ்சை அரித்தது. இனம் புரியாத கோபமும் வருத்தமும் முகத்தை அறைந்தன.

அவளது ஆணவத்திற்கும் அகங்காரத்திற்கும் பெருத்த மரண அடி கொடுத்தது அந்த தகவல்... முரளி முகேஷின் தம்பியாமே? முகேஷ் மரணமடைந்த பின் தான் இந்த விஷயமே தெரிய வந்தது.



பிரபல தொழிலதிபர் விஸ்வநாதனின் மகனா முரளி? அவரையா நான் அவமானப் படுத்தினேன்? என்னை உருகி மருகிக் காதலித்தவரை துச்சமாக நினைத்து உதறித் தள்ளினேனே?

அத்தனை திரண்ட சொத்தையும் முரளியா ஆளப் போகின்றார்?' வேதனையில் வெந்து போனாள் சஹானா.

தோழி மேரி அவளுக்கு இன்னொரு தகவலையும் ஃபோனில் சொன்னாள்.

யமுனா, முரளியின் அந்தரங்க காரியதரிசியாக வேலை செய்கின்றாள் என்பதையும்... முரளி பிஸினஸில் பல சாதனைகள் புரிந்து முன்னேறி வருகின்றான் என்பதையும்... அவளால் ஜீரணித்துக் கொள்ளவே முடியவில்லை.

''அன்று அவமானப்படுத்தியபோது... யமுனா உன்னை ஆழமாக நேசித்தாள்' என்ற விவரத்தைக் கூறிவிட்டேனே? யமுனாவே மூடி மறைத்த விஷயத்தை... நான் அம்பலப் படுத்தி விட்டேனே...? இன்று தனது செகரட்டரியாக யமுனாவை வைத்துக் கொண்டிருக்கும் முரளி... நாளைக்கே அவளுக்கு மாலையிட்டு... மனைவி என்ற அந்தஸ்தைக் கொடுத்துவிட்டால்... அத்தனை சொத்தையும் யமுனா ஆண்டு அனுபவிப்பாளே? என் வாழ்க்கை இருண்டு போய் கிடக்கிறதே?

என்ன செய்யப் போகிறேன் நான்?'

அன்று இரவு முழுவதும் வெகு தீவிரமாக மூளையைக் கசக்கி யோசித்துவிட்டு... ஒரு முடிவுக்கு வந்தாள். மறுநாள்...

முரளியின் அலுவலகத்திற்குத் தொடர்பு கொண்டாள். ரிசீவரை எடுத்த ரிசப்ஷனிஸ்டிடம் ''ஷல் ஐ ஸ்பீக் டு மிஸ்டர் முரளி?'' என்றாள்.

''நீங்க யாருன்னு தெரிஞ்சுக்கலாமா மேடம்?''

''நான் சஹானா! முரளியோட லவர்.''

''இஸிட்?'' மறுமுனையில் குரல் அதிர்ந்து பின் பவ்யமானது. ''ஒன் மினிட் ப்ளீஸ்...'' உடனே இணைப்பு கொடுத்து விட்டாள்.

''ஹலோ! முரளி ஸ்பீக்கிங்'' கன கம்பீரமான குரல் செவிகளை ஸ்பரிசித்து நெகிழ வைத்தது.

''மு... முரளி! சாரி... சாரி...! புத்தி கெட்டுப் போயி முட்டாள்தனம் பண்ணிட்டேன். இடைப்பட்ட காலத்துல நமக்குள்ளே ஏற்பட்ட பிரிவு... உங்களோட அருமையை எனக்கு நல்லாவே உணர்த்திடுச்சு... என்னை மன்னிப்பீங்களா?

உங்களை... நா... நான் நேர்லே பார்க்ணும்னு துடிக்கிறேன். உங்க கால்லே விழுந்து மன்னிப்பு கேட்கணும். உங்க பாதங்களை என் கண்ணீரால அபிஷேகம் பண்ணினாக் கூட... நான் செய்த பாவம் தீராது.

அந்தளவுக்கு உங்க மனசை நான் காயப்படுத்தி யிருக்கேன். அவமானப் படுத்தியிருக்கேன். சேரக் கூடாதவங் களோட சேர்ந்து விளையாட்டுத்தனமா... யோசிக்காம பெரிய தவறைப் பண்ணிட்டேன்.

உங்க காதல் உண்மையானது. பவித்ரமானது. அதுதான்... உங்களோட அருமையை எனக்குப் புரிய வச்சு... என் மனசுக்குள்ளேயும் காதலை மலர வச்சுடுச்சு... மு... முரளி! லைன்ல இருக்கீங்களா? உங்க சஹி பேசறது கேட்குதா? ஹலோ... ஹலோ!''

''உம்! நல்லாவே கேட்குது. சொல்லு சஹி'' என்று சொல்லியபடியே மெல்லப் பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தான் முரளி.

கம்ப்யூட்டர் மௌஸைப் பிடித்தபடி மும்முரமாய் திரையில் பார்வையைப் பதித்திருந்தாள் யமுனா.

முரளி வழக்கம் போல் 'சஹி' என்று அழைத்ததும்... அவளுக்கு ஜில்லென்றிருந்தது.

''முரளி! உங்க கால்லே விழுந்து நான் கதறணும். மன்னிப்பு கேட்கணும். இந்தப் பாவி பண்ணின தப்பை மறந்து மன்னிச்சு... என்னை ஏத்துப்பீங்களா? உங்க சஹிக்கு இதயத்துல இன்னமும் இடமிருக்கா?

நான் உங்களை உடனடியா சந்திக்கணுமே முரளி! என் மனசுல முழுசா இப்போ நீங்கதான் இருக்கீங்க... நீ... நீங்க என்னை மறந்துடலையே முரளி?''

குரலில் நிறைய இனிப்பைக் குழைத்துக் கேட்டாள் சஹானா.

''மறக்கறதா? அதுவும் உன்னையா? நெவர்! என்னை விட்டு உன் நினைவைப் பிரிக்க முடியுமா சஹி?''

''நான் ரொம்பக் கொடுத்து வச்சவ முரளி! எனக்கு இப்பத்தான் உயிரே வந்துச்சு... உங்க பெருந்தன்மை யாருக்கு வரும்? அப்போ... நாம்ப எப்ப சந்திக்கலாம்?''

''கமிங் சன்டே... எங்க பங்களாவுல... திறந்த வெளியில தோட்டத்துல ஃபங்ஷன் நடக்கப் போகுது. நம்ம நிறுவனங்களைச் சார்ந்த எல்லா ஊழியர்களும் அன்னிக்கு வருவாங்க... நான் நிர்வாகப் பொறுப்பை நேத்துதான் ஏத்துக்கிட்ட மாதிரி இருக்கு... அதுக்குள்ளே ஒரு வருஷமாகப் போகுது.

சன்டே அன்னிக்கு நாள் நல்லா இருக்கு. எங்கம்மா பேர்லே அறக்கட்டளை ஒண்ணு தொடங்கப் போறோம். சாயந்தரம் ஊழியர்களுக்கு விருந்தும் இருக்கு!

இன்னமும் ரெண்டு நாள்தானே பாக்கி இருக்கு. சன்டே அன்னிக்கு சாயந்தரம் அங்க வந்துடு! நம்ம ஊழியர்கள் அத்தனை பேருக்கும் முன்னாடி உன்னை அறிமுகப் படுத்தறேன்.

எங்க பேரண்ட்ஸ் உட்பட ஊழியர்கள் அத்தனை பேருக்கும் என்னோட வருங்கால மனைவியை அறிமுகப் படுத்தி கௌரவப் படுத்த விரும்பறேன். சரியா சஹி?''

''தே... தேங்க்யூ முரளி! தேங்க் யூ ஸோ மச்! என் குரலைக் கேட்டதும் கோபத்துல கொதிச்சுப் போவீங்கன்னு எதிர்பார்த்தேன். ரொம்ப பயந்தேன். ஆனா நீங்க எதையும் மனசுல வச்சுக்காம கூலா பேசினீங்களே? இன்னமும் என் நினைப்போடயே இருக்கீங்களே? சந்தோஷத்துல அப்படியே இறக்கை கட்டிப் பறக்கற மாதிரி இருக்கு முரளி! பை... ஸீ.யூ.''

அவளுக்குள் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டது.

அவனது நிறுவனங்களைச் சேர்ந்த அத்தனை தொழிலாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. முரளி தனிப்பட்ட முறையில் காரை ஓட்டிக்கொண்டு சென்று தாத்தா சண்முகத்தை சந்தித்து விழாவுக்கு வரும்படி கேட்டுக் கொண்டான்.

கல்லூரி நண்பர்கள், உற்றார் உறவினர்கள் என்று ஒருவரையும் விட்டு வைக்கவில்லை.

''யமுனா! நம்ம தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும்... வர்ற சன்டே அன்னிக்கு போனஸ் குடுத்திடலாம்னு முடிவு பண்ணியிருக்கேன். அதுக்கான ஏற்பாட்டை பண்ணிடுங்க... இந்தாங்க செக்!''

சஹியை நான் ஃபங்ஷனுக்கு வரச்சொல்லியிருக்கேன் இல்லையா? அவளை அறிமுகப்படுத்தி வைக்கணும்.



வருங்கால எஜமானியை அறிமுகப்படுத்தி போனசும் குடுத்தா... ரொம்ப சந்தோஷப் படுவாங்கல்ல?

அவங்க மனசும் வயிறும் நிறைஞ்சு வாழ்த்தணும். அதான் முக்கியம்! நான் சொல்றது சரிதானே யமுனா?''

''எல்லாருடைய ஆசீர்வாதமும் வாழ்த்தும் கிடைச்சா... உங்க மணவாழ்க்கை அமோகமா சிறப்பா அமையும்'' கூறியபடியே 'செக்'கை ஹேண்ட் பேக்கில் பத்திரப் படுத்தனாள்.

★ ★ ★

**வ**ண்ண வண்ண தோரணங்களும் பூச்சரங்களும் கட்டப்பட்டு... சீரியல் பல்புகள் பொருத்தப்பட்டு அந்த பிரமாண்டமான பங்களா... விழாக்கோலம் பூண்டிருந்தது.

சந்தோஷ முலாம் பூசப்பட்ட முகங்களோடு தொழிலாளர்களும் உறவினர்களும் நண்பர்களும் உற்சாகமாய் கலகலத்துக் கொண்டிருந்ததால்... அந்த பங்களாவே அமளி துமளிப்பட்டது.

குருமூர்த்தி - குமுதா தம்பதிகளோடு சஹானா காரில் வந்து இறங்கினாள். முழுவதும் ஜரிகையாலேயே நெய்யப்பட்ட பட்டுப்புடவையுடன்... நிறைய நகைகள் மாட்டி தலை நிறைய பூ வைத்து... கிட்டத்தட்ட புது மணப்பெண்ணின் கோலத்தில் தகதகத்தாள்.

வந்ததும் வராததுமாக பார்வையாலேயே பங்களாவை வலம் வந்தாள் சஹானா. மெல்லிய ஜரிகை பார்டர் போட்ட சாம்பல் நிற காட்டன் புடவை கட்டி தளரப் பின்னி இருந்த கூந்தலில் ஒற்றை பன்னீர் ரோஜாவை செருகி... எளிய

தோற்றத்திலும் வசீகரித்த யமுனாவின் மீது... அவளது பார்வை பதிந்தது.

'முரளிக்கு பெர்ஸனல் செகரட்டரியாகி நாள் முழுக்க அவர் கூடவே இருக்கிற சந்தோஷமா? அந்த சந்தோஷத்துல இவளோட அழகு மெருகேறி... திகுதிகுன்னு கூடுதல் பளபளப்போடு தெரியறாளே?'

அவளது வயிறு கபகபவென்று பற்றி எரிந்தது.

''ஹாய் சஹி! நல்லாயிருக்கியா? ரொம்ப நாள் கழிச்சு உன்னை சந்திச்சதிலே... மகிழ்ச்சி அடைகிறேன். விருந்து ஏற்பாடு சரிவர நடக்குதான்னு பார்க்கணும். அப்புறம் பார்க்கலாம். சரியா?'' முறுவலித்து விட்டு ஓட்டமும் நடையுமாக விரைந்தாள் யமுனா.

''கால்லே சக்கரத்தைக் கட்டிக்காத குறையா... அங்கேயும் இங்கேயும் ஓடிட்டு இருக்கியா? முரளி என் கழுத்துல தாலி கட்டட்டும்... மறுநாளே உன்னை விரட்டி அடிக்கிறேன் பாரு.''

உள்ளுக்குள் கறுவினாள். பொருமினாள்.

ஆறரை மணி அளவில் சபாரிசூட் அணிந்து மாடியிலிருந்து இறங்கி வந்தான் முரளி.

''வணக்கம்! உங்களுக்கு ஒரு முக்கியமான நபரை இப்போ அறிமுகப் படுத்தப் போறேன். நான் நிர்வாகப் பொறுப்பை ஏத்துக்கிட்டதும் நம்ம நிறுவனங்கள்லே பெரிய அளவில முன்னேற்றம்! ஒரே வருடத்துல எக்கச்சக்கமான லாபத்தை அள்ளிக் குவிச்சு உச்சிக்கும் போயிட்டு இருக்கோம்னு உங்களுக்குத் தெரியும்...

அதுக்கெல்லாம் காரணம் நான்தான்னு... ஒவ்வொருத் தரும் என்கிட்டேயே சொல்லி என்னைப் பாராட்டி



இருக்கீங்க... வெறித்தனமா உழைச்சு வெற்றியை நான் தொட்டதுக்கு யார் காரணம் தெரியுமா? இதோ... இந்த சஹிதான்! உத்வேகத்தையும் உசந்து காட்டணும்கிற வைராக்கியத்தையும் எனக்கு தந்தது இவதான்... என்னிக்கும் நான் இவளுக்கு கடன் பட்டிருக்கேன். இடையில நாங்க பிரிஞ்சுட்டோம். ஆனா நீறு பூத்த நெருப்பா இவ நினைப்பு... என் நெஞ்சுலேயே இருக்கு...''

## 20

''நீறு பூத்த நெருப்பா இன்னமும் இவ நினைப்பு என் நெஞ்சுக்குள்ளே இருக்கு'' என்று முரளி கூறியதும்... சரேலென்னு யமுனா திரும்பி முன் வரிசையில் அமர்ந்திருந்த தாத்தா சண்முகத்தைப் பார்த்தாள்.

அவரது விழிகள் பளபளவென்று கூர்மை பெற்றிருந்தன. முகம் கொள்ளாமல் பூரிப்போடு முரளியையே பார்த்துக் கொண்டிருந்தார் சண்முகம்.

''இவ நினைப்பு என் நெஞ்சுல நெருப்பா கனன்றுகிட்டே இருந்தது. இன்னமும் இருக்கு... அதுதான், எனக்கு வெறித்தனமான அசுர வேகத்தோட வளர்ந்து உசந்து காட்டணும்கிற உத்வேகத்தை கொடுத்தது'' அவன் பேசி முடிக்கும் முன்... பலத்த கரவொலி எழும்பியது.

கரவொலி அடங்கும்வரை அமைதி காத்த முரளி மீண்டும் பேச ஆரம்பித்தான். முரளியின் பேச்சையும் பலத்த கரவொலியையும் கேட்ட மாத்திரத்தில்.... சஹானாவுக்கு சந்தோஷத்தில் அப்படியே அந்தரத்தில் மிதப்பது போலிருந்தது.

ஒரக்கண்ணால் அலட்சியமாக யமுனாவை ஏற இறங்கப் பார்த்தாள்.

''என்னைப் பொறுத்தவரை... ஒரு மனுஷன் தான் பட்ட அவமானத்தையும், நன்றியையும் மறக்கவே கூடாது. ஒரு சிலர் 'இப்படி நாம்ப' அவமானப் பட்டுட்டோமேன்னு கூனிக்குருகி சதா வேதனைப்பட்டுட்டே இருப்பாங்க.

அந்த வேதனையையும் கவலையும் அப்படியே நம்மை உருக்குலைச்சுடும். நம்ம வளர்ச்சியை கருக வைச்சிடும். மூலையில் முடக்கிப் போட்டுடும்.

என்னையும் ஒரு பொண்ணு ரொம்ப அவமானப் படுத்தினா... என்னைக் கேவலமா பேசினா... கேலிக் கூத்தா ஆக்கினா... தூக்கி யெறிஞ்சு பேசினா... நான் அவமானத்துல கூனிக் குறுகி... அப்படியே உள்ளுக்குள்ளே சுக்கு நூறா நொறுங்கிப் போயிட்டேன்.

ஆயிரம் தேள்கள் ஒட்டு மொத்தமா கொட்டினாப்பல அப்படியொரு வலி வேதனை... இனியும் இந்த பூமியில் உயிரோட நடமாடணுமாங்கிற விரக்தி தோணிச்சு.''

முரளி பேசப் பேச சஹானாவின் முகம் ஏகத்திற்கும் இருண்டு போனது. 'அன்று ஃபோனில் கொஞ்சம்கூட கோபப்படாமல் சாந்தமாக இனிமையாக முரளி பேசினானே? குரலில் வழிந்த வாத்சல்யத்தையும் பரிவையும் நம்பி... இங்கு வந்தது தவறோ?

அனைவரிடமும் 'இவள் என் மனைவியாகப் போகின்றவள்' என்று அறிமுகப் படுத்துவான் என்று நம்பி வந்தது... எவ்வளவு பெரிய முட்டாள் தனம்? சபை ஜனங்களுக்கு மத்தியில் நிற்க வைத்து என்னை



அவமானப்படுத்தத்தான்... இந்த விழாவையே நடத்துகிறான் போலும்ட.

அய்யய்யோ! இவன் அழைத்ததும்... கொஞ்சம் கூட யோசிக்காமல் உடனே கிளம்பி வந்தது எவ்வளவு பெரிய மதியீனம்? எனது முகத்தில் கரியைப் பூசத்தான் நைச்சியமாகப் பேசி வரவழைத்திருக்கிறான்!'

பயத்தில் அவளது இதயம் தந்தியடித்தது. திகிலிலும் எதிர்பாராத அதிர்ச்சியிலும் குப்பென்று வியர்த்துக் கொட்டியது. முள்ளின் மேல் நிற்பதைப் போன்று தவித்துப் போனாள்.

''அந்தப் பொண்ணு நம்மை இப்படி உதாசினப் படுத்தி உதறிட்டாளேங்கிற அவமானம்... கோபம்... வேதனை... விரக்தி... எல்லாமுமா சேர்ந்து என்னை ஒரு பெரிய விபத்துல மாட்டி விட்டுருச்சு...

எமலோகத்தைக் கூட நான் எட்டிப்பார்த்துட்டேன்...

அந்த சமயத்துல தேவதை மாதிரி யமுனா வந்தாங்க... தன்னோட ரத்தத்தைக் கொடுத்து எனக்கு 'புனர்ஜென்மத்தைக் கொடுத்தாங்க... பட்ட அவமானத்தை நெனச்சு வேதனைப் பட்டுட்டே இருந்தா... ஒண்ணு விரக்தியில செத்துடுவோம்... இல்ல... நடைப் பிணமா ஆயிடுவோம்.

அவமானத்தை ஒவ்வொரு நிமிஷமும் நானும் நினைச்சுப் பார்த்தேன். என் உயிர் மூச்சு உள்ள வரை நினைச்சுட்டே இருப்பேன். அப்பத்தான் ரோஷம் வரும். வைராக்கியம் வரும்... வெறி வரும்.... வெறித்தனமா உழைச்சு வெற்றியைத் தொட வைக்கும்.

'ஆவதும் பெண்ணாலே... அழிவதும் பெண்ணாலே'ன்னு சொல்வாங்க... என் வாழ்க்கையில

உணர்வுப் பூர்வமா ரெண்டையும் அனுபவிச்சுப் பாத்துட்டேன்.

'நிழலின் அருமை வெயிலில் தெரியும்'னு சொல்வாங்க... சில கசப்பான அனுபவங்களுக்கு அப்புறம்தான்... இனிய சிநேகிதியின் அருமையை நான் உணர்ந்தேன்.

நான் ஆரம்பத்துல சொன்ன மாதிரி... ஒரு மனுஷன் நன்றியை மறக்கவே கூடாது. நன்றியை மறந்துட்டா... நாம்ப நாயைக் காட்டிலும் கீழான ஜென்மம் ஆயிடுவோம்கிறது என்னோட கருத்த!

என்னை உயிரோட மீட்டு வந்து நல்லா நடமாட வைச்சு தட்டிக் கொடுத்து ஊக்கம் ஊட்டி என் வளர்ச்சிக்கு உறுதுணையா இருந்து... வெற்றிச் சிகரத்தைத் தொட வச்சாங்க யமுனா...

நான் விபத்துல மாட்டினப்போ... என் தாயார் நிலைகுலைஞ்சு போகாம... கவனமா கண்ணும் கருத்துமா ஆறுதலா இருந்து பார்த்துக்கிட்டாங்க... இந்த அற்புதமான சிநேகிதிக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன் நான்?

எத்தனை ஜென்மம் எடுத்தாலும் இந்த நன்றிக் கடனைத் தீர்க்கவே முடியாது. அதனால என்னை முழுசா... என் வாழ்க்கையை அவங்க கையில ஒப்படைச்சுடலாம்னு இருக்கேன். எங்க அம்மாவோட ஆசையும் அதுதான்!

உங்க அத்தன பேத்தோட ஆசீர்வாதத்தோட... நான் யமுனாவை என்னோட வாழ்க்கைத் துணையாக்கிக்கலாம்னு இருக்கேன்.''

உறவினர்களுக்கும் ஊழியர்களுக்கும் நண்பர்களுக்கும் குஷி பிய்த்துக் கொண்டு போனது. குபீரென்று எழுந்த கைதட்டல் ஓசை... அந்த பங்களாவையே அதிர வைப்பதாக இருந்தது.

ஷானாவின் செவிகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றினாற் போலிருந்தது.

வார்த்தைகளால் சுழற்றி அடித்து விட்டானே? சாட்டையால் விளாசித் தள்ளி விட்டானே?''

கனல் பொறியில் தீட்சண்யமாய்த் தெறித்த வார்த்தைகள்... அவளது இதயத்தை சுட்டுப் பொசுக்கின.

பக்கவாட்டில் நின்று கொண்டிருந்த முரளியின் நண்பர்கள் கார்த்தி, பாஸ்கரை தற்செயலாய் ஏறிட்டாள். அவர்களது விழிகள் இவளைக் கண்டதும் வெறுப்பை உமிழ்ந்தன.

அவமானம் தாளாமல் அவளது தேகமே வெடவெட வென்று நடுங்கியது.

சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த கணவன் விஸ்வநாதன் அருகே நின்று கொண்டிருந்த ரங்கநாயகியைப் பார்த்தாள்.

விழிகளில் ஆர்வமும் ஆசையும் ததும்ப... யமுனாவையே பார்த்துக் கொண்டிருந்தவரைக் கண்டதும்... மனம் எரிமலையாய் குமுறியது. அதற்குமேல் அங்கே நிற்க முடியாமல் விடுவிடுவென்று நடந்தாள்.

தலைகுனிந்தபடி குருமூர்த்தியும் குமுதாவும் சபையைவிட்டு வெளியேறினார்கள்.

''இப்படிப்பட்ட பெண்ணை நாம்ப பெத்ததுக்கு இன்னமும் எத்தனை அவமானங்களை சந்திக்கப் போறோமோ தெரியலையே குமுதா?'' ஆற்றாமை தாளாமல் தலையில் அடித்துக் கொண்டே காருக்குள் ஏறினார் குருமூர்த்தி.

பொங்கிய கண்ணீருடன் தலை குனிந்தாள் சஹானா.

எதிர்காலம் - ஒரு கேள்விக் குறியாய் பூதாகாரமாய் விஸ்வரூபம் வளர்ந்து... அவளை மிரட்டி பயமுறுத்தியது.

இருளும் சூனியமும் அவளை சுற்றி வந்து 'கெக்கலி' கொட்டி சிரித்தன.

★ ★ ★

**அ**ந்தி கறுக்கும் நேரம்!

பிரம்பை ஊன்றியபடி படிகளில் கவனமாய் இறங்க முற்பட்ட தாத்தா சண்முகம், வீட்டு வாசலில் கார் வந்து நின்றதும்... நழுவப் பார்த்த மூக்குக் கண்ணாடியை ஆள் காட்டி விரலால் சரி செய்தபடியே உற்றுப் பார்த்தார்.

''என்ன தாத்தா? எங்க கிளம்பிட்டீங்க?'' உரிமையாய் கேட்டபடி வெளிப்பட்டான் முரளி.

''இன்னிக்கு பௌர்ணமி பங்குனி உத்திரம். வெள்ளிக்கிழமை வேற... அதான்! பக்கத்துல கோவில் வரைக்கும் போயிட்டு வரலாம்னு கிளம்பினேன். உமாவும் கிரியும் ரங்கநாயகி அம்மாளோட... ரொம்ப ஒட்டிக் கிட்டாங்க... நேரம் கிடைக்கிறப்ப எல்லாம் அவங்களைப் பார்க்க கிளம்பிடறாங்க'' புன்னகைத்தார்.

''நல்ல விஷயம் தானே தாத்தா? கல்யாணத்துக்கு அப்புறம் நாம்ப எல்லோரும் ஒண்ணாத்தானே இருக்கப் போறோம். அவங்களும் இங்கிட்டும் அங்கிட்டும் அல்லாடமா இருப்பாங்கல்ல?'' என்று முரளி கேட்டதும்... தாத்தாவுக்கு சட்டென்று ஆனந்த கண்ணீர் ஜனித்தது.

''சரிப்பா... யமுனா உள்ளார வேலையா இருக்கா... பேசிட்டிருங்க... நான் கோவிலுக்குப் போயிட்டு வரதுக்கு முன்ன கிளம்பிடாதே... இருந்து சாப்பிட்டுட்டுத்தான் போகணும். சரியா?'' சுட்டு விரலைக் காட்டி உரிமையாய் அதட்டிவிட்டு நிதானமாய் படியிறங்கினார்.

கூடத்தில் சாமி மாடத்தருகே குத்து விளக்கு சுடர் விட்டுப் பிரகாசித்தது.

''யமுனா!'' பதில் இல்லை... கொல்லைப்புறக் கதவைத் தாண்டி தோட்டத்திற்குள் புகுந்தான். பவள மல்லிப் பூக்களின் நறுமணத்தையும் பன்னீர்ப் பூவின் மணத்தையும் கலவையால் சுமந்து கொண்டு வந்த காற்று... அவனது முகத்தை ஸ்பரிசித்து சிலிர்க்க வைத்தது.

சித்திரம் தீட்டின மாதிரி இலேசான பழுப்பில் முழுசாய் நிலா மிதந்து கொண்டிருந்தது. கையால் அள்ளித் தெளித்த மாதிரி நட்சத்திரங்கள்...

''யமுனா'' திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள். ''வா... வாங்க'' திகைத்து வரவேற்றாள்.

''என்ன யமுனா? வாசக் கதவை திறந்து போட்டுட்டு இங்க வந்து நின்னுட்டிருக்கே?''

''உமாவுக்கு கறிவேப்பிலை பொடி பிடிக்கும். கறிவேப்பிலை பறிக்க வந்தவ... லயிச்சுப் போய் நின்னுட்டேன்'' உரிமையாய் நெருங்கி வந்து நின்றான்.

''எனக்கும் இப்படித்தான்... தோட்டம், செடி, கொடி, கடற்கரை, ராத்திரி வானம், நட்சத்திரங்கள், நிலா, கவிதைகள் எல்லாம் பிடிக்கும். சொந்தமாக ரசிக்கப் பிரியப் படுவேன். ஆமா... ஃபங்ஷனுக்கு மறுநாள் ஃபோன் பண்ணி ஒரு வாரம் லீவு கேட்டே... என்ன ஏதுன்னு விவரம் சொல்லலை... உன் செல்லுக்கு ட்ரை பண்ணினா 'ஸ்விட்ச் ஆஃப்' அப்படிங்கிற அறிவிப்புதான் வந்தது. எனக்கு ஒரு வேலையும் ஓடலை.

உன்னைப் பார்க்காம... இந்த நாலு நாளா நான் எப்படித் தவிச்சுப் போயிட்டேன் தெரியுமா யமுனா?''

''பார்வையற்ற மாணவர்களுக்காக ஒரு ஸ்கிரைபரா எக்ஸாம் எழுதப் போயிருந்தேன். எக்ஸாம் எழுதறப்போ... தொந்தரவு இருக்கக்கூடாதுன்னு ஸ்விட்ச்சை ஆஃப் பண்ணி வச்சேன்'' முறுவலித்தாள்.

''ரியலி யூ ஆர் கிரேட்'' சட்டென்று அவளது கரத்தைப் பிடித்துக் கன்னத்தில் பொருத்திக் கொண்டான்.

''நீறு பூத்த நெருப்பா இன்னமும் சஹானா என் நெஞ்சுல இருக்கலாம்னு... நீ தாத்தா கிட்டே சொன்னியாமே? சத்தியமா சொல்றேன்... நான் சஹானாவை மறந்துட்டேன். ஆனா நீறு பூத்த நெருப்பா... அவ என்னை அவமானப் படுத்தினது இன்னமும் கனன்றுகிட்டேதான் இருக்கு. எல்லமே நடிப்புதான் சொல்லி என் முகத்துல அவ கரியைப் பூசினா பாரு? அப்பவே என்னோட காதல் செத்துடுச்சு. விபத்துல ஏகப்பட்ட இரத்தம் இழந்தேனே? அதோடவே அவ மேல இருந்த அன்பு, பிரேமை, நேசம், காதல் அத்தனையும் சுத்தமா வடிஞ்சிருச்சு.

என் உடம்புலே உன்னோட இரத்தம் புதுப்பிறவி எடுத்திருக்கேன். என்னோட நாடி, நரம்புகள்லே... ஏன் ஒவ்வொரு அணுவிலேயும், நீதான் நிறைஞ்சிருக்கே... என் உயிருக்கும் மேலா உன்னை நேசிக்கிறேன் யமுனா'' குரலில் பிரேமை பிரவாகமெடுத்துப் பொங்கியதால்... அவனது குரல் கிசுகிசுப்பாய் வெளிப்பட்டது.

''அப்போ... தாத்தா உங்ககிட்டே டைரி மேட்டரை சொல்லிட்டாரா?'' நாணத்தில் அவளது முகம் குங்குமமாய் சிவந்து போக... சங்கோஜத்துடன் விழிகளைத் தழைத்துக் கொண்டாள்.

''உம்! சொன்னாரே...! அதுக்கு முன்னாடியே எனக்கு தெரிஞ்சு போச்சு! என்ன யமுனா திகைச்சுப் போய் பார்க்கிறே? அந்த விஷப் பாம்பு எனக்கு விஷயத்தை சொல்லிடுச்சு?



''சஹியா? அவளுக்கு எப்படித் தெரியும்?'' அவளது விழிகள் வியப்பில் மேலும் விரிந்தன. கண்களை அகல விரிக்கையில் ஓவியம் போலவே இருந்தாள். சிறு ரசனையுடன் விழிகளை ஊன்றிப் பார்த்த முரளி மெல்ல நகைத்தான்.

''வில்லிகளுக்கு சூட்சுமம் ஜாஸ்தி. விஷயத்தை ஒரக்கிறதிலே அவங்க கில்லாடிங்க... அவ மட்டுமல்ல... அம்மா ஆஸ்பத்திரியில நீ துடிச்ச துடிப்பைப் பார்த்துட்டு புரிஞ்சுகிட்டாங்க. 'யமுனா உன்மேல உயிரையே வச்சிருக் காள்'னு... நான் கண் முழிச்சதுமே சொல்லிட்டாங்க... நீ கிடைக்கிறதுக்கு நான் ரொம்பவே கொடுத்து வச்சிருக்கணும் யமுனா.''

கிசுகிசுப்பாய் வெளிப்பட்டாலும் அடி வயிற்றிலிருந்து கிளம்பி உயிரின் வேரை அசைத்துப் பார்க்கும் கம்பீரக் குரல்! அவளது செவிகளில் தேனோடை பாய்ந்தது போலிருந்தது. அவளது இதயம் கப்பென்று நின்று துடிக்க மறந்து... அப்புறம் இயங்கியது.

''மைகாட்! அம்மாவுக்கும் விஷயம் தெரிஞ்சு போச்சா?'' சங்கடமாய் பார்த்தாள்.

''மலர்ந்த மல்லிகையோட வாசத்தை மறைக்க முடியுமா? அது மாதிரிதான்... உண்மையான காதலையும் மூடி வைக்க முடியாது. நான்தான் முட்டாள்... உயிர் காக்கிற அமுதமா நீ இருக்கிறப்போ... நான் ஒரு அனக்கோண்டாவை விரும்பினேன் பாரு? என் மனசாட்சி ரம்பமா அறுக்குது தெரியுமா? என்ன யமுனா... ஒரு மாதிரியா இருக்கே?''

''இல்ல... அன்னிக்கு சஹி கண்கலங்க வெளியேறிப் போனா... அவளோட நிலைமையை நினைச்சா... எனக்கு ரொம்ப பாவமா இருக்கு.''

''பார்வையற்ற மாணவர்களுக்காக ஒரு ஸ்கிரைபரா எக்ஸாம் எழுதப் போயிருந்தேன். எக்ஸாம் எழுதறப்போ... தொந்தரவு இருக்கக்கூடாதுன்னு ஸ்விட்ச்சை ஆஃப் பண்ணி வச்சேன்'' முறுவலித்தாள்.

''ரியலி யூ ஆர் கிரேட்'' சட்டென்று அவளது கரத்தைப் பிடித்துக் கன்னத்தில் பொருத்திக் கொண்டான்.

''நீறு பூத்த நெருப்பா இன்னமும் சஹானா என் நெஞ்சுல இருக்கலாம்னு... நீ தாத்தா கிட்டே சொன்னியாமே? சத்தியமா சொல்றேன்... நான் சஹானாவை மறந்துட்டேன். ஆனா நீறு பூத்த நெருப்பா... அவ என்னை அவமானப் படுத்தினது இன்னமும் கனன்றுகிட்டேதான் இருக்கு. எல்லமே நடிப்புதான் சொல்லி என் முகத்துல அவ கரியைப் பூசினா பாரு? அப்பவே என்னோட காதல் செத்துடுச்சு. விபத்துல ஏகப்பட்ட இரத்தம் இழந்தேனே? அதோடவே அவ மேல இருந்த அன்பு, பிரேமை, நேசம், காதல் அத்தனையும் சுத்தமா வடிஞ்சிருச்சு.

என் உடம்புலே உன்னோட இரத்தம் புதுப்பிறவி எடுத்திருக்கேன். என்னோட நாடி, நரம்புகள்லே... என் ஒவ்வொரு அணுவிலேயும், நீதான் நிறைஞ்சிருக்கே... என் உயிருக்கும் மேலா உன்னை நேசிக்கிறேன் யமுனா'' குரலில் பிரேமை பிரவாகமெடுத்துப் பொங்கியதால்... அவனது குரல் கிசுகிசுப்பாய் வெளிப்பட்டது.

''அப்போ... தாத்தா உங்ககிட்டே டைரி மேட்டரை சொல்லிட்டாரா?'' நாணத்தில் அவளது முகம் குங்குமமாய் சிவந்து போக... சங்கோஜத்துடன் விழிகளைத் தழைத்துக் கொண்டாள்.

''உம்! சொன்னாரே...! அதுக்கு முன்னாடியே எனக்கு தெரிஞ்சு போச்சு! என்ன யமுனா திகைச்சுப் போய் பார்க்கிறே? அந்த விஷப் பாம்பு எனக்கு விஷயத்தை சொல்லிடுச்சு?



''சஹியா? அவளுக்கு எப்படித் தெரியும்?'' அவளது விழிகள் வியப்பில் மேலும் விரிந்தன. கண்களை அகல விரிக்கையில் ஓவியம் போலவே இருந்தாள். சிறு ரசனையுடன் விழிகளை ஊன்றிப் பார்த்த முரளி மெல்ல நகைத்தான்.

''வில்லிகளுக்கு சூட்சமம் ஜாஸ்தி. விஷயத்தை கிரகிக்கிறதிலே அவங்க கில்லாடிங்க... அவ மட்டுமல்ல... அம்மா ஆஸ்பத்திரியில நீ துடிச்ச துடிப்பைப் பார்த்துட்டு புரிஞ்சுகிட்டாங்க. 'யமுனா உன்மேல உயிரையே வச்சிருக்காள்'னு... நான் கண் முழிச்சதுமே சொல்லிட்டாங்க... நீ கிடைக்கிறதுக்கு நான் ரொம்பவே கொடுத்து வச்சிருக்கணும் யமுனா.''

கிசுகிசுப்பாய் வெளிப்பட்டாலும் அடி வயிற்றிலிருந்து கிளம்பி உயிரின் வேரை அசைத்துப் பார்க்கும் கம்பீரக் குரல்! அவளது செவிகளில் தேனோடை பாய்ந்தது போலிருந்தது. அவளது இதயம் கப்பென்று நின்று துடிக்க மறந்து... அப்புறம் இயங்கியது.

''மைகாட்! அம்மாவுக்கும் விஷயம் தெரிஞ்சு போச்சா?'' சங்கடமாய் பார்த்தாள்.

''மலர்ந்த மல்லிகையோட வாசத்தை மறைக்க முடியுமா? அது மாதிரிதான்... உண்மையான காதலையும் மூடி வைக்க முடியாது. நான்தான் முட்டாள்... உயிர் காக்கிற அமுதமா நீ இருக்கிறப்போ... நான் ஒரு அனக்கோண்டாவை விரும்பினேன் பாரு? என் மனசாட்சி ரம்பமா அறுக்குது தெரியுமா? என்ன யமுனா... ஒரு மாதிரியா இருக்கே?''

''இல்ல... அன்னிக்கு சஹி கண்கலங்க வெளியேறிப் போனா... அவளோட நிலைமையை நினைச்சா... எனக்கு ரொம்ப பாவமா இருக்கு.''

''பிரியமா இருக்கிற மாதிரி நடிச்சுக்கிட்டே உனக்கும் குழி தோண்டியிருக்கா... எனக்கும் பெரிசா வேட்டு வச்சுட்டா... அத்தனையும் தெரிஞ்சும்... கெடுதல் நினைச்சவளோட எதிர்காலத்தை நினைச்சு இரக்கப்படறே பாரு... இந்த குணம்தான் எனக்கு ரொம்பவே பிடிச்சிருக்கு... வினை விதைச்சா வினையைத்தான் அறுக்கணும். அவங்கவங்க மனம் போல்தான் வாழ்க்கை அமையும். அவளை விட்டுத் தள்ளு... நம்ம கதைக்கு வருவோம்...

இனி ஒரு நிமிஷம்கூட என்னால உன்னைப் பிரிஞ்சு இருக்க முடியாதுடா... இந்த நாலு நாளா நான் பட்ட அவஸ்தை இருக்கே? ஐ லவ் யூ ஸோ மச் யமுனா'' அவரது புறங்கையில் மென்மையாக முத்தமிட்டவன், ''இன்னமும் என்கிட்டே நீ... மனசுவிட்டு ஒண்ணுமே சொல்லலையே யமுனா?''

''ஐ.... ஐ லவ் யூ ஸோ மச் முரளி'' என்றவளை உரிமையாய் இழுத்து தன் தோளில் சாய்த்துக் கொண்டான். வேப்ப மரத்தின் அடியில் இருந்தாலும் அவர்களை நிலவின் ஒளி மிருதுவான அழகோடு காட்டியது.

ஒரே சமயத்தில் நூறு குயில்கள் கீதமிசைத்தது போலிருந்தது. அவர்களுக்குள் லட்சம் லட்சமாய் ஆனந்த நட்சத்திரங்கள் மின்னின. மரத்தின் கிளைகள் காற்றுக்குத் தலையசைத்து வேப்பம் பூக்களை அட்சதையாய்த் தூவின.

---

# ''மாயக் கண்கள்''

## 1

கூடத்துத் தூணோரமாய் சாய்ந்து அமர்ந்து, தோட்டத்திலிருந்து பறித்து வந்திருந்த சம்பங்கிப் பூக்களை வாழை நாரில் வாகாய் தொடுத்துக் கொண்டிருந்தாள் அற்புதா.

கை விரல்கள் நாரை லாவகமாய் சுழற்றிக் கொண்டிருந்தாலும்... அவளது சிந்தனை வேறு எங்கோ இருந்தது.

இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

அடிக்கடி அவளது அழகிய விழிகள் முன்னறையில் படிந்து மீண்டன.

சித்தப்பா தனசேகரனும் சித்தி தனமும்... ஊருக்குப் புறப்படும் குஷியில் பரபரப்பாய் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர்.

காது செவிடாகும்படி டி.வி. வால்யூமை உச்சஸ்தாயியில் வைத்துக் கொண்டு... சுவாரஸியமாய் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தாள் மாதவி.

சற்று முன்னர் அற்புதா தட்டில் கொண்டு வந்து வைத்த கை முறுக்கை எடுத்து கொறித்தபடி சோபாவில் ஹாயாக சாய்ந்து அமர்ந்திருந்தாள்.

சித்தப்பாவின் மகளான மாதவிக்கும், அற்புதாவுக்கும் சம வயதுதான்...!

நேரம் காலம் தெரியாமல் கண்டதையும் சதா அரவை மெஷின் போல் அரைத்து வயிற்றுக்குத் தள்ளியதால்... குண்டு பூசணிக்காய்போல் ஆகிவிட்டிருந்தாள் மாதவி.

பெரியப்பாவின் மகளான அற்புதாவின் மேல்... அவளுக்கு என்றுமே ஒரு அசூயைதான்...!

காரணம்... அற்புதா, சிற்பி வடிக்காத பொற்சிலையாய் பேரழகுடன் காண்போர் கண்களைக் கட்டிப் போடக் கூடியவள்.

மயிற்தோகை போன்று முழங்காலைத் தொட்ட நீண்ட கருங் கூந்தலையும், குயிலைப் பழித்த இனிய குரலையும் கொண்ட அற்புதாவைக் கண்டாலே... மாதவிக்கு அடி வயிறு பற்றி எரியத்தான் செய்தது.

பொறாமையால் மனம் பொசுங்கிக் கொண்டிருந்தவளுக்கு... இப்போது நல்ல வாய்ப்பு கிடைத்து விட்டிருந்தது.

அடிக்கடி அற்புதாவை திட்டித் தீர்த்து பெற்றவர்களையும் தூண்டி விட்டு தூபம் போட்டு அவர்களை வசை பாட வைத்து... அற்புதா வேதனையில் துடிப்பதை வேடிக்கை பார்த்து... தன் மனதை ஆற்றிக் கொண்டாள் மாதவி.

''மாதவி! டயமாச்சுடா... நாம்ப கிளம்பலாமா? உன்னோட சூட்கேஸ்லே எல்லாத்தையும் மறக்காம எடுத்து வச்சிக்கிட்டேயில்ல? நாம்ப திரும்பி வர்றதுக்கு அஞ்சாறு நாளைக்கு மேலேயே ஆகும். நிச்சயதார்த்தம், வரவேற்பு, கல்யாணம் மறுவீட்டுக்குப் போறதுன்னு... எல்லா விசேஷங்களையும் முடிச்சுட்டுத்தான் நாம்ப வரணும். எங்க அக்கா வீட்டுக் கல்யாணமாச்சே? பெண்ணுக்கு நீதான் தோழியா கூடவே இருக்கணுமாம்... உங்க பெரியம்மா உத்தரவு போட்டுட்டா... தேவைப்பட்ட டிரஸ், நகை எல்லாம் எடுத்து வச்சிருக்கே தானே?''

சித்தி தனம் தனது மகளிடம் கொஞ்சலாகப் பேசியபடி... முன்னறையிலிருந்து அற்புதாவை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டாள்.

''உம்... எல்லாத்தையும் அற்புதா எடுத்து வச்சுட்டாள்னு நெனக்கிறேன்...''

''எதுக்கும் எல்லாம் சரியா இருக்கா?ன்னு நீ ஒரு பார்வை பார்த்துக்கோயேன்.''

சித்தப்பா தனசேகரன் பேசியபடியே... அவரும் அற்புதாவை ஒரு நோட்டம் விட்டார்.

''அவளே பிரமை பிடிச்சவ மாதிரி இருக்கா... என்னத்தையாவது மறந்து தொலைச்சிருக்கப் போறா... பிரமை பிடிக்காதா பின்னே...? பெத்த அப்பா இவளால வீட்டை விட்டே போயிட்டாரே...? அதுவும் சொல்லாம கொள்ளாம...''

மீண்டும் வெறுப்பாய் அவளை ஏறிட்டாள் தனம்.

''யாருகிட்டேயும் சொல்லாம தலைமறைவாயிட்டாரே... இந்நேரம் எந்த ஆத்துல விழுந்தாரோ? பாடி இதுவரைக்கும் கிடைக்காததை வச்சுப் பார்த்தா... அநேகமா ஏதாவது பாறையிடுக்குல பொந்துல சிக்கி சொருகியிருக்கும்.

அவரு ஜல சமாதி அடையணும்னு விதி இருக்கு போலிருக்கு...''

மாதவி தன் பங்குக்கு அனல் வார்த்தைகளைக் கொட்டினாள்.

அற்புதாவுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

''அதை ஏன் விதின்னு சொல்றே? பெத்த பொண்ணால தானே அவருக்கு இந்த கதி வந்திருக்கு. பெத்த பொண்ணு ரூபத்துல விதி இல்ல... எமன் வந்திருக்கு போலிருக்கு...''

வார்த்தைகளில் விஷயத்தைத் தடவிப் பேசுவதில் சித்தி தனம் கெட்டிக்காரி.

அற்புதா வேதனையில் புழுவாய் துடித்துப் போனாள்.

பூத்தொடுப்பதை நிறுத்திவிட்டு தனது அறைக்குள் நுழைந்து குமுறி கோவென்று அழவேண்டும் போலிருந்தது.

கீழுதட்டை அழுந்தக் கடித்து துக்கத்தை விழுங்கியபடி மவுனமாக கண்ணீர் உகுத்தபடி யந்திரத்தனமாய் பூக்களைத் தொடுத்துக் கொண்டிருந்தாள்.

''ஏம்மா... பெரியப்பா ஊர்ஜிதமா இறந்துதான் போயிருப்பாரா? ஒருவேளை... எங்கேயாச்சும் அவரு உயிரோட இருக்கிறாரோ... என்னவோ? யார் கண்டது?''

''ஊகூம்... அதுக்கு வாய்ப்பே இல்ல... கண்டிப்பா உங்க பெரியப்பா போய் சேர்ந்திருப்பாரு மாதவி!''

''அப்படீங்கிறே...'' குரலை சற்றே உயர்த்திப் பேசியபடி தலையை சாய்த்து மீண்டும் அற்புதாவை ஒரு நோட்டம் விட்டாள்.

''எதை வச்சு இப்படி சொல்றே?''

''அதான்... தெளிவா நாலே வரியில் எழுதி வச்சுட்டுப் போயிருக்காரே உங்க பெரியப்பா...''

''என் மனைவி மரகதம் போன இடத்துக்கே போறேன். வாழ்க்கை வெறுத்துப் போயிடுச்சு. திரும்பி வரவே மாட்டேன். அற்புதாவோட நிலைமையை நெனச்சு அணு அணுவா வேதனையில சாகறதைவிட... ஒரேயடியா போயிடலாம்கிற முடிவுக்கு வந்துட்டேன். நான் போறேன். தேட வேண்டாம்... அப்படின்னு தெள்ளத் தெளிவா எழுதி வச்சுட்டுல்ல போயிருக்காரு? அதனால கண்டிப்பா உங்க பெரியப்பா உயிரோட இருக்கிறதுக்கு வாய்ப்பே இல்லன்னு... நா அடிச்சுச் சொல்றேன்...''

சித்தி தனத்தின் குரல் ஓங்கி ஒலித்தது.

''உங்க பெரியம்மா மரகதம் 'ஆகாய கங்கை' அருவியில குளிச்சுட்டிருந்தப்போ... கால் வழுக்கி விழுந்தவ... அப்படியே ஆத்தோட போயிட்டா... எவ்வளவு தேடிப் பார்த்தும் பிரேதம் கூட கிடைக்கலை...

உங்க பெரியப்பாவுக்கும் அதே மாதிரி முடிவு வரணும்னு... தலையில எழுதி இருக்கு போலிருக்கு... அதை யாரால மாத்த முடியும்?''

''பெரியம்மா இறந்தது ஒரு ஆக்ஸிடெண்ட்! தற்செயலா நடந்த விபத்து... ஆனா பெரியப்பாவோட மறைவுக்கு முழு காரணம் அற்புதாதான்...!''

அதுல எந்தவித மாற்றுக் கருத்தும் கிடையாது. நா சொல்றது சரிதானேப்பா?''

''சரிதான்! நேரமாகுது. கால் டாக்ஸி வந்தாச்சு போலிருக்கு. கார் ஹாரன் சத்தம் கேட்குதே... கிளம்புங்க...

போகலாம். கண்டதையும் பேசிட்டிருந்தா.. ட்ரெயினை தவற விட்டுருவோம்...'' பரபரத்தார் தனசேகரன்.

''ஏய் அற்புதா...! நாங்க புறப்படறோம். வர்றதுக்கு அஞ்சாறு நாள் ஆகும். வீட்டைப் பார்த்துக்கோ...! எங்ககிட்டே ஒரு சாவி இருக்கு...''

கூடத்தை எட்டிப் பார்த்துப் பேசினாள் தனம்.

பூத்தொடுப்பதை நிறுத்திவிட்டு எழுந்து நின்றாள் அற்புதா. ''சரிங்க சித்தி!''

பவ்யமாய் முணுமுணுத்தாள்.

''ஹ‍ூம்! உங்கப்பா ரோஷக்காரரு... ஊர்க்காரங்க பேசற பேச்சைத் தாங்கிக்க முடியலை... மான ரோஷம் உள்ளவரு திரும்பி வராத இடத்துக்கே போயிட்டாரு...

ஆனா... நீ? பீடை பிடிச்சவ... பூமிக்கு பாரமா இருந்துக்கிட்டு எங்க எல்லாருடைய நிம்மதியையும் கெடுத்துட்டிருக்கே... உன்னால நானும் உங்க சித்தப்பாவும் எங்க மக மாதவியும் மனரீதியாக எவ்ளோ பாதிக்கப் பட்டிருக்கோம். தெரியுமா?''

ராசியில்லாதவ... துக்கரி பொண்ணுன்னு உன்மேல முத்திரை குத்தப்பட்டிருச்சு. இனிமே யார் துணிஞ்சு வந்து உன்னைக் கட்டப் போறாங்க?

உன்னால... எங்க பொண்ணு வாழ்க்கையும் பாழாயிடுமோ?ன்னு எங்களுக்கு பயமாயிருக்கு. உன் இடத்துல நான் இருந்திருந்தா... என்ன செஞ்சிருப்பேன் தெரியுமா?

அடுத்தவங்களுக்கு நம்மால எதுக்கு கஷ்டம் வரணும்?'னு... என்னை நான் முடிச்சிருப்பேன்.



கடப்பாரையை முழுங்கின மாதிரி கம்முனு இப்படி உன்னை மாதிரி உட்கார்ந்திருக்கவே மாட்டேன். நான் ரோஷக்காரி...''

பற்களை நறநறத்தாள் தனம்.

''புரியலையா அற்புதா? பேந்த பேந்த முழிக்கிறே? அம்மா என்ன சொல்றாங்கன்னா... 'தற்கொலை பண்ணிக்குவேன்'னு சொல்றாங்க... அதாவது உன் இடத்துல அவங்க இருந்திருந்தா... அதையேதான் நானும் சொல்றேன்...''

நானா இருந்திருந்தா... பெத்த அப்பா போனது தெரிஞ்சதுமே நான் உயிரை விட்டிருப்பேன்... என்னால சொல்லு தாங்க முடியாது... சரி! வாம்மா... நேரமாச்சு... அப்பா கத்தப் போறாரு...''

சூட்கேஸ்களைத் தூக்கிக் கொண்டு வாசலை நோக்கி நடந்தாள் மாதவி.

அவமானம் தாளாமல் அழுகை வெடித்துக் கொண்டுவர... அற்புதா கேவினாள்.

''ஏ! நிறுத்துடி... நாங்க ஊருக்குப் புறப்படற நேரத்துல அழுது தொலைக்கிறே... நாங்க பத்திரமா போயிட்டு திரும்பிவர வேணாமா? தூத்தேறி! நான் சொன்னது புரிஞ்சிருக்கும்னு நெனக்கிறேன்...

இந்த விடியா மூஞ்சியோட பூமிக்கு பாரமா இருந்து என்ன செய்யப்போறே? உங்கப்பனைப் போல் நீயும் எங்கேயாச்சும் கண் காணாம போயிடு! இல்லேன்னா... எதையாச்சும் பண்ணித் தொலைச்சுப் போய் சேரு!

நீ சேர்ந்தாதான்... எங்க எல்லாருக்கும் நிம்மதி! பேசாம எங்க வழிக்கு நீ வந்துடு...! அமரைக் கட்டிக்கோ. பசங்களுக்கு

பாடம் சொல்லித் தர்றாளாம்... விளங்காதவகிட்டே படிச்சு அவங்க உருப்பட்ட மாதிரிதான்...''

தழைந்த குரலில் அவளுக்கும் மட்டும் கேட்கும்படி வசைமாரி பொழிந்து விட்டு திருப்தியுடன் வாசலை விட்டு இறங்கி டாக்ஸியில் ஏறி அமர்ந்தாள் தனம்.

அவமானத்தில் உடம்பெல்லாம் தீப்பற்றிக் கொண்டாற் போல் திகுதிகுவென்று எரிந்தது.

கை விரல்கள் நடுங்கி பனிக்கட்டியாய் சில்லிட்டுப் போயின.

நா உலர்ந்து போனது. கண்ணீர் தாரை தாரையாய் வழிந்தது.

கால்கள் துணியாய்த் துவண்டன.

'இதற்கு மேல் உயிரோடு இருக்கவே கூடாது தற்கொலை செய்து கொள்ள வேண்டியதுதான்...' என்ற எண்ணம் தலை தூக்கியது நிஜம்...!

மனதில் உறுதி பூண்டாள்... வாசற் கதவை சாற்றிவிட்டு உள்ளறைக்குள் நுழைந்தாள்.

## 2

**ம**ர பீரோவிலிருந்து அப்பாவின் சிறிய புகைப் படத்தை வெளியில் எடுத்தாள் அற்புதா.

கோவென்று கதறி அழுதாள்.

''அப்பா! எதுக்குப்பா இவங்ககிட்ட என்னை விட்டுட்டுப் போனீங்க?''



உங்க மறைவுக்கு நானா காரணம்?

சித்தப்பாவோட கூட்டு வியாபாரம் செஞ்சீங்க... கூடப் பிறந்த தம்பியாச்சே?ன்னு அவரை முழுசா நம்பினீங்க...

அவரு நீட்டின பேப்பர்லே எல்லாம்... கண்ணை மூடிக்கிட்டு கையெழுத்து போட்டீங்க...

காலப் போக்குல நஷ்டக் கணக்கை காண்பிச்சுட்டு... எல்லாத்தையும் சித்தப்பா சுருட்டிக்கிட்டாரு.

நீங்க நெனச்சிருந்தா... நாலு பெரிய மனுஷங்களைக் கூட்டிக்கிட்டு வந்து சித்தப்பாவைத் தட்டி நியாயம் கேட்டிருக்க முடியும்.

ஆனா நீங்க அதை செய்யலை... குடும்ப விஷயத்தை வெளியில் இழுக்க வேணாம்... நாலு பேத்துக்கு முன்னாடி என்னோட தம்பி என்னோட ரத்தம்... தலை குனிஞ்சு நின்னு அவமானப்பட வேணாம்'னு... பெருந்தன்மையா மனசுல மன்னிச்சு விட்டீங்க.

தம்பி செஞ்ச துரோகத்தை என்னால தாங்க முடியலைம்மான்னு என்கிட்டே சொல்லி வருத்தப்பட்டீங்க.

உதவாக்கரையா இருந்த தம்பிக்கு தொழில் கத்துக் குடுத்து சகலமும் பார்த்துப் பார்த்து பண்ணின உங்களுக்கு துரோகம் பண்ண அவருக்கு எப்படி தான் மனசு வந்துச்சோ?

இவ்வளவு நடந்த பிறகும்... நீங்க... 'ஏண்டா இப்படி செஞ்சே?'ன்னு அவரை ஒரு கேள்விகூட கேட்கலை...

காரணம்... பத்து வருஷத்துக்கு முன்னாடி அம்மா மறைஞ்சு போயிட்டாங்களே?ங்கிற விரக்தி உங்களுக்கு...

நம்ம அம்மாவும் நீங்களும் பல வருஷமா கொல்லி மலைக்குப் போய் வருவீங்க... ஆகாய கங்கை அருவியில

ஸ்நானம் செஞ்சுட்டு அங்கே இருக்கிற புராதன சிவன் கோவில்லே இருக்கிற கொல்லி மலைப் பாவை' அம்மனை வணங்கிட்டு சித்தர்கள் தவம் செஞ்ச குகைக்குப் பக்கத்துல போயி... உட்கார்ந்து தியானம் செஞ்சுட்டு வருவீங்க...

இத்தனை சாமிகளைக் கும்பிட்டும் என்ன பிரயோஜனம்? பத்து வருஷத்துக்கு முன்னாடி... அருவியில குளிச்சிட்டிருந்த நம்ம அம்மா வழுக்கி விழுந்து ஆத்து வெள்ளத்துல அடிச்சுட்டுப் போயிட்டாங்க...

அம்மாவோட மறைவு உங்களை ரொம்ப பாதிச்சுருச்சு... கலகலன்னு பேசற நீங்க... ரொம்ப சாந்தமா சாதுவா மவுனமா இருக்க ஆரம்பிச்சுட்டீங்க...

சித்தப்பா இதை சாதகமாக பயன்படுத்திக்கிட்டாரு. தம்பிதுரோகம் செஞ்சது தெரிஞ்சதும்... உங்களுக்கு ஒரு பயம் வந்துடுச்சு...

'நான் நல்லா இருக்கும்போதே உன்னை நல்ல இடத்துல கரை சேர்த்துடறேன் அற்புதா!'ன்னு... என்கிட்ட சொன்னதோட... கல்யாணத் தரகர்கிட்டே என்னோட ஜாதகத்தைக் குடுத்து சிக்கிரமா வரன் பார்க்க சொன்னீங்க...

பி.ஏ. முடிச்சுட்டு பக்கத்துல மெட்ரிக்குலேஷன் ஸ்கூல்லே வேலைக்குச் சேர்ந்த நான்... தபால் மூலமா எம்.ஏ. படிக்க ஆரம்பிச்சேன். 'அப்பா! கல்யாணத்துக்கு என்ன அவசரம். எம்.ஏ. முடிச்சதுக்கு அப்புறமா பார்த்துக்க லாமே?ன்னு நான் கெஞ்சினேன். நீங்க கேட்கலை...

தரகர்கிட்டே நீங்க வரன் பார்க்கச் சொன்னது தெரிஞ்சதும்...

சித்தப்பாவே ரொம்ப அக்கறையோட வந்து பேசினாரு...



''அண்ணா! நம்ம அற்புதா ரொம்ப அதிர்ஷ்டக்காரி! அவளுக்கு நல்ல யோகம் இருக்கு...''

அவ ஓஹோன்னு... எல்லாரும் அண்ணாந்து பார்க்கும்படி வாழப்போறா... அவ எனக்கு மூத்த மகள் மாதிரி தானே? நம்ம ஏரியாவுல தொழிலதிபர் செல்வநாயகம் இருக்காருல்ல... அவரோட மூத்த புள்ளை கோபிநாத்துக்கு... நம்ம அற்புதாவை கேட்டு வந்தாங்க... ரெண்டாவது புள்ளை அமர்நாத்! ரெண்டே பசங்கதான்...!

பத்து தலைமுறைக்குச் சொத்து தேறும்!

நான் உங்ககிட்டே கேட்டுட்டு முடிவைச் சொல்றேன்னு சொல்லியிருக்கேன்... நல்ல சம்பந்தம்! யாருக்கு கிடைக்கும் இப்படியொரு பாக்கியம்?

அற்புதா அந்தக் குடும்பத்துக்கு மருமகளா போனா... நம்ம வம்சத்துக்கே பெருமை! என்னண்ணா சொல்றீங்க!

நீங்க சரின்னு சொன்னா... நாளைக்கே பொண்ணு பார்க்க வர்றோம்'னு சொல்றாங்க... ஏன் தயங்கறீங்க?

வேணும்னா... அந்த தரகர்கிட்டேயே இந்த வரனைப் பத்தி கேட்டுப் பாருங்களேன்'னு... சித்தப்பா உங்களை யோசிக்கக்கூட விடலை.

பத்தும் பத்தாததுக்கு... அந்த தரகரும் நல்ல விதமா அபிப்பிராயம் சொன்னதுமே... நீங்க சம்மதிச்சீங்க...

மளமளன்னு நிச்சயதார்த்தம் முடிஞ்சு... அடுத்த வாரம் கல்யாணம் நெருங்கி வர்றப்போ... மகாபலிபுரம் போயிட்டு கார்லே திரும்பி வந்த கோபிநாத் மேல லாரி மோதி விபத்துல அகாலமா போய்ச் சேர்ந்துட்டாரு...

'அதிர்ஷ்டம் அடிச்சு குபேரக் குடும்பத்துல வாழ்க்கைப்பட இருந்தவ அற்புதா... அவ ராசியில்லாதவ...

ஜாதக தோஷம் உள்ளவ... அதனால தான் கட்டிக்க இருந்த மாப்பிள்ளை அநியாயமா மாண்டு போயிட்டான்'னு... சித்தி உட்பட ஊர்க்காரங்க எல்லாருமே பேச ஆரம்பிச்சாங்க...

அம்மாவை இழந்த விரக்தி ஒருபுறம்... தம்பி செஞ்ச துரோகம் ஒருபுறம்... இப்போ இப்படியொரு துர் சம்பவம் ஏற்பட்டு... உங்க காதுபட சித்தியும் மத்தவங்களும் என்னைத் தூத்திப் பேச ஆரம்பிச்சதும்... உங்களால தாங்க முடியலை.

தாயை இழந்த நான்... சித்தியை என்னோட அம்மாவாகத்தான் பாவிக்கிறேன்.

ஆனா அவங்க என்ன காரணத்தாலோ... என்னைத் துவேசிச்சிட்டே தான் இருக்காங்க... நீங்க வற்புறுத்தினதாலே கல்யாணத் தரகரும் வெளியூர் வரன்களா கொண்டு வரத்தானே செய்தாரு...

பேச்சு வார்த்தை நடக்கும் போதே... 'பெண்ணோட ஜாதக தோஷத்தாலே கோபிநாத் அகாலமா மாண்டு போயிட்டதா எல்லாரும் சொல்றாங்களே? எங்களுக்கு இந்தப் பொண்ணு வேண்டாம்'னு சொல்லி... வந்த வரன்கள் எல்லாம் தட்டிப் போச்சே?

உங்களாலே இதை... இந்த வேதனையைத் தாங்கிக்கவே முடியலை...

'சொந்த சித்தப்பா சித்தியே... கொஞ்சம்கூட மனசாட்சி இல்லாம... உன்னைப் பத்தி இல்லாததும் பொல்லாததுமா சொல்லி உன் கல்யாணத்துக்கு தடையா நிக்கிறாங்களே?'ன்னு என்கிட்டே கண்ணீர் வடிச்சீங்க...'

''ஒருவேளை என்னோட ஜாதக தோஷத்தாலதான் கோபிநாத் அகாலமா மாண்டு போயிட்டாரோ?'ன்னு



எனக்குள்ளேயும் சந்தேகம் இருக்குப்பா'ன்னு நான் சொன்னப்போ...''

''சேச்சே! இப்படியொரு எண்ணம் உனக்கு வரவே கூடாதும்மா... ரொம்ப வருஷமா எங்களுக்கு குழந்தையே இல்ல... நானும் உங்க அம்மாவும் கோவில் குளத்தைச் சுத்தி தவம் இருந்தோம்.

சித்தரோட அனுக்கிரகத்துல தான் நீ பிறந்தே... அதனாலதான் உனக்கு 'அற்புதா'ன்னு பேர் வச்சோம்.

தெய்வத்தோட அனுக்கிரகத்தால எங்களுக்கு கிடைச்ச வரப்பிரசாதம். நீ... உன்னோட ஜாதகத்துல எந்த தோஷமும் இருக்க முடியாது.

கோபிநாத்துக்கு ஆயுசு அவ்வளவுதான்... விதி பலமா முன்னாடி வந்து நின்னிருக்கு. அதான் காரணம்... நான் பண்ணின ஒரே தப்பு என்ன தெரியுமா?

உன்னோட சித்தப்பா இந்த வரனைக் கொண்டு வந்து... கொஞ்சம்கூட என்னை யோசிக்க விடாம பண்ணிட்டான்...

அவன் சும்மா வற்புறுத்தினதும்... நல்ல வரனா இருக்கே'ன்னு உடனே நானும் சம்மதிச்சுட்டேன்.

ஜாதகத்தை நான் வாங்கியிருக்கணும். உனக்கும் கோபிநாத்துக்கும் ஜாதகப் பொருத்தம் இருக்கா?ன்னு... நான் பார்த்திருக்கணும்.

அவசரப்பட்டுட்டேன். அதுதான் நான் பண்ணின பெரிய தப்பு! இப்போ நீ வருத்தப்பட்டு உன்னை நீயே நொந்துக்கிட்டதால... ஒரு உண்மையைச் சொல்றேன் அற்புதா!

மிகப் பெரிய கண்டத்துல இருந்து நீ தப்பிச்சிருக்கே... ஆமாம்! கோபிநாத்துக்கு விபத்து ஏற்பட்டதும்... கேஸ்

பதிவாகி போஸ்ட் மார்ட்டம் பண்ணி தானே பாடியைக் குடுத்தாங்க?

அந்தப் பெரிய ஆஸ்பத்திரியில... என்னோட பால்ய நண்பன் ஒருத்தன் கம்பவுண்டரா வேலை பார்த்துட்டிருக்கான்... பேரு கனகு!

கல்யாணத்துக்கு ஒரு வாரம் இருக்கிறச்சே... மாப்பிள்ளை இப்படி இறந்துட்டாரே?ன்னு நான் கதறினப்போ... கனகு என்னை தனியா கூட்டிட்டுப் போயி... ஒரு ரகசியத்தை சொன்னான்.

அதைச் சொன்னா உனக்கு ஷாக்கா இருக்கும்னுதான்... நான் இது வரைக்கும் சொல்லலை...

ஆனா நீ இன்னிக்கு ரொம்ப நொந்து பேசினதால சொல்றேன். கோபிநாத் இறந்தது நல்லதுதான்... அதனால கல்யாணம் நின்னதும் நல்லதுதான்... அப்படிங்கிற எண்ணம் எனக்கு ஏற்பட்டு போச்சு.

ஏன்னா... கோபிநாத்துக்கு எய்ட்ஸ் நோய் இருக்காம். பணக்கார வீட்டுப் பிள்ளை.

கொஞ்சம்கூட கட்டுப்பாடு இல்லாம மனம் போன போக்குல ஆட்டம் போட்டிருக்கான். இவனோட தம்பி அமர்நாத்தும் அதே டைப்தானாம். போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டுல எழுதப்பட்டிருப்பதைப் பார்த்துட்டு வந்து கனகு இதைச் சொன்னதும்... நான் ஆடிப் போயிட்டேன்.

கெட்டதுலேயும் ஒரு நல்லது நடந்திருக்கு. இதை நான் வெளியில சொல்றதுக்கு கூட... நாக்கு கூசும்மா...

அந்தப் படுபாவி இறந்ததுக்கு உன்னை... உன் ஜாதகத்து மேல பழியைப் போட்டுட்டாங்களே? வந்த வரன் எல்லாம் தட்டிக்கிட்டே போகுதே?'ன்னுதான்... நான் ரொம்ப வேதனைப்படறேன்.

தம்பிகிட்டேகூட நான் இதைச் சொல்லலை. இப்போ நெனச்சுப் பார்த்தா சந்தேகமா இருக்கு...

அவன்தானே இந்த வரனைக் கொண்டு வந்தான். எனக்கு துரோகத்தைப் பண்ணினவன்... நல்ல மனசோட பெரிய இடத்து சம்பந்தத்தை நம்ம பொண்ணுக்கு ஏற்பாடு பண்றானே?'ன்னு ஆச்சரியப்பட்டேன்.

அவனுக்கு ஒருவேளை விஷயம் தெரிஞ்சுதான்... இப்படியொரு வில்லங்கத்துல உன்னை மாட்டிவிடப் பார்த்தானோ? என்னவோ? அப்படின்னு நீங்க வேதனைப்பட்டு கண்ணீர் உகுத்தீங்களேப்பா?

"அப்பா! சித்தப்பா அந்தளவுக்கு மோசமானவரு இல்லைப்பா... அவருக்கு இந்த விஷயம் தெரிஞ்சிருக்க வாய்ப்பில்லைப்பா... சித்தப்பாவை தப்பா எடை போடாதீங்கப்பா'ன்னு... நான் சொன்னேன்.

விரக்தியா நொந்து போய் என்னைப் பார்த்தீங்க... அப்புறமா நான் ஸ்கூலுக்கு வேலைக்குப் போயிட்டேன்.

இடையில் என்ன நடந்துச்சோ? நான் திரும்பி வந்தப்போ உங்களைக் காணோம். பக்கத்துல கோவிலுக்கு எங்கேயாச்சும் போயிருப்பீங்கன்னு... ராத்திரிக்கு டிபன் பண்ணலாம்னு சப்பாத்தி மாவைப் பிசைஞ்சேன்.

அப்போதான் சித்தியும் சித்தப்பாவும் வந்து என்கிட்ட, "இனி யாரும் துணிஞ்சு வந்து உன்னைக் கட்ட மாட்டாங்க... மீறி வந்தாலும்... விஷயத்தைக் கேள்விப்பட்டா... கடைசி நேரத்துலகூட தாலி கட்டாம ஓடிப் போயிடுவாங்க...

அதனால பேசாம கோபிநாத்தோட தம்பி அமர்நாத்தையே கல்யாணம் பண்ணிக்கோ! அவன் உன் அழகுல மயங்கி உன்னையே கட்டணும்கிறான்.

செல்வநாயகம்கூட பெரிய மனசு பண்ணி ஒப்புக்கிட்டாரு. எதையும் மனசுல வச்சுக்காம... உன்னையே மருமகளாக்கிக்கணும்'னு தயாரா இருக்காரு' நீ இதுக்கு ஒப்புக்கோ! இல்லேன்னா... காலத்துக்கும் கல்யாணம் ஆகாம கன்னியா நிக்க வேண்டியதுதான்'' அப்படின்னு சொன்னாங்க...

நான் அதிர்ந்து போயிட்டேன். ''இதை அப்பாகிட்டே சொல்லுங்க சித்தப்பா! எல்லாமே அவருதானே முடிவு பண்ணணும்''னு நான் சொன்னேன்.

இந்த விஷயத்தை நான் உங்கப்பாகிட்டே சொன்னேன். இந்த சம்பந்தமே வேண்டாம்'னு சொல்லிட்டாரு. இதைவிட்டா வேற வரன் வரவே வராதுன்னேன். கல்லுளி மங்கன் மாதிரி மவுனமாவே உட்கார்ந்திருந்தாரு.

எனக்கு கோபம் வந்திடுச்சு. ''முட்டாள்தனமா வர்ற ஸ்ரீதேவியை வேணாம்னு வெளியில தள்ளாதீங்கண்ணா? காலத்துக்கும் கஷ்டப் படுவீங்கன்னேன்.

அதுக்கும் பதில் இல்லை. நானும் உங்க சித்தியும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும்... ஜடம் மாதிரி கம்முனு இருந்தாரு. ரெண்டு பேருமா ஆத்திரமா சத்தம் போட்டுட்டோம்.

மதியத்துக்கு மேல மனுஷன் எங்கேயோ போயிட்டாப்பல... நீயாவது சம்மதம் சொல்லு''ன்னாரு...

'அப்பா வரட்டும் சித்தப்பா!'ன்னு சொல்லிட்டு... அறைக்கு வந்து நெருடலோட கத்துமுத்தும் பார்த்தேன்.



டேபிள் மேல நாலு வரியில் கடிதம் எழுதி வச்சுட்டுப் போயிட்டீங்க...

''சித்தப்பாகிட்டே ஒபனா விஷயத்தை சொன்னா என்னப்பா? நீங்க போனதிலேர்ந்து எனக்கு சித்ரவதை ஜாஸ்தி ஆயிடுச்சே...?

அமர்நாத்தை கட்டிக்கச் சொல்லி நிர்ப்பந்திக்கிறாங்க... நான் சம்மதிக்கலைன்னதும்... சித்தி ஜாடை மாடையா கூட இல்ல... நேரடியாவே 'செத்துத் தொலை'னு சொல்லிட்டாங்களே?

என் மேல உயிரையே வச்சிருந்தீங்களேப்பா? நீங்க மனம் மாறி திரும்பி வந்துடுவீங்கங்கிற நம்பிக்கையில... நாலும் கடந்த ரெண்டு மாசமா காத்திருந்தேன்.

நீங்க வரலை... உங்க மனசார இவங்ககிட்டே எப்படி என்னை அம்போன்னு விட்டுட்டுப் போனீங்கப்பா?

இதே கேள்வியைப் பலமுறை எனக்கு நானே கேட்டுக்கிட்டு... உங்க டைரியை எடுத்துப் புரட்டிப் பார்ப்பேன்.

அதுலே கடைசி பக்கத்துல ''அன்பு மகளே அற்புதா எனக்கு உத்தரவு. புறப்பட்டுட்டேன். உன்னை என் ஸ்வாமி... என் பகவான்... சித்தர் ரட்சிப்பார்' அப்படின்னு ரெண்டு வரியில எழுதப்பட்டிருந்தது.

இவங்க மூணு பேருமா சேர்ந்து வார்த்தையால குத்திக் குதறி அணு அணுவா கொல்றது போதாதுன்னு... அந்த அமர்நாத் தடியன் வேற அடிக்கடி வந்து இம்சை. அந்த அமர்நாத் தெருமுனையிலேயோ ஸ்கூல் வாசலிலேயோ கார்லே வந்து நின்னு... என்கிட்டே சிரிச்சுப்பேச முற்பட்டான்.

முகத்துல அடிச்ச மாதிரி நானும் தவிர்த்துட்டே வந்தாலும்... தடியன் துணிஞ்சு வீட்டுக்கே வர ஆரம்பிச்சுட்டான்.

எனக்கு அரணா பாதுகாவலா இருக்க வேண்டிய சித்தப்பாவும் சித்தியும் அவனை வரவேற்று உபசரிச்சு உட்கார வச்சு... என்னைக் கூப்பிட்டு காபி டிபன் குடுத்து... அவன்கிட்டே பேசச் சொல்லி வற்புறுத்தறாங்க...

நீங்க இந்த நரகத்துல ஏனப்பா விட்டுட்டுப் போனீங்க? என்னையும் உங்களோடவே கூட்டிட்டுப் போயிருக்கலாமே.''

உங்களுக்குத்தான்... உங்க தம்பியைப் பத்தி சகலமும் தெரிஞ்சு போச்சே?

தெரிஞ்சும் இப்பேர்ப்பட்டவர்கிட்டே என்னை நிராதரவா விட்டுட்டுப் போகலாமா?

உங்களுக்கு இதுக்கு எப்படி மனசு வந்துச்சு? போதும்...! இந்த சித்ரவதை போதும்...!

அமர்நாத்தை கட்டிக்க நான் சம்மதிக்க முடியாது. அவனைப் பகைச்சுக்கிட்டு... இந்த மூணு பேத்து வெறுப்பையும் சம்பாதிச்சுக்கிட்டு வாழவும் முடியாது...

அதானல என்னை நானே முடிச்சுக்கிறேன். என்னை மன்னிச்சுடுங்கப்பா...

எனக்கு வேற வழி தெரியலைப்பா... இந்த வீட்டுல செத்தாலும் அதுக்கும் என்னைத் திட்டுவாங்க...

பக்கத்துல இந்த ஏரியாவுக்காக பெரிய நல்ல தண்ணீர் டேங்க் ஒண்ணு பிரமாண்டமா உயரமா கட்டி வச்சிருக் காங்களே...?



இன்னமும் கட்டுமானப் பணிகள் முடிவடையலை... இன்னதா சைடுலே ஏணிப்படிகளும் கட்டியிருக்காங்களே...? அதுலே ஏறி உச்சியில இருந்து கீழே குதிக்கப் போறேன்.

பெரிய கருங்கற்கள் கொட்டி வச்சிருக்காங்களே...? அதுலே விழுந்தா... கண்டிப்பா கபால மோட்சம் தான்!

சந்தேகமே இல்லாம... உடனடியா மரணம் சம்பவிச்சிடும். ஊர் அடங்கினதுக்கு அப்புறமா... என் உயிர் அடங்கட்டும் அப்பா...!''

அப்பாவின் புகைப்படத்தைப் பார்த்து தேம்பியழுத படியே புலம்பிவிட்டு அந்தப் படத்தைக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

அருகில் ஏதோ நிழலாடியதும் திரும்பிப் பார்த்தாள்.

நெடுசாண் மரமாக அவளருகில் முதுகுப்புறமாக மூச்சு விடும் நெருக்கத்தில் நின்ற உருவத்தைக் கண்டதும்... தூக்கி வாரிப்போட வீலென்று அலறினாள் அற்புதா.

## 3

இதயத்தில் இதயத் துடிப்பு தாறுமாறாக எகிறத் தொடங்கியது.

'அடப்பாவி! இவனா? இவன் எப்படி உள்ளே நுழைந்தான்? கதவைத் தாழிடாமல் வந்து விட்டேனா?

பொங்கி வந்த அழுகையில் வெறுமனே கதவை சாற்றிவிட்டு வந்து விட்டேன் போலும்...!

வீட்டில் யாருமில்லாத நேரத்தில் உள்ளே நுழைந்து விட்டானே இந்த அமர்நாத் பொறுக்கி!

இவனை எப்படி சமாளிக்க போகிறேன்? என்னை மிட்டாள்.

''என்ன அற்புதா? இப்படி அலறிட்டே? ரொம்ப பயந்துட்டியா டார்லிங்?''

என்னைத் தவிர வேற யாரு உள்ளே வரப் போறாங்க? இவ்ளோ உரிமையா உன்னோட ரூம் வரைக்கும் வர்ற துணிச்சல் யாருக்கு இருக்கு டியர்?''

கொஞ்சலாக அமர்நாத் பேசியதைக் கேட்டவளுக்கு... செவிகளில் திராவகத்தை ஊற்றினாற் போலிருந்தது.

''கதவைத் தட்டிவிட்டு உள்ளே வரணுங்கிற மேனர்ஸ்கூட தெரியாதா உங்களுக்கு?

திடுதிப்புன்னு இப்படி கிட்டத்துல வந்து நின்னா... பயப்படாம என்ன செய்வாங்களாம்?

சித்தப்பா, சித்தி, மாதவி... எல்லாருமா திருச்சிக்கு... கல்யாணத்துக்குப் போயிருக்காங்க.

ஏதோ டென்ஷன்ல கதவைத் தாழ்ப்பாள் போட மறந்துட்டேன். கதவு திறந்திருந்ததும்...''

கோபத்தில் மூக்கு நுனி சிவக்கப் பேசியவள்... அவனைத் தாண்டிக் கொண்டு விருட்டென்று நடு கூடத்தில் வந்து ''உம்! நீ இன்னும் முழுசா சொல்லி முடிக்கலை... திறந்த வீட்டுல நாய் நுழைச்சாப்பல நான் உள்ளே வந்துட்டேன்'னு சொல்ல வர்றியா? புரியுது...

கோபத்துல உன் அழகு அப்படியே பன்மடங்காகுது செல்லம்! நீ எப்படி பேசினாலும்... எனக்கு உன் மேல கோபமே வராது டியர்!''

''தயவு செஞ்சு வெளியில போறீங்களா? நான் தனிமையில இருக்கும்போது இப்படி வேத்து மனுஷன் உள்ளே நுழையறது முறையல்ல...''



''நான் வேத்து மனுஷனா?''

''பின்னே?''

''என்ன நீ இப்படி பேசறே? பிரபல தொழிலதிபர் செல்வநாயகத்தோட மருமகள் ஆகப் போறவள் நீ...! நீ எங்க குடும்பத்துக்கு மருமகள்... உன்னைப் பெண் பார்த்து பேசி முடிச்சு பெரியவங்க ஒப்புத்தாம்பூலம் மாத்தியிருக்காங்க... மறந்துட்டியா?''

''அதான்... எல்லாம் முடிஞ்சு போச்சே? பெண் பார்த்து பேசி முடிச்சு ஒப்புத் தாம்பூலம் மாத்தினாங்க... அதெல்லாம் எனக்கும் உங்க அண்ணனுக்கும் தான்... ஞாபகம் இருக்கட்டும்!''

''இல்லேன்னு நா சொல்லலையே... எங்கப்பா பெரிய கோடீஸ்வரர் தொழிலதிபர்ன்னு உனக்கே தெரியுமே? உன்னை தன்னோட மருமகளாக்கிக்கிறேன்'னு வாக்கு தந்தாரே... குடுத்த வாக்கு தவறக் கூடாதுன்னு அப்பா நினைக்கிறாரே...!''

''கடவுளே! எங்கப்பா எங்கே போனாரு? எப்படி இரக்காரு? உயிரோட இருக்காரா? இல்லையா?ன்னு கூடத் தெரியாம... நான் கவலையில் துடிச்சுட்டிருக்கேன்.

உங்கண்ணனோட மரணத்தோட... எல்லாமே முடிஞ்சு போச்சு. நான் கல்யாணத்தைப் பத்தி யோசிக்கற நிலைமையில இல்லை... தயவு செஞ்சு மேற்கொண்டு தொந்தரவு பண்ணாம... வெளியில போறீங்களா ப்ளீஸ்...''

பேசியபடியே விடுவிடென்று நடந்து வாசற் கதவை அகலமாகத் திறந்து வைத்தாள்.

''நீ மட்டும் என்னோட மனைவி ஆயிட்டா... ஆட்படையை ஏவிவிட்டு, மாமா எங்கே இருக்காருன்னு

கண்டுபிடிச்சு... சப்போஸ் உயிரோட இருந்தாருன்னா... கைப்பிடியா கொண்டாந்து உன் முன்னாடி நிப்பாட்டிடு வேன்... அதை ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கிறே... டார்லிங்!''

பேசியபடி அவளைப் பார்வையால் அளவெடுத்த படியே அவள் அருகில் வந்து நின்றான்.

''நாராசமா இருக்கு!'' என்றபடி இரு செவிகளையும் கைகளால் பொத்திக் கொண்டாள்.

''நான்... உங்க அண்ணனுக்காகப் பேசி முடிக்கப் பட்டவள்...அந்த விபத்து மட்டும் நடக்காம இருந்திருந்தா... உங்க அண்ணி ஆகியிருப்பேன். அண்ணிங்கிறவள் அம்மாவுக்கு சமானம்னு சொல்வாங்க...''

என்கிடடே போய் இப்படியெல்லாம் பேசறதுக்கு... உங்களுக்கு நாக்கு கூசலையா? சே...!''

''அதி அற்புதமான அழகு தேவதை நீ!... எங்க அந்தஸ்துக்கு தகுந்தபடி ஆயிரம் பொண்ணுங்க எனக்கு கிடைப்பாங்கதான்...''

எங்க கோபிக்கு உன்னைப் பேசி முடிக்கும்போதே... உன்னைப் பார்த்து உன் அழகுல அப்படியே ஸ்டன் ஆகிமிட்டேன் தெரியுமா? கோபியைப் பார்த்து உள்ளுக்குள்ளே பொறாமைபட்டேன்.

அதான்... அண்ணியா வந்திருக்க வேண்டியவளா இருந்தாலும் எனக்கு மிஸ் பண்ண மனசு வரலை. லட்சம் பேரழகிகள் வந்தாலும் உன்னோட கால் தூசுக்கு ஈடாக மாட்டாங்க...''

''போதும்! இதுக்கு மேல நா எதையும் கேட்கத் தயாரா இல்ல...''



அழகிய விழிகள் வெறுப்பை உமிழ... தனது ஆட்காட்டி விரலை வாசலை நோக்கி சுட்டிக் காட்டினாள்.

''ஓகே! இப்போ போறேன். உனக்கு விருப்பம் இருக்கா? இல்லையா?ங்கிறதைப் பத்தி நா கவலைப்பட மாட்டேன். எனக்கு நீ வேணும். நீதான் என் மனைவி... அதுல எந்த மாற்றமும் இல்ல...''

உங்க சித்தியும் சித்தப்பாவும் என் பக்கம் இருக்காங்க... ஆட்பலம் பணபலம் எல்லாமே என் பக்கம் இருக்கிறப்போ... நீ எதிர்ப்பு காட்டாம இணங்கிப் போறதுதான் உனக்கு நல்லது...''

''அது மட்டும் நடக்காது அமர்நாத்! நா உனக்கு கிடைக்கவே மாட்டேன்... இது சத்தியம்...'' குரலில் உறுதி தொனிக்கப் பேசினாள்.

''ஓஹோ...!''

அவளை ஏற இறங்கப் பார்த்தான் அமர்நாத்.

சூயிங் கம்மை மென்றபடி கோணலாய் சிரித்தான்.

''ஏதாவது பிளான் வச்சிருக்கியா? என்கிட்டேயிருந்து நீ தப்பிக்கவே முடியாது...''

''அதையும் பார்த்துடலாம்...''

''நீ உலகத்துல எந்த மூலைக்குப் போனாலும்... நா விடமாட்டேன். உன்னைத் தப்பிக்க விடமாட்டேன். நீதான் என் மனைவி! என்னோட பவர் என்னன்னு புரியாம... என்கிட்டேயே சவால் விட்டுட்டே...

போகப் போக... இந்த 'அமர்' யாருன்னு நீ புரிஞ்சுப்பே... ஃபைனலா... நீயே வேறவழி இல்லாம... என்கிட்டே சரணாகதி அடையப் போறே...!

உன்மேல இருக்கிற காதல்லே... மோகத்திலே... நீ பேசினதை மன்னிச்சுட்டு... இப்போ போறேன்.... நா சொன்னது ஞாபகம் இருக்கட்டும்... இணங்கிப் போ! அதான் எல்லாருக்கும் நல்லது...''

புன்னகை மாறாமல் பேசிவிட்டு வாசலை விட்டு இறங்கி தன் காரில் ஏறி அமர்ந்தான்.

கதவை அறைந்து சாற்றி தாழிட்டு விட்டு உள்ளே வந்தாள் அற்புதா.

''சித்தி சித்தப்பாவோட கொடுமை ஒரு பக்கம்... இந்தப் பொறுக்கியோட இம்சை ஒரு பக்கம்...''

அப்பாவை இழந்த கவலை ஒரு பக்கம்... அப்பப்பா! எனக்கு மும்முனையிலும் சித்திரவதை தான்...

அதுக்கெல்லாம் தீர்வு... முடிவு... விடிவு... சத்தியமா கிடைக்கப் போறதில்லை.

அப்பாவோட டைரியில 'சித்தர் உன்னை ரட்சிப்பாரு'ன்னு எழுதியிருந்தாரே?

இது வரைக்கும்... இத்தனை அட்டூழியங்கள் நடந்தும் எந்த சாமியும் சித்தரும் கண் திறந்து பார்க்கலையே?

கொல்லி மலைக்கு தம்பதி சமேதரா அடிக்கடி போய் வந்தாங்க அம்மாவும் அப்பாவும்...! மனமுருக வேண்டிக்கிட்டு வந்தாங்க...

அம்மாவுக்குப் போய் ஏன் அப்படியொரு முடிவு வரணும்?

கொல்லிமலை ஒரு சித்தர் பூமின்னு அடிக்கடி சிலாகிச்சுப் பேசுவாரு அப்பா!

அந்த மலையில் ஆகாய கங்கை அருவியில அம்மாவுக்கு ஏன் சாவு வரணும்?



அப்படியே வந்தாலும் தன்னோட பக்தர்களை... அந்த சித்தர்கள் காத்து ரட்சிக்கக் கூடாதா?

ஈ எறும்புக்குகூட தீங்கு நினைக்காதவர் அப்பா! அவருக்கு சொந்த தம்பியே துரோகம் பண்ணி இருக்காரு...

ஒரு பாவமும் அறியாத எனக்கு... ஏன் அப்படி ஒரு வரன் அமையணும்?

அந்த கோபிநாத் இறந்து... அவன் மூலமா எனக்கு ராசி இல்லாதவள்'னு அவப் பெயர் ஏன் வரணும்?

இதெல்லாம் போதாதுன்னு... அமர்நாத் மூலமா மறுபடியும் ஒரு பிரச்சினை... ஏன் தலை தூக்கணும்?

எவ்ளோ கண்ணீர் விட்டு நான் கதறியிருப்பேன்?

இந்த அபலையோட குரல்... எந்தக் கடவுளுக்கும் அப்பாவோட அபிமான சித்தருக்கும்... ஏன் எட்டவே இல்லை?

ஏன்னா... இதுதான் விதி!

எந்தக் கடவுளும் சித்தரும் விதியைத் தடுக்கவும் முடியாது... மாற்றவும் முடியாது.

இதுதான் நிஜம்!

அப்பா... என்னோட திருப்திக்காகவோ என்னை ஆறுதல் படுத்தவோ தான்... அந்த மாதிரி டைரியில் எழுதி வைத்திருக்கிறாரே தவிர... யாரும் வந்து என்னைக் காப்பாற்றி கரை சேர்க்கப் போவதே இல்லை.

இதுதான் ஊர்ஜிதம்...!

அதனால் என் முடிவில் எந்தவித மாற்றமும் இல்லை...

கடவுளே...! சித்தர் ஸ்வாமிகளே...!

என்னோட முயற்சிக்கு எந்தவிதமான தடங்கலும் வரக்கூடாது. நினைச்ச காரியம் ஈடேறணும்.

இதுக்காகவாவது அருள் புரியணும் பகவானே...!''

மானசீகமாய் பேசியபடி கண்ணீர் உகுத்தபடி சுவரில் சாய்ந்து நின்றாள்.

பெருமூச்சு விட்டபடி சரிந்து அப்படியே அமர்ந்தாள்.

முழங்கால்களில் முகம் புதைத்து வெகு நேரம் விசும்பினாள்.

நேரம் நத்தையாய் நகர்ந்தது.

கூடத்திலிருந்த அந்தக் காலத்து கடிகாரம் 'டண் - டண்'' என்று பன்னிரெண்டு முறை அடித்தது ஓய்ந்தது.

அற்புதா சட்டென்று நிமிர்ந்தாள்.

புறங்கையால் கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு... கடிகாரத்தின் பெண்டுலத்தைப் பார்த்தாள்.

''டிக்... டிக்... டிக்...''

கடிகார முட்கள் நகரும் ஓசை... அந்த நேரத்தில் ஒருவித அதிர்வையே உண்டு பண்ணியது.

'துணிந்தபின் துக்கமில்லை' என்பார்கள்.

ஆனால்... அற்புதாவுக்கோ... துணிந்து முடிவெடுத்த பின்பும் திக் திக்' என்று மனம் அடித்துக் கொண்டது நிஜம்!

மெல்ல எழுந்து நின்றாள்.

நெஞ்சில் கை வைத்து விழிகளை மூடி ஆழ மூச்செடுத்தாள்.



இதயத் துடிப்பு சற்றே ஆசுவாசப்பட்டதும்... கூடத்திலிருந்த ஜன்னல் கதவைத் திறந்தாள்.

கதவைத் திறந்ததும்... சில்லென்ற காற்று வேப்பம்பூவின் மணத்தை சுமந்து கொண்டு சுதந்திரமாய் உள்ளே புகுந்தது.

சிலீரென்று காற்று முகத்தை ஸ்பரிசித்ததும்... அற்புதாவின் மலர் மேனி இனம்புரியாமல் ஒருமுறை நடுங்கியது.

ஜன்னல் கம்பியைப் பற்றிக் கொண்டு... பார்வையை நாலாபுறமும் சுழல விட்டாள்.

ஆளரவமற்று அந்தப் பகுதியே வெறிச்சோடிப் போயிருந்தது.

வெகுதூரத்தில் ஏதோவொரு நாய் குரைக்கும் சப்தம் கேட்டது. அந்த பிரமாண்டமான தண்ணீர் டேங்கை ஒரு பார்வை பார்த்தாள்.

'இதுதான் நல்ல சந்தர்ப்பம்' என்று தோன்ற... அற்புதா விருட்டென்று கூடத்தைத் தாண்டி நடந்தாள்.

பொறுப்புணர்வுடன் கதவை வெளிப்புறமாக தாழிட்டுவிட்டு நடந்தாள்.

## 4

வீட்டைச் சுற்றிக் கொண்டு நடந்தவள்... சுற்றும் முற்றும் திகிலுடன் நோட்டமிட்டாள்.

''யார் கண்ணிலாவது பட்டுவிட்டால்...?''

என் முயற்சியை யாராவது தடுத்துவிட்டால்...?

என்னோட முயற்சிக்கு எந்தவிதமான தடங்கலும் வரக்கூடாது. நினைச்ச காரியம் ஈடேறணும்.

இதுக்காகவாவது அருள் புரியணும் பகவானே...!''

மானசீகமாய் பேசியபடி கண்ணீர் உகுத்தபடி சுவரில் சாய்ந்து நின்றாள்.

பெருமூச்சு விட்டபடி சரிந்து அப்படியே அமர்ந்தாள்.

முழங்கால்களில் முகம் புதைத்து வெகு நேரம் விசும்பினாள்.

நேரம் நத்தையாய் நகர்ந்தது.

கூடத்திலிருந்த அந்தக் காலத்து கடிகாரம் 'டண் - டண்'' என்று பன்னிரெண்டு முறை அடித்தது ஓய்ந்தது.

அற்புதா சட்டென்று நிமிர்ந்தாள்.

புறங்கையால் கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு... கடிகாரத்தின் பெண்டுலத்தைப் பார்த்தாள்.

''டிக்... டிக்... டிக்...''

கடிகார முட்கள் நகரும் ஓசை... அந்த நேரத்தில் ஒருவித அதிர்வையே உண்டு பண்ணியது.

'துணிந்தபின் துக்கமில்லை' என்பார்கள்.

ஆனால்... அற்புதாவுக்கோ... துணிந்து முடிவெடுத்த பின்பும் திக் திக்' என்று மனம் அடித்துக் கொண்டது நிஜம்!

மெல்ல எழுந்து நின்றாள்.

நெஞ்சில் கை வைத்து விழிகளை மூடி ஆழ மூச்செடுத்தாள்.



இதயத் துடிப்பு சற்றே ஆசுவாசப்பட்டதும்... கூடத்திலிருந்த ஜன்னல் கதவைத் திறந்தாள்.

கதவைத் திறந்ததும்... சில்லென்ற காற்று வேப்பம்பூவின் மணத்தை சுமந்து கொண்டு சுதந்திரமாய் உள்ளே புகுந்தது.

சிலீரென்று காற்று முகத்தை ஸ்பரிசித்ததும்... அற்புதாவின் மலர் மேனி இனம்புரியாமல் ஒருமுறை நடுங்கியது.

ஜன்னல் கம்பியைப் பற்றிக் கொண்டு... பார்வையை நாலாபுறமும் சுழல விட்டாள்.

ஆளரவமற்று அந்தப் பகுதியே வெறிச்சோடிப் போயிருந்தது.

வெகுதூரத்தில் ஏதோவொரு நாய் குரைக்கும் சப்தம் கேட்டது. அந்த பிரமாண்டமான தண்ணீர் டேங்க்கை ஒரு பார்வை பார்த்தாள்.

'இதுதான் நல்ல சந்தர்ப்பம்' என்று தோன்ற... அற்புதா விருட்டென்று கூடத்தைத் தாண்டி நடந்தாள்.

பொறுப்புணர்வுடன் கதவை வெளிப்புறமாக தாழிட்டுவிட்டு நடந்தாள்.

## 4

**வீ**ட்டைச் சுற்றிக் கொண்டு நடந்தவள்... சுற்றும் முற்றும் திகிலுடன் நோட்டமிட்டாள்.

''யார் கண்ணிலாவது பட்டுவிட்டால்...?''

என் முயற்சியை யாராவது தடுத்துவிட்டால்...?

என்னைக் காப்பாற்றுவதாக நினைத்துக் கொண்டு... வற்புறுத்தி வீட்டில் கொண்டுவிட்டு விட்டால்...?

வீடா அது? நரகமாயிற்றே...?

கடவுளே! எந்த இடைஞ்சலும் வந்துவிடக்கூடாது...

யாரும் வந்து என்னைக் காப்பாற்றத் தேவையில்லை...

இந்த உடம்பிலிருந்து... இந்த மனசாட்சி அற்ற மனிதர்களிடம் இருந்து எனக்கு விடுதலை கிடைத்தால் போதும்...!'

மனதில் டென்ஷன் எகிற... தடுக்கி விழாத குறையாக ஓட்டமும் நடையுமாக அந்த வாட்டர் டேங்க்கை சமீபித்தாள்.

பௌர்ணமிக்கு இரண்டொரு நாட்கள் மிச்சமிருந்தன.

நிலா வெளிச்சத்திலும் தெரு விளக்கின் உபயத்திலும் பளிச்சென்ற வெளிச்ச வெள்ளத்தில் நனைந்து... கனகம்பீரமாய் பிரமாண்டமாய் ஏகப்பட்ட உயரத்தில் இருந்தது அந்த டேங்க்!

அண்ணாந்து பார்த்தாள் அற்புதா.

'அப்பப்பா! என்ன உயரம்?'

இவ்வளவு உயரத்திலிருந்து குதித்தால்...?

கட்டுமானப் பணிகள் இன்னமும் முற்றுப் பெறாததால்... பக்கவாட்டில் பெரிய கருங்கற்களும் ஜல்லியையும் கொட்டி வைத்திருக்கிறார்கள்.

எதற்கும் குதிக்கும் போது... பக்கவாட்டில் பார்த்து குதித்துவிட வேண்டியதுதான்... அந்தப் பகுதியில் சற்றே இருளாய் இருக்கிறது.

சந்தேகத்திற்கு இடமில்லாமல்... தலை சிதறி இறந்துவிடலாம் அல்லவா?



அதுதான் சரி!

இதில் குதித்தால் உயிர் பிழைக்க கண்டிப்பாக வாய்ப்பே இல்லை.

திட்டம் மிகச் சரியாய் இருக்கிறது. இனி காரியத்தை நிறைவேற்ற வேண்டியதுதான்...!

துக்கம் பந்தாய் எழும்பி தொண்டையை அடைத்தது.

பெரிய கருங்கற்களையே உற்றுப் பார்த்தவள்... இரண்டொரு முறை அண்ணாந்து டேங்க்கையும் வெறித்தாள்.

வளைந்து மேலேறிச் சென்ற ஒடுக்கமான படிக்கட்டில் நிதானமாய் ஏறினாள்.

இதயத் துடிப்பு முரசொலியாய் அதிர்ந்தது.

ஆவணி மாதக் காற்றுக்கு... சற்று தூரத்திலிருந்த வேப்ப மரங்கள் விர் விர்ரென்று கிளைகளை அசைத்துக் கொண்டிருந்தன.

நடு நிசியில்... அந்தக் குளிர் காற்று வீசிய போதிலும் அற்புதாவுக்கு வியர்த்து வழிந்தது.

படிக்கட்டுகளின் ஓரத்தில் இன்னமும் கைப்பிடிச்சுவர் கூட கட்டப்படாததால்... அவளுக்கு அந்த உயரத்தில் ஏறிச் செல்லும்போது... கால்கள் வெடவெடவென்று நடுங்கின.

''அம்மாடி அற்புதா! தவமாய்த் தவமிருந்து உன்னை நாங்க பெற்றெடுத்தோம்.

தெய்வ அனுக்கிரகத்துல கிடைச்ச குழந்தைங்கிறதால... உனக்கு அற்புதா'ன்னு பேர் வச்சோம்...'' என்று அடிக்கடி அப்பா கூறி வந்தது... இப்போது அவளது செவிகளில் ரீங்காரமிட்டது.

தேம்பித் தேம்பி கோவென்று அழ வேண்டும் போலிருந்தது.

''உங்க அற்புதாவுக்கு நேர்ந்த கதியைப் பார்த்தீங்களாப்பா? கொஞ்ச நேரத்துல எனக்கு கோர மரணம் நேரப் போகுது...

தற்கொலை செய்து கொள்வது எவ்வளவு தவறான விஷயம். ஆனால... எனக்கு வேற வழி தெரியலைப்பா...''

குபுக் என்று விழிகளில் பொங்கியது கண்ணீர்.

கண்களை மூன்றுமுறை சிமிட்டி... பொங்கிய கண்ணீரை உள்ளிழுத்துக் கொண்டாள்.

வைராக்கியத்துடன் இறுகிய தாடையுடன் தட்டுத் தடுமாறி நடுங்கியவாறு... எப்படியோ உச்சியை அடைந்து விட்டாள்.

மேலிருந்து மெல்ல எட்டிப்பார்த்தாள்.

குடல் குபீரென்று முறுக்கிக் கொண்டது.

பயத்தில் அடிவயிறு சொரேலென்று கலங்கியது.

சிறுவயதிலிருந்தே அவளுக்கு ஒரு பயம்...!

ராட்சச ராட்டினத்தில் ஏறி அவள் ஆசையாய் ஒரு முறை சுற்றியது ஞாபகத்திற்கு வந்தது.

ராட்டினம் உச்சிக்குச் சென்று சர்ரென்று கீழே இறங்கும்போது... அவளுக்கு குடலைப் புரட்டிக் கொண்டு வந்தது.

பயத்தில் வீலென்று அலறி விட்டிருந்தாள்.

ஒரே ஒரு முறைதான்...!

அதன் பின்பு... அவள் தப்பித்தவறிக்கூட அதில் ஏறியதே இல்லை.



ஒருமுறை ஏறிச் சுற்றியதற்கே... பயத்திலும் அதிர்ச்சியிலும் ஒரு வாரம் காய்ச்சலில் படுத்துவிட்டிருந்தாள்.

அப்போது... அம்மா மரகதம் உயிரோடு இருந்தாள்.

இப்போது...?

திகிலில் அவளையும் அறியாமல்... அவளது கால்கள் ஓரடி பின் வாங்கின.

'அப்படியே வந்த வழியே திரும்பி இறங்கி விடலாமா?'

மனம் நப்பாசை பட்டது.

'ஊகூம்! இதற்கு மேல் தாமதித்தால்... என் மனம் மாறிவிடும்...'

துணிவைத் திரட்டிக் கொண்டு... மீண்டும் ஓரடி வைத்து எட்டிப் பார்த்தாள்.

சர்வமும் பதறி.... அடி வயிறு பயத்தில் முடிச்சுப் போட்டுக் கொள்ள... விண் என்று வலித்தது.

கீழுதட்டை அழுந்தக் கடித்துக் கொண்டாள்.

சேலைத் தலைப்பை இழுத்து இடுப்பில் செருகிக் கொண்டு... கண்களை இறுக மூடி... இரு கரங்களையும் உயரே தூக்கி வணங்கினாள்.

'அப்பா... அம்மா... கடவுள்... சித்தர் ஸ்வாமி'யை மானசீகமாய் வணங்கிவிட்டு... மறுகணம் பக்கவாட்டிலிருந்த கருங்கற்களை நோக்கி... கீழே குதித்தாள்...

காற்றைக் கிழித்துக் கொண்டு... விழும்போது அலற வேண்டும் போலிருந்தது.

வைராக்கியமாய் பற்களை இறுகக் கடித்துக் கொண்டாள்.

குடல் முறுக்கிக் கொள்ள...

இதயம் எம்பித் தாவி தொண்டை வரை வந்துவிட்டாற் போலிருந்தது.

மறுகணம்...!

'இதோ... இதோ... என் தலை சிதறி... உயிர் உடலை விட்டுப் பிரியப் போகிறது.

மண்ணைவிட்டு மறையப் போகிறேன்...'

அந்த பயத்திலும் எண்ணம் தோன்றியது.

பொத்தென்று எதன் மீதோ விழுந்தாற்போலிருந்தது.

'இல்லையில்லை... யாரோ என்னைத் தாங்கிப் பிடித்தாற் போலிருக்கிறதே...?'

அதெப்படி...? மேலிருந்து கீழே நான் பார்த்தபோது... ஈ, காக்கா கூட நடமாடவில்லையே?

இந்நேரம் கருங்கற்களில் தலை மோதி உயிர் போயிருக்க வேண்டிய தருணத்தில்... யார் வந்து தடுத்தது?'

ஏமாற்றம் மனதில் முற்றுகையிட்டது.

அழுகை முட்டியது. விழிகளை மெல்லத் திறந்தாள்.

விழும்போது... அவளது உடல் தலை குப்புற விழுந்தது போலும்...!'

கீழே கருங்கற்கள் தெரிந்தன.

'என்ன இது? பாதி உயரத்தில் அந்தரத்தில் இருக்கிறேன்?' கவிழ்ந்த தலையைத் திருப்பி அண்ணாந்து பார்த்தாள்.

'இருள்... அவளைத் தாங்கிய உருவம் எதுவும் தென்படவில்லை.



ஆனால்... இருளில் இரு கண்கள் மட்டும் பிரமாண்டமாய் தெரிந்தன.

பளிச்சென்று தீட்சணியம் மிக்க கண்கள்...! அகல விரிந்த கண்கள்...!

சற்றே சிவந்த கண்கள்...!

தீர்க்கமாய் இவளை ஊடுருவிப் பார்த்த கண்கள்...!

'உருவமே தெரியவில்லை. ஆனால் கண்கள் மட்டும் தெரிகிறதே...?'

'என்ன இது...?'

பீதியில்... அதிர்ச்சியில்... திகிலில்... பயத்தில்... அற்புதா, அந்தப் பிரதேசமே அதிரும்படி அலறினாள்.

## 5

இமைகள் பாறாங்கல்லாய் கனத்தன.

சிரமப்பட்டு கண்களை மெல்லத் திறந்து... பார்வையை சுழல விட்டாள்.

உத்தரத்திலிருந்த மரக் கட்டைகள் பார்வைக்கு சிக்கின.

'என்ன இது? நான் வீட்டிற்கு எப்படி வந்தேன்?

அறையில் நான் படுத்திருக்கிறேனே? அது எப்படி?

மேலே இருந்து நான் குதித்தேனே?

ஏதோவொரு உருவம் என்னைத் தாங்கியதே?

இருளில் இரண்டு கண்கள் மட்டும் தெரிந்ததே?

பயத்தில் நான் அலறினேனே?

அதன் பின்பு... இப்போது இங்கிருக்கிறேன்...

அப்படியென்றால்... நடந்தது எல்லாம் கனவா?

ஆமாம்... கனவாகத்தான் இருக்க வேண்டும்.

அந்தரத்தில் எந்த உருவமாவது மிதக்குமா?

என்னைத் தாங்கிய உருவத்திற்கு கரங்களோ... வேறு எந்த அவயமோ இல்லையே?

வெறும் கண்கள் மட்டுமா இருக்கும்?

அதனால்... இது நிச்சயமாய் கனவாய்த்தான் இருக்க முடியும்.

கனவில்... உணர்வுப்பூர்வமாக... அணு அணுவாக வலியை உணர முடியுமா?

குடல் முறுக்கியதே?... அடி வயிறு கலங்கியதே...? இதயம் எம்பிக் குதித்தது...? வயிற்றில் விண் என்று பயத்தில் வேதனை உண்டானதே...?

அதெல்லாம் கனவாக இருக்க முடியாதே...?

ஆமாம்... காற்றைக் கிழித்துக் கொண்டு குதித்தபோது ஏற்பட்ட நடுக்கம்... இன்னமும் உடலில் மிச்சமிருக்கிறதே? நடந்தது நிஜம்தான்...!'

குழப்பம் படர்ந்த விழிகளுடன் நிமிர்ந்து அமர்ந்தவள்... குனிந்து தனது பாதங்களைப் பார்த்தாள்.

பாதங்களில் புழுதியும் அழுக்கும் அப்பிக் கொண்டிருந்தன.

செருப்பு அணியாமல் தானே... வெகு வேகமாய் தெருவில் இறங்கி நடந்தாள்...!

பாதங்களில் சிமெண்ட் கலவை மண் படிந்திருந்ததைப் பார்த்ததும்... அவளுக்கு ஊர்ஜிதமாகி விட்டது.



வாட்டர் டேங்கின் அடியில் படிகட்டுகளுக்கு கீழே கிடந்த இந்த மண்ணை மிதித்து தானே... இவள் நடந்து மேலே சென்றாள்...

அப்படியென்றால்... நடந்தது நிஜம்தான்...!

என்னைத் தாங்கி காப்பாற்றியது யார்...?

எந்த சாதாரண மனிதனாலும் அந்தரத்தில் மிதக்க முடியுமா?

மிதந்ததோடு என்னைத் தாங்கி நிற்கவும் முடியுமா?

இது சாத்தியமான காரியம் இல்லையே?

இந்த மாதிர் அசாத்தியமான காரியத்தை யாராலும் செய்ய இயலாதே...?

இது மானுடத்துக்கு அப்பாற்பட்ட சக்தி அல்லவா?

ஒருவேளை... அப்பா எழுதி வைத்ததுபோல்... அரூபமான ரூபத்தில் சித்தர் வந்து என்னைக் காப்பாற்றி இருப்பாரோ?

கண்டிப்பாக அப்படித்தான் இருக்க வேண்டும்...

முடிவுக்கு வந்த தருணத்தில்... அற்புதாவுக்கு சிலீரென்று மேனி புல்லரித்தது.

'பகவானே! இதுதான் ஏன் எனக்கு அப்போதே புரிபடவில்லை?

தீட்சணியம்மிகுந்த கண்களைப் பார்த்தும்... தீர்க்கமான பார்வையை ஊடுருவிப் பார்த்தும்... இந்த மரமண்டைக்கு ஒன்றுமே புரியாமல் போய் விட்டதே?

அறியாமைத் தனத்தால் அலறித் தொலைத்தேனே? அப்பா ஒரு தீர்க்க தரிசியாகத்தான் இருக்க வேண்டும்.

அவர் எழுதி வைத்தது போலவே... சித்தர் என்னைத் தடுத்து காத்து விட்டாரே?

அவரே தமது கைகளில் என்னைத் தாங்கியிருக்கிறாரே?

இதற்கு நான் கொடுத்து அல்லவா வைத்திருக்க வேண்டும்?

சற்று நேரத்திற்கு முன்னர்... எத்தனையோ இன்னல் களைப் பட்டுக் கொண்டிருக்கிறேன்.

எந்த தெய்வமும் சித்தரும் கண் திறந்து பார்க்கவே இல்லையே? என்று நொந்து போய் நான் நிந்தித்து விட்டேனே...?

இது மகா பாவம் அல்லவா?

பகவானே...! அறியாமையால் முட்டாள்தனம் செய்து விட்டேன்.

என்னை மன்னிக்கவும். யுகம் யுகமாய் தவமிருந்தாலும் கிடைக்காத பாக்கியம் எனக்கு கிட்டியும்... நான் அந்த தருணத்தில் அலறி பயந்து மூடத்தனம் செய்து விட்டேனே...?

'அறியாமையால் செய்த பிழைக்கு... கண்டிப்பாக மன்னிப்பு உண்டு' என்று அப்பா அடிக்கடி சொல்வாரே...!

தீட்சணியம் மிகுந்த... சற்றே சிவந்த கண்கள்... அப்படியே என் மனதில் கல்வெட்டாய் பதிந்து விட்டனவே...!

ஆமாம்... கண்களை மட்டும் காட்டி 'நேத்திர தரிசனம்' தந்த சித்தர் யாராக இருக்கும்?

இந்த சித்தர்... என்னைக் காத்து ரட்சித்த சித்தர் யார் என்று தெரியவில்லையே...?



அப்பாவுக்கு இவர் இஷ்ட தெய்வமாக இருக்க வேண்டும்.

அப்பா அடிக்கடி கொல்லி மலையில்... கானகத்துக்குள் போய் சித்தர் குகைகளில்... அதன் வாசலருகே அமர்ந்து தியானம் செய்து வருவாரே?

அப்பா எப்போதுமே 'சித்தர் ஸ்வாமிகள்' என்றுதான் குறிப்பிடுவது வழக்கம்...!

அவ்வளவு மரியாதை நிமித்தமாகத்தானே அப்பா பேசுவார்...

சரி... இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?

தற்கொலை செய்வதை சித்தர் தடுத்து விட்டார்.

இந்த வீட்டில் நான் தொடர்ந்து வசிக்கவும் முடியாதே...?

சித்தர் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு... பேசாமல் நானும் கொல்லி மலைக்கே சென்று விட்டால் என்ன?

எனது பெற்றோர்களுக்கு பிடித்தமான மலை வாசஸ்தலம்... கொல்லிமலை!

''கொல்லி மலை ஒரு புண்ணிய பூமி! சித்தர்கள் வாசம் செய்யும் ஸ்தலம்' என்று அப்பா அடிக்கடி கூற நான் கேட்டிருக்கிறேன்.

அங்குதானே எனது தாய் மரகதம் ஆகாய கங்கை அருவி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு மறைந்தாள்...?

'அப்பாவும் மனைவி மரகதம் போன இடத்துக்கே நானும் போகிறேன்' என்று எழுதி வைத்துவிட்டுச் சென்றாரே...?

இந்த வீட்டில்.... நரகத்தில் இருப்பதைக் காட்டிலும் கொல்லி மலைக்குச் சென்று விடலாம்.

அங்கு சென்றால்... ஏதாவது மார்க்கம் பிறக்கும் என்று சின்னதாய் ஒரு நம்பிக்கை எனக்குள் முளைவிட்டிருக்கிறது.

என் பெற்றோர்களின் பாதம்பட்ட புனித மண்ணில்... நான் மறைந்தாலும் சந்தோஷம் தான்...

சாவிலிருந்து காப்பாற்றிய சித்தர்... கண்டிப்பாய் அங்கு எனக்கொரு வழி காட்டுவார் என்று தோன்றியது.

இந்த எண்ணம் சித்தரால்கூட தோற்றுவிக்கப் பட்டிருக்கலாமே?

எண்ணுவதும்... எண்ண வைப்பதும்... எல்லாமே அவரது செயல் அல்லவா?

இந்த சித்தர் யார்?

பதினெட்டு சித்தர்களில் ஒருவரா?

அல்லது இதர சித்தர்களில் ஒருவரா?

அதற்கும் கண்டிப்பாக விடை தெரியத்தான் போகிறது.

நம்பிக்கையைக் கைவிடாமல் இருந்தால்... சகலமும் புரியத்தான் போகிறது. சித்தரே புரிய வைக்கத்தான் போகிறார்.

இப்போது நேரத்தை வீணாக்காமல்... வீட்டை விட்டே செல்ல வேண்டியதுதான்...

விடிந்து விட்டால் யார் கண்ணிலாவது பட்டுத் தொலைக்க வேண்டியிருக்கும்.

அந்த அமர்நாத் படுபாவி... என்னையும் இந்த வீட்டையும் கண்காணிக்க யாரையாவது ஏவி விட்டிருப்பான்.



எதற்கு வம்பு?

வாழ்வோ...? சாவோ...?

சித்தரிடமிருந்து வரும் உத்தரவுப்படி... நான் நடந்து கொள்ள வேண்டியதுதான்...

உடம்பில் புதுத் தெம்பும் உற்சாகமும் ஊற்றெடுக்க... கலைந்த கூந்தலைக் கோதி கொண்டையிட்டவள்... ஒரு டிராவல் பேக்கில் இரண்டு நாட்களுக்கு தேவைப்பட்டவைகளை எடுத்து வைத்துக்கொண்டாள்.

தான் சேமித்து வைத்திருந்த பணத்தை கொஞ்சம் எடுத்து வைத்துக் கொண்டாள்.

அப்பாவின் சிறிய புகைப்படத்தை எடுத்து பேக்கினுள் வைத்தாள்.

வீட்டைத் தாழிட்டுவிட்டு... விடுவிடென்று நடந்தாள்.

சித்தியிடம் இன்னொரு சாவி இருப்பதால்... வீட்டைத் தாழிட்டு விட்டே வந்து விட்டாள்.

''அமர்நாத் எப்படி மிகச்சரியாக அந்த நேரத்திற்கு வந்தான்?''

சித்தப்பாவும் சித்தியும்... தங்கள் ஊருக்குப் புறப்பட்டுச் செல்வதைப் பற்றி ஃபோனில் கண்டிப்பாக தெரிவித்து இருப்பார்கள்.

தனிமையில் இருப்பது தெரிந்ததும்... இந்தப் பொறுக்கி பறந்து வந்து விட்டான் போலும்...'

யோசித்தபடியே பின்னால் திரும்பித் திரும்பி பார்த்தபடி நடந்தாள்.

தூரத்தில் ஐந்தாறு நாய்கள் குரைக்கும் சப்தம் கேட்டது.

பத்து நிமிட நடையில்... நெடுஞ்சாலையை அடைந்து விட்டிருந்தாள்.

சாலையோர விளக்குகளின் வெளிச்ச வெள்ளம்... இரவைப் பகலாக்கி காட்டியது.

பேருந்து நிறுத்தத்தில் நிற்பதற்கு தயக்கமாய் தான் இருந்தது.

அந்தக் கண்களை தரிசித்த பின்பு... பயத்திற்கு பதிலாக துணிவும் தைரியமும் அவளிடம் கை கோர்த்திருந்தது நிஜம்!

'சித்தர் ஸ்வாமி பக்க பலமாய் இருக்கும்போது நான் ஏன் பயந்து சாக வேண்டும்?'

அவரிடம் சரணாகதி அடைந்து விட்டேன். நடப்பதெல்லாம் அவரது செயல்...'

பாரத்தைப அவரது பாதங்களில் வைத்து விட்டதால்... துக்கமும் கவலையும் அகன்று... மனம் இறகு போல் இலேசானது உண்மைதான்...!

தூரத்தில் சொகுசுப் பேருந்து வருவதைப் பார்த்ததும் இரண்டடி முன்னால் வந்து நின்று கையை அசைத்தாள்.

பஸ் சரக்கென்று வந்து நின்றதும்... 'அப்பாடா என்ற பெருமூச்சோடு அவசரமாய் ஏறினாள்...

காலியாய் கிடந்த இருக்கையைப் பார்த்து நிம்மதியாய் அமர்ந்து கொண்டாள்.

பஸ் விரைந்தது. விதியும் விரட்டிக் கொண்டு போனது.



# 6

'தினச்சுடர்' பத்திரிகை அலுவலகம்!

ஆஃப் எடிட்டராய் இருந்த அர்ஜுன்... பரபரப்பாய் ஃபைலைப் புரட்டி 'மாலைச் செய்தி'யை சரிபார்த்துக் கொண்டிருந்தான்.

ஆறடி உயரத்தில் உடைத்த கோதுமை நிறத்தில் பார்ப்பதற்கு களையாய் இருந்தான்.

இண்டர்காம் சப்தித்தது. எடுத்தான்.

''அர்ஜுன்!''

அப்பா சுப்பிரமணியம் தான்...

''என்னப்பா?''

''ஶீக்கிரமா வீட்டுக் வர்றியா?''

''என்னப்பா விஷயம்...?''

''வா! நேர்லே பேச வேண்டிய விஷயம். ரொம்ப முக்கியம்மா... லேட் பண்ணாம சீக்கிரமா வா...''

''அப்பா! உங்களுக்கு உடம்புக்கு ஒண்ணு மில்லையே?'' கவலையாய் கேட்டான் அர்ஜுன்.

''இல்லப்பா... அதெல்லாம் ஒண்ணுமில்ல...''

''நியூஸை சரி பார்த்துட்டிருக்கேன். அஞ்சு நிமிஷத்துல புறப்பட்டுடறேன்...''

''சரி அர்ஜுன்...''

அர்ஜுனுக்கு அதற்கு மேல் இருப்புக் கொள்ளவில்லை.

'விஷயம் என்னவாக இருக்கும்?'

கடந்த வருடம் வரை சுப்பிரமணியம் தான் சீஃப் எடிட்டராக இருந்தார்.

பல வருடமாய் பாடுபட்டு 'தினச்சுடரை' நம்பர் ஒன் பத்திரிகையாக்கி காட்டியவர்.

படிப்பை முடித்ததும் அர்ஜுன் சப் எடிட்டராக இங்கு வந்து சேர்ந்து அப்பாவிடமிருந்து தொழில் நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்து... அப்பா எட்டடி பாய்ந்தால்... இவன் பதினாறு அடி பாய்ந்து கொண்டிருந்தான்.

அவருக்கு மாரடைப்பு வந்து விடவே... பொறுப்பை இவனிடம் ஒப்படைத்துவிட்டு வீட்டில் ஓய்வாய் அமர்ந்து விட்டிருந்தார்.

கால்மணி நேரத்தில்... அர்ஜுன் வீட்டில் இருந்தான்.

''என்னப்பா சமாச்சாரம்?''

பதற்றமாய் அவர் அருகே அமர்ந்தான்.

''உடனடியா நீ கொல்லி மலைக்குப் போ அர்ஜுன்!''

''எதுக்குப்பா?''

''ஒரு விஷயத்தைக் கேள்விப்பட்டேன். கேட்டதுமே பரபரப்பாயிடுச்சு. என்னோட ஹெல்த் மட்டும் நல்லாயிருந் திருந்தா... நானே கிளம்பி அங்கே போயிருப்பேன்...''

''கொல்லி மலையில் அரப்பாளீஸ்வரர் கோவிலுக்குப் பக்கத்துல கடை வச்சிருக்கிற சிவதாணு... நம்ம பத்திரிகை யோட முகவர்னு உனக்குத் தெரியுமே...?

அவர் இப்போதான் எனக்கு ஃபோன் பண்ணினாரு. ரொம்ப காலமா நல்ல பழக்கம்கிறதால நண்பர் மாதிரி அப்பப்போ ஃபோன்லே அளவளாவிப்போம்...''



''உம்... இது எனக்கு தெரிஞ்ச விஷயம்தான்! சிவதாணு அப்படி என்னதான் சொன்னாரு?''

''கொல்லி மலையில்... நிறைய மாந்திரீகர்கள் பல வருஷமா நடமாடிக்கிட்டிருக்காங்களாம்...

வசிய மை தயாரிக்கவும், துஷ்ட தேவதைகளைக் கட்டுப் படுத்தவும் அங்கே யாகம் வளர்த்து மந்திர உச்சாடனங்களை பண்ணிட்டிருக்காங்களாம்...

காவி உடை அணிந்த சாமியார்கள் பல பேரு அங்கே தியானம் பண்ணி... சித்தர் நிலைக்கு தங்களை உயர்த்திக் கிறதுக்காக விடாமுயற்சியோட காட்டையே சுத்தி வந்துட்டிருக்காங்களாம்...

கொல்லி மலைங்கிறது இன்றைக்கும் சித்தர் பூமிதான். சித்தர்கள் தவம் செஞ்ச குகைகள் ஆங்காங்கே இருக்காம்.

காட்டுப் பாதையில பல கிலோமீட்டர் மேலேறிப் போனா... கொல்லி மலைப் பாவை'ன்னு அம்மன் சன்னதி இருக்காம்.

பழங்காலத்துல கட்டப்பட்ட சிறிய கோவில் தானாம்... சித்தர்கள் தங்களது தபோவலிமையால... அந்தக் 'கொல்லி மலைப் பாவை'யை உருவாக்கினாங்களாம்...

பழனியில் இருக்கிற நவபாஷாண சிலையை போகர் சித்தர் உருவாக்கினாருன்னு... நாம்ப கேள்விப் பட்டிருக்கோம். இல்லையா?''

''ஆமாப்பா...''

''இதுவும்... கொல்லி மலைப் பாவையும் நவபாஷாணத்தால உருவாக்கப்பட்டதாகவும்... இப்போ இந்தச் சிலையை அபகரிக்க ஒரு கூட்டம் திட்டம் போட்டிருக்கிறதாகவும் தகவல் வந்திருக்கு.''

அர்ஜுன் சுவாரஸியமாய் அவரது முகத்தையே ஊன்றிப் பார்த்தான்.

''அது மட்டுமில்ல... அங்க ஒவ்வொரு பவுர்ணமியின் போதும்... காட்டாற்றுக்கு பக்கத்துல மலையோட மையப் பகுதியில... ஜோதி வடிவத்துல சித்தர் காட்சி தர்றாராம்.

அந்த ஜோதியோட வெளிச்சத்தைச் சுற்றிலும் அரிய விசேஷ வகை மூலிகைகள் உருவெடுக்குமாம்.

எங்குமே காணக் கிடைக்காத மூலிகைகள் அந்த ஜோதி வெளிச்சம் பட்ட பூமியிலிருந்து தலையெடுக்குமாம்.

அந்தக் கொல்லி மலைப்பாவை அம்மன்... ஒரு வீரியமான சக்தி படைச்சவங்களாம்...

கெட்ட எண்ணத்தோட காட்டுல திரியறவங்களை... அழகாக சிரிச்சு மயக்கி அருகில் அழைச்சு... சம்ஹாரம் பண்ணிடுவாங்களாம்...''

''அதானலதான் அந்த அம்மனுக்கு 'கொல்லி மலைப் பாவை'னு பேர் வந்திடுச்சோ?''

அர்ஜுன் புன்னகையுடன் கேட்டான்.

''அப்படித்தான் இருக்கணும். இதெல்லாம் தெரிஞ்சிருந்தும் துணிஞ்சு அந்தச் சிலையை அபகரிக்கணும்னு திட்டம் போட்டிருக்காங்களே?

அரிய வகை மூலிகைகள் என்பது நம்ம இந்தியப் மண்ணோட சொத்து! அதை பௌர்ணமியின் போது அபகரிக்கவும் சதிகாரர்கள் திட்டமிட்டிருக்காங்க...''

''நாம்ப அதைத் தடுக்கணும். சதிகாரர்களோட திட்டத்தை முடியடிச்சு... அதை செய்தியா நம்ம பத்திகையில வெளியிடணும்னு சொல்றீங்களாப்பா?''



''ஊகூம்... அந்தத் தப்பை நாம்ப பண்ணக் கூடாது அர்ஜுன்!''

''என்னை அங்கே போக வேணாம்னு சொல்றீங்களா?''

''இல்ல... நீ அங்க போகணும். கொல்லி மலைப் பாவையும் அரிய சக்தி படைச்ச மூலிகைகளும் நம்மோட ஆன்மீகச் சொத்து... அந்த சொத்தைக் காப்பாத்தறது மட்டும்தான் உன் வேலை...''

இது ஆன்மீக ரகசியம்... இதை வெளியில சொல்றது உசிதம் இல்ல... சொல்லவும் கூடாதுப்பா...

நானும் பலவாட்டி கொல்லி மலைக்குப் போய் வந்தவன்தான். சித்தர்கள் நடமாடறதால்... ஆன்மீக அதிர்வுகள் நிரம்பிய இடம் அது! அதை நான் அனுபவப் பூர்வமா உணர்ந்திருக்கேன்.

என்னோட மகனால முடிஞ்ச கைங்கரியத்தை செய்துட்டு வரணும்னு... எனக்குள்ளே ஒரு உந்துதல்...

அது மட்டுமில்ல அர்ஜுன்! சிவதாணு மூலமா இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டதும்... ஃபோனை வச்சுட்டு தீவிரமா இதைப் பத்தி கண்ணை மூடி சிந்திச்சுட்டிருந்தேன்.

ரொம்ப நேரமா சிந்திச்சிட்டு... அப்படியே கண் அசந்து தூங்கிட்டேன்.

கனவுல கும்மிருட்டுல திடீர்னு ஒரு ஜோடி கண்கள் மட்டும் பிரமாண்டமா தெரிஞ்சது.

தீட்சணியம் மிக்க கண்கள்... தீர்க்கமா என்னையே பார்த்த கண்களை... நேருக்கு நேரா என்னால சந்திக்க முடியலை.

உருவம் எதுவும் கண்ணுக்குப் புலப்படலை...

ஆனா... அந்தக் கண்களைப் பார்த்ததும் எனக்கு மெய் சிலிர்த்து... இனம் புரியாத பரவசம் ஏற்பட்டுச்சு.

என்னையும் அறியாம... அந்த தெய்வீகக் கண்களைப் பார்த்து கை கூப்பி வணங்கினேன்.

''சுப்பிரமணியம்! உன் மகனை 'கொல்லி மலைக்கு' அனுப்பி வை... அவனால ஒரு காரியம் ஆக வேண்டி இருக்கிறது'' அப்படின்னு அசரீரி மாதிரி குரல் மட்டும் கேட்டுச்சு.

மறுகணமே மந்திர சக்திக்கு கட்டுண்ட மாதிரி... நான் வேக வேகமா தலையாட்டி ''சரிங்க சாமி! கட்டாயமா உங்க உத்தரவுப்படி அர்ஜுனை அனுப்பி வைச்சுடறேன்'னு சொன்னேன்.

கனவு கலைஞ்சு எந்திரிச்ச பின்பும்... எனக்கு மெய் சிலிர்ப்பு அடங்கவே இல்லை.

அதே தருணத்தில்... அந்த அசரீரி திரும்பத் திரும்ப என் காதுல எதிரொலிச்ச மாதிரி இருந்துச்சு.

கனவு கலைஞ்சு போய் சில கணங்கள் ஆகியும்... அந்த அசரீரி கேட்டுட்டே இருக்கவே... நா ஆடிப் போயிட்டேன்.

சரி! இது சாதாரண விஷயமில்ல ஏதோவொரு அப்பாற்பட்ட சக்தி... ஏதோவொரு சித்தர்கிட்டேயிருந்து நமக்கு உத்தரவு வந்திருக்குன்னு மட்டும்... தெளிவா விளங்கிடுச்சு.

அதுக்கு அப்புறம் தான் நான் உனக்கு ஃபோன் பண்ணி கூப்பிட்டேன்.

மிகப்பெரிய அற்புதம் இன்னிக்கு நடந்திருக்கு அர்ஜுன்!'' சிலாகித்துப் பேசினார் சுப்பிரமணியம்.



''கண்டிப்பா... இது ஒரு 'மிராக்கில்' தான் அப்பா!

நான் இன்னிக்கு நைட்டுலே கொல்லிமலைக்கு ளெம்பிடறேன். அப்பா!''

''குட்! எனக்கு இன்னொரு சுவாரஸியமான விஷயம் ஞாபகத்துக்கு வருது அர்ஜுன்!''

''என்னப்பா அது?''

''போன வருஷம் உன்னோட கைரேகையை எடுத்துக்கிட்டு வைத்தீஸ்வரன் கோவிலுக்குப் போயிருந்தேன். சாமி தரிசனத்தை முடிச்சதும்... அங்கே பிரபலமா இருக்கிற நாடி ஜோதிட நிலையத்துக்குப் போனேன்.

உன்னோட ரேகைக்கு ஏடு பார்த்து சொல்லச் சொன்னேன். அப்போ அந்த ஜோதிடர் உன் பேரு, ஊரு, படிப்பு அங்க அடையாளம் எல்லாத்தையும்... ஓலைச் சுவடியிலேர்ந்து கரெக்டா சொல்லிட்டு வந்தாரு.

என்னோட பேரும் உங்கம்மா செந்தூரத்தோட பேரும்கூட சரியா சொல்லப்பட்டிருந்துச்சு.

நீ பிறந்தவுடனே உன்னோட அம்மா ஜன்னி கண்டு இறந்ததையும் கூடச் சொன்னாரு.

கடைசியா ஒரு விஷயம் சொன்னாரு. 'வல்வில் ஓரி ஆட்சி செய்த இடத்துல இந்த வாலிபன் தன்னோட வாழ்க்கைத் துணைவியை சந்திப்பான்' அப்படின்னு வாக்கு வந்தது...

அப்போ நான் இதை சட்டை செய்யலை. இப்போ நான் அதை நம்பறேன்... நாடியில வந்த வாக்கும், சித்தரோட உத்தரவுக்கும் உள்ள சம்பந்தத்தை நெனைக்கும் போதே புல்லரிக்குது...'' என்றார் சுப்பிரமணியம்.

''என்னப்பா சொல்றீங்க? இதுக்கும் நான் கொல்லி மலைக்கு பிரயாணப் படறதுக்கும் என்னப்பா சம்பந்தம் இருக்கு? புரியலையே...?''

''சம்பந்தம் இருக்கு அர்ஜுன்! வல்வில் ஓரி ஆட்சி செய்தது எந்த இடம்னு நெனைக்கிறே...? இதே கொல்லிமலைதான்.''

''மைகாட்! அப்படியாப்பா? ஆச்சரியமா இருக்கே...''

''நீயும் நானும்... அப்பா புள்ளை உறவைத் தாண்டி... ஒரு தோழமையோட ஃபிரண்ட்ஸ் மாதிரிதானே பழகறோம்?

'உனக்கேத்த பொண்ணு பார்க்கிறேன்'னு நான் சொன்னப்போ... ''போங்கப்பா! எனக்கேத்த பொண்ணு இவதான்... இவதான் என்னோட மனைவியாகத் தகுந்தவள்'னு... யாரைப் பார்க்கும்போது தோணுதோ...? அவளைத்தான் கட்டிப்பேன். அதுவரை கல்யாணப் பேச்சை எடுக்காதீங்க...

அப்பேர்ப்பட்டவளை நான் சந்திக்கும் போது... நானே உங்ககிட்டே வந்து பேசறேன் அப்பா! அதுவரைக்கும் காத்திருக்கன்னு நீ சொல்லிட்டே...

நானும் டீசண்ட்டா அந்தப் பேச்சையே எடுக்காம இருந்தேன். உன்னோட வாழ்க்கைத் துணைவியை நீ கொல்லி மலையில சந்திக்கப் போறே அர்ஜுன்! வாழ்த்துக்கள்...''

''தேங்க் யூ அப்பா! இந்த விஞ்ஞான யுகத்திலும்... நம் சக்திக்கு மீறின சம்பவங்கள் நிகழ்ந்து... நமக்கும் மேலே ஒரு சக்தி இருக்குதுன்னு புரிய வர்றப்போ... நிஜமாவே மெய்சிலிர்த்து தான் போகுதுப்பா...''

புல்லரித்த தன் கரத்தை ஒருமுறை குனிந்து பார்த்தபடி பேசினான் அர்ஜுன்.



''வாஸ்தவம்தான்...''

''ரெட்டிப்பு சுவாரஸ்யம் ஏற்பட்டதால... உள்ளுக்குள்ளே உத்வேகமும் பரபரப்பும் உற்சாகமும் ஊற்றெடுக்குது... பிரயாணத்துக்கு தேவைப்பட்டதை எடுத்து வச்சுக்கிறேன் அப்பா!''

''உம்... போறப்போ மறக்காம சிவதாணுவோட நம்பரைக் குறிச்சு வச்சுக்கோ... அது ஆபத்தான மலைப் பிரதேசம்!''

சதிகாரர்கள் கூட்டமா அலையுறாங்களாம். எத்தனை பேர் இருக்காங்களோ? நீ தனி மனுஷன்! ஜாக்கிரதையா இரு... சித்தர் உனக்கு துணையா இருப்பாரு.

அங்கே போனதும் சிவதாணுவை காண்டாக்ட் பண்ணு! உனக்கு வேண்டிய தகவல்களையும் உதவியையும் அவர் செய்வாரு... நீ போற காரியம் வெற்றி அடையறதுக்கு... என்னோட மனப்பூர்வமா வாழ்த்துக்கள்!'' நெகிழ்வுடன் பேசினார் சுப்பிரமணியம்.

சட்டென்று அவரது பாதங்களைத் தொட்டுப் பணிந்தான் அர்ஜுன்.

''தீர்க்காயுளோட ஒரு குறையும் இல்லாம அமோகமா இருப்பா.''

அவனது உச்சந்தலையில கை வைத்து ஆசீர்வதித்தார் சுப்பிரமணியம்.

குஷியில் சீட்டியடித்தபடி வளைந்து வளைந்து மேலேறிச் சென்ற படிக்கட்டுகளை... இரண்டிரண்டாக தாவி ஏறி மாடிக்குச் சென்றான் அர்ஜுன்.

விதியும் விகாரமாய் சிரித்தபடி அவனைப் பின் தொடர்ந்தது.

# 7

நாமக்கல்லில் சொகுசு பேருந்திலிருந்து உதிர்ந்த அற்புதா சுற்றும் முற்றும் பார்த்தாள்.

டிராவல் பேக்கை தோளில் தொங்கப் போட்டபடி... சாலையோரமிருந்த பெட்டிக்கடை அருகே சென்றாள்.

''ஐயா! கொல்லி மலைக்குப் போகணும். இங்கிருந்து எத்தனை கிலோ மீட்டர் தூரம் இருக்கும்? எந்த பஸ்ஸில் போகணும்?''

''கொல்லிமலை இங்கிருந்து கிட்டத்தட்ட அம்பத்து மூணு கிலோ மீட்டர் இருக்கும் தாயி! கால் மணி நேரத்துக்கு ஒரு தரம் பஸ் இருக்கு. இப்போ வர்றநேரம் தான்...

ரோட்டைத் தாண்டி எதிர்த்த மாதிரி போய் நின்னுக்கோ தாயி.''

''நன்றி ஐயா!''

தகவல் தெரிவித்த பெரியவரின் கடையில... ஏதாவது பணம் கொடுத்து வாங்க வேண்டும் என்று தோன்றியது.

வாழைப் பழத்தார் தொங்கியதைப் பார்த்ததும்... குடல் பரிதாபமாய் உறுமியது. பசி வயிற்றைக் கிள்ளியது.

கவலையில் ஒன்றுமே சாப்பிடவில்லை என்பது நினைவுக்கு வரவே... ''ரெண்டு பழம் குடுங்க ஐயா! பத்து ரூபாய்க்கு சூடம் குடுங்க... அப்படியே ஒரு தீப்பெட்டி யும்...'' என்றபடி இருபது ரூபாய்த்தாளை நீட்டினாள்.

''உன்கையாலதான் முதல் போணி'' என்றபடி ரூபாயை கண்களில் ஒற்றிக் கொண்டு... அவள் கேட்டதை எடுத்துக் கொடுத்தார் பெரியவர்.



கற்பூர வில்லைகளை பெரிய பேப்பரில் வைத்து பொட்டலமாகக் கட்டி நீட்டினார்.

சாலையைத் தாண்டி எதிர்ப்புறம் வந்து நிற்பதற்கும்... பஸ் வருவதற்கும் சரியாய் இருந்தது.

விரைந்து ஏறி இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

யாரோ பின் தொடர்வது போன்ற நெருடல் ஏற்பட... அவ்வப்போது பின்னால் திரும்பி... யாராவது தன்னைக் கூர்ந்து பார்க்கிறீர்களா? என்று நோட்டமிட்டுக் கொண்டாள்.

பேருந்து நிதானமாகத் தான் சென்றது.

அடிக்கடி கொண்டை ஊசி வளைவுகளைக் கடந்து கடந்து பேருந்து மலைப்பாதையில் ஊர்ந்து சென்றபோது... குடல் புரட்டிக் கொண்டு வந்தது.

ஜன்னலோரமாய் அமர்ந்திருந்ததால்... சிறு தடுப்புச்சுவரைத் தாண்டித் தெரிந்த அதல பாதாளத்தைக் கண்டபோது... தலை சுற்றி மயக்கம் வரும் போலிருந்தது.

விழிகளை இறுக மூடி இருக்கையில் சாய்ந்து கொண்டாள்.

''சித்தர் ஸ்வாமி! நேத்திர தரிசனம் தந்து என்னைக் காப்பாத்தினீங்க...

கண்டிப்பா என்னோட அப்பாவுக்கு நீங்க இஷ்ட தெய்வமாத்தான் இருப்பீங்க.

நீங்க யாருன்னு நா தெரிஞ்சுக்கணும் ஸ்வாமி!

அப்புறமா... என் அப்பா... என்ன ஆனாருன்னு தெரியணும். எதுக்காக இப்படி சொல்லாம கொள்ளாம அந்த நரகத்துல என்னை விட்டுட்டு போனாருன்னு தெரியணும்.

அதுக்கு அப்புறமா... எனக்கும் உங்க கிட்டேயிருந்து உத்தரவு வரணும் ஸ்வாமி!

இருன்னு சொன்னாலும் சரி... ஆகாச கங்கை அருவியில செத்துமடி'ன்னு சொன்னாலும் சரி...

நான் சந்தோஷமா அதை ஏத்துப்பேன்... முதல்லே நீங்க யாருங்கிறதை தயவு செஞ்சு எனக்கு காட்டிக் குடுக்கணும் ஸ்வாமி.

தாயும் தகப்பனும் இல்லாத அனாதை நான்!

இனிமே நீங்கதான் என்னோட 'தாயுமானவர்' உங்களைத் தஞ்சமடைஞ்சுட்டேன் ஸ்வாமி!''

மானசீகமாய் மனமுருக நெக்குருக வேண்டிக் கொண்டாள்.

அவள் இவ்வாறு வேண்டிக் கொண்டது தான் தாமதம்... அவளது மனக் கண்ணில்...

மீண்டும் அந்த தீட்சணியம் மிகுந்த கண்கள் காட்சியளித்தன.

அற்புதாவின் மூடிய இமைகள் மெல்ல அசைந்தன.

ஆனால்... அவள் விழிகளைத் திறக்கவில்லை.

நேற்று இருளின் பின்னணியில் அந்த விழிகளின் தரிசனம் கிட்டியது.

இன்றோ... பளீரென்ற வெளிச்சத்தில்... அந்த தெய்வீகமான கண்களை அவள் காண முடிந்தது.

'என்னது இது? இது என் பகல் கனவா?'

அல்லது... சதா சித்தர் ஸ்வாமியின் நினைவாகவே இருப்பதால்... இப்போது இந்த நேத்திர தரிசனம் எனக்கு கிட்டுகிறதோ...?



அப்படித்தான் இருக்க வேண்டும்.

என் விழிகளைத் திறந்துவிட... எனக்கு மனமே இல்லையே?

திறந்து விட்டால்... இந்த அற்புதக் காட்சி மறைந்து விடும் அல்லவா?

யாருக்கு கிடைக்கும் இந்த அரிய பாக்கியம்?

அனாதையாய் அகதியாய் நிர்க்கதியாய் நிற்கும் என்மீது சித்தர் மனம் இறங்கியிருக்கிறார்.

கருணை கொண்டு காட்சி தந்து... 'நான் இருக்கிறேன் உனக்கு! நிம்மதியாய் இரு மகளே!

கவலைப்படாதே...' என்று சூசகமாய் உணர்த்துகிறார் போலும்...!

ஆமாம்... அப்படித்தான் இருக்க வேண்டும்.

'நேத்திர' தரிசனத்தில்... இன்று ஒரு வித்தியாசத்தைக் காண முடிகிறதே?

தீட்சணியம் மிகுந்த கண்களில்... இப்போது வேறு விதமான பாவனை தென்படுகிறதே?

அந்தக் கண்களில்... புன்னகையும் பரிவும் தென்படுகிறதே...?

'சிரிக்கும் கண்கள்' என்று சொல்வார்களே? அதைப் போல அல்லவா இருக்கிறது.

இந்த இதமும், பரிவும், புன்னகையும் எதை உணர்த்துகின்றன?

'நானிருக்கிறேன் உனக்கு' என்ற ஆறுதல் மொழியைத் தாண்டி வேறு ஏதோவொன்று இருப்பதாக... என் மனதுக்குப் படுகிறதே...?

அது என்னவாக இருக்கும்?

எதுவாக இருந்தாலும் சரி...

இந்த தரிசனத்திற்கு கொடுத்து வைத்திருக்கிறேன்.'

''சித்தர் ஸ்வாமி! உமக்கு அனந்த கோடி நன்றி ஐயனே...! என் மேனியெல்லாம் சிலிர்க்கிறதே?

ஆண்டாண்டு தவமிருந்தாலும் கிட்டாத அற்புத தெய்வ தரிசனம்... எனக்கு இரண்டாவது தடவையா வாய்த்திருக்கே...! நான் பாக்கியசாலி ஸ்வாமி!

இதுவரை மனதில் மலையாய் அழுத்திக் கொண்டிருந்த பாரம் எல்லாம்... மாயமாய் விலகி விட்டதே?

உங்க கண்கள் அப்படி விலக்கி விட்டிருக்கு.

இந்தக் கண்கள் தெய்வீக கண்கள்... மாயக் கண்கள்.

மகாபாரதத்துல திருதராஷ்டிரன் கால முச்சூடும் குருடனாவே இருந்தவரு... அவருக்கு கிருஷ்ண பரமாத்மா வோட விஸ்வரூபம் தரிசனம் கிட்டியும்... கிருஷ்ணா! பரம்பொருளே! உன்னோட விஸ்வரூப தரிசனம் கிட்டியது என் பாக்கியம்...!

உன்னைப் பார்த்த என் கண்கள்... வேற எதையுமே பார்க்க விரும்பலை.

போதும்! என்னைத் திரும்பவும் பிறவிக் குருடனாக்கிடு!

கால முச்சூடும் இந்த தரிசனத்தையே மனக்கண்ணுல பார்த்துட்டு... கடைசியில உன் பாதாரவிந்தத்துல சரணடைஞ்சுடறேன்'னு... திருதராஷ்டிரன் வரம் கேட்டு மீண்டும் குருடனாயிட்டாரு.

அதைப் போல... இந்த தரிசனம் கிட்டிய மன நிறைவோட இந்த நிமிஷம் நான் உயிரை விட்டாலும்...



நிறைஞ்ச மனசோட ஆத்ம திருப்தியோட நான் கண்ணை மூடுவேன் ஸ்வாமி...''

மானசீகமாய் மீண்டும் பேசி முடித்ததும்தான் தாமதம்... டிரைவர் சட்டென்று எதற்கோ பிரேக் போட்டுவிட... தடாலென்று தடுமாறி முன் இருக்கையில் மோதிக் கொள்ள இருந்து... சமாளித்து... பின்னால் மீண்டும் சாய்ந்து அமர்ந்தாள்.

திடீரென்று பிரேக் போட்ட அதிர்ச்சியில்... அவள் சட்டென்று கண்களைத் திறந்து விட்டிருந்தாள்.

'சே!' சடன் பிரேக்' போட்டதிலே... திடுக்கிட்டுப் போய் கண்ணைத் திறந்துட்டேனே?

அந்த மாயக் கண்களோட தரிசனம்... சட்டுன்னு மறைஞ்சு போச்சே?

கண்ணைத் திறக்கவே மனசில்லாம தானே... இவ்ளோ நேரமா சிலாகிச்சு மனமுருகப் பேசி சித்தர் ஸ்வாமி கிட்டே வேண்டிக்கிட்டிருந்தேன்.

இத்தனை மணித்துளிகளுக்குதான்... அந்த சந்தோஷம் நீடிக்கணும்னு பிராப்தம் போலிருக்கு...'

பெருமூச்சு விட்டபடி பக்கவாட்டில் ஜன்னல் வழியே தெரிந்த மலைத் தொடரில் பார்வையைப் பதித்தாள்.

மேகங்கள் பஞ்சுப் பொதிகளாய் தவழ்ந்து மலைத் தொடர்களை அணைத்து முத்தமிட்டிருந்தன.

மனதிலிருந்த பாரம் நீங்கியிருந்ததால்... அற்புதா விழிகள் விரிய இயற்கையழகை ரசித்துப் பார்த்தாள்.

தன்னை மறந்து லயித்து ரசிக்க ஆரம்பித்த தருணத்தில்...

அங்கே...

## 8

மேகங்கள் இறங்கி பஞ்சு பஞ்சாய் தவழ்ந்த அழகையும்... காட்டு மரங்களில் புஷ்பித்திருந்த வண்ண மலர்களையும் குழந்தை போல் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் அற்புதா.

மலைத் தொடரைத் தாண்டித் தெரிந்த... அகன்ற வான் வெளியில் தற்செயலாய் பார்வையைப் பதித்தாள்.

இதமான நீல நிறத்திலிருந்த ஆகாயத்தில்...

திடீரென்று இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்குமாய் பளீரென்று மின்னல் போல் ஏதோவொன்று சீறிப் பாய்ந்தது.

'என்னது இது? கருமேகங்கள் எதுவும் சூழவே இல்லையே? பளிச்சுன்னு இருக்கிற தெளிந்த வானத்துலகூட மின்னல் தோன்றுமோ?

இதென்ன அதிசயமா இருக்கு?

ஒருவேளை... வனாந்தரத்துல மலைப்பிரதேசத்துல இதெல்லாம் சகஜம் தானோ?'

கண நேரத்தில் அவளுக்குள் கேள்விகள் தலை தூக்கின. மறுகணம்...

இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரை... விஸ்வரூபத்தில் இரண்டு கண்கள் பிரமாண்டமாய் காட்சியளித்தன.

விழிகளை அகல விரித்து மிரட்சியுடன் பார்த்தாள் அற்புதா.

அடுத்த கணத்தில்...

மாயக் கண்கள் மட்டுமல்ல...



ஜடாமுடியுடன் சித்தரின் முழு திருவுருவக் காட்சி...!

ஜடா முடியிலிருந்து பாதுகைகள் வரை... விஸ்வரூபமாய் தோன்றிய சித்தரின் உருவத்தைப் பார்த்ததும்... உச்சி முதல் உள்ளங்கால் வரை மெய் சிலிர்த்தது.

கைகளை உயரத் தூக்கி வணங்கி பரவசத்தில் கோவென்று கதற வேண்டும் போலிருந்தது.

தாரைதாரையாய் கண்ணீர் வடிய... நடுங்கும் கரங்களில் ஜன்னல் கம்பிகளை இறுகப் பற்றிக் கொண்டாள்.

நீர்த்திரையிட்ட விழிகள் இமைக்கவும் மறந்தன.

முனிவர் வலது கரத்தை உயர்த்தி அபய ஹஸ்தம் காட்டி இவளை ஆசீர்வதித்தார்.

மறுகணம்... அவரது வலது கையில்... அந்த உள்ளங்கையில் ஒரு முகம் தோன்றியது.

அது...

ஒரு இளைஞனின் வசீகரமான முகம்...!

மந்தகாசமாய் புன்னகைக்கும் களையான முகம்...!

நீர்த்திரையிட்ட விழிகளைக் கசக்கி விட்டுக் கொண்டு கூர்ந்து பார்த்தாள் அற்புதா.

'யார் இவர்?'

எதற்காக சித்தர்... இப்படி இளைஞரின் முகத்தை எனக்கு காட்டுகிறார்?

அபய ஹஸ்தம் காட்டி காட்சியளிப்பதோடு நிறுத்திக் கொண்டிருக்கலாமே...?

என்ன காரணத்தால் சித்தர் இப்படி செய்கிறார்?'

குழப்பம் படர்ந்த விழிளுடன் அண்ணாந்து... சித்தரின் முகத்தை... அந்தக் கண்களை ஊடுருவினாள்.

அந்தக் கண்களில் புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது.

'இதற்கு என்ன அர்த்தம்?'

சூசகமாக... பூடகமாக... எதை உணர்த்துகிறார் என்று இந்த மரமண்டைக்கு புரியவில்லையே?'

இவள் பரிதாபமாய் பார்த்ததும்... சித்தரின் இதழ்க்கடையில் குறு நகை பூத்தது.

மறுகணம்... அவரது திருவுருவம் சட்டென்று மறைந்தது.

பார்வையை அவசரமாகச் சுழற்றி... நீல வண்ண ஆகாயத்தை ஆராய்ந்தாள்.

அந்தக் கோடிக்கும் இந்தக் கோடிக்குமாய் ஆகாயத்தைப் பார்வையால் அளந்ததுதான் மிச்சம்...!

வந்த சுவடு தெரியாமல் மறைந்துவிட்டிருந்தார் சித்தர்.

'அந்த இளைஞன்... சித்தரின் உள்ளங்கையில் தோன்றிய இளைஞன் யாராக இருக்கும்?'

இதற்கு என்ன அர்த்தம்?

அப்பா இருந்திருந்தால்... அவர் இந்தக் காட்சியைக் கண்டிருந்தால்... கண்டிப்பாக சூட்சுமத்தைப் புரிந்து கொண்டிருப்பார்.

இந்த சூட்சுமம் எனக்கு எப்போது புரியப் போகிறது?

இன்னமும்... இந்த சித்தர் யார் என்றே தெரியவில்லையே?''

தலைக்குள் வண்டு குடைந்தது.



தனக்குள் பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டு குழம்பிய வண்ணம் இருந்தாள் அற்புதா.

யோசனையில் மூழ்கி இருந்தபடியால் நேரம் போனதே தெரியவில்லை.

பஸ் கொல்லி மலையைச் சென்றடைந்ததும்... பஸ்ஸை விட்டு இறங்கியவளுக்கு ஆகாய கங்கை அருவியை உடனடியாகப் பார்த்தே ஆக வேண்டும் என்ற எண்ணம் எழும்பியது.

'ஆகாய கங்கை' அருவிக்குச் செல்லும் வழி என்று அம்புக்குறி போட்ட பலகையைப் பார்த்துவிட்டு... இடதுபுறமாய் பிரிந்து மலைப் பாதையில் வேகமாய் நடந்தாள்.

சித்தரின் தரிசனம் கிட்டியதும்... அவரது திரு உருவத்தைக் கண் குளிர சேவித்ததும்... அற்புதாவுக்கு உடம்பில் புதுபலம் ஏற்பட்டாற் போலிருந்தது.

வயிற்றைக் கிள்ளியெடுத்த பசிகூட... பஞ்சாய் பறந்து விட்டிருந்தது.

பாதையோரமாய் விதவிதமான மூலிகை வேர்களையும் கிழங்குகளையும் குவியல் குவியலாக வைத்து விற்றுக் கொண்டிருந்தார்கள்.

''முடவாதத்தை நீக்குற மூலிகை கிழங்கு இருக்கும்மா... இதோ... இது பக்கவாதத்தை குணப்படுத்தற வேரு...'' கூவிக் கூவி விற்றுக் கொண்டிருந்தனர்.

சிறு சோப்பு, ஷாம்பூ, சீயக்காய் தூள், எண்ணெய் பாக்கெட்டுகள், சீப்புகளைபரத்தி வைத்து விற்பனை செய்து வந்த வயதான பெண்மணி!

இருபுறமும் வேடிக்கை பார்த்தபடியே நடந்தாள்.

ஆகாய கங்கை அருவி...!

மருண்டு போய் அண்ணாந்து பார்த்தாள் அற்புதா.

'அப்பப்பா' எவ்ளோ உயரத்திலிருந்து அருவித் தண்ணி கொட்டுகிறது?

ஆகாய கங்கைன்னு பேருக்கேத்த மாதிரி... வானத்திலிருந்து கொட்டற மாதிரியல்ல இருக்கு...?

வெள்ளியை உருக்கி கொட்டி விட்ட மாதிரி என்னவொரு அழகு?

அருவி விழுற வேகத்துக்கு சுற்றிலும் வெள்ளைப்புகை கிளம்புவது போலிருக்கே...?

இவ்வளவு பெரிய அருவியை... இதுக்கு முன்னாடி நான் எங்கேயுமே பார்த்ததே இல்லையே...?

இதில் தான் கடைசியா என்னோட அம்மா குளிச்சிருக்கா... அப்படியே இந்த உலகத்தைவிட்டு மறைஞ்சு போயிட்டா...

பலவாட்டி அப்பாவும் அம்மாவும் சிலாசிச்சு ஸ்நானம் செய்த இடமாச்சே?

அவங்களை இழந்து நான் மட்டும் அனாதையா வந்து இதைப் பார்த்து ரசிக்கணும்னு... விதி இருக்கு போலிருக்கு.

சரி... நானும் அருவித் தண்ணியில ஆசை தீரக் குளிச்சிட்டு... அப்பா அடிக்கடி வந்து வணங்கின அரப்பாளீஸ்வரர் சிவன் கோவிலுக்குப் போயிட்டு... மலை உச்சியில எங்கேயோ இருக்கிற கொல்லிமலைப் பாவை அம்மனை தரிசனம் செய்ய வேண்டியதுதான்.



பெத்தவங்களோட கால் பதிஞ்ச இடங்களை... ஒரு இடம் பாக்கி விடாம நான் பார்த்தாகணும்.

நிறைய சித்தர்களோட குகைகள் இருக்கிறதாகவும்... குகை வாசல்லே உட்கார்ந்து தியானம் செஞ்சுட்டு வந்தாங்களே?

எப்படியாவது தேடி அலைஞ்சு அந்த இடத்துக்கு எல்லாம் நான் போயாகணும்...'

யோசித்தபடியே ஒரு ஓரமாய் இருந்த பாறைத் திட்டில் அமர்ந்து கொண்டிருந்தாள்.

பாறைத் திட்டின் அருகே மர இடுக்குகளிலிருந்து சிலுசிலுவென்று ஓடிவந்த தண்ணீரை ஆசையாய் தொட்டுப் பார்த்தாள்.

சிலீரென்றிருந்தது.

முகத்தைக் கழுவி பல் தேய்த்து தலைமுடியைக் கோதி விட்டுக் கொண்டாள்.

அருவியில் குளித்துக் கொண்டிருந்த கூட்டம் கலைந்து செல்லட்டும் என்று பொறுமையாய்க் காத்துக் கொண்டிருந்தாள்.

பையில் வாங்கி வைத்திருந்த இரண்டு வாழைப் பழங்களை எடுத்து உரித்து சாப்பிட்டாள்.

அவளது பார்வை பிரமிப்புடன் உயரத்திலிருந்து கொட்டிய அருவியின் மீதே நிலைத்திருந்தது.

''அம்மா! பூ வாங்கிக்கோம்மா... குளிச்சிட்டு வந்து தலைக்கும் வச்சிக்கலாம். சிவன் கோவிலுக்கும் எடுத்துட்டுப் போலாம்...''

மல்லி, முல்லை, செண்பகம், இருவாட்சி, சம்பங்கி, ஜாதிப்பூ, அரளி, காட்டு ரோஜா மலர்களைத் தொடுத்து கூடை நிறைய வைத்துக் கொண்டிருந்த வயதான பெண்மணி... இவளருகே வந்து நின்று கெஞ்சினாள்.

'அம்மா உயிரோடு இருந்திருந்தால் இந்தம்மாவோட வயசுதான் இருக்கும்...' நெகிழ்ந்து போனாள் அற்புதா.

''ரெண்டு முழம் முல்லைப்பூ குடுங்க! நாலு முழம் அரளிப்பூ...' பணத்தை எடுத்து நீட்டினாள்.

''உனக்கு முல்லைப் பூவுதான் பிடிக்குமா? இருவாட்சி வாங்கி வச்சுப்பாரு... கும்முனு வாசனை தூக்கும் தாயீ...''

''முல்லைப் பூவையும் சாமிக்கு தான் வாங்கறேன். எனக்காக இல்ல... எனக்கு பூ வச்சுக்கிறதிலே அவ்ளோ விருப்பமில்ல...

சாமிக்கு சாத்தி அழகு பார்க்கிறதுலேதான் எனக்கு இஷ்டம்...''

''பொண்ணா பொறந்துட்டு விருப்பமில்லைன்னு சொல்லக்கூடாது. தாயி! இந்தா... நீ கேட்டதைக் குடுத்துட்டேன். என் திருப்திக்கு இந்த இருவாட்சியைத் தர்றேன்... வாங்கிக்க... காசுகூட தர வேணாம் தாயீ...''

''எங்கம்மாவும் இப்படித்தான் சொல்வாங்க... இருவாட்சிக்கும் காசு எடுத்துக்கோங்க... இனாமா யார்கிட்டேயும் எதையும் வாங்க மாட்டேல...''

''சரி... எடுத்துக்கிறேன். வெளியூரா தாயீ?''

''ஆமா... சென்னை...''

''தனியாவா வந்திருக்கே?''



''உம்...! இங்க அடிக்கடி அப்பாவும் அம்மாவும் வந்து போயிட்டிருந்தாங்க... ஆமா... கொல்லி மலைப் பாவை அம்மன் கோவில் எங்கேயிருக்கு?''

''அது மலையுச்சியில இருக்கு. மலைப்பாதையில சிரமப்பட்டு ஏறணும். ரொம்ப தூரமாச்சே? சரியான காட்டுப்பாதை தாயீ...! தனியா போகவே முடியாது. வழி தவறிடும்...

நிறைய பேரு தொலைஞ்சு போயிருக்காங்க... எத்தனையோ பேரு திரும்பி வந்ததே இல்லே தெரியுமா?''

''நா கட்டாயமா அந்தக் கோவிலுக்குப் போயே ஆகணுமே?''

கவலையும் ஏமாற்றமுமாய்... அந்தப் பூக்காரியை ஏறிட்டாள் அற்புதா.

''போயே ஆகணுமா? அப்படின்னா... என்கூட வா தாயீ! அதோ... கூப்புடு தொலைவில போனா... ஒரு குடிசை வரும். அங்கே ஒரு வயசானவரு இருக்காரு... பல வருஷமா இந்தப் பிரதேசத்துலேயே இருக்கிறவரு...

அவரைக் கேட்டா... உன் கூடவே வந்து வழி காட்டுவாரு. இந்த வனாந்தரத்துக்கு அவருக்கு எல்லா இடமும் அத்துப்படி...!''

அற்புதாவின் முகம் மலர்ந்தது.

''அப்படியா? சித்தர்களோட குகைகள் இருக்காமே...?''

''ஆங்... அதை எல்லாத்தையும் அவரு காமிச்சு தருவாரு தாயீ...! நீ அவருக்கு ஏதாச்சும் பணம் குடுத்துரு தாயீ...''

''கண்டிப்பா... அவரு கூடவே வந்து வழி காட்டறதே பெரிய விஷயம்... அந்த ஐயா திருப்தி படறாப்பல நான் பணம் தந்துடறேன் அம்மா...!''

''அவரு இப்படித்தான் பொழைப்பை நடத்திட்டிருக்காரு. சரி! உடனே வர்றியா தாயி? வேற யாராச்சும் வந்து கேட்டா... அவரு பாட்டுக்கு வழி காட்டக் கிளம்பிடுவாரு... அதான்...!'' என்றபடி கூடையைத் தூக்கி தலையில வைத்துக் கொண்டாள்.

''அப்படியா? இதோ... வந்துடறேன்...''

பாறைத் திட்டிலிருந்து இறங்கி டிராவல் பேக்கை எடுத்துக் கொண்டு... பூக்காரியைப் பின்தொடர்ந்து நடந்தாள் அற்புதா.

ஆபத்து அங்கு காத்திருப்பதை அறியாதவளாய்... அப்பாவியாய் வானளாவ வளர்ந்து நின்ற காட்டு விருட்சங்களை வேடிக்கை பார்த்தபடியே சென்றாள்.

விதி சிரித்தது...!

## 9

**பூ**ஞ்சாரலுடன் வீசிய காற்றில்... கும்மென்று மூலிகைகளின் மணமும் கமழ்ந்திருந்தது.

மேகங்களை ஒட்டடை அடிக்கப் போகும் தினுசில்... வான் உயர வளர்ந்து செழித்திருந்த காட்டு மரங்கள் சுத்தமான ஆக்ஸிஜனைப் பிரசவித்துக் கொண்டிருந்தன.

காட்டு மரங்களில் படர்ந்து கொழித்திருந்த மிளகுக் கொடிகளை வியப்புடன் விழிகள் விரியப் பார்த்தபடி நடந்து கொண்டிருந்தாள் அற்புதா.

இயற்கையின் வனப்பில் அவள் தன்னையே மறந்துவிட்டிருந்தாள்.



'கூப்பிடு தொலைவில் குடிசை இருக்கிறது' என்று கூறிவிட்டு வெகு தூரம் காட்டுப்பாதையில் பூக்காரி தன்னை அழைத்துச் செல்கிறாளே?' என்ற பிரக்ஞை... அவளுக்கு ஏற்படவே இல்லை என்பது நிஜம்...!

எப்போதுமே கலா ரசனை கொண்டவர்கள்... தன்னை மட்டும் அல்ல... இந்த உலக நினைப்பையே சில தருணங்களில் மறந்து விடுவார்கள் என்பதற்கு... அற்புதா ஒரு உதாரணமாய் திகழ்ந்தாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

வேடிக்கை பார்த்துக் கொண்டே சென்றபோது... சிறுகல் தடுக்கி தடுமாறி விழ இருந்தவள்... எப்படியோ விழாமல் சமாளித்து நின்றாள்.

நிதானமாய் ஒரு கணம் நின்னு... தன் முன்னே நடந்து சென்ற பூக்காரியைப் பார்த்தாள்.

அப்போதுதான் அவளுக்கு சின்னதாய் ஒரு பொறி தட்டியது.

''அம்மா! கூப்பிடு தொலைவுன்னு சொன்னீங்களே? ரொம்ப தூரத்துக்கு நடந்து வந்துட்டே இருக்கிற மாதிரி தெரியுதேம்மா...'' என்றாள்.

''கூப்பிடு தொலைவுதான் தாயி! கரடுமுரடான காட்டுப் பாதையா இருக்கிறதால... உனக்கு அப்படித் தோணுது. பெரியவரோட குடிசையிலேர்ந்து குரல் கொடுத்தா... அருவிக் கரை வரைக்கும் கேட்கும்.

அங்கேயிருந்து சத்தம் போட்டா... இங்க கேட்கும்... இதோ... பக்கமா வந்துட்டோம் தாயீ...!''

சொன்னது போலவே... அந்த குடிசையை சமீபித்தனர்.

காட்டுச் செடிகளுக்கு மறைவில அந்த குடிசை இருந்தது.

தூரத்தில் இருந்து பார்த்தாள்... இப்படியொரு குடிசை இருப்பதை யாரும் சாமானியத்தில் கண்டு பிடிக்கவே முடியாது.

கிட்டத்தில் நெருங்கியதும்தான்... குடிசை பார்வைக்கு சிக்கியது.

குடிசையின் கூரை முழுவதிலும்... காட்டுக் கொடிகள் இஷ்டம்போல் செல்லமாய் படர்ந்திருந்தன.

''ஹை...! பச்சைப் பசேல்னு அழகா... பார்க்கிறவங்க கண்ணைப் பறிக்குதே?''

குழந்தையைப் போல் குதூகலித்தாள் அற்புதா.

குடிசையின் வாசலிலிருந்த திண்ணையில் பூக்கூடையை இறக்கி வைத்தாள் பூக்காரி.

''இதுக்கே அசந்து போனா எப்படி தாயீ? இன்னும் எவ்வளவோ அதிசயமான விஷயங்கள் இந்த வனாந்தரத்துல இருக்கே...?''

பூக்காரி கேட்டதும் பதிலுக்கு அற்புதா புன்னகைத்தாள்.

''பூலோக சுவர்க்கம்னா... அது இப்படித்தான் இருக்கும் போலிருக்கு...''

அதற்கு பதில் சொல்லாமல்... பூக்காரி குடிசையின் வாசலில் இருந்தபடி குரல் கொடுத்தாள்.

''ஐயா... பெரியவரே...!''

பதில் இல்லை.

''ஐயா... நான் காயாம்பூ வந்திருக்கேன்...''

அதற்கும் பதில் இல்லை.

அற்புதாவின் முகத்தில் ஏமாற்றம் முற்றுகையிட்டது.



''அந்த பெரியவரு... நாம்ப வரதுக்கு முன்னாடி எங்கேயாச்சும் போயிட்டாரோ? யாராவது நமக்கு முந்தி வந்து கூட்டிட்டுப் போயிட்டாங்களோ?''

''கவலைப் படாதே தாயீ!'' பெரியவருக்கு காது கொஞ்சம் மந்தம்... சத்தமா பேசினாத்தான் கேட்கும். எதுக்கும் நா உள்ளார போயி பார்க்கிறேன்...''

''சரி...''

பூக்காரி நிதானமாய் உள்ளே சென்றாள்.

'கூ... குக்கூ...' என்ற குயில்களின் இனிய குரல்களும்... 'கீச்... கீச்...' என்ற காட்டுப் பறவைகளின் கலகலத்வனியும் கேட்டவண்ணம் இருந்ததால்... அண்ணாந்து சுற்றும் முற்றும் பார்த்தபடி நின்றிருந்தாள்.

''தாயீ...! உள்ளார வாரு! பெரியவரு இங்கதான் உட்கார்ந்திருக்காரு... வா... வந்து இவரைப் பார்த்து நீயே கேளு தாயீ...''

குடிசைக்குள் இருந்து பூக்காரியின் குரல் மட்டும் வந்தது.

'அப்பாடா' என்று பெருத்த நிம்மதி நெஞ்சில் பரவ... டிராவல் பேக்கை வாசல் திண்ணையில் வைத்துவிட்டு... தலையை சற்றே குனிந்து உள்ளே சென்றாள் அற்புதா.

தொண்ணூறு வயதை எட்டிப் பிடித்த கிழவர்... முகம் கழுத்து கைகளில் ஏகப்பட்ட சுருக்கங்கள்...

அந்த காலத்து 'நெஞ்சம் மறப்பதில்லை' படத்தில் கிளைமாக்ஸ் காட்சியில் தோன்றும் கிழட்டு நம்பியாரைப் போல்... அப்படியொரு விகாரமான தோற்றம்! இடுப்பில் சாயம் போன காவி வேஷ்டி...!

திடுதிப்பென்று யார் முன்னாடியாவது வந்து நின்றால்... பார்ப்பவர்கள் அப்படியே அலறி விடுவார்கள்.

''ஹி... ஹிஹ்ஹி! காயாம்பூ...! ஒரு பெண்ணைக் கூட்டியாந்திருக்கேன்'னு சொன்னே...?

சாதாரண பொண்ணா அது? வன தேவதை மாதிரியில்ல இருக்கா...? நல்ல காரியம் செஞ்சிருக்கே... ஹி... ஹி...!''

முதிய விழிகள் அவளை மேலும் கீழுமாய் உறுத்துப் பார்த்து அளவெடுத்ததையும்... தொண்ணூறு வயதுக்கு சம்பந்தமே இல்லாமல் அநாகரீகமாய் கிழவர் பேசியதையும் கோணலாய் சிரித்ததையும் பார்த்ததும்...

மனதில் அருவருப்பு மண்டிக் கொண்டு வந்தது.

''இவர்தானா நீங்க சொன்ன பெரியவர்?'' கேட்டபடி திரும்பிப் பார்த்தாள்.

பக்கத்தில் நின்றிருந்த பூக்காரியைக் காணோம்.

திடுக்கிட்டு சுற்றும் முற்றும் பார்த்தாள்.

''அம்மா! அம்மா...!''

குரலை உயர்த்திக் கூப்பிட்டு பார்வையைச் சுழற்றித் தேடினாள்.

இவள்... பதற்றமாய் அங்கும் இங்கும் பூக்காரியைத் தேடியதும்... கிழவருக்கு சிரிப்பு பீறிட்டுக் கொண்டு வந்தது.

'ஹி... ஹிஹ்ஹி... ஹ.'

அந்த சப்தம் குடிசையில் ஒங்கி எதிரொலித்தது... இவளது செவிகளை இடி போல் தாக்கியது.

அற்புதாவின் மேனியெங்கும் பதற்றமும் பயமும் கிளை விட்டுப் படர்ந்தன.



ரேழியிலும் கூடத்திலும் கூடத்திலிருந்து தடுக்கப்பட்ட அடுக்களையிலும் தேடி விட்டு... பூக்காரி கண்ணில் படாததால்... உள்ளூர எச்சரிக்கை மணி ஒலிக்க... வாசலைத் தாண்டி ஓடிவிட எத்தனித்தாள் அற்புதா.

ரேழியைக் கடந்து வாசலருகே வந்தபோது... யாரோ பின்னாலிருந்து அவளது இடையை வளைத்துப் பிடித்தனர்.

''ஏ! கையை எடு...''

அந்தக் கையை இவள் அகற்றிவிட முனைந்தபோது... அந்தக் கையிலிருந்த வளையல் தட்டுப்பட்டது.

'இது பூக்காரியின் கரமல்லவா?'

திகிலுடன் பின்னால் திரும்பிப் பார்க்க முயன்றாள்.

அதற்குள் இவளது நாசியையும் வாயையும் சேர்த்து... பெரிய துணியால் பொத்தி அமுக்கினாள் பூக்காரி.

நாசிக்குப் பிடிக்காத வாடை...!

'ஐயோ! பெத்த தாயைப் போல... இவளை நினைத்தேனே? நம்பி பின்னால் வந்து மோசம் போனேனே?

இது மயக்க மருந்து போலிருக்கிறதே?

மோசமான இடத்தில் வந்து மாட்டிக் கொண்டேனே...?'

கண நேரத்தில் இத்தனை கேள்விகளும் அவளது மனதில் எழும்பின.

மறுகணம்... அவள் மயங்கிப் போனாள்.

அந்தகார இருட்டில் மூழ்கிப் போனாற் போல்... நினைவை இழந்தாள்.

## 10

அழகிய இமைகளுக்குள்... அற்புதாவின் விழிக் கோளங்கள் இங்கும் அங்குமாய் உருண்டன.

விழிகளைத் திறக்க முயன்றும் முடியவில்லை.

இமைகளின் மீது மிகப் பெரிய பாறாங்கற்கள் அழுத்தினாற் போலிருந்தது.

வெகுநேரம் மயக்கத்தில் ஆழ்ந்து கிடக்கிறோம் என்பது மட்டும் புரிந்தது.

வைராக்கியமாய் விடாமல் முயற்சி செய்ததற்கு மெல்ல பலன் கிடைத்தது.

மெதுவாக விழிகளைத் திறந்தாள்.

விழிகளில் எண்ணெய் படர்ந்திருப்பதைப்போல் மங்கலாகத் தான் தெரிந்தது.

கண்களைப் பலமுறை சிமிட்டிப் பார்த்தாள்.

இரு கைகளையும் சேர்த்து கயிறால் கட்டியிருந்தார்கள். கால்களும் கட்டப்பட்டிருந்தன.

'யார் இவர்கள்?'

எதற்காக என்னைப் பிடித்து வைத்திருக்கிறார்கள்?

அந்த பூக்காரி இப்படி நம்ப வைத்து கழுத்தை அறுத்து விட்டாளே?

அவளைப் போய்... அம்மாவின் ஸ்தானத்தில் வைத்துப் பார்த்தேனே?

அவளைப் பார்த்தால்... யாருக்குமே நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டு விடும்.



அப்படியொரு தோற்றத்தை வைத்துக் கொண்டு... எத்தனை இளம் பெண்களை ஏமாற்றிக் கடத்தினாளோ தெரியவில்லையே?

ஒருவேளை... கழுத்தில் கைகளில் இருக்கும் தங்க நகைகளுக்காக இப்படி செய்திருப்பார்களோ?

இல்லையே...? கழுத்திலும் கைகளிலும் நகைகள் கழற்றப்படவில்லையே?

ஐயோ...! நேற்றைக்கு தற்கொலை செய்து சாக இருந்தேன். சித்தர் என்னைத் தாங்கி காப்பாற்றினார்.

நேற்றும் இன்றும் அவரது மாயக் கண்களின் 'நேத்திர தரிசனம்' கிடைத்தது.

இது எல்லாவற்றையும்விட ஆகாயத்தில் இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்குமாய் மாயக் கண்கள் தோன்றியதோடு... சித்தர் ஸ்வாமியின் முழு திருவுருவ தரிசனமும் கிட்டியதே...?

இப்படியொரு ஆபத்து எனக்கு காத்திருப்பதால்தான்... முன்கூட்டியே காட்சி தந்தாரோ?

'நானிருக்கிறேன் மகளே! அஞ்சாதே! என்பதுபோல் சூட்சுமமாய் அப்படி ஹஸ்தம் காட்டி அருளினாரோ?

சித்தர் ஸ்வாமி எனக்கு காட்சி தந்ததும் காப்பாற்றியதும் விஸ்பரூப தரிசனம் தந்ததும்... நூறு சதவீதம் நிஜம் என்றால்... இப்போது நான் எதற்கு கவலைப்பட வேண்டும்?

நடப்பது நடக்கட்டும் வேடிக்கை பார்க்கலாம்.

கண்டிப்பாக... சித்தர் ஸ்வாமி ஏதோ சித்து விளையாடல் புரியப் போகிறார் என்று மட்டும் விளங்குகிறது.

அது என்னவாக இருக்கும்? என்று போகப் போக தானே தெரியும்?

எல்லாம் அவரது செயல்!

அவர்ர தஞ்சமடைந்தவளை... மீண்டும் ஒருமுறை காப்பாற்றாமலா போய்விடுவார்?

கட்டாயமாக காப்பாற்றத்தான் போகிறார்.

என் அப்பா டைரியில் எழுதி வைத்துவிட்டுச் சென்றது போல்... நேற்று என்னைத் தாங்கி காப்பாற்றினார்.

இந்த முறை எப்படி என்னைக் காப்பாற்றுவார்?

அவரே நேரில் மீண்டும் தோன்றுவாரா?

அல்லது யார் மூலமாகவாவது என்னைக் காப்பாற்று வாரா? சற்று நேரத்திற்கு முன்னர் இருந்த பயம்... மங்கி மறைந்து போய்விட்டது.

சித்தர் ஸ்வாமியை நினைத்ததும்... மனதில் ஓராயிரம் யானை பலம் வந்துவிட்டது.

இது பூக்காரி அழைத்துக்கொண்டு வந்த இடம் மாதிரி தெரியவில்லையே?

இது அந்த குடிசை இல்லைதான்...

இது வேறு ஏதோ பர்ணசாலை போல் தெரிகிறதே?

இப்போது இருட்டி விட்டது போலும்.

இரவு நேரமாயிருப்பதால்... சுவரின் ஆங்காங்கே சுளுந்தை கொளுத்தி செருகி இருக்கிறார்கள்.

நட்ட நடுநாயகமாக யாகம் வேறு வளர்த்திருக் கிறார்கள்.

ஒருவரையும் கண்ணில் படவில்லையே?



அந்தக் கிழவன் எங்கே போய் தொலைந்தான்?

இந்த வயதிலும் அவனுக்கு பெண் மோகம் போகவில்லை போலும்.

பேத்தியாகப் பாவிக்க வேண்டியவளிடம்... பல்லைக் காட்டிப்பேசினானே?

அவனும் அவனது பார்வையும்...!

சே... இப்பேர்பட்ட கயவனுக்கு தக்க தண்டனை கிடைக்க வேண்டுமே...!

இதென்ன...? சலசலவென்று நீரோடை ஓடுவது போல் சத்தம் வருகிறதே?

அருகில் காட்டாறு சலசலத்து ஓடுகிறதோ?

அப்படித்தான் இருக்க வேண்டும்.

கிழவனுக்கு கண்டிப்பாக தொண்ணூறு வயதுக்குமேல் இருக்கும்.

அவனும் பூக்காரியும் மட்டும் இதில் சம்பந்தபட்டிருக்க முடியாது.

என்னை அந்த குடிசையிலிருந்து இங்கு தூக்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இது கிழவன் செய்யும் காரியமாகத் தெரியவில்லை.

இவர்களுக்குப் பின்னால்... ஒரு பெரிய கூட்டமே இருக்க வேண்டும்.

இந்த சதி வேலையில் பலரும் பங்கேற்றிருக்க வேண்டும் என்று அப்பட்டமாய் தெரிகிறது

இது என்ன சதித் திட்டம்?

ஒருவேளை... இளம் பெண்ணைக் கடத்தி வந்து பலரும் சேர்ந்து நாசம் செய்யும் கூட்டமாக இருக்குமோ?

பேப்பரில்... பலமுறை இது போன்ற செய்திகள் வந்திருக்கிறதே?

இதுவும் அப்படித்தானோ...?

சேச்சே...! அப்படி இருக்க வாய்ப்பில்லை.

அப்படியேதும் இருந்திருந்தால்.... அதே குடிசையில் வைத்தே கதையை முடித்திருப்பார்களே...?

என்னை எதற்கு இந்தப் பர்ணசாலைக்குத் தூக்கிவர வேண்டும்?

யாகம் வேறு வளர்த்திருக்கிறார்களே...? இதை எதற்கு செய்ய வேண்டும்...?

பெண்ணை நாசப்படுத்துவது... இவர்களது நோக்கமாக இருக்கவே முடியாது.

இதற்கு வேறு ஏதோ காரணம் இருக்கும்.

இது... நள்ளிரவாய் இருக்குமோ?

சுவர்க் கோழிகளின் ரீங்காரம்... காதைப் பிளக்கிறதே?

என்னைக் கட்டிப் போட்டு... உள்ளே கிடத்திவிட்டு அனைவரும் வெளியில் சென்று விட்டார்களா?

ஆளரவமே இல்லையே?

எல்லாரும் தூங்கி விட்டார்களா?

யாகத்தை சற்று முன்னர் வளர்த்திருப்பார்கள் போலும்...

யாகத்தை நிறைவேற்றி முடிப்பதற்கு.... விரைந்து வந்தாலும் வருவார்கள்.

அவர்கள் வருவதற்குள் கட்டுக்களை அவிழ்க்க முடிந்தால்.... அவிழ்த்து தப்பிச் சென்று விடலாமா?



கைகளையும் கால்களையும் இம்மியளவு கூட அசைக்க முடியாமல்... படுபாவிகள் இறுக்கமாக கட்டி வைத்திருக்கிறார்கள்.

இம்மியளவு கூட கைகளையும் கால்களையும் அசைக்க முடியவில்லையே...?

காலடி சப்தம் கேட்கிறதே? கும்பலாய் வருவது போல் தெரிகிறதே?

எத்தனை பேர் அடங்கிய கும்பல் என்று தெரியவில்லையே?

எனக்கு மயக்கம் தெளிந்துவிட்ட விஷயம்... இவர்களுக்குத் தெரிய வேண்டாம்...''

சட்டென்று விழிகளை மூடிக்கொண்டாள் அற்புதா.

'சித்தர் ஸ்வாமி என்னைக் கைவிடவே மாட்டார்' என்ற நம்பிக்கை மனதில் நங்கூரமிட்டிருந்தாலும்... அற்புதாவின் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

## 11

**கா**ரை விட்டு இறங்கினான் அர்ஜுன்.

இனம் புரியாத இன்பப் பரவசத்தில் அவனது மனம் லயித்துக் கிடந்தது.

கொல்லி மலையிலிருந்து தவழ்ந்து வந்த மந்த மாருதம்... அவனை உரிமையுடன் தழுவி விட்டுச் சென்றது.

உள்ளுக்குள் பரபரப்பாய் இருந்தது.

அப்பா சுப்பிரமணியம் கூறியது போல்... முகவர் சிவதாணு... அவனது வருகைக்காக காத்துக் கொண்டிருந்தார்.

''வணக்கம் தம்பி!'' நெற்றியில் பட்டையாய் விபூதி பூசியிருந்த சிவதாணுவை நிலா வெளிச்சத்தில் ஏறிட்டான் அர்ஜுன்.

''வணக்கம் ஐயா! நல்லாயிருக்கீங்களா?''

''நல்லாயிருக்கேன் தம்பி! நான் சொன்ன தகவலை மதிச்சு... உடனடியா இங்க புறப்பட்டு வந்திருக்கீங்க... சந்தோஷம் தம்பி! என்ன உதவி வேணும்னாலும் கேளுங்க தம்பி! செய்றதுக்கு காத்திருக்கேன்...''

''நான் உடனடியா 'ஆகாய கங்கை' அருவியா விழற இடத்துக்குப் பக்கத்துல உச்சிக்குப் போயாகணுமே?''

''தம்பி! அது ரொம்ப உயரமான இடமாச்சே? அங்கே ஏன் இந்த நேரத்துல போகணும்? விடிஞ்சதும் நல்ல வெளிச்சத்துல போகலாமே?''

''காரணம் இருக்கு. நான் உடனே போயாகணும். எனக்கு போற வழியைக் காண்பிங்க... போதும்! நானே மேலே போயிக்கிறேன்...''

''நான் வயசானவன். அவ்ளோ உயரத்துக்கு ஏற முடியாது. இல்லேன்னா... கூடவே துணையா வந்துடுவேன்...''

''பரவாயில்ல... நான் தனியா போகணும்னு பிரியப்படறேன். பாதையைக் காண்பிச்சுடுங்க... அது போதும்...''

''அது ஏத்தமான கடினமான பாதை! பகல்லே ஏறினாலே ரொம்ப கஷ்டமாயிருக்கும். இந்த இருட்டுல போகணும் கறீங்களே தம்பி? ரொம்பவும் சிரமமாச்சே?''

''ஐயா! அதைப் பத்தி நீங்க கவலைப்படவேணாம். நான் எப்படியாவது சமாளிச்சு போயிருவேன். நீங்க பாதையை மட்டும் காட்டி உதவினா போதும்...''



முடிஞ்சா நாளைக்கு வந்து உங்களை சந்திக்கிறேன்...''

அர்ஜுன் பிடிவாதமாய் பேசியதைக் கேட்டதும்... அரை மனதோடு தலையாட்டி விட்டு முன்னால் நடந்தார்.

கால் மணிநேரத்தில்... அந்த காட்டுப்பாதையின் அருகே இருவரும் வந்து நின்றனர்.

''இந்தப் பாதைதான் தம்பி! கிளைப்பாதைகள் நிறைய பிரியும். கொஞ்சம் அசந்தாலும் வழி தவறிப் போயிடுவோம். பார்த்து ஜாக்கிரதையா ஏறுங்க... அங்கேயும் இங்கேயும் திரும்பாம... இந்த பாதையிலேயே ஏறிப் போங்க... இருட்டுல பூச்சி பொட்டு வழியில தட்டுப்படும். அதனால... எச்சரிக்கையா இருக்கணும்... இந்தாங்க. தம்பி! இந்த டார்ச்சை வச்சுக்கோங்க...''

சட்டையை உயர்த்தி இடுப்பு வேட்டியில செருகி வைத்திருந்த டார்ச்சை எடுத்து நீட்டினார் சிவதாணு.

''வேணாம் ஐயா! என்கிட்டே மினி டார்ச் இருக்கு. இது போதும். உங்க உதவிக்கு ரொம்ப நன்றி...''

கை கூப்பினான் அர்ஜுன்.

''இருக்கட்டும் தம்பி! பத்திரமா போயிட்டு வாங்க... இந்த இருட்டு நேரத்துல வந்ததும் வராததுமா உடனடியா உச்சிக்குப் போறீங்களே? மனசுக்கு எப்படியோ இருக்கு தம்பி!

உங்களை பத்திரமா உங்கப்பா கிட்டே திருப்பி அனுப்பி வைக்க வேண்டியது என் கடமை!

என்னை நம்பி உங்களை அப்பா... இங்க அனுப்பி வச்சிருக்காங்க...

நீங்க என்ன காரணம்னு சொல்ல மாட்டேங்கறீங்களே தம்பி?''

புலம்ப ஆரம்பித்து விட்டார் சிவதாணு.

"உடனடியா நான் அங்கே போகணும்னு... உத்தரவு வந்திருக்கு ஐயா! அதனால தானே அவசரமா நான் கிளம்பறேன்?"

"உத்தரவு வந்திருக்கா? யார் கிட்டேயிருந்து? எனக்கு ஒண்ணும் புரியலையே? உங்கப்பா ஏதாச்சும் உத்தரவு போட்டாரா?"

சிவதாணு கேள்விக் கணைகளைத் தொடுத்தார்.

"இல்ல... அப்பா ஏதும் உத்தரவு போடலை...?"

"அப்படின்னா... வேற யார்கிட்டேயிருந்து உங்களுக்கு உத்தரவு வந்துச்சு?

"ஐயா! அதை நான் வெளியில சொல்லக் கூடாது எல்லாமே நல்லபடியா முடியட்டும்... கடைசியா விலாவாரியா நான் உங்ககிட்டே சொல்லிட்டுத்தான் போவேன். நீங்க தகவல் குடுத்ததாலதானே அப்பா என்னை அனுப்பி வச்சாரு? அதனால போறப்போ கண்டிப்பா... உங்ககிட்டே சகலத்தையும் சொல்லிட்டுத்தான் போவேன்...!"

கவலைப்படாதீங்க நா வரேன்...!"

பதிலுக்குகூட காத்திராமல்... பேண்ட் பாக்கெட்டி லிருந்து சிறு டார்ச்சை எடுத்து உயிர்ப்பித்தபடி... அந்த மலைப் பாதையில் ஏறலானான்... அர்ஜுன்.

பரிதாபமாய் அவன் செல்வதையே நோட்டமிட்டு விட்டு... அரை மனதோடு திரும்பி நடந்தார் சிவதாணு.

"என்னை மன்னிச்சிடுங்க ஐயா! உத்தரவு சித்தர்கிட்டேயிருந்து வந்திருக்கு. அதை நான் எப்படி வெளியில சொல்ல முடியும்?"



முணுமுணுத்தபடி மலைப் பாதையில் ஏறிய அர்ஜுனுக்கு... இரண்டு மணி நேரத்துக்கு முன்பு... நடந்த அற்புதக் காட்சியை நினைத்தபோதே சில்லென்று புல்லரித்தது.

நாமக்கல்லிருந்து கொல்லிமலையை நோக்கி அவனது கார் விரைந்து கொண்டிருந்தபோது...

முன்னால் சென்று கொண்டிருந்த கனரக வாகனம் செக் போஸ்ட் அருகே சட்டென்று நின்றதும்... அர்ஜுனும் பிரேக் போட்டு தன் காரை நிறுத்தினான்.

'அப்பாடா' கைகளை உயரே தூக்கி சோம்பல் முறித்துவிட்டு தற்செயலாய்... ரியர் வியூ மிர்ரரைப் பார்த்தவனுக்கு தூக்கிவாரிப் போட்டது.

ரியர் வியூ மிர்ரரில்...

தீட்சணியம் மிக்க இரு கண்கள்...

அவனை தீர்க்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தன.

'மைகாட்!' அவனையும் அறியாமல் முணுமுணுத்த படியே பின்னால் திரும்பிப் பார்த்தான்.

பின் சீட்டில் யாருமே இல்லை.

சரக்கென்று முன்னால் அந்த கண்ணாடியை ஏறிட்டபோது... மீண்டும் அதே கண்கள் காட்சியளித்தன.

'அப்பா கனவுல வந்ததுன்னு சொன்னாரே...? அதே கண்கள்தானா?'

ஒருவேளை அப்பா கூறியது மனதில் அப்படியே பதிந்து போனதாலும்... அதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதாலும்... இப்படி எனக்கு தோன்றுகிறதோ?

இது பிரமையாக இருக்குமோ?

கண்களை கைகளால் நன்கு கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தாலும்... அதே காட்சி தானே தெரிகின்றது?

விழித்துக் கொண்டே கனவு காண்கிறேனா? அட... கையில் கிள்ளினால் வலிக்கிறதே?

இது... கனவே இல்லை. நிஜம்தான்!

மனதில் அவன் நினைத்த அதே தருணத்தில்...

''ஆமாம்! அர்ஜுன்! இது உன் கனவல்ல... நிஜம்தான்...''

அசரீரியாய் குரல் மட்டும் கேட்டது.

இன்ப அதிர்ச்சியில் வாயடைத்துப் போனான் அர்ஜுன்.

எதை எதையோ கேட்க வேண்டும் என்று அவனது மனம் பரபரத்தது.

ஆனால் எதையுமே கேட்க முடியாமல்... சிலையாய் அமர்ந்திருந்தான்.

மெய் சிலிர்க்க... அனிச்சையாய் அவன் தனது கரங்களைக் கூப்பி வணங்கினான்.

''ஆகாய கங்கை அருவி கொட்டுகின்ற இடத்திற்கு அருசே செல்! தாமதிக்காமல் உடனே உச்சிக்குச் செல்...!''

இரண்டாம் ஜாமம் முடிவதற்குள் சென்று உன்னவளைக் காப்பாற்று!

என்ன? நடப்பதெல்லாம் அற்புதமாக இருக்கின்றதா?''

பிரமித்துப் போய் விழிகள் விரிய... அந்தக் கண்களையே பார்த்துக் கொண்டிருந்த அர்ஜுன்... வேகமாய் தலையாட்டினான்.

''ஆமா! அற்புதம்தான்... அற்புதக் காட்சிதான்... நான் ரொம்ப கொடுத்து வச்சிருக்கேன் ஸ்வாமி...'' என்றான்.

தெய்வீகமாய் சித்தர் நகைப்பது அவனுக்கு கேட்டது.

''உன்னவளின் பெயரும் அற்புதாதான்...! இரண்டாம் ஜாமம் தாண்டுவதற்குள் அற்புதாவை சிறைமீட்டு விடு!

நாளை... பின்னிரவில்... கொல்லி மலைப் பாவை அம்மன் சன்னதிக்கு அருகில் இருவரும் வந்து மறைவாய் காத்திருக்கவும்...

உங்கள் கேள்விகளுக்கான விடை அங்கு கிடைக்கும்...''

''உங்க உத்தரவுப்படியே நடக்கிறேன் ஸ்வாமி.''

கூப்பிய கரங்களை விலக்காமல் பதில் கூறினான் அர்ஜுன்.

''ஸ்வாமி! உங்களை... உங்க உருவத்தை முழுவதுமா நான் தரிசிக்கணும். உங்க பாதங்களை இறுகப் பிடிச்சுக்கிட்டு கும்பிட்டு ஆசீர்வாதம் வாங்கணும்னு... உள்ளூர துடிக்கிறேன் ஸ்வாமி...''

தனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி விட்டான் அர்ஜுன்.

அதற்கும் அவர் மெல்ல நகைக்கும் குரல் கேட்டது.

பதிலொன்றும் சொல்லாமல்...

''ஆயுஷ்மான் பவ...!'' என்று அவர் ஆசீர்வதிக்கும் குரல் மட்டும் கேட்டது.

அர்ஜுனுக்கு உச்சிமுதல் உள்ளங்கால் வரை... மீண்டும் புல்லரித்தது.

சந்தோஷமும் பரவசமும் அவனைத் தாலாட்டின.

மறுகணம்... அந்த மாயக்கண்கள் மாயமாகின.

செக்போஸ்ட் திறந்ததும்... முன்னால் நின்றிருந்த கனரக வாகனம் செல்லத் தொடங்கியதும்... அர்ஜுனும் காரைப் புயலாய் கிளப்பிக் கொண்டு... எங்கும் தாமதிக்காமல் கொல்லி மலைக்கு வந்து சேர்ந்தான்.

ஏனோ தெரியவில்லை... நடந்த அற்புதத்தை தனது அப்பாவிடம்கூட அவனுக்கு கூற மனமில்லை.

காரியம் வெற்றிகரமாய் நடந்து முடிந்ததும்... மொத்தமாய் நேரில் சென்று சொல்லிக் கொள்ளலாம் என்று மவுனமாய் இருந்து விட்டான்.

நள்ளிரவில்... செங்குத்தான மலைப்பாதையில் ஏறிக் கொண்டிருந்த போதும்... சித்தரிடமிருந்து நல்லாசி பெற்று விட்ட காரணத்தால்... அவனுக்கு மூச்சிரைக்கவும் இல்லை.

அவனுக்கு சோர்வும் களைப்பும் ஏற்படவில்லை என்பது நிஜம்!

ஒரு நிமிடம்கூட தாமதம் செய்யாமல் விறுவிறு வென்று ஏறிக்கொண்டே இருந்தான்.

ஒரு வழியாய்... அருவி விழுகிற இடத்திற்கு அருகாமையில் வந்து சேர்ந்தான்.

நிலா வெளிச்சத்தில் சுற்றும் முற்றும் பார்த்தான்.

காட்டாறு சலசலத்து ஓடி வரும் சப்தம் பெரிதாய் கேட்ட வண்ணம் இருந்தது.

பக்கவாட்டிலிருந்த பர்ணசாலை அவனது பார்வைக்கு சிக்கியது.



ஏதோ பேச்சுக் குரல்கள் கேட்டதும்... சட்டென்று அந்த பருத்த நாகலிங்க மரத்தின் பின்னால் மறைந்து கொண்டான் அர்ஜுன்.

அப்போது...

## 12

சப்தம் வந்த திசை நோக்கி பார்வையை செலுத்தினான் அர்ஜுன்.

பர்ணசாலையை ஒட்டி இருந்த மரத்தின் அடியிலிருந்து தான் அந்த பேச்சுக் குரல்கள் வந்தன.

பெரிய பெரிய மரக்கிளைகள் மறைத்துக் கொண் டிருந்ததால்... அங்கே நிலா வெளிச்சமில்லாமல் சற்றே இருண்டு இருந்தது.

அதனால் அந்த கும்பலில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை... இங்கிருந்து தெளிவாய் பார்க்க முடியவில்லை.

"தலைவா! நீங்க ரொம்ப கெட்டிக்காரர் தலைவா! கடைசியில நீங்க நெனச்சதை சாதிக்கப் போறீங்களே?" என்று ஒரு குரல் பாராட்டியது.

"நீ சொன்னாப்பல... நம்ம தலைவர் தான் நெனச்சதை சாதிசுட்டாரு... இந்த வயசுல... அவரைப் பாருங்களேன். வயது தொண்ணூறு ஆகப் போகுது.

சின்னதா உடம்புல ஒரு கூன் கூட போடாம... நமக்கு நிகரா காட்டுலேயும் மேட்டுலேயும் சுறுசுறுப்பா அலையறாரு. இது யாராலேயும் முடியாதுல்ல...?"

இன்னொருவன் தன் தலைவனுக்கு பாராட்டு மந்திரம் வாசித்தான்.

''ஆமாம்... யாராலேயும் இவரோட வயசுக்கு நடமாடவே முடியாது. இதுகூட ஒரு சாதனைதான் தலைவா!''

''அடப் போங்கடா... சும்மா புகழ்ந்துட்டே இருக்கீங்க... சின்ன வயசிலேர்ந்து இந்த வனாந்தரத்தை சுத்தி வர்றேன். இயற்கையான காத்து, யோசனம் செய்து தியானம் பண்ணி... பச்சைக் காய்கறிகளை பழங்களை அளவோடு சாப்பிட்டுட்டு வர்றேன்.

இயற்கையோட இணைஞ்சு முறையா வாழறதால மூப்பு தட்டியும் ஆரோக்கியமா நடமாட முடியுது. மந்திரங்களை உச்சாடனம் செய்து யாகம் வளர்த்து சில அரிய சக்திகளை அடைய முடிஞ்சது.

சாமுத்திரிகா லட்சணம் கொண்ட அழகான இளம் பெண்களை எப்படியோ கஷ்டப்பட்டு கடத்திக்கிட்டு வந்து ரணபத்திரகாளிக்கு தொடர்ந்து பலியிட்டுட்டு வர்றேன்.

இப்போகிடைச்சிருக்கிற பொண்ணுக்கு... சாமுத்திரிகா லட்சணங்கள் ரொம்ப சரியா அமைஞ்சிருக்கு. காயம்பூ சாமர்த்தியமா இவளைக் கொண்டாந்து என்கிட்டே சேர்த்துட்டா...

இவதான் நூத்தியெட்டாவது பலி! இவளை பலி கொடுத்துட்டா... ரண பத்திரகாளி மனசு குளிர்ந்து எனக்கு சகல சக்திகளையும் தந்தருள் புரியப் போறா...

அந்த அரிய சக்தி கிடைச்சுட்டா... இந்தப் பிரபஞ்சத்துலே எனக்கு சாவே கிடையாது... நெனச்சதை நெனச்ச மாத்திரத்துல அடைய முடியும்...



இது வரைக்கும் எப்படி எப்படியோ கஷ்டங்களைக் கடந்து பல வருட காலமா... இந்த நரபலியை நடத்திட்டு வர்றேன். இந்தப் பொண்ணை நூத்தி எட்டாவதா பலியிட்டு முடிக்கிற வரைக்கும்... எந்தத் தடங்கலும் வந்துடக் கூடாது'ன்னு... உள்ளுக்குள்ளே கவலையா இருக்கு...

அப்படி ஏதாச்சும் நடந்துச்சுன்னா... நான் பல வருஷமா விடாமுயற்சியோட பாடுபட்டது எல்லாமே வீணாயிடும்...''

கிழத் தலைவனின் குரலில் ஏகத்திற்கும் கவலை தொனித்தது.

''அட... என்ன தலைவா நீங்க? நாங்க எல்லாரும் எதுக்கு இருக்கோம்? இரண்டாம் ஜாமத்தோட முடிவுலே அவளை பலி குடுத்துடப் போறீங்க...

இன்னும் கொஞ்ச நேரம் தான் இருக்கு. அதுக்குள்ளே என்ன தடங்கல் வந்துடப் போகுது. காயாம்பூ குடுத்த மயக்க மருந்துலேர்ந்து அந்தப் பொண்ணு... இன்னமும் விடுபடவே இல்லை.

மயங்கித்தான் கிடக்கிறா... இப்போதான் உள்ளே போய் பார்த்துட்டு வந்தோம். விடியற வரைக்கும் அந்த மருந்தோட வீரியத்தால மயக்கம் தெளியப் போறதில்லை. மயக்கம் தெளியறதுக்குள்ளேயே... நீங்க அவளை பலி கொடுத்துடப் போறீங்க...

மயக்கத்திலேயே அந்த அழகான தேவதை போய் சேர்ந்துடப் போறா... அப்புறம் என்ன?

உங்க காரியம் ஈடேறப் போகுது தலைவா! நாங்க எல்லாரும் இருக்கிறப்போ... உங்களுக்கு என்னத்துக்கு கவலை?

தலைவா! எங்களுக்கு ஒரு சந்தேகம்... கேட்டா கோவிச்சுக்க மாட்டீங்களே தலைவா?''

ஒரு கர்ண கடூரமான குரல் குழைவாய் கேட்டது.

''கேளுடா... கோவிச்சுக்க மாட்டேன்...''

''இல்ல... அந்த குட்டி பார்க்கிறதுக்கு அவ்ளோ லட்சணமா இருக்கா? பலியிடறதுக்கு முன்ன அவளை...''

அவன் பேசி முடிக்கும் முன்... கிழத் தலைவனின் குரல் ஆவேசமாய் குறுக்கிட்டது.

''சீ... வாயை மூடுடா... இந்த மாதிரி எண்ணமே உங்களுக்கு தலை தூக்கவே கூடாதுன்னு... பல வாட்டி எச்சரிக்கை பண்ணியிருக்கேன் இல்ல...?

நூத்தியெட்டு பெண்களுக்கும் சாமுத்திரிகா லட்சணம் அமைஞ்சிருக்கணும். அத்தோட அவங்க கன்னிப் பெண்களா இருக்கணும்...

அப்போதான் நரபலிக்கு பலன் கிடைக்கும். தவறினா இத்தனை வருஷமா நான் செஞ்ச முயற்சி அத்தனையும் வீணாகிப் போயிடும்.

முதல்லே நரபலி வெற்றியடையணும். சர்வ சக்திகளையும் நான் அடைஞ்சாகணும். அதைத்தவிர வேற எந்த எண்ணமும் வரவே கூடாது. புரிஞ்சுதா?''

''புரியுது தலைவா! என்னை மன்னிச்சுடுங்க''

''இன்னமும் கால் மணி நேரத்துல... அவளை பலி கொடுத்துட வேண்டியதுதான்.''

அவளைப் பார்த்துட்டே இருந்தா... உங்க மனசுல ஒரு சலனம் ஏற்படும்னு தான்... அவளைக் கட்டிப் போட்டு



உள்ளே கிடத்தி வச்சுட்டு... உங்க எல்லாரையும் வெளியில இருக்கச் சொன்னேன்.

சரியா... நரபலி குடுக்கிற நேரத்துக்கு நான் முதல்லே உள்ளே போயி... மந்திர உச்சாடனம் பண்ணுவேன். அதுக்குப் பிறகு... நான் குரல் குடுத்ததும்... நீங்க உள்ளே வந்தா போதும்.

வழக்கம்போல்... தலையை வெட்டறதுக்கு வந்து உதவி பண்ணுங்க... சரியா?''

''சரிங்க தலைவா.''

இந்த சம்பாஷணையை செவிமடுத்துக் கொண்டிருந்த அர்ஜுனுக்குள் எச்சரிக்கை மணி அடித்தது.

'இனி தாமதித்தால் ஆபத்து! என்னைவள் அற்புதா... நரபலியிடும் கும்பலிடமா அகப்பட்டுக் கொண்டாள்?'

மரக்கிளைகளின் இடுக்குகளின் ஊடே மெல்லக் கசிந்து வரும் நிலா வெளிச்சத்தில் கூர்ந்து பார்த்தால்... கிட்டத்தட்ட ஏழெட்டு பேர் இருப்பார்கள் போல் தெரிகிறதே?

பர்ணசாலையின் வாசலருகே... சின்னப் பூனை வந்தாலும்... இவர்களது கண்களில் படாமல் தப்பிக்கவே முடியாது போலிருக்கிறதே?

இந்த நேரத்தில் இவர்களிடம் மாட்டிக் கொள்ளாமல்... வேறு எப்படி உள்ளே சென்று அற்புதாவை மீட்டு வருவது?

நான் மட்டும் இருந்தால்... துணிந்து எத்தனை பேர் வந்தாலும் எதிர்கொண்டு ஒரு கை பார்க்கலாம் என்று காரியத்தில் இறங்கி விடுவேன்.

அற்புதா வேறு இருக்கிறாள். அவளுக்கு எந்த விதத்திலும் பாதிப்பு வந்து விடக் கூடாதே.

இப்படி இடது புறமாக சுற்றிக் கொண்டு செல்லலாம். ஒருவேளை பர்ணசாலைக்கு பின் வாசல் கதவு அல்லது திட்டி வாசல் கதவு இருக்கலாம் அல்லவா?

செடி கொடிகளையும் இலைதழைகளையும் ஒதுக்கி விட்டுக் கொண்டுதான்... போக முடியும் போலிருக்கிறதே?

அந்த சப்தம் கண்டிப்பாக இந்த கும்பலுக்கு கேட்டுத் தொலைத்துவிட்டால் ஆபத்தாயிற்றே?

அர்ஜுனுக்குள் கவலை முற்றுகையிட்டது.

பதற்றமும் கூடியிருந்தது.

'ஐயோ...! நேரம் வேறு நெருங்குகிறதே? ஸ்வாமி! நீங்கதான் எனக்கு ஒரு வழி காட்டணும்...'

மனதார சித்தரை வேண்டிக் கொண்டான்.

மறுகணமே அந்த அதிசயம் நிகழ்ந்தது.

திடீரென்று மலைக்காற்று சுழன்றடிக்கத் தொடங்கியது.

மரக்கிளைகளும் செடி கொடிகளும் விர் விர்ரென்று பேயாட்டம் போட்டன.

ஊசி விழுந்தால்கூட சப்தம் கேட்கும்படியான நிசப்தம்... சற்றுமுன் வரை நிலவியிருந்ததால்தான்... அர்ஜுனால் அவர்களது சம்பாஷணையைத் துல்லியமாக செவி மடுக்க முடிந்தது.

மலைக்காற்று வீசத் தொடங்கியதும்... சித்தரின் கருணையை நினைத்து நெகிழ்ந்து சிலாகித்தபடியே... வெகு வேகமாய் செடி கொடிகளை ஒதுக்கிவிட்டபடி பர்ண சாலையை சுற்றிக் கொண்டு சென்றான்.

அவன் எதிர்பார்த்தபடி பின்வாசல் எதுவும் இல்லை.



அதற்கு பதிலாய்... ஒரே ஒரு சாரம் மட்டும் இருந்தது.

கணநேரம் கூடத் தாமதிக்காமல்... சாளரத்திலிருந்த குறுக்கு கட்டைகளை பலங்கொண்ட மட்டும் பற்றி இழுத்து உடைத்து... வழி ஏற்படுத்திக் கொண்டு.... அதன் வழியாக உள்ளே குதித்தான்.

வெளியில் மலைக்காற்று வீசியதால்... மரங்கள் பேயாட்டம் ஆடியதாலும் கிளைகள் ஒன்றோடொன்று உராய்ந்ததாலும்... பலத்த சப்தங்கள் மாறி மாறி கேட்ட வண்ணம் இருந்ததாலும்... அர்ஜுன் சாளரத்தை உடைத்த போது ஏற்பட்ட சப்தத்தை... அந்த கும்பல் கண்டு கொள்ளவே இல்லை.

அர்ஜுன் சற்றும் முற்றும் தேடியபடி வந்தான்.

முதுகு காட்டி ஒருக்களித்து படுத்துக் கிடந்த அற்புதாவை நெருங்கினான்.

'மயக்கம் இன்னமும் தெளியவில்லை என்று அவர்கள் பேசிக் கொண்டார்களே...?'

நெகிழ்ந்த படி அவளது புஜத்தில் கை வைத்தான்.

'மயக்கம் தெளியாவிட்டால் பரவாயில்லை. இவளைத் தூக்கிக் கொண்டு சென்றுவிட வேண்டியதுதான்...!'

வாரித் தூக்குவதற்கு முன் நிதானித்து... அவளது பெயரை மெல்ல உச்சரித்தான்.

''அற்புதா...!''

அது வரை ...

'உள்ளே யாரோ ஒருவன் வருகிறான்... காலடி சப்தம் மூலம் என்னருகே அவன் வருவது புரிகிறது.

ஐயோ! கிட்டத்தில் வந்து புஜத்தில் கை வைத்துப் பார்க்கிறானே?

மயக்கம் தெளிந்து விட்டதா? இல்லையா? என்று சோதிக்கிறான் போலும்.

அசையாமல் கிடக்க வேண்டியதுதான்...' என்று விழிகளை இறுக மூடியபடி கிடந்தாள் அற்புதா.

இப்போது அர்ஜுன்... இவளது பெயரைச் சொல்லி அழைத்ததும் வேகமாய் திரும்பிப் பார்த்தாள்.

இவர்...? இவரா?

இவரது முகம்தானே... சித்தரின் வலக்கரத்தில் அபய ஹஸ்தம் காட்டியபோது உள்ளங்கையில் காட்சி அளித்தது?

ஆம்... இவரேதான்...!

அவளது இதயக் கூட்டிற்குள் பஞ்ச வர்ணக்கிளி படபடவென்று சிறகடித்துக் கொண்டது.

## 13

விழிகள் அகல வியப்புடன் அர்ஜுனையே பார்த்தாள் அற்புதா.

'மனதில் கற்பனை செய்து வைத்ததற்கும் மேலாக... பேரழகியாக இருக்கிறாளே?

இவள் என் வாழ்க்கைத் துணையாக கிடைக்க... நான் கொடுத்து அல்லவா வைத்திருக்க வேண்டும்?'

மின்னல் வேகத்தில்... இந்த எண்ணம் அவனுக்குள் உதித்தது.



''அற்புதா! நல்ல வேளையா... உனக்கு மயக்கம் தெளிஞ்சு போச்சா? தாமதிக்கிற ஒவ்வொரு செகண்டும் ஆபத்துதான்...

பயப்படாதே அற்புதா! நான் உன்னைக் காப்பாத்திக் கூட்டிட்டுப் போகத்தான் வந்திருக்கேன்.

நான் அர்ஜுன்...! 'தினச்சுடர்' பத்திரிகையோட சீஃப் எடிட்டர்... மீதி விவரங்களை சாவகாசமா சொல்றேன்.

நீ என்னை நம்பி... என்கூட வரணும்.

இன்னும் சில நிமிஷங்கள்லே... உன்னை நரபலி குடுக்க திட்டமிட்டிருக்காங்க...

நாம்ப உடனடியா இந்த இடத்தை விட்டு போயிடலாம். சித்தர் ஸ்வாமிதான் இங்கே என்னைப் போகும்படி உத்தரவு இட்டாரு.

உன்னை இங்கிருந்து சிறை மீட்கச் சொன்னாரு...''

மெல்லிய குரலில் அவளுக்கு மட்டும் கேட்கும்படி பேசினான். அதே சமயத்தில்... அவனது கைகள் படுவேகமாய் மினி கத்தியைக் கொண்டு... அற்புதாவின் கைகளில் கால்களில் போடப்பட்டிருந்த கட்டுக்களை அறுத்து அவிழ்த்துக் கொண்டிருந்தன.

அற்புதா இமை கொட்டாமல் அவனையே பார்த்தாள்.

''முன்பின் தெரியாத ஒருத்தனுடன் எப்படி நம்பி போறது?ன்னு தயக்கமா இருக்கா அற்புதா?''

''இல்ல... உங்களை நூறு சதம் நம்பறேன்...''

அவள் சொல்லி முடித்ததும்தான் தாமதம்...

''அது போதும் வா... போயிடலாம். உன் உடம்புல தெம்பு இருக்கா? கூட ஓடிவர முடியுமா? இல்லைன்னா சொல்லிடு தூக்கிட்டே போயிடறேன்...''

''இல்ல... எ... என்னால கூட வரமுடியும்...''

மறுகணம்... அவளது கையை இறுகப் பற்றிக் கொண்டு நாலே எட்டில... சாளரத்தை அடைந்தான்.

அவளை அலாக்காக தூக்கி சாளரத்து வழியாக பின் பக்கம் முதலில் இறங்கி விட்டான்.

கண் இமைக்கும் நேரத்தில்... ஒரே பாய்ச்சலில் அவனும் குதித்தான்.

அவளது கையைப் பற்றிக் கொண்டு வேகமாய் நடந்தான்.

அவன் ஏறிவந்த மலைப் பாதையைத் தவிர்த்து... ஏதோ ஒரு கிளைப் பாதையில் நடந்தனர்.

காட்டு செடிகளையும் கொடிகளையும் விலக்கி விட்டுக் கொண்டே நடக்க வேண்டியதாயிருந்தது.

ஐந்து நிமிட நடை தான்...

மந்திர உச்சாடனம் செய்வதற்காக பர்ணசாலைக்குள் யாக குண்டத்தருகே மெல்ல வந்து நின்றான் கிழத் தலைவன்.

அற்புதா கிடத்தப்பட்டிருந்த இடம் காலியாக இருந்ததும்... அவனுக்கு தலையில் இடியே விழுந்தாற் போலிருந்தது.

அவன் ஆசையாய் கட்டிவைத்திருந்த மனக்கோட்டை சரசரவென்று நொடிப் பொழுதில் சரிந்து... மண்ணோடு மண்ணானது.

வெறி கொண்டவனைப் போல் அலறினான்.

''டேய்...! நாம்ப மோசம் போயிட்டோம்டா...''

உச்சஸ்தாயியில் ஆங்காரமாய் கத்தினான்.



தபதபவென்று அவனது அடியாட்கள் ஓடி வந்தனர்.

''நான் பயந்தாப்பல... கடைசி நேரத்துல எல்லாம் வீணாயிடுச்சே? அதோ... அந்த சாளரத்து வழியா அவ ஓடிப் போயிட்டாளே...? விடாதிங்கடா... அவ ரொம்ப தூரம் போயிருக்க முடியாது. அவளைப் பிடிச்சு இழுத்துட்டு வாங்கடா...''

''தலைவா! அவளை தப்பிச்சு போயிருக்க வாய்ப்பே இல்லையே தலைவா! அவளோட கையிலேயும் கால்லேயும் அவ்ளோ இறுக்கமா கயித்தைக் கட்டியிருந்தோமே...?''

பத்து நிமிஷம் முன்னாடிகூட நாங்க வந்தோமே? மயக்கம்கூட தெளியாம படுத்துக்கிடந்தாளே?

அப்படியே தெளிஞ்சிருந்தாலும்... அவளால கட்டை சாமானியத்துலே அவிழ்த்திருக்கவே முடியாதே தலைவா!''

''வேற யாரோ வந்து அவளைக் காப்பாத்திட்டுப் போயிட்டாங்கன்னு சொல்றியா? அது யாரா இருந்தாலும் சரி...!

அந்த ஆபத்பாந்தவனை கண்டதுண்டமா வெட்டிப் போட்டுட்டு அவளை இழுத்துட்டு வாங்கடா...

ஐயையோ...! என்னோட பல வருஷத்து முயற்சி கடைசி நேரத்துல தோல்வியில முடிஞ்சு போச்சே?

விடக்கூடாது. தோல்வி அடைய விடக்கூடாது.

டேய்... இந்தக் காட்டுல இண்டு இடுக்கு விடாம தேடுங்க. நமக்கு மலைக்காடு அத்துபடி! அவங்கள தப்ப விட்டுடாதீங்க...''

வெறி கொண்ட வேட்டை நாய்களாய் தேட ஆரம்பித்தார்கள்.

அர்ஜுனின் கையைப் பிடித்தபடி ஓடிக்கொண்டிருந்த அற்புதா... ஓரிடத்தில் தடுக்கி விழுப் பார்த்தாள்.

இடுப்பில் சட்டென்று கையை வளைத்து... அவளை விழாமல் தடுத்தான் அர்ஜுன்.

''பார்த்து அற்புதா! வேகமா ஓடினாலும் எச்சரிக்கையோடவும் இருக்கணும்...''

''ரொம்ப நன்றிங்க... நீங்க மட்டும் வராம இருந்திருந்தா... இந்நேரத்துக்கு என்னை நரபலி குடுத்திருப்பாங்க...''

மூச்சிரைத்தபடியே பேசினாள்.

பசியினால் சோர்ந்த உடல் அதீதமாய் வேறு களைப்படைந்திருந்தது.

''நமக்குள்ளே நன்றி என்னத்துக்கு அற்புதா? நான் என்ன வேத்து மனுஷனா?''

பேசியபடியே அவளது அழகிய விழிகளை வருடினான் அர்ஜுன்.

நிலவின் ஒளியில... கண்களை அகல விரித்துப் பார்த்த அற்புதா... ஒரு ஓவியம் போலவே காட்சியளித்ததை வெகுவாய் ரசித்தான்.

''உனக்கு ரொம்பவே மூச்சிரைக்குது. இருட்டுல திக்கு தெரியாம காட்டுக்குள்ளே ஓடறது ரொம்பக் கஷ்டம்தான்... இதோ... இந்த ஆல மரத்தடியில கொஞ்ச நேரம் உட்கார்ந்துட்டுப் போலாமா?''

''இல்ல... பரவாயில்லை... இந்நேரம் என்னைத் தேடிக்கிட்டு நாலாபுறமும் வெறியோட அந்த ஆட்கள்தேடி வந்திட்டிருப்பாங்க...



அவங்க கண்ணுல நாம்ப அகப்பட்டா... அவ்ளோதான்! தூரமா போயிடலாம். அப்புறமா பாதுகாப்பான இடமா பார்த்து உட்கார்ந்துக்கலாம்...''

''அதுவும் சரிதான்...''

ஆங்காரமாய் கூச்சலிட்டபடி இலை, கிளைகளை வெட்டி சாய்த்த வண்ணம்... அவர்கள் தூரத்தில் வந்து கொண்டிருந்த சப்தத்தைக் கேட்டதுமே... இருவருமே உஷாரானார்கள்.

அர்ஜுனின் கையை இறுகப் பிடித்தபடி வேகமாய் ஓடி வந்த அற்புதாவுக்கு அந்த இரவு நேரத்திலும் குளிர்ந்த காற்று வீசிய போதிலும்... கும்பென்று வியர்த்து வழிந்தது.

இலக்கின்றி வெகு தூரம் ஓடி வந்தவர்களுக்கு... ஏகத்திற்கும் மூச்சு வாங்கியது.

அற்புதா பீதியுடன் அடிக்கடி பின்னால் திரும்பிப் பார்த்துக் கொண்டாள்.

அர்ஜுன் சட்டென்று நின்றான்.

அற்புதா மூச்சிரைத்தபடியே அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''திக்கே தெரியாம ஓடிட்டே இருக்கோம். கொல்லி மலைங்கிறது மிகப் பெரிய வனாந்தரமாச்சே?''

''அதனால் என்ன?'' கண்கள் மருள மெல்லிய குரலில் கேட்டாள்.

''இலக்கே தெரியாம ஓடிட்டிருக்கிறதும் தப்பாச்சே? கீழே போறதுக்கு உண்டான பாதை எதுன்னு தெரியணும்...''

இல்லைன்னா... ஏதாவது பாதுகாப்பான இடத்துல தங்கிடணும்...

"இந்த வனாந்தரத்துல தங்கறதுக்கு எங்கே இடம் கிடைக்கும்? பேசாம... எப்படியாவது பாதையைக் கண்டுபிடிச்சு கீழே இறங்கிப் போயிடறது நல்லதுன்னு... எனக்கு தோணுது..."

"இறங்கிப் போறது பெரிய விஷயமில்ல... நாளைக்கு பின்னரவுலே... மறுபடியும் நீயும் நானும் இதே மாதிரி சிரமப்பட்டு வெகுதூரம் வரணுமே?"

"ஏன்? எதுக்காக இங்க மறுபடியும் வரணும்னு சொல்றீங்க?"

விழிகளை அகல விரிக்கையில் குழந்தை போலவே அவள் இருந்ததை ரசித்துப் பார்த்தான்.

"எனக்கென்ன ஆசையா? நாம்ப அவங்க கொல்லிமலைப் பாவை அம்மன் சன்னதிகிட்டே வரணும்னு உத்தரவு."

"யாரோட உத்தரவு?"

"சித்தரோட உத்தரவுதான்..."

"நெனச்சேன்...!" என்றபடி புன்னகைத்தாள்.

"ஏன் சிரிக்கிறே?"

"காரணத்தை விரிவா விளக்கமா நான் சொல்லியாகணும். அதுக்கு தகுந்த இடம் இது இல்ல..."

"கரெக்ட்தான்... கீழே போற பாதை எதுவும் கண்ணுக்குத் தட்டுப்படவே மாட்டேங்குதே... காட்டை சுத்தி சுத்தி வந்துட்டிருந்தாலும் ஆபத்துதானே?"

"அவங்க கண்ணுல மாட்டிக்குவோம்னு சொல்றீங்களா?"

"அவங்களால மட்டும் இல்ல... காட்டு மிருகங்களாலும் ஆபத்து வரலாம் இல்லையா?



என்னைப் பத்தி நா கவலைப்பட மாட்டேன். உனக்கு எதுவும் ஆயிடக் கூடாதுன்னுதான் உள்ளூர டென்ஷனா இருக்கு அற்புதா!"

அப்படியென்றால்... தன் உயிரினும் மேலாக இவர் என்னை நேசிக்கிறாரா?'

அவளுக்கு சில்லென்ற குற்றாலச் சாரலில் நனைந்தாற் போலிருந்தது.

இதுகாலம்வரை பட்ட காயத்திற்கு... அவனது பேச்சு... மயிலிறகால் மருந்து தடவினாற் போலிருந்தது.

தலைக்கு மேலே... இடி விழுந்தாற்போல் பெரிய சப்தம் கேட்டது.

இருவரும் திடுக்கிட்டு பீதியுடன் அண்ணாந்து பார்த்தனர்.

அங்கே...

## 14

இருளில்... அந்தரத்தில்... தீப்பந்தம் ஒன்று தெரிந்தது.

அற்புதா அரண்டு போய் விட்டாள்.

"ஐயோ... இது என்ன? தீப்பந்தம் மட்டும் தெரியுதே? இதை ஏத்தியிருக்கிறது யாருன்னு தெரியலையே?"

அவளையும் அறியாமல் முணுமுணுத்தாள்.

"அட.. என்னைக் கீழே விழாமல் ஏந்தித் தடுத்தாரே சித்தர்? அப்போகூட உருவம் தெரியலையே? கண்கள் மட்டும் தானே தெரிஞ்சது?

அதைப் போல இதுவும் சித்தர் ஸ்வாமியோட திருவிளையாடல்தானா?''

பயம் தெளிந்து குரலில் குதூகலம் ததும்ப... அவள் பேசியதை கவனித்தான் அர்ஜுன்.

''எனக்கும் கண்கள் மட்டும் தெரிஞ்சது. அசரீரியா குரல் கேட்டது. அது மட்டுமா 'ஆயுஸ்மான் பவ!'ன்னு ஆசீர்வாதமே பண்ணிட்டாரு...''

''அதுக்கு அப்புறம் எனக்கு... முழு உருவ தரிசனம் கிடைச்சுதே? அபய ஹஸ்தம் காட்டி அருளினாரே? கேசாதி பாதம் வரை நல்லா கண்குளிரப் பார்த்து தரிசிக்கிற பாக்கியம் எனக்கு கிடைச்சுதே...''

அது மட்டும் இல்ல... உங்களைக்கூட எனக்கு காண்பிச்சுட்டாரே...?''

இதைச் சொல்லும்போது அவளது கன்னங்கள் வெட்கத்தில் குழைந்தன.

''என்னது? என்னை உனக்கு காண்பிச்சாரா?'' ஆச்சரியம் தாளாமல் கேட்டான் அர்ஜுன்.

''உம்...! வலது கரத்தைத் தூக்கி அபய ஹஸ்தம் காட்டினாரே? அந்த உள்ளங்கையில தான் உங்களோட வசிகரமான முகம் தெரிஞ்சுது...''

''என்ன? என்ன தெரிஞ்சது?ன்னு சொன்னே?''

''முகம் தெரிஞ்சதுன்னு சொன்னேன்...''

''அதுக்கு முன்னாடி ஒரு வார்த்தை சொன்னியே... அது?''

''உங்களோட வசிகரமான முகம்னு...''



அதற்கு மேல் பேசாமல்... நாக்கை நாணத்துடன் கடித்துக் கொண்டாள்.

''இதைப் பத்தி சாவகாசமா பேசிக்கலாம். முதல்லே இந்த தீப்பந்தம் ஆகாசத்துல என்னத்துக்காக நம்ப கண்ணுல படும்படியா தோன்றியிருக்குன்னு தெரியலையே?''

இருவரும் அண்ணாந்து வானத்தைப் பார்த்த தருணத்தில்...

அந்த தீப்பந்தம் அழகாய் நகர்ந்தது.

''அற்புதா! உனக்கு ஏதாச்சும் புரியுதா? தீப்பந்தம் நகருதே? காரணம் விளங்குதா?''

''இல்லீங்க... எனக்கு சுத்தமா விளங்கலை. உங்களுக்கு...''

''எனக்கு புரிஞ்சு போச்சு. திக்கு தெரியாம வனாந்தரத்துல அல்லாடிட்டிருக்கோம்னு புலம்பினோம். இல்லையா?''

அதான் சூட்சுமமா தீப்பந்தம் மூலமா நமக்கு வழி காட்டறாரு சித்தர் ஸ்வாமி... வா! நாம்பளும் சேர்ந்தே நடக்கலாம்...''

ஆகாயத்தில் மிதந்தபடி வழி காட்டிச் சென்ற தீப்பந்தத்தை ஒரு பார்வை பார்த்துக் கொண்டும்... காட்டுப் பாதையில் கால் இடறி விடாமலிருக்க தரையை ஒரு பார்வை பார்த்தபடியும் நடந்து சென்றனர்.

தீப்பந்தமும் நிதானமாகத் தான் நகர்ந்து சென்றது.

பள்ளமும் மேடுமாய் கடந்துவரும் போது இவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக கவனமாக மெதுவாய் நடந்தனர்.

அந்த மாதிரி தருணங்களில்...

நகராமல் நிலைத்து நின்று... இவர்களுக்காக காத்துக் கொண்டிருந்தது தீப்பந்தம்...!

தீப்பந்தைப் பின்பற்றியபடியே... நடந்து சென்றதால் அவர்களுக்கு அவ்வளவு சிரமம் தெரியவில்லை.

அர்ஜுன் மிகுந்த எச்சரிக்கையுடன் அற்புதாவின் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டிருந்தான்.

எங்கோ தூரத்தில் புலி உறுமும் சப்தம் கேட்டது.

இதுவே சாதாரண சமயமாக இருந்தால்... அற்புதா கிலியில் நடுநடுங்கிப் போயிருப்பாள்.

இப்போது... அர்ஜுன் ஜாக்கிரதையாய் அவளது கரத்தை இறுகப்பற்றி நடக்கிறான்.

அத்தோடு... அவர்கள் எந்த திக்கில்... எங்கு செல்ல வேண்டும் என்பதை... தீப்பந்தம் வானில் தோன்றி வழி காட்டிச்செல்கிறதே...?

அவளுக்கு துளியளவு கூட பயமில்லை.

'சித்தர் ஸ்வாமி ரட்சிப்பார்.'

பாதுகாப்பாய் அர்ஜுன் இருக்கிறார்.

மலையளவு நம்பிக்கை மட்டுமல்ல... தெம்பும் தைரியமும் துணிச்சலும் உருவாகியிருந்தன.

மனித வாடையை தூரத்திலிருந்தே மோப்பம் பிடித்துவிட்ட புலி... பதுங்கிப் பதுங்கி நெருங்கி வந்தது போலும்...!

பத்தடி தொலைவில் பக்கவாட்டிலிருந்த புதரின் மறைவில் இருந்து திடீரென்று இவர்களது முன்பாய் வந்து நின்றது.



குரோதமாய் இருவரையும் மாறிமாறிப் பார்த்தது.

மறுகணம்... இவர்கள் மீது ஆக்ரோஷமாய் பாய முற்பட்ட தருணத்தில்...

''நில்...!''

அசரீரியாய் ஒரு தெய்வீகக் குரல்!

அண்ட சராசரமே கிடுகிடுத்துப் போகும்படியாக... கணீரென்று கேட்டது.

வானில் தீப்பந்தம் சட்டென்று மறைந்து போனது.

அதற்கு பதிலாய்... இரு கண்கள்...!

அந்த மாயக்கண்களைக் கண்டதுமே... இருவருமே சொல்லி வைத்தாற்போல்... கைகளைக் கூப்பி வணங்கினார்கள்.

புலி... அந்த சிம்ம கர்ஜனையாய் ஒலித்த தெய்வீகக் குரலைக் கேட்டதுமே... மந்திர சக்திக்கு கட்டுண்டது போல் சட்டென்று நின்றது.

தலையை உயர்த்திப் பார்த்தது.

அதற்கும் மாயக் கண்களின் தரிசனம் கிடைத்ததோ என்னவோ... சட்டென்று இரு முன்னங்கால்களை உயர்த்தி மடக்கி அண்ணாந்து பார்த்தது.

அதாவது... பவ்யமாய் சித்தரை பார்த்து வணங்குவது போலிருந்தது.

இலேசாய் உறுமியது. வாலை ஆட்டியது.

''போ! வந்த வழியே போ!''

மீண்டும் அதே தெய்வீக்க குரல் கட்டளையிட்டது.

மறுகணமே பவ்யமாய் பணிவாய் அந்தக் குரலுக்கு கட்டுப்பட்டு... மெதுவாய் பின்னோக்கி நடந்தது.

இப்போது இவர்களை ஒரு பார்வை பார்த்தது.

அந்தப் பார்வையில் குரோதம் இல்லை.

ஆக்ரோஷமும் இல்லை.

சிநேக பாவனையில்... வாலை ஆட்டியபடி வெகு வேகமாய் பின்னால் நடந்தது.

எட்டடி தூரம் பின்னோக்கி நடந்துவிட்டு சட்டென்று நின்று தலையை உயர்த்திப் பார்த்தது.

மறுகணம் திரும்பி... ஒரு பாய்ச்சலாக அந்தப் பெரிய புதரின் மறைவில் பாய்ந்து எங்கோ ஓடி விட்டது.

## 15

அற்புதாவுக்கு புல்லரித்து விட்டது.

கண்களில் ஆனந்தத்தில் கண்ணீர் தளும்பி நின்றது.

நன்றிப் பெருக்கோடு நீர் ததும்பிய விழிகளால் அண்ணாந்து பார்த்தாள்.

இருவருமே சொல்லி வைத்தாற்போல்... கரங்களைக் கூப்பி ''நன்றி ஸ்வாமி'' என்றார்கள்.

தீர்க்கமாய் கனிவாய் இவர்களையே பார்த்த அந்த மாயக் கண்கள்... அப்படியே வானில் நகரத் தொடங்கின.

இவர்களும்... அந்தக் கண்களைப் பார்த்தபடியே நடக்கத் தொடங்கினர்.

தீப்பந்தத்திற்கு பதிலாக இப்போது மாயக் கண்களே வழி காட்டிச் சென்றன.

''இன்னாருக்கு இன்னாரென்று எழுதி வைத்தானே தேவன் அன்று' அப்படின்னு கவிஞர் எழுதி வச்சாரே?



அது எவ்வளவு பெரிய உண்மை...!

உனக்கும் எனக்கும் பகவான் என்னிக்கோ முடிச்சு போட்டு வச்சுட்டாரு. இது தெரிஞ்சுதான் சித்தர் ஸ்வாமி... அற்புதத்தை நிகழ்த்தி சென்னையிலிருந்து என்னை புறப்பட்டு வர வச்சிருக்காரு.

என் அப்பாவுக்கு இந்த 'நேத்திர தரிசனம்' கனவில் கிட்டியிருக்கு. அசரீரியா குரல் கேட்டிருக்கு. என்னை கொல்லி மலைக்கு அனுப்பி வைக்கும்படி உத்தரவிட்டாராம்.

அப்பா உடனடியா என்னைக் கூப்பிட்டு பேசினாரு...''

என்ற அர்ஜுன் முகவர் சிவதாணு ஃபோன் செய்து அப்பா சுப்பிரமணியத்திடம் சொன்ன தகவல்களைப் பற்றியும் ஒன்று விடாமல் கூறினான்.

''அப்புறம்... கார்லே ரியர் வியூ மிர்ரரிலே இதே மாயக் கண்கள் தோன்றினதும்... ஷாக் ஆயிட்டேன்...'' என்றவன் நடந்த அதிசயத்தை சிலாகித்துப் போய் விவரித்தான்.

''ரெண்டு பேத்துக்குமே ஏக காலத்துல சித்தர் ஸ்வாமி காட்சி தந்து அருளியிருக்காரு.

இந்த சித்தர் ஸ்வாமி யாருன்னு தெரிஞ்சுக்கணும்னு... ஆவலா இருக்கு.

இதுவே அப்பா இருந்திருந்தா... கண்டிப்பா இந்நேரத்துக்கு இந்த சித்தர் ஸ்வாமி இன்னாருன்னு கண்டு பிடிச்சிருப்பாரு...''

மூச்சிரைத்தபடியே பேசினாள் அற்புதா.

''சித்தர் உன்னைக் காத்து ரட்சிப்பாரு'ன்னு டைரியில எழுதி வச்சுட்டு என்கிட்ட கூட சொல்லிகாம எங்கேயோ போயிட்டாரு.

அவரோட நம்பிக்கை வீண்போகலை. சாகப்போன என்னைத் தடுத்து தாங்கி காப்பாத்தினாரு சித்தர் ஸ்வாமி.

இதோ... இப்ப வரைக்கும் இவரோட அருட்கடாட்சம் தொடருது.

ஒரு தாயுமானவரா... என் மேல... இந்த அனாதை மேலா கருணை காட்டிட்டு வர்றாரே?"

அவள் பேசி முடிக்கும் முன்... இடை மறித்தான் அர்ஜுன்.

"தப்பு அற்புதா! இன்னொரு வாட்டி 'அனாதை'ங்கிற வார்த்தை... உன் வாயிலேர்ந்து வரவே கூடாது.

உனக்கு சகலமுமா நானிருக்கேன். எனக்கு நீ இருக்கே... நமக்கு சித்தர் ஸ்வாமி இருக்காரு.

நீ ஒரு விஷயத்தை யோசிச்சுப் பார்த்தியா? நரபலி குடுக்கிற கும்பல் கிட்டே நீ மாட்டிக்கிடே... சித்தர் ஸ்வாமி நெனச்சிருந்தா... ஒரு நிமிஷத்துல அந்த கும்பலை பஸ்பமாக்கிட்டு... உன்னைக் காப்பாத்தியிருக்க முடியாதா?

ஏன்... என்னை இங்க வர வைக்கணும்? உன்னை சிறை மீட்கும்படி எனக்கு ஏன் உத்தரவிடணும்?

எங்கோ இருந்த என்னையும் உன்னையும்... இந்த கொல்லி மலையில் சேர்த்து வைக்கணும்கிறதுக்காகதான்... இந்த சித்து விளையாடலை அவர் நடத்தியிருக்காரு...

புரியுதா? அதனால 'அனாதை'ன்னு... இனிமே நீ சொன்னா... நான் ரொம்ப வருத்தப்படுவேன்.

அத்தோட சித்தர் ஸ்வாமிக்கே கோபம் வந்தாலும் ஆச்சரியப்படறதுக்கு இல்ல..."



"சாரி! இனிமே நா அப்படி சொல்ல மாட்டேன். நேத்து வரைக்கும் என்னோட நிலைமை அப்படி தானே இருந்துச்சு..."

"உனக்கு ரொம்ப மூச்சிரைக்குது. அற்புதா! இப்போ எதுவும் பேச வேணாம்.

இன்னும் கொஞ்ச நேரத்துல... நல்ல பாதுகாப்பான இடத்துக்கு நம்மை கொண்டு சேர்த்துடுவாரு சித்தர் ஸ்வாமி.

அங்க நிதானமா ஆசுவாசப் படுத்திக்கிட்டு உன்னைப் பத்தின விவரத்தை சொல்லு..."

இருவரும் மவுனமாக மாயக் கண்களைப் பின்பற்றிய படியே நடந்து சென்றனர்.

பால் ஒளியை சிந்திய மோகன நிலவு!

மூலிகை மணத்தை சுமந்த வண்ணம்... உடலைத் தழுவிய மந்த மாருதம்...!

பிரமாண்டமான விருட்சங்கள் மலைக் காற்றுக்கு கிளைகளை அசைத்து அபிநயம் பிடித்த விதம்...!

மாயக் கண்கள் வழிகாட்ட... மனதிற்குப் பிடித்த வனுடன் கரம் கோர்த்தபடி வனாந்தரத்தில் ஏகாந்தமாய் இயற்கை அழகை விழிகளால் அள்ளிப் பருகியபடி நடந்து சென்று கொண்டிருப்பது...!

இரு தினங்களுக்கு முன்பு வரை...

கண்ணீரும் கம்பலையுமாக... சொல்லம்புகளால் துளைக்கப்பட்டு துடிதுடித்து நரகத்தில் தானே உழன்று கொண்டிருந்தாள்...?

இப்படியெல்லாம் அதிசயங்கள் அற்புதங்கள் நிகழும்... சித்தர் ஸ்வாமியே வந்து நிகழ்த்திக் காட்டுவார் என்று... அவள் கனவிலும் கருதவில்லையே...?

'இந்த அபலையை அவரே காத்து ரட்சித்து... ஒரு நல்லவரிடம் என்னைக் கைப்பிடியாய் ஒப்படைத்து விட்டாரே...?

ஆயிரம் ஜென்மங்கள் எடுத்தாலும் இந்த சித்தர் ஸ்வாமியை... நான் போற்றித் தொழுது கொண்டே இருக்க வேண்டும்.

நரக வாழ்வை அனுபவித்து குமுறி அழுதவளுக்கு... சித்தர் மனமிரங்கி... வாழ்வை மலரச் செய்து சொர்க்கமாக்கி விட்டாரே?

அப்படி துயரத்தில் துடித்து கதறியதுகூட நல்லதுக்கு தான்...

அதனால்தானே சித்தர் ஸ்வாமி என்மீது கருணை மழை பொழிகிறார்...?

நான் மிகவும் கொடுத்து வைத்தவள்...'

நிம்மதி பெருமூச்சு விட்டாள் அற்புதா.

மீண்டும் அந்த மாயக்கண்களை நன்றிப் பெருக்கோடு ஏறிட்டாள்.

மாயக்கண்கள் சட்டென்று நின்றன.

இவர்களும் நின்று... மாயக்கண்களையே இமைக்காமல் பார்த்தனர்.

மாயக் கண்கள் மறைந்து மீண்டும் தீப்பந்தம் காட்சி அளித்தது.

அந்த தீப்பந்தம் நகர்ந்து போய்... ஆயிரம் விழுதுகளுடன் பிரமாண்டமாய் படர்ந்திருந்த ஆலமரத்தின் பின்னால் சட்டென்று இறங்கி மறைந்தது.



"அற்புதா! நாம்ப இப்போ இந்தப் பெரிய ஆலமரத்துக்குப் பின்னாடி போகணும்.

நாம்ப பாதுகாப்பா தங்கறதுக்குரிய இடம்... அங்கேதான் இருக்கு போலிருக்கு.

பார்த்து வா!... இந்த மரத்தோட விழுதுகளையும் வேர்களையும் பாரேன்..."

அற்புதாவின் வலது கரத்தை கெட்டியாய் பிடித்தபடி நடந்தான் அர்ஜுன்.

"விழுதுகளையும் வேர்களையும் பார்த்தா பிரமிப்பா இருக்கு... ஒவ்வொண்ணும் ஒரு மலைப்பாம்பு மாதிரியே இருக்கு..."

"கிட்டதட்ட பல நூறு வருடங்களுக்கு முன்னாடி தோன்றின மரமாயிருக்கும்... அதனால தான் இத்தனை விழுதுகளை விட்டு விஸ்வரூபமா வளர்ந்திருக்கு...

அற்புதா! வேர் தடுக்கிடாம பார்த்து நடக்கணும்...! நீ சொன்னாப்பல வேர்கள்கூட வளைஞ்சு நெளிஞ்சு... கிட்டத்தட்ட அரவம் மாதிரிதான் இருக்கு..."

மினி டார்ச்சின் மூலம் வெளிச்சத்தைப் பாய்ச்சி மெல்ல அவன் முன்னால் சென்றான்.

மரத்தின் பின்னால் அவர்கள் வந்து பார்த்தபோது அங்கே...

இடுப்பளவு உயரத்தில்... ஒரு குகையின் வாசல் தெரிந்தது.

"அற்புதா! இந்த இடத்துல இப்படியொரு குகை இருக்கிறதை... வெளியிலிருந்து பார்த்தா... யாராலும் கண்டு பிடிக்கவே முடியாது..."

"ஆமாமா... நிச்சயமா... ஆலமரத்துக்குப் பின்னாடி இப்படி ஒரு மறைவான குகை இருக்கும்னு... நாம்ப கூட நெனச்சுப் பார்க்கவே இல்லையே...?

பகல்லே பார்த்தா... இந்த இடம் ரொம்ப ரம்யமா இருக்கும் இல்லையா?"

"கண்டிப்பா... பகல்லே யாராச்சும் வந்தாக்கூட... இந்த குகையை கண்டு பிடிக்கவே முடியாது. அப்படியொரு அதிசயமான அமைப்பு...!"

"உட்கார்ந்து குழந்தை மாதிரி தவழ்ந்துதான் உள்ளே போகணும் போலிருக்கே...!"

"ஆமா... நான் முதல்லே போறேன். நீயும் என் பின்னாடியே வேகமா வந்துடு..."

ஊகூம்... வேணாம்! நீ முன்னாடி போ! உனக்குப் பாதுகாப்பா நானும் கூடவே வர்றேன்..."

"சரி... நானே போறேன்..."

"இந்தா! இந்த மினி டார்ச்சை கையில வச்சுக்கோ..."

"வேணாம்...! நான் சித்தர் ஸ்வாமி மேல முழு பாரத்தைப் போட்டுட்டேன். அவரை சரணடைஞ்சுட்டேன்.

அதனால எனக்கு பயமே இல்ல... மினி டார்ச் தேவையில்லை."

"வெரிகுட்...! இப்படித்தான் இருக்கணும்... அற்புதா!"

மண்டியிட்டு அமர்ந்து குழந்தை போல் தவழ்ந்து விடுவிடுவென்று உள்ளே சென்று விட்டாள்.

அர்ஜுனும் அவசரமாய் அவளைப் பின் தொடர்ந்தான்.

பத்தடி தூரம் வரை... இருட்டாய் தான் இருந்தது.



குகையின் விதானமும் இடுப்பளவேதான் இருந்தது.

பத்தடி தூரத்தைத் தாண்டியதும்... ஆறடி உயரமுள்ள ஒரு ஆள் நிமிர்ந்து நடந்து செல்லும்படியாக... அதன் மேற்கூரை அமைந்திருந்தது.

அது மட்டுமல்ல... பத்தடியைக் கடந்ததும்... உள்ளிருந்து வெளிச்சம் கசிந்து வந்தது.

வெளிச்சத்தை நோக்கி மேலும் ஐந்தாறு அடி தூரம் கடந்தால்... குகை விசாலமாய் பெரிய கூடம் போன்றிருந்தது.

கடைசியில்... பெரிய பீடம் போன்ற அமைப்பு வேறு. அது பெரிய சிவலிங்கமும்... அருகில் ஓலைச் சுவடிகளும் இருந்தன.

மூலையில் மண்குடுவையும், மண் பானையும் இருந்தன.

இதுவரை... இவர்களுக்கு வழிகாட்டி வந்த தீப்பந்தம் சிவலிங்கத்தின் பக்கவாட்டுச் சுவரில் செருகப் பட்டிருந்தது.

குகைக்கு போதுமான வெளிச்சத்தை அள்ளி வழங்கிக் கொண்டிருந்தது.

தீப்பந்தத்திற்கு நேராக... அதன் கீழே தரையில் வித்தியாசமாக தட்டுப்பட்ட பொருளின் மீது அற்புதாவின் பார்வை படிந்தது.

அதைப் பார்த்ததும்... அதிர்ச்சி அடைந்தாள் அற்புதா.

# 16

அற்புதா ஒட்டமும் நடையுமாகச் சென்று... அந்த நீப்பந்தத்தைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

அதன் வெளிச்சத்தில் கீழே தெரிந்ததை... உற்றுப் பார்த்தாள்.

''என்ன அற்புதா? அது என்ன? ஏதோ புத்தகம் மாதிரி தெரியுதே...?''

கேட்டபடி அருகில் வந்து நின்றான்.

''இல்ல... இது புத்தகம் இல்ல... டைரி மாதிரி இருக்கு...''

அவளது விழிகளில் மிதந்த அதீத அதிர்ச்சியைப் பார்த்து விட்டு... வியப்புடன் அவளை ஊன்றிப் பார்த்தான்.

''இருக்கட்டுமே...! நமக்கு முன்னாடி யாரோ இந்த குகைக்கு வந்திருக்கணும். அவங்க இதை மிஸ் பண்ணியிருக்கணும்.

இதுக்குப் போயி... நீ எதுக்கு 'ஷாக்' ஆயிட்டே அற்புதா?''

''கையில எடுத்துப் பார்த்துட வேண்டியதுதானே?'' என்றபடி குனிந்து அந்த டைரியை எடுத்து... அவளிடம் நீட்டினான்.

அவள் வேகமாய் வாங்கிப் புரட்டினாள்.

''நான் நெனச்சது சரிதான்... 'லிங்கமூர்த்தி'ன்னு பேர் எழுதப்பட்டிருக்கு. பாருங்க... இது அப்பாவோட கையெழுத்துதான்...''

இதே டைரியை ரெண்டுநாள் முன்னாடி கூடப் பார்த்தேனே... எப்படி இங்க வந்துச்சன்னு தெரியலையே...?''



குழம்பிய அற்புதா... ஆதியோடு அந்தமாய் தன்னைப் பற்றிய விஷயங்களை விலாவாரியாக எடுத்துச் சொன்னாள்.

''மைகாட்! உன்னோட லைஃப்லே இவ்ளோ நடந்திருக்கா? இது காலம் வரை நீ அழுதது போதும் அற்புதா!'' என்றபடி அவளது கண்ணீரைத் துடைத்தான்.

''அப்பா காணாம போயி... ரெண்டு வருஷத்துக்கு மேல ஆச்சு, இதே டைரியை வீட்டுல நான் ரெண்டொரு நாள் முன்னாடி பார்த்தேன்... அதான் குழப்பமா இருக்கு...''

''இதுல குழம்பறதுக்கு என்ன இருக்கு? சித்தர் ஸ்வாமியோட அனுக்கிரகத்துல மிராக்கிளா நடந்துட்டிருக்கு. இதுவும் அப்படித்தான்'னு நெனச்சுக்க வேண்டியதுதான்...''

''அப்பா இன்னமும் உயிரோட இருக்காரா? இல்ல.. அம்மாபோன இடத்துக்கே... தானும் போயிட்டாரா?ன்னு தெரியலையே?''

''நீ சொன்னதை வச்சுப் பார்க்கும் போதும்... நடந்துட்டு வர்ற அற்புதுங்களை எல்லாம் பார்க்கும் போதும்... எனக்கொண்ணு தோணுது...''

''என்ன தோணுது?''

''நிச்சயமா உங்கப்பா உயிரோடதான் இருப்பாரு. இதோ வனாந்தரத்துலதான் இருக்காரு. இந்த குகைக்கு அவர் வந்திருக்கணும். இந்த டைரியில கண்டிப்பா நமக்கு முக்கியமான தகவலை எழுதி வச்சிருக்கணும்'னு தோணுது...''

சித்தர் ஸ்வாமி யாரு?ன்னு நாம்ப ஆவலா கேட்டுட்டே இருந்தோமே? அதுக்கான விடை... இந்த டைரியில இருக்கும்னு... என்னோட உள் மனசு சொல்லுது... அற்புதா?''

''உங்க வாக்கு பலிக்கணும். அப்படின்னா... இதுல எழுதப்பட்டிருக்கிறதை வாசிச்சுப் பார்த்துடலாம்னு சொல்றீங்களா?''

''இதுலே தப்பே இல்ல அற்புதா! நாம்ப இதை வாசிச்சுப் பார்க்கவேண்டும்னுதான்... இப்போ இந்த டைரி நம்ம கண்ணுல படும்படியா... தீப்பந்தத்துக்கு நேர் கீழே கிடந்திருக்குது.''

இன்னும் சொல்லப் போனால... சூட்சுமமா இதை ஒரு உத்தரவாகூட நாம்ப எடுத்துக்கலாம்...

உம்! வாசி... பார்க்கலாம்...''

அர்ஜுன் தைரிய மூட்டியதும்... தயக்கத்தை உதறிவிட்டு, அற்புதா பக்கங்களைப் புரட்டினாள்.

அதில் ஓரிடத்தில் கொட்டை எழுத்துக்களில் அப்பா எழுதி வைத்திருந்ததை வாசிக்கத் தொடங்கினாள்.

'சித்தர்களில் 'சிவராஜ யோகி' என்று அழைக்கப் படும் பெருமை கொண்டவர் புலத்தியர் சித்தர்.

இவரை கமல முனியின் பேரன் என்றும், அகத்தியரின் அன்பைப் பெற்றவர் என்றும்... போகர் சித்தர் எழுதிய 'போகர் ஏழாயிரம்' என்ற நூல் கூறுகிறது.

காலத்தால் இவர் போகருக்கு முந்தையவர் என்று தெரிகின்றது.

ஆவணி மாதம் அனுஷ நட்சத்திரத்தில் நாலாம் பாதத்தில் பிறந்த இவர் ஒரு மகா சித்தர்.

திருமந்திர உபதேசம் பெற்றவர். இவர் சிங்கிள நாட்டில் பிறந்தவர்.



கல்வி, கேள்விகளில் சிறப்பு பெற்று விளங்கிய புலத்தியர் சித்தர், எப்போதும் தவத்தில் ஈடுபடக்கூடியவர்.

இதற்காகவே ஆளண்டா வனாந்தரத்தில் அமைதியான தவச் சாலையை அமைத்து தவத்தை மேற்கொண்டவர்.

இவரது சித்து விளையாடல்களை... போகர் தான் எழுதிய 'போகர் ஏழாயிரம்' என்ற நூலில் விரிவாகக் கூறியுள்ளார்.

இவர் ஒருமுறை தனது தாயான சரஸ்வதி தேவியை சந்திக்கச் சென்றார்.

அன்று வேறு ஏதோ மனக்குழப்பத்திலிருந்த சரஸ்வதி தேவி... புலத்தியர் சித்தரை வரவேற்க மறந்து விட்டார். பின்னர் கண்டு கொண்ட தேவியார் பற்றின்றி மகனை வரவேற்றார்.

இதனால் கோபமுற்ற புலத்தியர் சித்தர், சரஸ்வதி தேவியை நதியாக மாறி ஓடும்படி சாபமிட்டார்.

தான் பெற்ற மகனே தனக்கு சாபமிடுவதை தேவியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவரும் கோபம் அடைந்து பதிலுக்கு சாபமிட்டார்.

''ஈன்ற தாயென்று கூட பாராமல் ஆணவத்தால் சாபம் கொடுத்த மைந்தனே... கேள்!

இந்த ஜென்மத்தோடு உன் பிறவிக்கடன் தீர்ந்து விடப் போவது இல்லை.

உனக்கு மீண்டும் ஒரு ஜென்மம் உண்டு. அந்த ஜென்மத்தில் நீ விபீஷணன் என்ற அரக்கனாக பிறவி யெடுப்பாய்'' என்று சாபமிட்டார் சரஸ்வதி தேவி.

இவர் 'புலத்தியர் வைத்தியவாதம்', 'புலத்தியர் வாத சூத்திரம்', 'புலத்தியர் ஞான சூத்திரம்', 'புலத்தியர் வைத்தியம்', 'புலத்தியர் கற்ப சூத்திரம்' போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

சிங்கள நாட்டில் பிறந்த இவர் தனது இறுதிக் காலத்தை சீன நாட்டின் கடலோரத்தில் கழித்தார். அதன்பின் தேரையரோடு பொதிகை மலைச்சாரலில் வந்து அவர் மட்டும் ஜீவ சமாதி அடைந்தார்.

பிறகு சிலகாலம் கழித்து சமாதியில் இருந்து வெளிவந்து தேரையருக்கு வைத்திய ரகசியங்களைக் கூறிவிட்டு மீண்டும் சமாதி அடைந்தார்.

வெகு காலத்திற்குப் பின்... அவர் மீண்டும் சூட்சுமமாய் கொல்லி மலையில் உலாவி வருவதாகவும்... அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிகின்றது.

கொல்லி மலையில்... புலத்தியர் சித்தர் பல சித்து விளையாடல்களைப் புரிந்து வருவதாகவும்... சுய நலத்தின் சாயல் சிறிதும் இல்லாமல்... மனித நேயமும், கருணையும், உண்மையும், நேர்மையும், கடமை உணர்வும், தியாக மனப்பான்மையும், பொறுமையும், பக்தியும், பொறுப் புணர்வும், சகிப்புத் தன்மையும், இரக்க சுபாவமும், அன்புள்ளமும் கொண்டவர்களுக்கு... அவர் அவ்வப்போது காட்சி அருள் புரிந்து வருவதாகவும் தெரிகின்றது.

இவரது முதல் சமாதி, பொதிகை மலைச்சாரலில் பாபநாசத்தில் இருப்பதாகக் கூறுகின்றனர்.

மீண்டும் உயிர்பெற்று இரண்டாவது சமாதி அடைந்ததாக ஆவுடையார் கோவிலைச் சொல்கிறார்கள்.



வெகுகாலம் கழித்து உயிர் பெற்று எழுந்து சூட்சும ரூபத்தில் கொல்லி மலையில் பல சித்து விளையாடல்களைப் புரிந்து வருகிறார்.

அடிக்கடி கொல்லி மலைக்கு வந்து அவர் நடமாடும் இடங்களில் தியானம் செய்து வந்தேன்.

பற்றற்று தன்னலமில்லாமல் வாழ்ந்து வந்த என் மீது கருணை கொண்டு... எனக்கு காட்சி கொடுத்தார் புலத்தியர் சித்தர்.

அவரை எனது இஷ்டதெய்வமாக... குல தெய்வத்தைவிட மேலாக மனதளவில் பூஜித்து வந்தேன்.

அவரிடமிருந்து உத்தரவு வந்தது. உடனே கொல்லி மலைக்கு வந்துவிட்டேன்.

அவர் என் மகளை தாயுமானவராய் இருந்து காத்து ரட்சிப்பார் என்று எனக்கு தெரியும்.

பரந்த உலகில் இனி நான் இருப்பதா? அல்லது மறைவதா? என்பதை... என் தெய்வம்தான் தீர்மானிக்க வேண்டும்.

ஓம் நமச்சிவாய... ஓம் நமச்சிவாய!★ அற்புதா டைரியை வாசித்து முடித்தாள்.

இருவருக்குமே மெய்சிலிர்த்துப் போனது.

''மைகாட்! போகர் சித்தரே இரண்டாயிரம் வருடங் களுக்கு முந்தியவர்னு சித்தர் நூல்லே வாசிச்சிருக்கோம்.

புலத்தியர் சித்தர் அவருக்கும் முந்தைய காலத்தைச் சேர்ந்தவரு போலிருக்கே...

கலைமகள் சரஸ்வதி தேவியோட மகனாமே? அவரோட அன்புக்கும் கருணைக்கும் நாம்ப பாத்திரமாயிருக்

கோம்னு நெனச்சா... ரொம்ப சந்தோஷமா இருக்கு...?''
என்றாள் அற்புதா.

''திரேதா யுகத்துல இராமாயணம் நிகழ்ந்திருக்கு. அப்போ இவரு விபீஷணரா பிறவி எடுத்திருக்காரு... மாமா எழுதியிருக்கிறதைப் பார்த்தா... புலத்தியர் சித்தர் திரேதா யுகத்துக்கும் முந்தி வாழ்ந்திருப்பாரு போலிருக்கே...''

''அடேங்கப்பா... திரேதா யுகத்துக்கு அப்புறம் துவாபர யுகம்... அது முடிஞ்சு கலியுகம்...! கலியுகம் பிறந்தே பல ஆயிரம் வருடங்கள் கடந்து போச்சே...''

பிரமிப்பா இருக்கு... நம்ம சித்தர் ஸ்வாமி யுகங்களைக் கடந்த மகா சித்தர்...''

''ஆமா... அற்புதா! அவர் காலத்தை வென்ற மகா சித்தர் நினைக்கும் போதே... அப்படியே சிலிர்ப்பா இருக்குல்ல...?''

இப்பேர்ப்பட்ட மகானோட மனசுல... முதல்லே மாமாதான் இடம் பிடிச்சிருக்காரு.

அந்த அளவுக்கு மகா உத்தமரா உங்கப்பா வாழ்ந்திருக்காரு இல்லையா? மாமாவுக்காக... அவரோட பக்திக்காக கொல்லி மலையிலேர்ந்து சூட்சும ரூபத்துல வந்து உன்னைக் காப்பாத்தி தாயுமானவரா நடந்துட்டு வர்ராரு...

இதையெல்லாம் வச்சுப் பார்க்கும் போது எனக்கொண்ணு தோணுது... கண்டிப்பா உங்கம்மாவும் உயிரோடதான்.

இருப்பாங்க... இருக்காங்க...''

திகைத்துப் போய் விழிகள் விரிய... அவனது முகத்தை ஊன்றிப் பார்த்தாள் அற்புதா.



# 17

வியப்பில் வாயடைத்துப்போய் அர்ஜுனையே பார்த்துக் கொண்டிருந்தாள் அற்புதா.

''என்ன அற்புதா? அப்படியே ஸ்டன் ஆயிட்டே?''

''உங்களோட ஊகம்... சரியாகத்தான் இருக்கும்... ஆனா... பத்து வருஷத்துக்கு முன்னாடியே மறைஞ் சுட்டாங்களே...?''

''எப்படி மறைஞ்சாங்க? இங்க இருக்கிற ஆகாய கங்கை அருவியில குளிக்கும்போது வழுக்கி விழுந்து ஆத்தோட போயிட்டாங்க... அப்படித்தானே...?

அவங்களோட பாடி எதுவும் கிடைக்கலைன்னு நீ சொன்னே இல்லையா?''

''ஆமா... ஆனா அவங்க உயிரோட இருந்திருந்தா... இத்தனை வருஷ காலமா... பெத்த பொண்ணையோ கணவரையோ பார்க்காம... எப்படி இருப்பாங்க?

என் மேல உசுரையே வச்சிருந்தவங்க... என்னை ஓடி வந்து பார்த்திருக்க மாட்டாங்களா?''

''அங்கதான் நீ தப்பா புரிஞ்சுக்கிறே... அவங்க உன்னையும் மாமாவையும் பார்க்கிற நிலைமையில இல்லைன்னு... நான் நினைக்கிறேன்...''

''உங்க அளவுக்கு என்னால யோசிக்க முடியலை... அது எப்படி சாத்தியம்? புரியும் படியா சொல்லுங்களேன்...

ஒருவேளை... அம்மாவுக்கு தலையில ஏதாச்சும் அடிபட்டு நினைவை இழந்திருப்பாங்கன்னு... சொல்ல வர்றீங்களா?''

"ஊகூம்... அப்படி எல்லாம் இல்லை அற்புதா? அவங்க சுயநினைவோட தான் இருப்பாங்க..."

"சுயநினைவோட இருந்தா.... எங்களைப் பார்க்க ஓடோடி வந்திருப்பாங்கல்ல? குடும்பத்தை மறந்துட்டு அவங்களால எப்படி இருக்க முடியும்?"

"என்னோட ஊகம் சரியா இருந்தா... நாளைக்கே... ராத்திரியிலேயே... இதுக்கான... இந்தப் புதிருக்கான விடை உனக்கு தெரிஞ்சு போயிடும்.

இன்னும் சொல்லப் போனா... உங்கம்மாவை நீ நேரிலேயே பார்க்கலாம்...."

"அப்பாவைப் பார்க்கலாமா? இது மட்டும் நடந்துட்டா... நான் அவ்ளோ அதிர்ஷ்டசாலியா அர்ஜுன்?"

தழுதழுத்தாள் அற்புதா.

"சித்தரோட அருளுக்கும் கருணைக்கும்... உங்க குடும்பமே பாத்திரமாயிருக்கு..."

ரெண்டு நாளா மகாசித்தரோட சித்து விளையாடல் களை கண்கூடா பார்த்துட்டு வர்றே...

உன்னைவிட அதிர்ஷ்டசாலி... இந்த உலகத்துல யாருமே இருக்க முடியாது...

உன்னைக் கை பிடிக்கிறதால... நானும் அதிர்ஷ்டசாலி ஆயிட்டேனாக்கும்...! அம்மாவை மட்டுமில்ல... மாமாவையும் நீ பார்க்கப் போறே..."

"உங்க வாக்கு பலிக்கட்டும் அர்ஜுன்! சொன்ன வாய்க்கு சர்க்கரை போடறேன்..."

"எதுக்கு சர்க்கரை போடணும்னு சொல்றே?"



"நல்ல விஷயத்தை முன் கூட்டியே சொல்றீங்களே? இந்த மாதிரி இனிப்பான சேதியைச் சொன்னவங்களுக்கு... சர்க்கரை போடணும்னுதான் பெரியவங்க சொல்வாங்க..."

"இந்த வனாந்தரத்துல சர்க்ரைக்கு எங்கே போவே? சொன்ன வாக்கை நீ தவற விட்டுடக் கூடாது அற்புதா...!"

குறும்பு கூத்தாடும் விழிகளால்... அவளை ஊன்றிப் பார்த்தான்.

"வனாந்தரத்துல சர்க்ரை எங்க கிடைக்கும்? மலைத்தேன் கிடைச்சா பரவாயில்லையா...?"

அப்பாவியாய் கேட்டாள்.

"மலைத்தேன் சும்மா கிடைச்சுடுமா? தேடி அலையணும் இல்ல?"

"ஆமா... யோசிக்க வேண்டிய விஷயம் தான்... அப்படின்னா... நாம்ப ஊருக்குப் போனதும்..."

"ஊகூம்... அந்தப் பேச்சுக்கே இடமில்லை. வனாந்தரத்துலேயே எனக்கு நீ இனிப்பைத் தந்துடணும். வாக்கு மாறிடக் கூடாது...."

"தெரியாம வாய்விட்டு... இப்போ இக்கட்டுலே மாட்டிக்கிட்டேன்..."

அலங்க மலங்க விழித்தவளை ரசித்துப் பார்த்தான்.

"திருதிருன்னு முழிக்கும் போது... அப்படியே ஒரு குழந்தை மாதிரியே இருக்கியே...? உங்கிட்டே பிடிச்சதே... இந்த குழந்தைத் தனம்தான்..."

பேசியபடியே அவள் எதிர்பாராத தருணத்தில்... அவளது கையைப் பற்றி... புறங்கையில் மென்மையாக இதழ் பதித்தான்.

சங்கோஜத்துடன் சட்டென்று கையை உருவிக் கொண்டாள் அற்புதா.

முகம் குங்குமப் பூவாய் நாணத்தால் சிவந்து போனது.

''ஐ லவ் யூ அற்புதா! எனக்கு வரப் போற மனைவி இப்படித்தான் இருக்கணும்னு கற்பனை பண்ணி வச்சிருந்தேன்.

அந்த கற்பனைக்கு அழகான உருவம் குடுத்தாப்பல... சித்தர் ஸ்வாமியோட கருணையால... நீ எனக்கு கிடைச்சுட்டே...

உன்னை என் உயிருக்கும் மேலா நேசிக்கிறேன்...''

''நானும்தான்... உங்க முகத்தை முதல் முதலா பார்க்கும்போதே நானும் என் மனசைப் பறி குடுத்துட்டேன்.

ஐ... டு லவ் யூ அர்ஜுன்!''

''அப்படின்னா... உடனடியா இப்பவே ஸ்விட் குடு!''

''அது எப்படி முடியும்? காட்டு குகைக்குள்ளே ஸ்விட்டுக்கு எங்க போறது?''

''ஏன்? நான் இப்போ கையில் இனிப்பா குடுத்தேன் இல்ல...? பதிலுக்கு இங்க ஒண்ணு தந்துடு...!''

குறும்பாய் தனது கன்னத்தை சுட்டிக் காட்டினான்.

''மைகாட்! நீங்க இந்த இனிப்பை பத்திதான்... அப்பத்துலே இருந்து கேட்டுட்டு இருக்கிங்களா?

யூ நாட்டி...! ஆசை தோசை...! தீப்பந்தம் இங்கதான் இருக்கு...

நீங்க இப்படி பேசறதை... சித்தர் ஸ்வாமி பார்த்துட்டு தானே இருப்பாரு...''



''மக்கு! நம்ம ரெண்டு பேத்தையும் இணைக்க வச்சதே அவருதானே?

இளசுகள் விளையாட்டா சந்தோஷமா பேசிக்கிறதை தப்பா எடுத்துக்க மாட்டாரு...

நாம்ப ரெண்டு பேருமே கண்ணியம் காக்கிறவர்கள்னு அவருக்குத் தெரியாதா?''

''சரி அர்ஜுன்! அடுத்து நாம்ப என்ன செய்யப் போறோம்?'' பேச்சை வேண்டுமென்றே திசை திருப்பினாள் அற்புதா.

''கொஞ்ச நேரம் இங்க ரெஸ்ட் எடுக்க வேண்டியதுதான்... இன்னும் ஒரிரு மணி நேரத்துல அநேகமா விடிஞ்சுடும்...''

நல்லா விடிஞ்சதும் நான் கொல்லி மலைப் பாவை சன்னதி எங்கே இருக்குன்னு பார்த்துட்டு வந்துடறேன்...''

''நானும்கூட வர்றேன்... தனியா எங்கேயும் என்னை விட்டுட்டுப் போகாதீங்க ப்ளீஸ்...''

''வீண் அலைச்சல் உனக்கு எதுக்கு?ன்னு பார்த்தேன். சரி... உன் இஷ்டப்படியே வா!

அநேகமா அந்த கொல்லிமலைப் பாவை அம்மன் கோவில் இங்க... இந்த குகைக்கு சமீபத்துலதான் இருக்கணும்னு தோணுது...

பிரம்ம முகூர்த்தம் தொடங்கிடுச்சுன்னு நெனக்கிறேன். வெளியில வனாந்தரத்துப் பட்சிகள் கலகலத்வனி பண்ணிட்டிருக்கு. கேட்குதா?''

''உம்... சுகமான ராகம்தான்...'' அற்புதா தளர்வாய் மெதுவாக தரையில் அமர்ந்தாள்.

''பாவம்! ரொம்ப டயர்டா இருக்கே! படுத்து ரெஸ்ட் எடு அற்புதா.''

''அர்ஜுன்! யாரோ குகைக்குள்ளே வர்றாங்க போல... நடைச் சப்தம் கேட்குது...'' என்றபடி சட்டென்று எழுந்து நின்றாள்.

அர்ஜுன் எச்சரிக்கை உணர்வுடன்... அவளை இழுத்து தனது முதுகுப் பக்கமாய் நகர்த்தினான்.

நடைச்சப்தம் அருகில் நெருங்கி வந்தது. தீப்பந்தத்தின் வெளிச்சத்தில் அந்த உருவத்தை உற்றுப் பார்த்தனர்.

லிங்கமூர்த்தி...!

''அ...ப்பா... ஆ'' சந்தோஷ மிகுதியில் அலறியபடி ஓடிச்சென்று அவரது மார்பில் சாயப் போனவள்... சட்டென்று நின்றாள்.

காவி உடை...! இந்த நேரத்தில் அருவியில் குளித்துவிட்டு ஈரம் சொட்ட அவர் நின்ற விதம்... நெற்றியில் பட்டையாய் விபூதி...!

''அப்பா... ஏனப்பா? என்னை விட்டுட்டு வந்தீங்க...?'' தேம்பினாள்.

''பாசப் பந்தம் குடும்பப் பற்று எல்லாத்தையும் நான் துறந்துட்டேன். பற்றற்று கிடந்த எனக்கு உத்தரவு வந்தது. கிளம்பிட்டேன்.

என் ஸ்வாமி... புலத்தியர் சித்தர்கிட்டே சரணடைஞ் சுட்டேன்.

இந்தப் புண்ணிய ஸ்தலத்துல... யாரும் கண்ணீரை சிந்தக் கூடாது. கண்ணைத் துடை...!



இப்போ நான் ஒரு துறவி... அவ்வளோதான்...! வழி விடும்மா... நான் தியானம் பண்ணணும்...''

அர்ஜுனும் அற்புதாவும் திகைப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

லிங்க மூர்த்தி என்ன நினைத்தாரோ? திரும்பி இவர்களருகே வந்தார்.

உள்ளங் கையில் மூடி வத்திருந்த காட்டு மலர்களை இருவர் மீதும் தூவி... இருகரங்களை உயர்த்தி ஆசிர்வதித்தார்.

இருவரும் சட்டென்று அவரது பாதம் தொட்டுப் பணிந்தனர்.

மனப்பூர்வமாக ஆசி வழங்கிவிட்டு... ஒரு மூலையிலிருந்த மான் தோலை எடுத்து... பீடம் போன்ற அமைப்பில் விரித்து... அதில் அமர்ந்து... விழிகளை மூடி தியானித்தார் லிங்கமூர்த்தி.

ஸ்தம்பித்துப் போய் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள் அற்புதா.

துக்கமும் சோர்வும் பறந்து விட்டிருந்தன.

'அப்பா உயிரோடு இருக்கிறார். அவரைப் பார்த்து விட்டோம்' என்ற திருப்தியும் நிம்மதியும் மனதில் ஜனித்தன.

நிம்மதி பெருமூச்சுவிட்டபடி... அவளும் சம்மணமிட்டு நேர் எதிரே அமர்ந்தபடி... அப்பாவையே இமை கொட்டாமல் நெகிழ்வாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

# 18

சிறு காட்டருவியில் குளித்து விட்டு வந்தபோது... அங்கு லிங்கமூர்த்தியை காணவில்லை.

''மாமா ஒரு தபஸ்வி! வனாந்தரத்துல விருப்பப்பட்ட இடத்துல தவத்தை தியானத்தை மேற்கொள்வாரு. நாம்ப இங்க இருக்கிறதால... ஏகாந்தமா வேறு இடம் தேடியும் போயிருக்கலாம்...

அருவி தண்ணியை குடிச்சதால... பசி காணாம போயிடுச்சு. பார்த்தியா? விருந்து சாப்பாட்டை சாப்பிட்ட மாதிரி வயிறு திம்னு ஆயிடுச்சுல்ல...?''

''ஆமா... மூலிகைகள் கலந்து வர்றதால... இந்த தண்ணியில இப்படியொரு சக்தி இருக்குன்னு நெனக்கிறேன்...''

''அற்புதா! வெளியில வினோதமா சப்தம் கேட்குதே? பேச்சரவம் கேட்குது... வா! என்னன்னு பார்ப்போம்...''

குகையை விட்டு வெளிப்பட்டு பருத்த ஆலமரத்தின் பின்னால் மறைந்து கொண்டு எட்டிப் பார்த்தபோது...

ஏழெட்டு பேர் அடங்கிய கும்பல் ஒன்று... கைகளில் கூரிய ஆயுதங்களோடு கத்திப் பேசியபடி வந்து கொண்டிருந்தனர்.

ஏதோ ஒரு குஷியில் இருந்தார்கள் போலும்...

சந்தோஷ மிகுதியில் ஆரவாரமாய் பேசி சிரித்தபடி வந்தனர்.

வந்தவர்களில் நடுநாயகமாய் இருந்தவனைப் பார்த்ததும் அற்புதா அதிர்ச்சியிடைந்தாள்.



''அர்ஜுன்! அதோ... நடுவுல உயரமா ஒல்லியா தலையைக் கோதிக்கிட்டே வர்றானே... அவன்தான் அமர்நாத்...!

அவன் எப்படி இங்க வந்தான்? ஒருவேளை... நான் இங்க இருக்கிறதைத் தெரிஞ்சுக்கிட்டுதான் வர்றானோ...?''

திகிலுடன் அவனது தோளில் கை வைத்தாள்.

''ஊகூம்...! நாம்ப இருக்கிற திசைப் பக்கமே... அவன் திரும்பிக்கூடப் பார்க்கலை... வேற ரூட்லே போறாங்க பாரு...

இவன் எப்படி இந்த கும்பலோட சேர்ந்தான்...?

இவனுக்கும் எய்ட்ஸ் இருக்கிறதா சொன்னேயில்ல...''

''ஆமா... அதுகூட அப்பாவோட ஊகம்தான்... ஏன்னா... அண்ணன் கோபிநாத்தோட சேர்ந்துக்கிட்டு... இவனும்தான் பயங்கரமா ஆட்டம் போட்டிருக்கான். இவனுக்குச் சந்தேகமே இல்லாம... அந்த நோய் இருக்குன்னு அப்பா சொல்லிட்டிருந்தாரு...''

''ஐ... ஸீ...' இவன் என்ன காரணத்துக்காக இங்க வந்துருக்கான்?'னு கேட்கறியா? அதுக்கான விடை... விடியறதுக்குள்ளே தெரிஞ்சு போயிடும்...''

கொஞ்ச நேரம் ஓய்வெடுத்துட்டு... நாம்ப கொல்லி மலைப் பாவை அம்மன் கோவிலுக்குப் போயிடலாம். நாம்ப அங்க மறைவா தான் இருக்கணும்...

அங்கே ஏதோ ஒண்ணு நடக்கப் போகுது. அதை மறைவா நின்னு நாம்ப கவனிக்கலாம்... இது சித்தரோட உத்தரவாச்சே?

முன்கூட்டியை போயிடலாம். அப்போதான் நாம்ப யார் கண்ணிலும் படாம இருக்க முடியும்...''

மாலை நேரம் வரை ஓய்வெடுத்துவிட்டு... புத்துணர்வுடன் அவள் எழுந்தபோது... அர்ஜுன் எங்கோ சென்றிருந்தான்.

சிறிது நேரத்தில் திரும்பி வந்தவனின் கைகளில் பெரிய காட்டுக் கனிகள் இருந்தன.

இருவரும் அதை உண்டு பசியாறி விட்டு... அந்தி சாய்ந்து இரவு நெருங்கும் தருணத்தில்... குகையை விட்டு வெளியேறினர்.

கிளம்பும்போது தீப்பந்தத்தை இருவருமே தொட்டு வணங்கிவிட்டு தான் கிளம்பினார்கள்.

'டண்... டண்...' என்ற கோவில் மணியோசையைக் கேட்டதும்... ''நான் ஊகிச்சது சரிதான்...! பக்கத்துலதான் அம்மன் கோவில் இருக்கு'ன்னு நெனக்கிறேன்...'' என்றான் அர்ஜுன்.

இருவரும் மரங்களில் நிழலில் பதுங்கிப் பதுங்கிதான் நடந்து சென்றனர்.

''அநேகமா வேறொரு கும்பல்... நாம்ப போற இடத்துக்கு வரும்னு நெனக்கிறேன்.

சீக்கிரமா போயி மறைவா... பிரதானமா கோவிலுக்கு நேர் எதிரே இருந்துக்கணும்.

என்ன நடக்கப் போகுதுங்கிறதை... தெளிவா பார்த்துக்கணும்...''

''ஒரே த்ரில்லிங்கா இருக்கு அர்ஜுன்!''

''எனக்குத்தான்... பரபரப்பா இருக்கு...''

ஒரு பாறைத் திட்டின் பின்புறம் வாகாய் மறைந்து கொண்டனர்.



''அற்புதா! அநேகமா இப்போ வரப் போற கும்பல்லே எத்தனை பேர் இருந்தாலும் சரி...

அத்தனை பேரையும் கொல்லி மலைப் பாவை அம்மன் அழிக்கப் போறாங்க...''

அற்புதா திகைத்துப் போய் அவனைப் பார்த்தாள்.

''இதெல்லாம் உங்களுக்கு எப்படி தெரியும்?''

''சிவதாணுங்கிற முகவர் தான் இந்த தகவல்களை எல்லாம் சொன்னாரு. இன்னிக்கு பவுர்ணமி போலிருக்கே...''

கிசுகிசுப்பாய் பேசியவன்... சட்டென்று பேச்சை நிறுத்தினான்.

ஏதோ சலங்கை சப்தம் கேட்கவே... இருவரும் எட்டி நேர் எதிரே பார்த்தனர்.

விரித்த கூந்தலுடன் நெற்றியில் நெற்றிச்சுட்டி அணிந்த அழகான இளம் பெண்... சிவப்பு நிற பட்டுடுத்தி தேவதை போல் கண்களை ஈர்த்தாள்.

கோவிலுக்கு நேராக அங்கும் இங்கும் அழகுநடை பயின்று கொண்டிருந்தாள்.

கையில் ஆட்காட்டி விரலில்... பச்சைக் கிளி ஒன்று அமர்ந்திருந்தது.

அதனிடம் ஏதேதோ கொஞ்சிப் பேசியபடி நடந்தாள்.

கிளியும் பதிலுக்கு 'கீக்கீ... கீ...' என்று கிளி மொழியில் அவளிடம் கொஞ்ச... இவளோ கலீர் கலீரென்று சிரித்த வண்ணம் இருந்தாள்.

''யார் இந்தப் பொண்ணு? வனாந்தரத்துல நடு இரவுக்கு மேல தன்னந்தனியா கிளியோட கொஞ்சி உலாவிக்

கிட்டிருக்காளே? பார்க்கிறதுக்கு அப்படியே தேவலோகத்துப் பெண் மாதிரி லட்சணமா இருக்காளே...''

வியப்புடன் முணுமுணுத்தாள் அற்புதா.

அர்ஜுன் ஊகித்தது போலவே... தங்களுக்குள் காரசாரமாய் விவாதித்தபடி ஒரு கும்பல் வந்து கொண்டிருந்தது.

அதில் நடுநாயகமாக... கிழத் தலைவன் வருவதைப் பார்த்ததும்... இருவரும் திகைப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

கலீரென்ற சிரிப்பு சப்தத்தையும் சலங்கை சப்தத்தையும் கேட்டதும்... அந்த கும்பல் சட்டென்று நின்றது.

''தலைவா! உன்னோட ரொம்ப காலத்து முயற்சி தோல்வியில முடிஞ்சு போச்சுன்னு புலம்பி... திட்டித் தீர்த்தீங்களே...? இதோ ஒரு பட்சி மாட்டிக்கிச்சு...''

108-வதா இவளை நரபலி குடுத்துடுங்க... இவளும் பார்க்க படுலட்சணமா இருக்காளே? சாமுந்திரிகா லட்சணம் இவகிட்டே அமைஞ்சிருக்கான்னு பாருங்க...''

''டேய்...! நான் ஜெயிக்கப் போறேன்டா... இவகிட்டே சாமுந்திரிகா லட்சணம் இருக்கு... கிளியோட கொஞ்சிட்டிருக்கா... கோழி அமுக்கிற மாதிரி அமுக்கி... இன்னிக்கே நரபலி குடுத்துடலாம்...''

கையிலிருந்த கிளியிடமே கொஞ்சம் மொழி பகர்ந்து கொண்டிருந்தாளே தவிர... இவர்களை ஒருமுறை ஏறிட்டுப் பார்க்கவில்லை.

அவளை வியூகமாய் சுற்றி வளைத்தனர்.



கிழத்தலைவன் வழக்கம் போல்... ''ஹிஹ்ஹீ...'' என்று எகத்தாலமாய் சிரித்தபடி அவளது தோளில் கை வைக்கப் போனான்.

மறுகணம்... மிகப் பெரிய இடிச் சப்தம்... கேட்டது.

நொடிப் பொழுதில் அந்த கும்பல் தீக்கிரையாகி சாம்பலாயினர். அந்த அழகிய பாவையும் கலீரென்று சிரித்துவிட்டு மறைந்துவிட்டாள்.

''பார்த்தியா? கொல்லி மலை பாவை அம்மன் அசுரவதை செய்து முடிச்சுட்டாங்க...''

இருவருக்கும் மெய் சிலிர்த்தது.

''வா...! இந்த சம்ஹாரத்தை கண்கூடா பார்த்துட்டோம். இன்னொரு முக்கியமான நிகழ்ச்சியும் இன்னிக்கு நடைபெறப் போகுது...

காட்டாற்றுக்கு அருகாமையில் மலையோட மையப் பகுதியில்... பவுணர்மி தோறும். ஜோதி வடிவத்துல சித்தர் காட்சி தருவாராம்...

அந்த ஜோதி வெளிச்சம் பட்டதும் சுற்றிலும் அரிய அபூர்வ வகை மூலிகைகள் தலையெடுக்குமாம்...

அநேகமா அமர்நாத்தோட கும்பல்... அந்த அபூர்வ மூலிகைகளை அடையறதுக்காக தான் அங்க போயிருக்காங்க...

காட்டாறு பக்கத்துலதான் இருக்கணும். சலசலப்பு சப்தம் கேட்குதே...''

சப்தம் வந்த திக்கை நோக்கி மறைந்து மறைந்து நடந்தனர்.

மலையின் மையப் பகுதியில் சமவெளியின் அருகே... அந்த கும்பல் இருட்டில் பாறையின் மறைவில் அமர்ந் திருந்ததை... இவர்கள் கண்டு கொண்டனர்.

இவர்களும் பார்வைக்கு அகப்படாமல் நின்று கொண்டு கவனிக்கத் தொடங்கினர்.

அரைமணி நேரம் நகர்ந்தது...

ஆகாயத்திற்கும் பூமிக்குமாய் திடீரென்று மிகப்பெரிய ஜோதி ஒன்று தோன்றியது. அதன் ஜெகஜ்ஜோதியான வெளிச்சம் பட்டதும்... அதன் சக்தியில் பூமியிலிருந்து வெடித்துக் கொண்டு அபூர்வ மூலிகைகள் தலையெடுத்தன.

அபூர்வ மூலிகைகள் மின்னுவதைப் போல பளீரென்று காற்றுக்கு தலையசைத்தன.

ஒரு நிமிடம்தான்... அந்த ஜோதி நீடித்தது.

அதன் பின்பு சட்டென்று ஜோதி மறைந்ததும்... அந்த கும்பல் 'ஹேய்ய்...!' என்று ஆரவாரமிட்டு எழுந்தது.

''டேய்... அந்த மூலிகைகளைப் பறிங்கடா... என்னோட எய்ட்ஸ் நோயைக் கூடத் தீர்த்து வைக்குமாமே? தீராத வியாதியெல்லாம் திருமாமே?''

அமர்நாத் ''சக்ஸஸ்'' என்றபடி முழங்கையை உயர்த்தி இழுத்தான்.

அமர்நாத்தும் அந்த கும்பலும் அந்த மூலிகைகளை நெருங்கப் போகும் தருணத்தில்...

காட்டாற்றில் குபீரென்னு வெள்ளம் சுனாமி அலைகளைப் போல்... அவ்வளவு உயரமாய் எழுந்தது. கண்ணிமைக்கும் நேரத்தில் வாகாய்... அந்த கும்பலை மட்டும் வாரி இழுத்து அடித்துக் கொண்டு போனது.



நொடிப் பொழுதில் எல்லாமே நடந்து முடிந்து விட்டது.

''அர்ஜுன்! அந்த அபூர்வ மூலிகைகள் அப்படியே இருக்கு... நாம தொட்டு வணங்கிட்டுப் போலாமா?''

''தாராளமா... அதைப் பறிச்சுட்டே போகலாம். குகைக்குப் போவோம்.

இதை என்ன செய்யறது?ன்னு... சித்தர் ஸ்வாமிகிட்டே யிருந்து உத்தரவு வரும். அதன்படி செய்யலாம்...''

''அதைக் கொண்டு வந்து என்கிட்டே குடுங்க...'' குரல் கேட்டதும்... இருவரும் பின்னால் திரும்பிப் பார்த்தனர்.

அம்மா மரகதம் காவி உடையில் நின்று கொண்டிருந்தாள்.

''அம்... மா நீயா?''

அற்புதா ஓடிச் சென்று அம்மாவைக் கட்டிக் கொண்டாள்.

''அம்மா அருவியில... நீ''

'காத்தப் பட்டேன்... சித்தர் ஸ்வாமியால... அதுக்கு அப்புறம்... உலகப் பற்று சட்டுன்னு எனக்கு விடுபட்டு போச்சு. இங்கேயே தங்கி மூலிகை வைத்தியம் பண்ணி சேவை செய்துட்டிருக்கேன்...

அபூர்வ வகை மூலிகைகளுக்கு... ஒரு சக்தி உண்டு! சாதாரணமா எல்லோர் கைக்கும் கிடைக்காது.

அபூர்வமான விஷயங்கள் எல்லாம் அபூர்வ மனிதர்களுக்குதான் கிடைக்கும்.

போய் பறிச்சுட்டு வாங்க தம்பி!''

அர்ஜுன் பறித்துக் கொண்டு வந்து பவ்யமாய் அதை மரகத்திடம் கொடுத்தான்.

''அம்மா...! அப்பா இங்கதான் இருக்காரு... ஒரு குகையிலா...'' இடைமறித்தாள் மரகதம்.

''தெரியும்... எல்லாமே தெரியும்... கணவன் மனைவிங்கிற பந்தத்தையே நாங்க மறந்துட்டோம். அவரவர் வழியில சிவச்சேவை செய்துட்டிருக்கோம்...''

''அமோகமா இருங்க... ஓம் நமச்சிவாய.''

கால்களில் பணிந்தவர்களின் நெற்றியில் விபூதி பூசி ஆசி வழங்கிவிட்டு திரும்பிக்கூடப் பாராமல்... தூரத்திலிருந்த ஆசிரமத்தை நோச்சிச் சென்று விட்டாள்.

''ஆயுஷ்மான பவ...''

அசிரியைக் கேட்டதும் அண்ணாந்து பார்த்தனர்.

ஆகாயத்தில் அதே மாயக்கண்கள்...

ஆசி வழங்கி காருண்யமாய் இவர்களைப் பார்த்ததும்...

இருவரும் கைகளைத் தூக்கி வணங்கினர்.

ஆகாயத்திலிருந்து... வாசமிகு வண்ண மலர்கள் அட்சதையாய் இவர்கள் மீது உதிர்ந்தன.

மெய் சிலிர்க்க பரவசத்துடன் வணங்கிவிட்டு... இருவரும் கைகோர்த்தபடி நடக்கத் தொடங்கினர்.

'முற்றும்...'


திருமகள்
நிலையம்